# பிறசமயக் கண்ணோட்டம்

## மணவை முஸ்தபா

8

# பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்

ஆசிரியர்
வளர்தமிழ்ச் செல்வர்
**மணவை முஸ்தபா**

விலை ரூ. 45/

MANAVAI PUBLICATION
AE - 103, ANNA NAGAR,
CHENNAI - 600 040

**சௌதா பப்ளிகேஷன்**
**AE-103, அண்ணாநகர்,**
**சென்னை - 600 040.**

# Perumanarin Pira Samaya Kannottam

*Author :*

VALAR TAMIL SELVAR

**Manavai Mustafa**

**Price Rs. 45/-**

## Soudhaa Publication

**AE-103, Anna Nagar**
**Chennai - 600 040.**

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | **Perumanarin Pira Samaya kannottam** |
| Author | : | **MANAVAI MUSTAFA** |
| First Edition | : | August 1993 |
| Re-Edition | : | November 1999 |
| Paper used | : | White cream wove |
| Printing points used | : | 10 points |
| Size of the book | : | Crown octavo |
| No.pages | : | 207 |
| Price | : | Rs.45/- |
| No.of Copies Printed | : | 1000 Copies |
| Type Setting | : | Shri Surakshaa Computers<br>D-129, First Main Road,<br>Annanagar East, Chennai - 102 |
| Printer | : | Creative Offset<br>57, Kumarappa St,<br>Nungambakkam, Chennai - 34 |
| Binding | : | Paper back |
| Publishing place | : | Soudhaa Publication<br>AE 103, Annanagar,<br>Chennai - 600 040. |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம் | 33 |
| 2. | மிகு பயன் விளைவிக்கும் ரமலான் | 45 |
| 3. | தியாகத்திற்கோர் திருநாள் | 53 |
| 4. | இஸ்லாமியப் புத்தாண்டின் புனிதமிகு முஹர்ரம் | 59 |
| 5. | சகிப்புத்தன்மைக்கோர் பெருமானார் | 70 |
| 6. | நோன்பு தரும் மாண்பு | 78 |
| 7. | தியாகம்-சமத்துவம்-சகோதரத்துவம் | 91 |
| 8. | முஹர்ரம் புத்தாண்டுச் சிந்தனை | 95 |
| 9. | மனித நேயத்திற்கோர் மாநபி | 102 |
| 10. | மறை பிறந்த இறை மாதம் | 110 |
| 11. | ஓர் இறைத் தத்துவ 'ஹஜ்' பெருநாள் | 118 |
| 12. | இஸ்லாமியப் புத்தாண்டு 'முஹர்ரம்' | 125 |
| 13. | நபிகள் நாயகம் காட்டிய இஸ்லாம் | 130 |
| 14. | தியாக உணர்வு தரும் ரமளான் | 145 |
| 15. | 'ஹஜ்' பெரு நாள் | 149 |
| 16. | இஸ்லாமியப் புத்தாண்டு தரும் செய்தி | 154 |
| 17. | பெருமானாரும் அறிவியலும் | 161 |
| 18. | பெருமானார் போற்றிய எளிமையும் சிக்கனமும் | 168 |
| 19. | ஈத்துவக்கும் இன்பத் திருநாள் | 174 |
| 20. | இஸ்லாமிய இறைமறை பிறந்தது எவ்வாறு? | 183 |
| 21. | ஏன் வேண்டும் இறைச் சிந்தனை? | 187 |
| 22. | சமய நல்லிணக்கத்துக்கு எது தடை? | 192 |
| 23. | மனிதனைப் புனிதனாக்கும் பெருநாள் | 202 |

# முன்னுரை

இஸ்லாமிய சமுதாய இளைய தலைமுறை யினரிடையே இன்று புதியதோர் விழிப்புணர்வு ஏற்பட்டுள் ளது. இஸ்லாமிய உணர்வோடு இஸ்லாமிய அறிவையும் பெருமளவில் பெற வேண்டும் என்ற வேட்கை எங்கும் மிகுந்ததுள்ளது. காலத்தின் போக்குக்கும் அதற்கேற்ப அவ்வப்போது எழும் பிரச்சினைகளுக்கும் இஸ்லாம் கூறும் தீர்வு என்ன என்பதில் அறிவுலகம் பெருமளவு கருத் தூன்றி வருகிறது. அதிலும் குறிப்பாக, முஸ்லிமல்லாத பிற சமயச் சகோதரர்கள் இஸ்லாமியச் சிந்தனைகளை, தத்துவ நுட்பங்களை அறிந்து கொள்வதில் என்றுமில்லாத அளவுக்கு இப்போது ஆர்வம் மிக்கவர்களாக உள்ளதை என்னால் நன்கு உணர முடிகிறது. பத்திரிகையுலக நண்பர்கள் மட்டு மல்லாது, சாதாரணமானவர்களும் என்னிடம் அவ்வப்போது கேட்கும் கேள்விகளிலிருந்து இதை என்னால் நன்கு உணர முடிகிறது. இஸ்லாத்தைப் பொறுத்தவரை இத்தகைய விழிப்புணர்வை உண்டாக்கி வரும் பெருமையின் பெரும் பகுதி என தருமை பாரதீய சகோதரர்களையே சாரும்.

காலத்தின் தேவைக்கும், மக்களின் புரிந்துணர்வுக்கும் ஏற்ப இஸ்லாமியத் தத்துவக் கோட்பாடுகளை, நெறி முறைகளை எளிமைப்படுத்திக் கூற வேண்டும் என்பது என் நீண்ட நாளைய வேணவா. இஸ்லாத்தின் உண்மையான நெறிமுறைகளை பிற சமயத்தவர் சரிவர அறியாதது மட்டு மல்ல தவறாகப் புரிந்து கொண்டிருப்பதே இன்று எழுந் துள்ள பல பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணங்களாய் அமைந்துள்ளன என்பதையே கடந்த கால வரலாறும், அதன் போக்கில் நிகழ்ந்து விட்ட சம்பவங்களும் எண்பித் துள்ளன. இதற்கு முஸ்லிம்களும் ஒரு வகையில் பெருங் காரணமாவார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆம், இஸ்லாத்தை உரிய முறையில் பிற சமயத்தவர் மத்தியில்

எடுத்துரைக்காதது நாம் செய்து வரும் தவறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்நிலையை ஓரளவு மாற்றக் கருதி, பெருமானார் (சல்) அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 'தினமணி' நாளிதழுக்கு "பெருமானாரின் பிற சமயக் கண் ணோட்டம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பியிருந்தேன். இரண்டு நாட்களுக்குப் பின் 'தினமணி' நாளிதழ் ஆசிரியர் திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் இரவு 9-00 மணிக்கு என்னோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசினார். நான் அனுப்பி யிருந்த கட்டுரையை அப்போதுதான் படித்து முடித்த தாகவும் உடனே தொடர்பு கொண்டதாகவும் கூறியதோடு, தொடர்ந்து "உங்கள் கட்டுரையைப் படித்தபோது, எனக் கிருந்த பல ஐயப்பாடுகள் அகன்று விட்டன. 'பெரு மானாரின் பிற சமயக் கண்ணோட்டக் கருத்துகள் இன்றைய உலகு முன் உரத்த குரலில் ஒலிக்கப்பட வேண்டியவை. இக்கருத்துகள் பரப்பப்படாததாலும், மற்ற சமயத்தவர் களால் அவை உரிய முறையில் உணரப் படாததாலும் - ஏன் உணர்த்தப்படாததாலுமே தேவையற்ற பல பிரச்சினைகள் இன்று நம்மிடையே தலைதூக்கிக் கூத்தாட்டம் போட நேர்ந்துள்ளது. நீங்கள் கட்டுரை மட்டும் எழுதியதாக நான் கருதவில்லை. இதன் மூலம் இன்றையத் தேவையை நிறைவு செய்யும் அற்புதமான சமூக சேவையை செய் திருப்பதாகவே கருதி மகிழ்கிறேன். உடனே உங்களைப் பாராட்ட வேண்டும் என்ற உந்து தலாயே உங்களுக்குப் போன் செய்தேன்" என தன் அறிவுப் பூர்வமான உள்ளுணர் வுகளை என்னோடு பகிர்ந்து கொண்டார்.

கட்டுரை அடுத்த இரண்டொரு நாளில் வெளியான பின் பல வாசகர்கள் கட்டுரையைப் பாராட்டியும் விமர் சித்தும் 'தினமணி' வாசகர் பகுதிக்கு கடிதங்கள் எழுதியிருந் தார்கள். அவைகளில் ஒரு கடிதம் இவ்வாறு இருந்தது.

"மணவை முஸ்தபாவின் "பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்" என்ற கட்டுரை அற்புதமாக எழுதப்பட்டி

ருந்தது. அக்கட்டுரையைப் படிப்பதற்கு முன் இஸ்லாம் மதம் பற்றித் தவறான எண்ணம் கொண்டிருந்தேன். இந்திய சமயங்களை அழிக்க வந்த சமயம் என்றே எண்ணி யிருந்தேன். பிற மதங்களை மதிப்பதே இஸ்லாத் தின் அடிப்படைக் கொள்கை என்பதை குர்ரானிலிருந்து எடுத்துக்காட்டுகள் தருவதன் மூலமாகவே சிறப்பாக விளக்கியிருந்தார். என்னுள் இருந்த வெறுப்பு விலகியது மட்டுமல்ல, இஸ்லாம் மதம் மீது மதிப்பும் ஏற்பட்டு விட்டது. இஸ்லாம் கொள்கை வழி நடப்பதன் மூலமே மத சமூக நிலைமை நிலைபெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது".

பி. பெருமாள்,
சென்னை - 107

என்ற முகவரியிலிருந்து ஒரு வாசகர் எழுதியிருந்தார். அவ்வாசகரின் கடிதம் பல உண்மைகளை வெளிப் படுத்தியது. இஸ்லாத்தைப் பற்றி அறியும் ஆர்வம் இன் றையச் சூழலில் பிற சமய அன்பர்களிடம் மிகுந்துள்ளது. அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இஸ்லாமிய உணர்வுகளையும் கருத்துகளையும் தத்துவ நுட்பங்களை யும் எளிமையாக எடுத்து விளக்கினால் அவற்றைப் படிக்க வும் மனத்துள் இருத்திக் கொள்ளவும் அவை பற்றி ஆழச் சிந்திக்கவும் பல உள்ளங்கள் தயாராக உள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தைச் சரிவர அறியாமலே அதன் மீது தவறான கண்ணோட்டம் செலுத்தி வருபவர்கள் தங்கள் தவறான உணர்வுகளைத் திருத்திக் கொள்ளவும் உண்மை யான இஸ்லாமியக் கருத்துகளைப் பெற்றுச் சிந்திக்கவும் அருமையான வாய்ப்பு உருவாகிறது. இதனால், இஸ்லாத் தைப் பற்றிய, அம் மார்க்கத்தைப் பேணி வரும் முஸ்லிம் களைப் பற்றி, தவறான உணர்வுகள் முற்றாகத் துடைத் தெறியப்படும் இனிய வாய்ப்பும் சூழலும் ஏற்படுகிறது. பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களோடு மனநெருக்கம் கொள்ளவும் வழி பிறக்கிறது.

இந்த உள்ளுணர்வின் விளைவாகவே ஒவ்வொரு இஸ்லாமிய சிறப்புமிகு நாட்களின்போது, அதன் முக்கியத் துவத்தைப் பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து "தினமணி" யில் எழுதி வந்தேன். வாசகர்களும் பேரார்வத்தோடு படித்துப் பாராட்டி, ஊக்கி வந்தார்கள். குறிப்பாக அதன் ஆசிரியராக இருந்த திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் என் எழுத்தின் மீது காட்டிய மதிப்பும் மரியாதையும் ஆர்வமும் அரவணைப்பும் என்றுமே மறக்க முடியாதவை. அன்னாருக்கு நான் என்றென்றும் கடப்பாடுடையவன்.

'தினமணி' கட்டுரைகள் ஊட்டிய நல்லுணர்வின் தூண்டுதலால் 'ஓம் சக்தி' போன்ற இந்து சமயப் பிரச்சார ஏடுகளும் இஸ்லாம் பற்றி எழுதப் பணித்தன. இதை என் கட்டுரைகளுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறேன்.

இக்கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து வந்த நண்பர்கள் பலரும் இவற்றைத் தொகுத்து நூலுருவில் வெளியிட வேண்டும் என அடிக்கடி வற்புறுத்தி வந்தார் கள். இதன் மூலம் பிற சமய அன்பர்களும் இஸ்லாமிய நண்பர்களும் கூட இஸ்லாத்தை ஓரளவாவது உரிய முறை யில் உணர்ந்து தெளிய வாய்ப்பேற்பட வேண்டும் என்ற கருத்தின் செயல் வடிவே இந்நூல்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்க வேண்டுமென தவத்திரு குன்றக்குடி அடிகளாரை வேண்டினேன். என் மீது என்றுமே பேரன்பு கொண்ட அப்பெருந்தகை நூலை முழுமையாகப் படித்து, அதில் தோய்ந்து என் உள்ளுணர் வுகளை அவர்கட்கேயுரிய முறையில் சிறப்பாக வெளிப் படுத்தியுள்ளார்கள். அவர்கட்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி யுள்ள ஈ.சி.ஐ. பேராயர் டாக்டர் எம்.எஸ்றா சற்குணம் என் மீது அளப்பரிய அன்பு கொண்டவர். உரத்த சிந்தனை யாளர். அஞ்சா நெஞ்சினர்; 'யார் என்பதைவிட என்ன' என் பதில் அதிகம் கருத்தூன்றும் நகைமையாளர். மனித நேய

மிக்க அவர் இஸ்லாமிய சமுதாயத்தின்பால் எப்போதும் அன்பும் பரிவும் பாசமும் கொண்டவர். நடுநிலை உணர் வோடு இந் நூலை முழுமையாகப் படித்து, தன் திறனாய் வுக் கருத்துக்களால் நூலுக்கு அணி செய்துள்ளார். என் முயற்சிக்கு நல் லாசி வழங்கிய 'அருட் தந்தை' அவர்கட்கு என் இதய நன்றி. இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளில் பெரும்பாலானவை 'தினமணி' இதழில் வெளி வந்தவை களாகும். அன்றைய 'தினமணி' ஆசிரியரும் திறம்பட்ட அறிவியல் எழுத்தாளருமான திரு மாலன் அவர்கள் இந் நூலுக்குக்குச் சிறப்புரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அனைத்துச் சமயங்களின் தத்துவக் கருத்துகள் சங்கமிக்கும் நடுநிலைமை நாளிதழாக 'தினமணி' தொடர்ந்து தொண் டாற்றும் என்ற நம்பிக்கை இவர் மூலம் மீண்டும் உறுதி செய்யப்படுவது மனதுக்கு மிகவும் மகிழ்வளிக்கிறது. அவரது அன்புக்கு என் இதயம் நிறைந்த நன்றி. இந்நூலுக்கு மவ்லானா எம்.அப்துல் வஹ்ஹாப், எம். ஏ ; பி. டிஹெச் அவர்கள் அவர்கட்கே உரிய முறையில் 'ஆய்வுரை' ஒன்றை வழங்கியுள்ளார்கள். எமது நூலுக்கு மேலும் வலுவூட்டும் முறையில் அவர்தம் கருத்துகள் அமைந்துள்ளன. அவருக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளில் சிலவற்றை அவ்வப்போது வெளியிட்ட 'மாலை முரசு', ஆசிரியருக்கும் அனைத்திந் திய வானொலி நிலையத்தாருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது முந்தைய நூல்களை ஏற்று ஆதரித்தது போன்ற இம்மறு பதிப்பையும் தமிழுலகம் ஆதரிக்கும் என்ற நம்பிக்கை என்றும் எனக்குண்டு.

அன்பன்
மணவை முஸ்தபா
நூலாசிரியன்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

# வாழ்த்துரை

இனிய அன்பர் ஹாஜி மணவை முஸ்தபா அவர்கள் எழுதிய "பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்" என்ற இனிய நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இனிய தமிழ், ஆற்றொழுக்கான நடை, திருமறையின் பிழிவு ஆகியன நூலுக்கு அணி செய்யும் சிறப்புகள். இந்நூலைப் படித்து முடிப்பதற்குரிய ஈர்ப்பாற்றலை நூலாசிரியர் தந்துள்ளார்.

உலகம் விரிந்தது; பரந்தது. இன்று அறிவியல் பூத பௌதீகம் உலகை இணைத்துவிட்டது. ஆயினும், மனித இதயங்கள் இணைக்கப் பெறவில்லை. இந்தக் குறையைத் திருமறை நீக்கும் என்ற நம்பிக்கையை இந்நூலாசிரியர் தரு கின்றார். பெருமானார் (சல்) அவர்கள் பிற சமயங்களிடம் சகிப்புத் தன்மையைக் காட்டினார். இல்லை, எல்லாச் சமயங்களையும் மதித்துப் பாராட்டினார் என்ற திருமறை வாக்கின் வழி உணர்த்தும் பொழுது நமக்கு இன்பம் மேலிடுகிறது. "அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகின்றார்களோ அவற்றைப் பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்" (குர்ஆன் 6 : 108) என்று திருமறை கூறுகிறது என்பது ஊண், உயிர், உணர்வு இனிக்கம் செய்தி. மேலும் "உங்களுக்கு உங்கள் மார்க்கம் : அவர்களுக்கு அவர்கள் மார்க்கம்" என்ற திருமறையின் வாக்கு, சமய இணக்கத் திற்குரிய பொன்மொழி.

நமது போற்றுதலுக்குரிய பெருமானார் (சல்) அவர்கள் மதினாவில் வாழ்ந்த பல்வேறு சமயத் தினிடையே இணக்கம் ஏற்படுத்த முயன்றார். உலக வரலாற்றில் முதல் சர்வ சமயக் கூட்டத்தைக் கூட்டி மனித குல வரலாற்றில் ஒரு திருப்பு மையத்தை உருவாக்கிய

பெருமானார் (சல்) அவர்களுக்கு மனித குலம் கடமைப் பட்டுள்ளது. அது மட்டுமா? உலக வரலாற்றிலேயே முதலில் சமயச் சார்பற்ற பொது அரசைக் கண்ட பெருமை யும் பெருமானார் (சல்) அவர்களுக்கே உரியது என்பதை இந்நூலாசிரியர் விளக்கி எழுதியுள்ள பகுதி பலரும் பலகாலும் படித்தற்குரியது.

பெருமானார் (சல்) அவர்கள், மனிதர்களுக்குள் குலம், கோத்திரம் முதலிய அடிப்படையில் வேற்றுமை நிலவுவதை விரும்பாதது மட்டுமல்ல, வெறுத்தார்கள். 'மனிதகுலம்!' ஒன்றே என்ற கொள்கையில் பெருமானார் (சல்) அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டை இந்த நூலாசிரியர் உயிர்ப்பும் உணர்வும் கலந்த நடையில் எழுதியிருப்பது பலநூறு தடவை படிக்க வேண்டிய பகுதி. "மனிதனுக்கு மனிதன் வேற்றுமை உணர்வு காட்டுவது அறவே கூடாது. உலகத்து மக்கள் அனைவரும் ஆதாமின் வழி வந்த சகோதரர்களேயாவர். ஒருவரை ஒருவர் இனம் காணவே குலங்களும் கோத்திரங்களும் உருவாயின. இதையே திருமறை, "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும்பொருட்டு உங் களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கி னோம். ஆதலால் ஒருவர் மற்றவரை விட மேலானவர் என்று பாராட்டிக் கொள்வதற்கில்லை"(குர்ஆன் 49 : 13) என்ற இறைவாக்கு . வரலாறாக மாறினால் கெட்ட போரிடும் உலகத்தை மாற்றலாம். அமைதியும் சமாதான மும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

புண்ணியம் எது? பக்தி எது? பரிசுத்தம் எது? என்பதனை நூலாசிரியர் திருமறை வாக்கினை வைத்து விளக்கும் பகுதி பயனுள்ள பகுதி. எல்லாரும் படிக்க வேண்டிய பகுதி. குறிப்பாக மனித நேயத்தை மறந்து

விட்டு, கடவுளைச் சுற்றுகிறவர்கள் படிக்க வேண்டிய பகுதி. "உங்கள் முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல புண்ணியம். ஆனால் அல்லாஹ்வின் மீதும், இறுதித் தீர்ப்பு நாளின் மீதும், வானவர்கள் மீதும், நம்பிக்கை கொண்டு (அலலாஹ்வின் மீதுள்ள) நேசத்தின் காரணமாகத் தன் (நெஞ்சுவக்கும்) பொருள்களைச் சுற்றத்தாருக்கும் அநாதைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் யாசிப்போருக்கும் ஈதலும் தொழுகையை நிலை நாட்டுதலும் ஜகாத்கொடுத்து வருதலுமே புண்ணியமாகும்" என்று கூறும் பகுதிகள் என்றும் நினைவிற்கொள்ள வேண்டியவை; நின்றொழுக வேண்டியவை.

பெருமனார் (சல்) அவர்கள் உழைப்பின் உயர்வை விளக்கிய பகுதிகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

*இந்த நூல் ஒரு நல்ல நூல் !*

*பலரும் படித்துப் பயனடைய வேண்டும் !*

*நூலாசிரியர் மணவை முஸ்தபா அவர்கள்*

*அளவற்ற அருளாளன் கருணையால்*

*வாழ்வாங்க வாழ்க ! வளர்க !*

இன்ப அன்பு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி
*1 - 7 - 1993.*

பேராயர் டாக்டர் எஸ்றா சற்குணம்

# அணிந்துரை

*எனது இனிய நண்பர் மணவை முஸ்தபா அவர்கள் நாடு போற்றும் நல்ல எழுத்தாளர்; இஸ்லாமியச் சமுதாயத்தின் பெரும் சிந்தனையாளர்; தொய்வற்ற ஆய்வாளர். இயற்பியல் பௌதிகம், பொறியியல், விஞ்ஞானம், இறையியல், இலக்கியம் ஆகிய எல்லா துறைகளிலும் ஒரு வித்தகர். அவரது எழுத்தோவியங்கள், இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கை நெறிமுறைகளை எவரும் படித்துப் புரிந்து கொள்ளும் அளவில் அமைந்துள்ளன. அவரது படைப்புகள் கல்லாதவருக்கு ஒரு கலைக்களஞ்சியம் கற்றோருக்கு ஒரு தெளிவுரை; மற்றவருக்கு ஒரு அறிவுரை. எவரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய இனிய எடுப்பான நடையில் பெருமானாரின் பிறசமயக் கண்ணோட்டம் அமைந்துள்ளது.*

*நண்பர் முஸ்தபா திங்கள்தோறும் பல நூறு புது வார்த்தைகளை தமிழ் உலகிற்கு உற்பத்தி செய்து விநியோகம் செய்து கொண்டிருக்கும் ஓர் அறிவுத் தொழிற் பேட்டையாகத் திகழ்கின்றார். இதனால் எவ்விதச் சிரமமும் இன்றி வார்த்தைகள் அமுதசுரபியாக அவரிட மிருந்து புறப்பட்டு வருகின்றன.*

பெருமானாரின் பிறசமயக் கண்ணோட்டம் - நாடு தேடும் - காலந் தேடும் - அரிய நூல்.

*அயோத்தி சம்பவத்தால் மனம் உடைந்து காணப்படும் நாட்டின் தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை சமயத்தைச் சார்ந்துள்ள 90 சதவிகித மக்களில் ஒருவரான, அதிலும் இஸ்லாத்தைச் சேர்ந்த முஸ்லிம் மேதை, என் அன்புச் சகோதரர் மணவை முஸ்தபா, அந்த அயோத்தி*

அராஜகங்களை அன்பு வழியில் மேற்கொண்டிட வந்து உள்ளார். தீமையைத் தீமையினால் வென்றிடாமல் தீமையை நன்மையினால் வென்றிட, மறுகன்னத்தைக் காட்டிட இதோ புறப்பட்டு விட்டார்.

இஸ்லாத்தின் சகிப்புத் தன்மையையும் அண்ணல் முகமது நபி (சல்) அவர்களின் உயரிய பண்புகளையும் உலகிற்குக் காண்பித்து அறவழி. அன்புவழிச் சமயமாம் இஸ்லாத்தின் கொள்கைகளைப் பரப்ப முன்வந்துள்ளார் கள். 'பெருமானாரின் பிறசமயக் கண்ணோட்டம்' என்ற நூலின் வாயிலாக அழிவுப் பாதையிலிருந்து மக்களை அன்புப் பாதைக்கு அழைக்கின்றார் ஆசிரியர்.

நானும் அந்த அன்புவழி, அறவழி. சமத்துவம், சகோதரத்துவம் பேசும் சமயவழி வந்தவன் என்ற காரணத்தால் இந்த அணிந்துரை எழுத முனைந்துள்ளேன். எனது இருகரங்களை நீட்டி என் அன்புச் சகோதரர் மணவை முஸ்தபா அவர்களை அணைத்து அவரது கன்னம் மீது எனது கன்னம் வைத்து முத்தமிட்டு உச்சிமுகர்ந்து வாடா மலர்களினால் வாழ்த்துகின்றேன்.

## கிறிஸ்தவம் - இஸ்லாத்தின் பொது நோக்கு என்ன?

கிறிஸ்தவமும் இஸ்லாமும் ஒரு நற்கனிதரும் மரத்தின் மாபெரும் இரு கிளைகள். இம்மரத்தின் ஆணிவேர் 'செமிடிக்' யூதச் சமயம் ஆகும். இதனால்தானோ என்னவோ கிறித்துவத்தின் மத போதகராக நான் காணப் பட்டாலும் இந்நூலில் குவிந்துகிடக்கும் கருத்துக் குவியல் களை ஏடாகோடமாக அள்ளி அருந்தியும் எனக்கு எந்த அஜீரணமும் ஏற்படவில்லை. எனது நம்பிக்கைக்கு முற்றி லும் மாறுபட்ட எதிரும் புதிருமாக இருக்கக்கூடிய கருத்து களாக தென்படவுமில்லை.

உண்மையைச் சொல்லப்போனால் எவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் இஸ்லாத்தின் கருத்துகளை

*விற்பனை செய்யும் ஒரு நல்ல முஸ்லிம் வியாபாரியாக மணவை முஸ்தபா திகழ்கிறார். என்னை அறியாமலே முஸ்தபா பாயிடம் என் சிந்தனையை அடகு வைத்து விட்டேன் போங்கள் !*

*விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் காணப்படும் தீர்க்கர்களின், சமயப் பிதாக்களின் விளக்கங்களும் இஸ்லாமிய வேதமான திருக்குர்ஆனில் வரும் வினாக்களும் ஒரே மூலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளவை யென்பதை இஸ்லாமியர்களும் கிறிஸ்துவர்களும் மறுக்க மாட்டார்கள். மனிதக் கோடிகளின் மூலப்பிதா ஆதாமும் அன்னை ஏவாளும் அனைத்துச் சமுதாயத்தினருக்கும் பொதுவானவர்கள் என்ற கருத்தும் உலகின் மூன்று பெரிய சமயங்களான யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவற்றுக்கு விசுவாசத் தந்தையாக திகழ்பவர் ஆபிரகாம் என்பது இச் சமயத்தவர் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையாகும்.*

*அனைத்துப் படைப்புகளுக்கும் காரணம் ஒரே இறைவன் என்பதையும் அவன் படைத்த மனிதர்களிடையே பிறப்பால், நிறத்தால், வாழும் நாட்டால், செய்யும் தொழிலால், பேதம் கற்பிப்பது இறைவிருப்பத்திற்கு முரண்பட்டது மட்டுமல்லாமல், மனித சமுதாயத்தின் மாண்பிற்கே மாசு கற்பிக்கும் செயல் என்பதனையும் ஆசிரியர் திருக்குர்ஆன் திருவசனங்களில் இருந்து மேற்கோள்காட்டி படிப்போர் சிந்தனைக்கு அருமையான முஸ்லிம் பிரியாணி படைக்கின்றார்.*

இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும் எதிரானது அல்ல
என்பதனை ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

*பிறசமய நம்பிக்கை, வழிபாடு, பாரம்பரியங்களை எள்ளி நகையாடுவது என்பது இஸ்லாத்திற்கு முற்றிலும்*

அப்பாற்பட்டதொன்றாகும் என்பதனை மணவை முஸ்தபா விளக்குகின்றார். 'உங்களுக்கு உங்கள் மார்க்கம், அவர் களுக்கு அவர்கள் மார்க்கம்' என்பது பெருமானாரின் கூற்று. "அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகின் றார்களோ அவற்றைப்பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்" (குர் ஆன் 6 :108)

"நபியே, நீர் கூறும் : இந்த வேதத்தை விரும்பியவர் விசுவாசிக்கலாம்; விரும்பாதவர் நிராகரித்துவிடலாம்" (குர்ஆன் 18:29) போன்ற திருவசனங்களைத் தமது நூலில் ஆசிரியர் பகிர்ந்துகொள்கின்ற வேளையில், அதைக் கருத் தூன்றிப் படிப்பவர்களின் கண்கள் நிலைதூக்கி நின்று விடும். இஸ்லாத்தைப் பற்றி தவறான கொள்கைகளை யுடைய கல்நெஞ்சங்கள் எல்லாம் பகலவனைக் கண்ட பனிக்கட்டியைப்போல் உருகிப் போய்விடும்.

இஸ்லாத்தின் எந்த நிர்ப்பந்தமும் வலுக்கட்டாயமும் இல்லை. அவரவர்களுடைய எண்ணத்திற்கும் அறிவிற்கும் பாங்கிற்கும் ஏற்ப ஏற்றுக்கொண்டுள்ள சமயங்களுக் கிடையே மாச்சரியங்களை உருவாக்குவதையும் ஒரு சமயத்தவர் பிறிதொரு சமயத்தைத் தாழ்த்திப் பேசுவதை யும் நபிகள் பெருமானார் அறவே எதிர்த்தார்.

மக்கா நகரிலிருந்து மதினா நகரத்திற்கு நபிகள் பெருமானார் சென்று அடைந்தபோது அந்நகரத்தில் மக்கள் பல பிரிவினர்களாக வாழ்ந்தனர். பெருமானார் இஸ் லாத்தை ஏற்றுக் கொள்வோர் இஸ்லாத்திற்கு முன் தோன்றிய இயேசு பெருமானின் கிறித்துவம் மற்றும் அதற்கு முன் ஆபிரகாம், மோசே என்னும் முற்பிதாக் களால், முனிவர்களால் நிலை நிறுத்தப்பட்ட யூதம் - மற்றும் அரபு தேசத்தில் விக்ரக ஆராதனையை அடிப்படை யாகக் கொண்ட சமயச்சார்பு உடைய அனைத்து மக்களை

யும் ஒன்று திரட்டி, அவர்களின் ஒருமித்த ஒப்பதலோடு புதியதோர் சமயச்சூழலை மதினாவில் அமைத்தார் என்றும், நபிகளால்தான் சமுதாய, அரசியல் வாழ்வுக்காக எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் முதன்முதலாக உரு வாக்கப்பட்டது என்பதையும் ஆசிரியர் மிகத் தெளிவாக ஆதாரபூர்வமாக விவரித்து உள்ளார். இஸ்லாத்தின் இந்தச் சட்டங்கள் பல்வேறு கருத்துடைய சமயத்தவர்களாயினும் அவர்களும் ஏற்றுக் கொண்டு இவ்வுலகில் சமாதானத்தின் அடிப்படையில் சகோதர, சமத்துவ சமுதாய வாழ்வை நிலைநிறுத்த முடியும் என்பதைக் காண்பிக்கின்றன.

நிற்க, பெருமானாரின் அனைத்து மதங்களையும் மதிக்கும் மனப்பான்மை, அவரது போதனைகள் இக் காலத்திற்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைய இன்றியமை யாதவை என்பதனை மிகத் திண்ணிய முறையில் விளக்கிக் காட்டுகின்றார் ஆசிரியர்.

எம்மதமும் சம்மதமென்று செப்பிடுவர் சிலர். ஆனாலோ பிற மதங்களை அழித்திட வேலாயுதம், சூலாயுதம், கடப்பாரை, சம்மட்டிகள் கையிலேந்திப் புறப்பட்டுவிடுவர் இவர்கள்.

முகமது நபி (சல்) அவர்களோ எம்மதமும் சம்மதம் என்று கூறிடவில்லை. ஆனால், இஸ்லாம் எந்தச் சமயத்திற் கும் எதிரி அல்ல என்று கூறினார். அப்படிக் கூறுவதன் மூலம் நிலைத்து நிற்கும் இஸ்லாத்தின் சகிப்புத்தன்மையை வெளிக் கொண்டுவருகின்றார்; பறைசாற்றுகின்றார் சகோதரர் மணவை முஸ்தபா.

பெருமானாரின் இறைப்பணி மற்றும் உயரிய பண்புகள் பற்றி ஆசிரியர் அற்புதமாக விளக்குகிறார்.

யூத மத நம்பிக்கையின்படி மேசியா என்னும் கிறிஸ்து உலகில் தோன்றுவார் என்று தீர்க்கர்கள் தீர்க்கமாகக்

கூறிவிட்ட போதிலும் வந்து போன கிறிஸ்துவை இன்னும் அவர்கள் மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஈசாநபி மண்ணுலகைவிட்டு விண்ணுலகு ஏகிடும்முன்னர் ஓர் தேற்றரவாளனை அனுப்புவேன் என்று கூறிச்சென்றார். அந்தத் தேற்றரவாளன் தான்தான் தூய ஆவியர் என்று கூறப்படும் பரிசுத்த ஆவியானவர் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். ஆனால், இஸ்லாமியர்களோ இயேசு கூறிச் சென்றது முகமதுநபியைக் குறித்து என்று எண்ணுகின்றனர். அவர்கள் நம்புகின்ற அளவில்தான் ஈசாநபி அடையாளம் காட்டிச் சென்ற நபிகள் நாயகம் அவர்களின் நடவடிக்கை அமைந்துள்ளதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம். பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் முற்பிதாக்கள் மூலமாய்த் தீர்க்கர்கள் வழியாய்த் தம்மை வெளிப்படுத்திய இறைவன் ஈசா நபி மற்றும் முகமதுநபி (சல்) அவர்களின் வழியில் தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்ற இஸ்லாத்தின் ஆணித்தரமான கருத்துகள் ஆசிரியரின் எழுத்தோவியங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டு உள்ளன.

இறைவன் தனக்க அருளியுள்ள உண்மைகளை நிலை நாட்ட பெருமானார் எடுத்துக்கொண்ட நல் முயற்சிகள் 'நபிகள் நாயகம் காட்டிய இஸ்லாம்' என்ற அதிகாரத்தில் (பக்கம் 99) அதிகமாகக் கூறப்பட்டுள்ளன.

பெருமானாருக்கும் அவருக்கு முந்திய நபிமார்களுக் கும் உள்ள ஒற்றுமை வேறுபாடுகள் பற்றி ஆசிரியர் அலசுகின்றார். நபிகள் நாயகம் அவர்கள் தம்மை ஒரு மனிதனாக மட்டுமே உலகத்திற்குக் காண்பித்தார். அவர் களுக்குப் பின் வந்தவர்களும் அவரை ஒரு நபி என்ற அளவிலே மட்டும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்த அளவில் அவருடைய நடவடிக்கைகள் நபிகளின் வாழ்க் கையில் அமைந்து விட்டன.

ஏனைய முற்பிதாக்கள், தீர்க்கர்கள் நபிகளைப்போல், நபிகளிலிருந்து சற்று மாறுபட்டோராக நபிகள்நாயகம்

அவர்கள் ஒரு நல்ல குடும்பத் தலைவராக, நல்ல கணவராக, தந்தையாக, படை நடத்தும் தளபதியாக, சட்டம் இயற்றுபவராக, சட்டத்தைக் கடைப்பிடித்தவராக, ஆட்சித் தலைவராக வாழ்ந்து காட்டியவர் பெருமானார்.

நபிநாயகம் வாழ்ந்த காலத்திலேயே பள்ளிவாசலை யும் மதினாவில் கட்டி 20 ஆண்டுகளாக குர்ஆனையும் முடித்து வைத்து, இஸ்லாத்தின் வழிபாட்டு முறைகளை யும், மத நம்பிக்கைகளையும் தெளிவு பெற பிரகடனம் செய்து, கேள்வி கேட்டவர்களுக்குத் தக்க பதிலையும் கொடுத்து "ஹதீஸ்" வழியாக உலகிற்கு, உலக மக்களுக்குத் தாம் உலகிற்கு வந்த முழுச்செய்தியையும் விட்டுச் சென் றுள்ளார் அண்ணல் நபி (சல்) அவர்கள். தாம் நிறுவிய சமயத்தின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ள நபிகள் நாயகம் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் தமது சமயத்தை அழித்துவிட போர்தொடுத்தவர்களை எதிர்த்துப் போராட அவர் தயங்கிடவுமில்லை. இறைவன் தன் மூலமாக உலகிற்கு அருளிய செய்தியைக் கருவிலேயே அழித்துவிடத் திட்டம் தீட்டியவர்களைக் களத்தில் சந்தித்து மடங்கடித்தார். இப்பணியில் இறைவனின் பாதுகாப்பும் அவருக்கு இருந்தது என்பதை ஆசிரியர் தெளிவாக எடுத்து உரைக்கின்றார். ‘சிலந்தியும் புறாக்கூடு’ சம்பவமும் பக்கம் (106) இதற்கு ஒரு நல்லுதாரணமாகும்.

தனது பள்ளி வாசலில் தன்னைத்தேடி வந்த கிறிஸ்தவ பாதிரிகள் குழுவினரைத் தனது பள்ளிவாசல் வளாகத்தில் தங்க வசதி செய்து கொடுத்து, கிறிஸ்தவ முறைப்படி தொழுகை செய்திடவும் மனப்பூர்வமாக அனுமதித்த பெருமானாரின் பரந்த உள்ளத்தைக் காணுமிடத்து நபிகள் நாயகம் அவர்களுக்கு ஒரு சலாம் அடிக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

தனது தோழர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த பெருமானார் யூதர் ஒருவரின் இறந்த சடலம் அவ்

வழியாகத் தூக்கி வருவதைக் கண்டதும் எழுந்து நின்று மரியாதை செய்ததன் மூலம் நபிகள் நாயகம் எந்த அளவுக்கு ஓர் உயர்ந்த மனிதர் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

நபிகளின் ஈகைக்குணம், சிக்கன வாழ்வு மற்றும் ஏழைகள், திக்கற்றவர்கள், விதவைகள் மீது அன்பையும், பரிவையும் காட்டிய பண்புச் செயல்கள் இன்றும் அப்படியே ஒவ்வொரு முஸ்லிம் மீதும் படிந்திருப்பதை நாம் காண முடியும்.

'யாரிடமிருந்து மனிதகுலத்திற்கு நன்மை கிடைத்துக் கொண்டு இருக்கின்றதோ, அவன்தான் மனிதர்களில் சிறந்தவன்' என்ற நபிகளின் திருவாக்கியத்திற்கு ஏற்ப தனக் கென்று வாழாது பிறர்க்கென்று வாழும் சிறந்த மானி டர்களை இந்த இருபதாம் நூற்றாண்டில் வலை வீசித் தேடிக் கொண்டிருக்க வேண்டிய சூழலில் நாம் இருக்கின்றோம்.

அர்த்தமுள்ள மதம் இஸ்லாம் என்பதை நமக்குத்தெரிய வைக்கின்றார் ஆசிரியர்.

நண்பர் மணவை முஸ்தபா அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு ஏடுகளில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளை தொகுத்து ஒரு புத்தக வடிவில் நமது கையில் தந்திருக்கின்றார். இதற்கு முன்பு இவற்றைப் படித்தோரும் படியாதோரும் பயனடையும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

எந்த அதிகாரத்தைப் புரட்டினாலும், எந்த ஆய்வுக் கட்டுரைகளை வாசகர்கள் படித்தாலும் இஸ்லாம் எந்த அளவில் ஒரு அர்த்தமுள்ள மதம், பொருத்தமுள்ள மதம், எந்த மண்ணுக்கும் எக்காலத்திற்கும் ஏற்ற சமயம் என்ற கருத்துகள் மீண்டும் மீண்டும் பளிச்சீட்டுக் கொண்டிருப் பதை வாசகர்கள் காண இயலும்.

மனிதகுலம் முழுவதும் இறைவனின் குடும்பம், நம் அனைவருக்கும் ஆதித் தந்தையர் ஆதாமும் ஏவாளும் ஆவர். அவர்களிலிருந்து எத்தனைக் கோத்திரங்கள் கிளைகள் தோன்றியிருந்தாலும் நம் அனைவருக்கும் விசுவாசத் தந்தையாகிய ஆபிரகாம், அவருக்குப் பின்வந்த மூசாநபி, தாவூத் நபி, ஈசாநபி ஆகியவரது வரலாற்று வழி நின்று இறைவன் தமது வரலாற்றைப் படைக்கின்றான். இன்னும் படைத்துக்கொண்டு இருக்கின்றான் என்னும் மாபெரும் உண்மையைத் தமது ஆய்வுக்கட்டுரைகளில் ஆங்காங்கு பிட்டுப்பிட்டு வைக்கின்றார் ஆசிரியர்.

இஸ்லாத்தின் 'ஐந்து தூண்கள்' என்று கூறப்படும் ஈமான் எனும் இறை நம்பிக்கை, தொழுகை எனும் இறை வணக்கம், நோன்பு எனும் விரதம், ஜக்காத எனும் தர்மங்கள், ஹஜ் எனும் புனிதப்பயணம் ஆகிய இந்த ஐம்பெரும் கடமைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் எந்த அளவில் ஒரு முஸ்லிமின் மனோ வாக்குச் சிந்தனைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன, சீர்செய்யப்படுகின்றன என்பதை விளக்குகின்றார். கடுமையான சமய விதிகளுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாத எவனும் கடிவாளம் போடாத ஒரு குதிரையைப் போலத்தான் காணப்படுகின்றான்.

விஞ்ஞான ரீதியில் இக்கடமைகள் ஒவ்வொன்றுக்கும் ஆசிரியர் விளக்கம் கூறுமிடத்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நம்பிக்கையின் அவசியத்தையும் அந்த இறைவனை ஏனோதானோ என்று அல்ல, ஒவ்வொரு நாளும் ஐந்து வேளை தொழுதுகொள்ள வேண்டும் என்ற கண்டிப்பு எல்லாம், ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கும் ஒவ்வொருவருக்கும் அவசியமாகக் காணப்படுகின்றன.

வருடத்தில் ஒருமாதம் கடைப்பிடிக்கப்படும் விரதத்தின் மூலம் மனித சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளுக்கும்

தேவையான ஓய்வும் அந்த ஓய்வுக்குப் பின்னர் நல்லதொரு தெம்பும் ஏற்படுகிறது என்று ஆசிரியர் விளக்குமிடத்து எந்த அளவில் இஸ்லாம் ஓர் ஏற்றுக் கொள்ளக்கூடிய மார்க்கமாக இருக்கிறது என்பதைத் திறந்த மனதுடன் இந்தப் புத்தகத்தைப் படிக்கும் எவரும் ஒத்துக் கொள்ளுவர்.

ஒவ்வொரு முஸ்லிமும் தானம் செய்ய, தனது வருவாயில் இரண்டரை சதவிகிதம் எடுத்து வைக்க, இஸ்லாத்தின் போதனைப்படி நபிகள்நாயகம் அவர்களால் அன்புக் கட்டளையிடப்படுகிறான். பலநூறு ஆண்டுகளாக இந்த ஒழுங்கைக் கடைப்பிடித்த காரணத்தினாலும் இது போன்ற பாரம்பரியம் கிறிஸ்துவ மதபோதனையிலும் காணப்படுகின்றதனாலோ என்னவோ எந்த ஒரு இஸ்லாம் நாடும் கிறிஸ்துவ நாடும் பிறநாடுகளிடமிருந்து கையேந்திப் பிச்சை எடுக்க வேண்டிய அவசியம் அன்றும் இன்றும் ஏற்பட்டது இல்லை என்பதை இங்கு நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன், எனினும் சில நேரங்களில், சிலவேளைகளில் பங்களாதேஷ் போன்ற ஏழை முஸ்லிம் நாடுகள் நிவாரணப்பணிகள் செய்வதில் போதுமான அளவு ஆர்வமும் காட்டுவது இல்லை என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவ்வாறே ஹஜ் பயணம் நாடு, வகுப்பு, சாதி, வர்ணங்களுக்கு அப்பாற்பட்டு இஸ்லாமியரை ஒன்றாக இணைக்கின்றது. இதனால் ஒவ்வொரு முஸ்லிமும் அவன் ஒரு தனிமனிதன் அல்ல, கோடிக்கணக்கான இறை மக்களில் அவனும் ஒருவன் என்று பெருமை கொள்ளுகின்றான்.

இஸ்லாமிய சகோதரர்கள், இஸ்லாமிய நாடுகள் ஒருவருக்கொருவர் எவ்வளவுதான் சண்டைபோட்டுக் கொண்டாலும் சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதியை நிலை

நாட்டிட உலக வரலாற்றில் இஸ்லாம் ஆற்றியுள்ள பங்கினை வேறு எந்தச் சமயங்களும் சமூக அரசியல் இயக்கங்களும் ஆற்றிடவில்லை என்பதை அடித்துக் கூறிட முடியும். குறிப்பாக இந்தியாவில் வர்ணாசிரம தர்மம் என்னும் சாபக்கேட்டிற்கு முதல் சாவு மணி அடித்ததே இஸ்லாம் தான்.

இஸ்லாம் ஒரு வெறும் சமயம் அல்ல; நாட்டில், சமூகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக உள்ள ஏற்றத்தாழ்வுகளை, மேடு பள்ளங்களை, சமூகச்சரிவுகளை சமப்படுத்தும் ஓர் போர்ப்படை. மூடநம்பிக்கைகளுக்கும், மதங்களுக்கும் மதத்தைத் படைத்த ஆச்சாரியர்களுக்கும் அடிமைப்பட்டு கிடக்கும் இருட்டுப் பகுதிகளுக்கு இஸ்லாம் கிறிஸ்துவைப் போல் வெளிச்சம் தரும் மின் விளக்கு. திசைதெரியாத கப்பலுக்கு கலங்கரை விளக்கு. இஸ்லாம் எகிறிப் பாய்ந்தும் எல்லை மீறாதிருக்கிற கடல். நண்பர் வலம்புரி ஜானின் பாணியில் கூறப்போனால், இஸ்லாம் இந்த மண்ணுக்கு மாத்திரம் அல்ல எந்த மண்ணுக்கும் ஏற்ற மார்க்கம். அர்த்தமில்லாத மதங்கள், மதக் கொள்கைகள் உலகில் உண்டு. ஆனால் இஸ்லாமோ அர்த்தமுள்ள, பொருத்தமுள்ள மார்க்கம்.

இந்த அரும்பெரும் தத்துவங்கள் அடங்கிய கருத்துப் பெட்டகமாம் "பெருமானாரின் பிறசமயக் கண்ணோட்டம்" என்னும் இவ்வரிய நூலைப் படைத்துள்ள நண்பர் மணவை முஸ்தபா அவர்களுக்கு எனது நல்லாசி.

மதத்தின் பெயரால், ஆண்டவன் பெயரால், சமயத்தின் பெயரால் பல கெடுபிடிகளை இந்நாட்டில் உண்டாக்கிக் கொண்டு இருக்கும் தீய சக்திகளை எதிர்த்துப் போராடுவதில் எந்த பயனும் இல்லை. அவர்களை அடையாளம் கண்டு கொண்டு சற்று ஒதுங்கி நிற்பதே மேல் என்ற கருத்

*தினை உடையவர் மணவை முஸ்தபா. சமய நல்லிணக் கத்தை, சகிப்புத்தன்மையை, பல சிந்தனைகளால் ஏவப் பட்டு அவர் சார்ந்து இருக்கும் இஸ்லாத்தினால் உந்தப் பட்டு தமிழ் உலகிற்கு இந்த ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பை, இந்த அரிய பெரிய நூலைப் படைக்கின்றார்.*

*சாதி சமயப் பாகுபாடு இன்றி அனைவரும் படித்துப் பயன் அடைய இந்த அழைப்பினை விடுத்து முடிக்கின்றேன், அஸ்ஸாலாமு அலைக்கும்.*

*சென்னை - 10* **M. எஸ்றா சற்குணம்**
*17-07-1993*

# சிறப்புரை

வெகு நாட்களுக்கு முன்பு படித்த குட்டிக் கதை இது !

காலத்தை அளவிடும் கடிகாரங்கள் தோன்றாத காலம் !

நேரம் என்று ஒன்று வரையறுக்கப்படாததால் எதையும் திட்டமிட்டுச் செயல்பட, செயல்படுத்த இயல வில்லை. சமூகத்தில், வர்த்தக உலகில் ஒரே குழப்பம். நகரில் முன்னேற்றமில்லை, முன்னேற்றமின்றி வாழ்க்கை தேங்கிப் போனதால் மக்களிடையே விரக்தி, சோர்வு, வாய்ப்புகள் குறைந்து போனதால் போட்டி அதிகமானது; பொறாமை உணர்வு வளர்ந்தது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்நான்கும் மிகுந்தால் என்ன ஆகும்? அவ்வப்போது பூசல்; ஆங்காங்கே கலவரம். வெளிநாடு சென்ற அறிஞர் ஒருவர் அங்கே ஒரு சாதனத்தைக் கண்டார். காலத்தை அளந்து காட்டும் கருவி அது. சூரியக்கடிகை - ஆங்கிலத்தில் **Sun Dial**-என்று சொல் வார்கள். நன்கு வெயில்படும் இடத்தில் அதை வைத்தால் கீழே விழும் நிழலின் அளவைக் கொண்டு நேரத்தைக் கணிக்கலாம். நேரத்தைப் பகுத்து அளவிடும் வழக்கம் ஏற்பட்டபிறகு இன்ன நேரத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்க லாம். வியாபாம் பேசலாம். பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு விற்கலாம், வாங்கலாம் என்பது போன்ற நடை முறைகள் ஏற்பட்டன. பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது அமைதி தழைத்தது.

ஒருநாள் சூரியக்கடிகையை அறிமுகப்படுத்தி வைத்த அறிஞர் காலமானார். சூரியக்கடிகை நிறுவப்பட்டிருந்த சதுக்கத்தில் மக்கள் கூடினார்கள். அவர் கொண்டு வந்த

சாதனத்தால் தத்தம் சொந்த வாழ்க்கையிலும், சமூகத்திலும் ஏற்பட்ட மகத்தான முன்னேற்றத்தை நினைவு கூர்ந்து மனம் நெகிழ்ந்து பேசினார்கள். அவருக்கு நன்றி பாராட்டும் வகையில் ஒரு நினைவுச்சின்னம் எழுப்ப உறுதி பூண்டார் கள். அந்த நினைவுச் சின்னத்தை எப்படி எழுப்பினார்கள் தெரியுமா?

விலை உயர்ந்த பளிங்குக் கற்களைக் கொண்டு சுவர்கள் எழுப்பினார்கள். அதன் மேல் பொற்கூரை வேயப் பட்ட ஓர் அழகிய விதானம். வாசல் நிலைமீதில் நவரத் தினம், வழி நடையெல்லாம் பட்டுக்கம்பளம், தூணில் அழகியதாய் துய்ய நிறத்தினதாய் அமைந்த அந்த மண்டபத்திற்கு அறிஞரின் பெயரைச் சூட்டினார்கள். ஒரு துளி கூட வெயில் நுழைய முடியாத அந்த மண்டபத்தில் சூரியக் கடிகையை நிறுவினார்கள்.

விளைவு? வெயில் இல்லாததால் நிழல் இல்லை. நிழல் விழாததால் நேரம் தெரியவில்லை. மீண்டும் குழப்பம்; பூசல், கலவரம். அமைதி சீர் கெடவும், பொருளாதாரம் பின்னோக்கிச் செல்லவும் அந்த அறிஞரது நினைவுச் சின்னமே காரணமாயிற்று. மதங்களையும், நமது மக்களையும் பற்றி எண்ணும்போதெல்லாம் இந்தக் கதை எனக்கு நினைவில் மின்னும். சக மனிதர்களிடம் அன்பு பாராட்டுமாறு போதிக்காத மதம் எதுவுமேயில்லை. ஆனால் மதத்தின் பெயராலேயே சுரண்டல் இருப்பதை நாம் அறிவோம். இரக்கத்தையும், கருணையையும், நீதி யையும் மேற்கொள்ளுமாறு எடுத்துச் சொல்லாத மதங் களேயில்லை, என்றாலும் வகுப்புக் கலவரங்கள் மூளும் போது பிஞ்சுக் குழந்தைகள் கூட வெட்டிக் கொள்ளப் படுவதைப் பற்றி படிக்கிறோம்.

நாட்டில் மதவாதம் தலைதூக்காது இருக்க வேண்டுமானால் மதங்களைப் பற்றி எவரும் எழுதவோ, பேசவோ கூடாது எனத் தடைவிதிக்கப் பட வேண்டும்

என்று என்னுடைய நண்பர் ஒருவர் சொல்வதுண்டு. அவர் அவ்விதம் சொல்லும்போதெல்லாம் நான் அதை மறுத்து இங்கு மத வாதம் தலைதூக்காமல் இருக்க வேண்டு மானால் மதங்களின் கோட்பாடுகளை, சித்தாந்தங்களை, அவை சிபாரிசு செய்யும் சடங்குகளுக்கு பின்னால் இருந்து வரும் தத்துவங்களை நன்கு அறிந்த அறிவுஜீவிகள் தத்தம் மதங்களைப் பற்றித் தெளிவாகவும், விரிவாகவும் எழுத வேண்டும், பேச வேண்டும், பகிரங்கமாக விவாதிக்க வேண்டும், மற்ற மதத்தவரிடம் உரையாடல்கள் நடத்த வேண்டும் என்று சொல்வதுண்டு.

மேலோட்டமாக பார்க்கும்போது இந்தக் கருத்து சர்ச்சைக்குரியதாக, முரண்பாடு கொண்டதாகத் தோற்ற மளிக்கக்கூடும். ஆனால் உண்மை என்னவெனில் பெரும் பாலான மக்கள் தத்தம் மதங்களைப் பற்றி முழுமையாக அறிந்திராதவர்கள். ஆங்காங்கே கூட்டங்களில் கேட்டதை யும், அரைகுறையாக விவாதங்களில் எடுத்துரைக்கப் பட்டதுமான கருத்துகளையே தங்கள் மதத்தின் கோட்பாடு களாக அவர்கள் அறிவார்கள். சமயப் புத்தகங்களை ஆழ்ந்து படிக்கவோ, நுணுகி ஆராயவோ பெரும்பாலா னோருக்குச் சமயமில்லை. இந்துக்களாகவும், இஸ்லா மியர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும், வேறுபல சமயத் தினராகவும் தாங்கள் பிறக்க நேர்ந்ததின் காரண மாகவே அவர்கள் தத்தம் மதங்களைக் குறித்து பெருமைப்படு கிறார்களேயன்றி, அவற்றை ஆழ்ந்து படித்ததன் காரண மாக அன்று.

இந்த அசட்டுப் பெருமையையும், அரைகுறை ஞானத் தையும், மதவாதிகள் தங்கள் சுய லாபத்திற்குப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். இதற்கு நிரந்தரமான தீர்வு அறிவைப் பரப்புவதேயன்றி அதை ஒளித்துவைப்பதோ, மறுப்பதோ அல்ல. நண்பர் மணவை முஸ்தபா இத்தகைய தொரு முயற்சியைத்தான் இந்தப் புத்தகத்தின் மூலம் மேற்

கொண்டிருக்கிறார். இஸ்லாமிய நூல்களை நன்கு படித்து அறிந்தவரும், நடுநிலை கொண்ட மனத்தைக் கொண்ட வருமான முஸ்தபா, அவர் சார்ந்திருக்கும் இஸ்லாம் மார்க் கத்தின் நெறிகளையும், அவற்றிற்குப் பின்னுள்ள தத்துவங் களையும் வேறு மதத்தினரும் விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. ரம்சான் ஏன் கொண்டாடப்படுகிறது? பக்ரீத்தின் பின்னணி என்ன? பிற மதங்களைப் பற்றி நபிகள் நாயகத்தின் கருத்து என்ன வாக இருந்தது? இஸ்லாமிய மறை எவ்வாறு பிறந்தது? என்று பற்பல விஷயங்களை இந்தக் கட்டுரைகள் எடுத்து சொல்கின்றன. அவற்றின் முத்தாய்ப்பாக சமய நல்லிணக் கத்திற்கு தடையாக இருப்பது எதுவென்றும், முஸ்தபா தனக்கே உரிய பாணியில் விவாதிக்கிறார்.

இந்த நூலிலுள்ள கட்டுரைகளில் பெரும்பான்மை யான கட்டுரைகள். 22-ல் 12 தினமணியில் வெளியானவை. இந்த வகையில் முஸ்தபாவின் நடுநிலைமைக்கு மட்டு மின்றி தினமணியின் நடுநிலைமைக்கும், மதச்சார்பின் மைக்கும் கூட இந்த நூல் ஒரு சான்றாக விளங்குகிறது. முஸ்தபா அவர்கள் இத்தகைய நூல்களைத் தொடர்ந்து எழுதிவர வேண்டும் என்று விரும்புகிறேன். அத்தகைய முயற்சிகளில் அவருக்கு வெற்றிகிட்ட வாழ்த்துகிறேன்.

சென்னை - 2 மாலன்
ஜூலை 21, 1993 'தினமணி' ஆசிரியர் நாளிதழ்

மவ்லானா எம்.அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ; பி.டிஹெச்

# ஆய்வுரை

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

*நஹ்மதுஹு வ நுஸல்லீ அலா ரஸூலிஹில் கரீம்*

அல்ஹாஜ் கலைமாமணி மணவை முஹம்மது முஸ்தபா அவர்களின், "பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்," என்னும் இச்சீரிய நூலை சிந்தை குளிர ஊன்றிப் படித்தேன். திருக்குர்ஆனின் அறிவுரைப்படியும், அதன் விளக்கமாக வாழ்ந்த வள்ளல் நபிகள் நாயகத்தின் நடைமுறைகள், அருளுரைகளுக் கொப்பவும் இஸ்லாம் படைப்பினங்களிடையே இணக்கத்தையும், நேசத்தையும் எவ்வாறு மேம்படுத்துகிறது என்பது பற்றி, முக்கிய இஸ்லாமிய விழாக்களின் அகமியங்கள் மூலமாக தெளிவு படுத்தும் இந்நூல் மனித நேய வரலாற்றுப் பாட்டையில் ஒரு மைல் கல் ஆகும்.

இறைவன் தன் திருத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வாயிலாக, அனைத்துலகும் கடைத்தேற அருள் செய்த மாமறை முக்கியமாக: "குர்ஆன்," "அலகுர் ஆன் ,"என்று 69 இடங்களில் அதன் அகத்தேயே குறிக்கப் படுகிறது. அதன் விழுமிய பொருளை, ஆழிய கருத்தை முற்றும் எவரும் உணர்ந்து விட்டதாகச் சொல்ல இயலாது. சில இடங்களில் அது மறை பொருளாகவே **(ESOTERIC)** அமைகிறது.

"சொல்லாலே சொல்லப்படுமோ? சொல்லும் தன்மை
துரும்பு பற்றிக் கடல் கடக்குந் துணிவே யன்றோ?"

(திருவாசகம்) என்னுமாப் போல், அதனை முற்றிலும் அறிய முனைவது என்பது துரும்பைப் பற்றிக் கொண்டு நீள்

கடலைக் கடக்க முற்படுவதற்கு ஒப்பாகும். இத்தகு மறை பொருள்கள் போக, மனித வாழ்க்கைக்கு வழிகாட்டு தலுக்கு வேண்டிய அறிவுரைகள் அறவுறைகளெல்லாம் எளிதில் புரியுமாறு தெளிவாகவே அமைந்துள்ளன. இவற் றில் எங்குமே மனித நேயத்தை வளர்க்கும் பான்மை - மனிதகுலம் முழுவதுமே ஆதி பிதா ஆதம் (அலை) அவர் களின் சந்ததி என் வலியுறுத்தி, மனித சகோதரத்துவத்தை வளர்ப்பதாகவே அமைந்துள்ளது. இத்தகு நீதி மறையும், அதனைப் பின்பற்றுவோரும் எவ்வாறு தவறாகக் கணிக் கப்படுகின்றனர் என்பது தான் வியப்புக்கும் வேதனைக் குறியதுமாகும்.

உலகத்தில் எங்கே கொடுமை நிகழ்ந்தாலும், இந்த நேரிய திருமறையைப் பின் பற்றி அக்கொடுமையை அகற்ற முஸ்லிம்கள் முற்பட்ட சம்பவங்களை வரலாற்றில் நெடு கிலும் காண முடியும். ஒரு சான்று :

நபிகள் பெருமானார் காலமான ஒரு நூற்றாண்டுக்குள் இஸ்லாமிய ஆட்சி உலகின் செம்பாகத்தில் வியாபித்து இருந்தது, அக்காலத்தில் பைஸாந்தியத்தில் கிறிஸ்தவர் களில் ஒரு பிரிவார், வேறொரு பிரிவார்தம் ஆலயங்களில் சிலை வணக்கஞ் செய்கின்றனர் என்று இவர்களின் கோவில்களை அழித்தனர். முஸ்லிம்களும் சிலை வணக் கத்தை எதிர்ப்பவர்கள்தாம். ஆனால், அவற்றை வணங்கு வோரின் ஆலயங்களை அழிப்பதற்கு அவர்களுடைய மார்க்கச் சட்டங்கள் இடந்தரா. அக்காலை முஸ்லிம்கள் நம் ஆட்சியிலிருந்த கிறிஸ்தவ ஆலயங்களைப் பாது காத்தமைப் பற்றி அமெரிக்க வார இதழ் டைம் (TIME) இவ்வாறு 'நினைவு' கூர்கிறது.

"பைஸாந்திய ஆட்சியிலிருந்த ஆலயங்களில் சிலை கள் பேரரசன் லியோ இஸுரியனின் கட்டளையினால் அழிக்கப்பட்டன. அப்போது மவுண்ட் ஸினாயிலிருந்த ஒரு மடாலயம் தப்பித்தது; ஏனெனில், இது உமைய்யா

கலீபாக்களின் ஆட்சிப் பகுதியில் இருந்தது. அம்மடாலயம் அமைதியாகச் செயல்பட முஸ்லிம்கள் வழி செய்தனர். இதற்குப் பதில் செய்யுமாப்போல், அதில் வாழ்ந்த துறவி கள் மடாலயத்தின் வளாகத்திலேயே ஒரு பள்ளி வாசல் கட்டிக் கொள்ள முஸ்லிம்களை அனுமதித்தனர்."

"அது சரி! இது நடந்து 1,300 ஆண்டுகள் ஆகிவிட்டன! இது போன்ற நிகழ்ச்சிகளை இன்னும் கூறிக் கொண்டிருந்து பயன் ஏது? என்று சிலர் வினவலாம்.

திருக்குர்ஆன் போதிக்கும் இப்பரந்த நோக்கும் சகிப் புத் தன்மையும் என்றும் நிலைத்து நிற்பவை என்பதைப் புலப்படுத்துவதற்கு ஓர் அண்மைக் காலச் சான்றையும் எடுத்துக் கூறுவோம்.

இரண்டாம் உலகப்போர், மனிதகுலத்துக்குப் பயங் கரமான பேரிழப்புகளை வாரி வழங்கிவிட்டு நின்றதும் இனிப்போர் நடவாமல் தடுக்க ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு, அதற்கு ஒரு சாசனம் வரையப்பெற்றது. அதற்குக் காரணமாக விருந்த பேராசிரியர் ரபேல் லார்கின் கூறுகிறார் :

"அனைத்துலகக் கண்ணோட்டத்துடன் மிகுந்த சகிப்புத் தன்மையைத் தன்னுள்ளே கொண்டிருக்கும் சமயத்தின், குர்ஆனுக்கு இசைவாக இச்சாசனம் அமைந் துள்ளது என்பதை முஸ்லிம்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்." (ஐ.நா. சாசனத்தை உருவாக்கிய பேராசிரியர் ரபேல் லார்கின்)

இதற்கு இடைப்பட்ட நூற்றாண்டுகளில் வரலாற்று ஏடுகளிலிருந்து ஏராளமான சான்றுகளை எடுத்துக்கூற முடியும் - விரிவஞ்சி விடுக்கின்றோம்.

அப்படியானால் இஸ்லாத்தைப் பற்றி ஏன் தவறான கருத்துகள் நிலவுகின்றன? என்னும் ஒரு கேள்வி எழலாம்.

*அதுதான் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் கீழ்த் திசை நாடுகளின் சரித்திரங்களையும், சமயக்கோட்பாடுகளை யும் பண்பாடுகளையும் மாண்பார் சாதனைகளையும் மாசு படுத்திடத் தம் ஆதிக்கங்களை நிலை நாட்டிட உருவாக்கிய வரலாறுகளின் சதிச் செயல்களாகும். அந்த ஏகாதி பத்தியங்களின் ஆதிக்கத்தில் இருந்த கீழ்த்திசை நாடுகளில் அவ்வரலாறுகளின் தாக்கம் இல்லாமற் போகுமா?*

*"பொய்மைத் தொழுதடிமை செய்வார்" புனைந்த இவ்வரலாறுகள், உண்மையான சரித்திரங்கள தோன்றத் தொடங்கியதும், படிப்படியாக மறைந்து வருகின்றன.*

*இம்மாதிரிப் பொய்க் கூற்றுகள் மறைந்தே தீரும் என்பதை திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.*

> *"இன்னும் சத்தியம் வந்துவிட்டது, அசத்தியம் அழிந்து விட்டது; நிச்சயம் அசத்தியம் அழிந்தே விடும்," என்று (நபியே மக்களுக்கு) நீர் கூறுவீர்ராக! (17:81)*

> *இத்தகைய சத்திய வேட்கையின் பாற்பட்ட மணவை முஹம்மது முஸ்தபா அவர்களின், "பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்" என்னும் அரிய தொகுப்பு, அளப்பரும் பயனை அள்ளித்தருவது. அதனை வரவேற் கிறேன், வாழ்த்துகிறேன்.*

*வ ஆகிரு தஃவானா அனில் ஹம்து*
*லில்லாஹி ரப்பில் ஆலமீன்*

*10-2-1414* அப்துல் வஹ்ஹாப்
*30-7-1993*
*சென்னை - 600 016.*

# பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்

**நாளொன்றுக்கு ஒரு கோடி முறை**
**உலகெங்கும் ஒலிக்கும் பெயர்**

*உலகில் உதித்த மாமனிதர்களில் அண்ணல் முஹம்மது நபி (சல்) அவர்கள் பெயர் போன்று வேறொருவர் பெயர் இடையறாது மக்களால் உச்சரிக்கப்படுவதில்லை என்றே கூறலாம்.*

*நாள்தோறும் ஐந்து வேளைத் தொழுகைக்கென தொழுகை அழைப்புக்கான பாங்கு பள்ளிவாசல் தோறும் ஒலிக்கப்படுகிறது. அதில் வேளைக்கு இருமுறையாகப் பத்து முறை முஹம்மது என்ற அண்ணலார் பெயர் ஒலிக்கப் படுகிறது. உலகெங்கும் பத்து இலட்சம் பள்ளிவாசல்கள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். எனவே, ஒரு நாளைக்கு ஒரு கோடி தடவைகள் நபிகள் நாயகம் முஹம்மது நபி (சல்) அவர்களின் பெயர் இரவு பகல் எந் நேரமும் இடையறாது உலகெங்கும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அவரது புகழ் நெஞ்சாரப் போற்றப்படுகிறது.*

**அனைத்துலகுக்கும் ஓர்**
**அழகிய முன்மாதிரி**

*மனித வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும், அழகிய முன்மாதிரியாக வாழ்ந்து மறைந்த மனிதப் புனிதர்*

மாநபி முஹம்மது நபி (சல்) அவர்களின் வாழ்வும் வாக்கும் மனித குலத்திற்கு என்றென்றும் வழிகாட்டும் ஒளி விளக்காக அமைந்துள்ளதெனலாம்.

மற்ற துறைகளைப் போன்றே பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டமும், மனிதகுலம் ஏற்றிப் போற்ற வேண்டிய ஒருமைப்பாட்டுணர்வும் ஒப்பற்ற வழி காட்டியாக மனித குலத்துக்கு விளங்கி உலகை வழி நடத்துகின்றன.

## பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்

பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டமும் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடும் உலகிலுள்ள அனைத்துச் சமயங்களையும் மரியாதைக்குரியவையாகவே காட்டுகின்றன. பிற சமயத்தவர்களின் வணக்கத் தலங்கள், அவர்கள் போற்றும் வேதங்கள், அவர்கள் மேற்கொள்ளும் சடங்குகள் ஆகிய அனைத்தையும் மதிக்கப் பணிக்கிறது இஸ்லாம். அவற்றைப் பற்றித் தவறாகப் பேசுவதைத் தடுக்கிறது.

"அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகின்றார்களோ அவற்றைப் பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்" (குர்ஆன் 6 :108)

## அவரவர் மார்க்கம் அவரவர்க்கு

அவர்கள் மார்க்கத்தை அவரவர் வழியில் பேண இஸ்லாம் எடுத்துக் கூறுகிறது. இதைப் பற்றி திருமறையான திருக்குர்ஆன்,

"உங்களுக்கு உங்கள் மார்க்கம்; அவர்களுக்கு அவர்கள் மார்க்கம்" என எடுத்துக் கூறுகிறது.

*இதற்கு எடுத்துக்காட்டான நிகழ்ச்சியொன்று அண்ண லார் வாழ்வில் நடைபெற்றது.*

*ஒரு சமயம் பெருமானாரை நேரில் கண்டு அவருடன் பேச மதினாவிலுள்ள பள்ளிவாசலுக்குப் பாதிரிகள் குழு வொன்று வந்தது. அதில் பிரதம பாதிரியார் உள்பட நாற்பது கிருஸ்தவப் பாதிரியார்கள் இருந்தார்கள். அவர்கள் தொடர்ந்து பெருமானாரோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருந்தது. எனவே, அந்தத் பாதிரிமார்களை பள்ளி வாசல் வளாகத்திலேயே தங்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார் பெருமானார். தக்க வசதிகளைச் செய்து கொடுத்துத் தங்க வைத்துக்கொண்டார்.*

*அந்தப் பாதிரிமார்கள் பிரார்த்தனை செய்யும் நேரம் வந்தபோது, கிருஸ்தவ முறைப்படியான சடங்குகளோடு பள்ளிவாசல் வளாகத்திலேயே பிரார்த்தனை செய்து கொள்ளவும் மனப்பூர்வமாக அண்ணலார் அனுமதி அளித் தார். அங்கு வந்திருந்த பாதிரிகளும் பெருமானார் விருப்பப் படியே பள்ளிவாசல் வளாகத்திலேயே தங்கி, தங்கள் மத ஆசாரப்படி பிரார்த்தனையும் செய்து மகிழ்ந்தார்கள். இதன் மூலம் பிற சமயங்களை வெறுக்காதது மட்டுமல்ல. அவற்றை மதிப்பது இஸ்லாம் என்பது தெளிவாகும். நாயகத் திருமேனியின் வாழ்வும் அதையே வலியுறுத்து கிறது.*

*"இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும் எதிரானதன்று" என்பது நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாக்கமுதாகும்.*

**கட்டாயத்துக்குக் கடுகளவும்**
**இஸ்லாத்தின் இடமில்லை**

*நபிகள் நாயகத்தின் வாழ்க்கையில், யாரையும் இஸ் லாத்தின்பால் இழுத்ததாகக் கடுகளவு செய்தியைக்கூடக்*

காண முடியவில்லை. இஸ்லாத்தின் உன்னதமான கொள்கை, கோட்பாடுகளைக் கேட்டும் நெறிமுறைகளின் மேன்மையை அறிந்தும் இஸ்லாத்தின்பால் தங்களை இணைத்துக் கொண்டார்களேயன்றி, இஸ்லாத்தின்பால் யாரும் இழுக்கப்படவில்லை என்பதுதான் பெருமானார். வாழ்க்கையும் இஸ்லாமிய வரலாறும் தரும் செய்தியாகும். ஏனெனில், அவ்வாறு செய்வது இஸ்லாமியக் கொள் கைக்கு நேர் மாறானதாகும் என்பது திருமறையின் தீர்ப் பாகும்.

"இஸ்லாத்தின் நிர்ப்பந்தமே இல்லை" (குர்ஆன்-2 :256) என்பது திருமறைக் கோட்பாடு.

மேலும் இதைப் பற்றித் திருமறை,

"(நபியே!) நீர் கூறும் : (முற்றிலும் உண்மையான) இவ்வேதமானது உம் இறைவனால் அருளப் பெற்றது. விரும்பியவர் (இதை) விசுவாசிக்கலாம், விரும்பாதவர் (இதை) நிராகரித்துவிடலாம்." (குர்ஆன் 18:29)

என்று கூறுவதன்மூலம் இஸ்லாமிய நெறியை மக்கள் ஏற்பது என்பது அவரவர் விருப்பத்தைப் பொருத்து அமை வதேயல்லாமல், கட்டாயத்திற்குக் கடுகளவு இடமும் இல்லை என்பது தெளிவு. இதற்கு மாறான எந்தச் செயலும் இஸ்லாமிய நெறிக்கும் நாயகத் திருமேனியின் வாக்குக் கும், வழிகாட்டுதலுக்கும் நேர் மாறானதாகும் என்பது தெளிவு.

### உலகின் அனைத்துச் சமய வேதங்களுக்கும் அங்கீகாரம்

உலக சமயங்களையும் அவற்றின் வேதங்களையும் இஸ்லாம் ஏற்றுக் கொண்டுள்ளது. முதல் மனிதரும் முதல் நபியுமான ஆதாம் (அலை) தொடங்கி இறுதிநபி அண்ணல்

*நபிகள் நாயகம் (சல்) வரை ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் இறை தூதர்களாக மக்களுக்க நேர்வழி காட்ட இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப் பட்டு உள்ளார்கள்.*

*"அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்த வகுப்பாரும் (பூமியில்) இருக்கவில்லை." (குர்ஆன் 35 :24)*

*"ஒவ்வொரு வகுப்பினருக்கும் (நம்மால்) அனுப்பப் பட்ட ஒரு தூதர் உண்டு." (குர்ஆன் 10:47)*

*இவ்விருதிருமறை வசனங்களிலிருந்து உலகெங்கும் எல்லா நாட்டிலும், எல்லா இனத்திலும் இறை தூதர்கள் தோன்றி மக்களை நல்வழிப்படுத்தியிருக்கிறார்கள் என்ற பேருண்மை வெளிப்படுகிறது. இவர்கள் மூலமே இறை வேதங்களும் அவ்வக் காலகட்டத்திற்கேற்ப இறக்கி யருளப்பட்டுள்ளது என்பதும் திருமறை மூலம் தெளி வாக்கப்பட்டுள்ளது.*

அவரவர் தாய்மொழியில்
இறை வேதம்

*இவ்வேதங்கள் அவரவர் தாய்மொழியிலேயே இறை வனால் வழங்கப்பட்டன என்பதை,*

*"(நபியே!) ஒவ்வொரு தூதரும் (தம் மக்களுக்குத்) தெளிவாக விவரித்துக் கூறும் பொருட்டு, அவரவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பிவைத்தோம்" (குர்ஆன் 14:4)*

*எனத் திருமறை மொழிகின்றது. இதிலிருந்து மண்ணுலகின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் அவரவர் மொழியிலேயே இறை வேதங்கள் இறைத்தூதர்கள் மூலம் வழங்கப்பட் டுள்ளன; அவ்வகையில் இந்தியாவிலும் பலப்பல இறை*

தூதர்களும், இறை வேதங்களும் வந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

**ஏக இறைவனை வணங்கப் பணித்த இறைதூதர்களே இறைவனாக்கப்பட்டார்கள்**

*இந்த இறை தூதர்கள் எல்லோருமே ஏக இறைவனையே வணங்கப் பணித்தார்கள். தங்களை வணங்குமாறு யாருமே கூறவில்லை. ஆனால், நாளடைவில் அந்த இறை தூதரைப் பின்பற்றியோர் அவர் மீது கொண்ட அன்பால் அவருக்கு இறைத்தன்மைகளை ஏற்றி, இறைவனாகவே ஆக்கிவிடுவார்கள். நீண்டகாலத்துக்குப் பின் தடம்புரண்ட மக்களின் வாழ்வை நேர்தடத்துக்குக் கொணர மீண்டும் ஓர் இறைதூதர் தோன்றி, மக்களை வழி நடத்துவார் என்பதுதான் இறை தூதர்களின் வரலாறாக உள்ளது.*

*இவ்வாறு இறைவனால் வழங்கப்பட்ட இறைச் செய்திகளெல்லாம் ஒரே மாதிரியாக இருந்து வந்துள்ளன என்பது நபிகள் நாயகம் அவர்களுக்கு வழங்கப்பட்ட இறைச்செய்தி பற்றி திருக்குர்ஆன் மூலம் வெளியிடப் பட்ட இறை அறிவிப்பால் உணர முடிகிறது.*

*"(நபியே) உமக்கு முன் வந்த தூதுவர்களுக்குக் கூறப்பட்டது எதுவோ அதனையேயன்றி (வேறொன்றும்) உமக்குக் கூறப்படவில்லை." (குர்ஆன் 41:43)*

**ஐம்பெரும் கடமைகள் அனைத்துச் சமய அடிப்படை**

*இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளின் அடித்தளம் உலகத்துச் சமயங்கள் அனைத்தின் அடித்தளமாக அமைந்திருப்பது அகிலத்துச் சமயங்கள் அனைத்தும் இறைவனால் அருளப்பட்டவையே என்பதற்குச் சான்றாக உள்ளது.*

1. ஈமான் எனும் இறை நம்பிக்கை
2. தொழுகை எனும் இறை வணக்கம்
3. நோன்பு எனும் விரதம்
4. ஜக்காத் எனும் தான தருமங்கள்
5. ஹஜ் எனும் புனிதப் பயணம்

இந்த ஐந்து கோட்பாடுகளும் உலகத்துச் சமயங்கள் அனைத்திலும் காணப்படுவதிலிருந்தே இச்சமயங்கள் அனைத்தும் இறைவனால் அருளப்பட்டவை; ஒரே போக்குடையவை என்பது தெளிவாகிறது.

**திருத்தமிலாத் திருமறை**
**மாற்றமிலா விதிமுறை**

ஆனால், இறுதி வேதமாக இஸ்லாம் அமைந்திருப்பத னால் மற்ற வேதங்களில் வலியுறுத்தப்படாத பல்வேறு கட்டுக்கோப்பான வரன்முறையான அம்சங்கள் எந்தக் காரணம் கொண்டும், எவ்வித மாற்றங்களுக்கும் திருத்தங் களுக்கும் உள்படாதவாறு இஸ்லாத்தில் செம்மையாக அமைந்துள்ளன.

எல்லா வேதங்களையும் போல இஸ்லாத்திலும் இறைநம்பிக்கை வலியுறுத்தப்பட்டாலும், 'ஒரே இறைவன்' என்ற கோட்பாடு அசைக்கமுடியாத அடித்தளத் திலும் உருவாகியுள்ளது . எல்லாச் சமயங்களுமே இறை வணக்கத்தை வலியுறுத்துகின்றன. ஆனால், இஸ்லாம் ஒரு நாளைக்கு ஐவேளை இறை வணக்கம் கட்டாயம் நடை பெற வேண்டும் என விதிக்கிறது. உலகத்துச் சமயங்கள் அனைத்துமே நோன்பாகிய விரத்ததைப் பேணப் பணிக்கின்றன. ஆனால், இஸ்லாம் ஆண்டில் ஒரு மாதம் முழுமையும் பகல் முழுவதும் உண்ணாமலும், பருகா மலும் நோன்பு நோற்கக் கட்டளையிடுகிறது. தான

தருமங்களைச் செய்யச் சொல்லாத சமயமே உலகில் இல்லை எனலாம். ஆனால் இஸ்லாமிய நெறி தங்கள் செல்வத்தில் நாற்பதில் ஒரு பங்கைத் தானம் செய்வதைக் கட்டாயக் கடமையாக்கியுள்ளது. புனிதப் பயணம் சென்று இறையில்லம் முன்பு எல்லோரும் சமம் என்பதை மெய்ப்பிக்க வேண்டுமென விதிக்கிறது. இந்த வரன் முறைக் கோட்பாட்டுக் கடமைகள் மட்டுமே பிற சமயங் களிலிருந்து இஸ்லாத்தை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

மேலும், இறைவன் தன் திருமறையாகிய திருக்குர்ஆனில்,

*"(நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும் நாம்தான் உம்மீது அருளினோம். இது தனக்கு முன்னுள்ள (மற்ற) வேதங்களையும் உண்மை யாக்கி வைக்கின்றது. அன்றி அவற்றைப் பாதுகாப்ப தாகவும் இருக்கிறது."*

*(குர் ஆன் 5:48)*

எனக் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இஸ்லாமியத் திருமறை, கடந்த காலங்களில் இறைவனால் தம் தூதர்கள் மூலம் வழங்கப்பட்ட உலகத்து மூல வேதங்களைப் பாதுகாக்கும் ஒன்றாகவும் அமைந்திருப்பதை அறிந்துணர முடிகிறது.

**பிற சமயப் பழிப்பு**
**இஸ்லாமிய நெறிக்கு மாறானது**

இவ்வாறு மக்களுக்கு நேர் வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்ட ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களின் மீதும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங் களின் மீதும் நம்பிக்கை வைப்பவனே உண்மையான முஸ்லிமாக இருக்க முடியும் என்பதை,

"(நபியே) அவர்கள் உமக்கு அருளப்பெற்ற (இவ்) வேதத்தையும் உமக்கு முன் (இருந்த நபிமார்களுக்கு) அருளப் பெற்றவற்றையும் விசுவாசங்கொள்வார்கள்." (குர் ஆன் - 2 : 4) என்று திருமறை கூறுவதன் மூலம் அறியலாம்.

இதிலிருந்து, பிற மதங்களை தூஷிப்பது, மதப் பெரி யோர்களை அவமதிப்பது, பிற சமய வேதநூல்களை அவ மதிப்பது, பிற சமய வேத நூல்களை இழிவு படுத்துவது, வணக்கத் தலங்களை சேதமுறச் செய்வது ஆகிய செயல் கள் இஸ்லாமியக் கொள்கைக்கு மாறானவை என்பது தெளிவாகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் விரும்பும் மார்க் கத்தைப் பேணி நடக்க முழு உரிமையுண்டு என இஸ்லாம் விதிக்கிறது. இஸ்லாமிய ஆட்சி நடத்திய முஸ்லிம் மன்னர் கள் பிற சமயச் சடங்குகளில், மத அமைப்பு முறைகளில் தலையிடாமல், அந்தந்த சமயத்தைச் சார்ந்த நீதிபதிகளைக் கொண்டே அவ்வச் சமயப் பிரச்சினைகளில் தீர்ப்பு வழங்கச் செய்தனர் என்பது உண்மை வரலாறாகும். இதுவே பெருமானாரும் திருக்குர்ஆன் திருமறையும் காட்டிய வழி.

## ஒவ்வொரு மனிதனும் இறைவனின் பிரதிநிதியே

இஸ்லாத்தின் பார்வையில் மனிதன் மாபெரும் சிறப்புக்குரியவனாக மதிக்கப்படுகிறான். இன்னும் சொல்லப்போனால் மனிதன் இறையம்சம் பொருந்திய வனாக உள்ளான். மண்ணுலகில் மனிதன் இறைவனின் பிரநிதியாகவும் கருதப்படுகிறான். ஏனெனில், இறைவன் மனிதனைத் தன்னிலிருந்து படைத்தான்.

மனித குலம் முழுமையின் தோற்றுவாயாக விளங்கு பவர்கள் ஆதாமும், ஹவ்வாவும் (ஏவாள்) ஆவர். இவர்கள் மூலம் மனித குலம் தழைத்ததைப் பற்றித் திருக்குர்ஆன்:

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால்) உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலானவர் என்று பாராட்டிக் கொள்வதற்கில்லை. (எனினும்) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின் றாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான்." (குர் ஆன் 49 : 13)

ஆதாம் (அலை) ஹவ்வா வழியிலே பிறந்தவர்களின் பிறப்பு எண்ணிக்கை, இன்று அகில உலகிலும் இறந்தோர் போக எஞ்சியோர் ஐந்நூறு கோடிப் பேர்களாகும். இவர்கள் அனைவருமே ஒரே மூலத் தாய் தந்தையர் வழிவந்த சகோதரர்கள்; உடன் பிறப்புகள் என்பதுதான் நபிகள் நாயகம் போதித்த கோட்பாடு. அதுவே திருமறை தரும் கொள்கை.

அனைவரும் சோதரரே

எனவே, உலக மக்கள் அனைவரும் ஒரே குலத்தை, ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதைத் திருமறை பல இடங்களில் வலியுறுத்திக் கூறுகிறது.

பெருமானாரும் இந்தக் கருத்தையே தம் வாழ்நாள் முழுமையும் போதித்து வந்தார். உடன்பிறந்த சகோதரர்கள் என்ற முறையில் சமத்துவமாக வாழ வேண்டியவர்கள் என்பதை எல்லா வகையிலும் வலியுறுத்தி வந்தார்.

பெருமானார் ஒரு சமயம் சில தோழர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அத் தெரு வழியே யூத சமயத்தைச் சார்ந்த யூதர் ஒருவருடைய இறந்த சடலத்தைச் சிலர் தூக்கி வந்தனர். இதைக் கண்ட அண்ணலார், அச்சடலம் தன்னைக் கடந்து செல்லும்வரை

எழுந்து நின்று மரியாதை செய்தார். அவரது தோழர்களும் அவ்வாறே எழுந்து நின்று மரியாதை செய்தனர். பிண ஊர்வலம் சென்ற பின்னர் அமர்ந்தனர். அப்போது வியப் புடன் அவரது தோழர்கள் அண்ணலாரை நோக்கி, "இவ்வாறு எழுந்து நின்று மரியாதை செய்ததற்கு ஏதாவது சிறப்புக் காரணம் உண்டா?" என வினவினர். அதற்குப் பெருமானார் புன்னகை புரிந்தாவாறு, "அவரும் நம் சகோதரரே, ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனுக்குச் செய்யும் மரியாதையைச் செய்தேன்" என்று கூறி தோழர் தம் ஐயம் போக்கினார்.

இறந்தவர் மாற்றுச் சமயத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்திருந்தும், அவரும் ஆதாம் (அலை) வழி வந்த தம் சகோதரரே எனக் கொண்டு, அவரது இறுதிப் பயணத்திற்கு எழுந்து நின்று மரியாதை செய்த மாநபியின் செயல் ஒவ்வொருவரும் பின்பற்றி ஒழுகத்தக்க வழிமுறையாகும்.

## மனிதனின் சிறப்பு குலத்தாலும் கோத்திரத்தாலும் இல்லை

தான் பிறந்த குலத்தின் காரணமாகவோ, தான் சார்ந்த இனத்தின் பேராலோ, தான் பேசும் மொழியின் காரண மாகவோ, பிறந்த நாட்டினாலோ, தான் பெற்ற கல்வி யினாலோ ஒருவன் உயர்வு பாராட்டினால், அல்லது பேதம் காட்டினால் அது சாத்தானின் செயலாக இருக்குமே தவிர இறையம்சமான மனிதனின் செயலாக இருக்க முடியாது என்பது பெருமானாரின் உள்கிடக்கையாகும்.

அதே சமயத்தில் மனிதனுக்கு என்று ஓர் உயர்வுத் தன்மை உண்டு. ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தன்னை யொத்த மனிதர்களை நடத்துகிறான்; ஒழுக்க நியதிகளைப் பேணி நடக்கிறான்; மனிதர் என்ற அளவில் மற்றவருடைய உயிர், பொருள்களை கண்ணியப்படுத்துகிறான்; அவர் பின்பற்றும் சமயத்தை மதிக்கிறான்; எந்த அளவுக்கு இறை

*யச்சமுடையவனாக, இறைவன் வகுத்தளித்த வழியில் வாழ்கிறான் என்ற அளவுகோல்களின் அடிப்படையில் அவன் உயர்வும் தாழ்வும் கணிக்கப்படுமே தவிர வேறு எவ்வகையிலும் அல்ல என்பது நாயகத்திருமேனியின் நல்லுபதேசத் திரட்டாகும்.*

### மனித குலம் முழுமையும் இறைவனின் குடும்பம்

*மனித குலம் முழுவதையுமே இறைவனின் குடும்பம் என இஸ்லாம் வர்ணிக்கிறது. மனிதர் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உபகாரம், தொண்டு அவர் முஸ்லிமாக இருந்தாலும் அல்லாது மற்ற சமயத்தவராக இருந்தாலும் அச்சேவையை இறைவணக்கம் என்று இஸ்லாம் சிறப்பித்துக் கூறுகிறது.*

*"உங்களின் சேவைகளுக்கும் தொண்டுகளுக்கும் முதல் உரிமை பெறுபவர்கள் உங்களின் அண்டை வீட்டார், அடுத்து உங்கள் பகுதி மக்கள், அடுத்து நாட்டு மக்கள்," என்பது இஸ்லாம் வகுத்தளித்துள்ள வாழ்க்கை நெறியாகும்.*

*"யாரிடமிருந்து மனிதகுலத்துக்கு நன்மை கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அவன்தான் மனிதர்களில் சிறந்தவன்" என்பது நபிகள் நாயகத்தின் திருவாக்காகும்.*

*நன்றி : தினமணி*

# மிகு பயன் விளைவிக்கும் ரமளான்

இறைமறையாகிய திருக்குர்ஆன் பிறந்த ரமளான் மாதத்தின் இறுதியில் வரும் 'ஈதுல் ஃபித்ர்' எனும் ஈகைத் திருநாள் உலகெங்கும் வாழும் 125 கோடி முஸ்லிம்களால் உவப் புடன் கொண்டாடப்படும் பெருநாளாகும்.

இறை நம்பிக்கையாளர்களின் நெஞ்சகத்தில் ஆன்மீக எழுச்சியையும் ஈகையுணர்வையும் மனக் கிளர்ச்சியையும் உருவாக்கி, மனிதர்களைப் புனிதர்களாக்கும் இறை மாதமாகவும் ரமளான் மாதம் அமைந்துள்ளது.

## திருக்குர்ஆனில் 'ரமளான்'

இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் ஒன்பதாவது மாதமான 'ரமளான்' மாதம் மட்டுமே இறைமறையாகிய திருக்குர்ஆனில் குறிப்பிடப்படுகிறது.

ரமளான் மாதத்தின் சிறப்பு திருக்குர்ஆனில் தெளி வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ரமளான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய) தென்றால், அதில் தான் மனிதர்களுக்கு வழிகாட்டி யாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும்

நன்மை தீமையைப் பிரித்தறியக்கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் (என்னும் இம்மறை) அருளப்பெற்றது. ஆகவே, உங்களில் எவர் இம்மாதத்தை அடைகிறாரோ, அவர் நோன்பு நோற்கவும்" (2-185) எனக் கூறப்பட்டுள்ளது.

'ரமளான்' என்ற சொல்லுக்கு 'சுட்டெரித்தல்' என்பது பொருளாகும். இம்மாதம் முழுவதும் நோன்பு நோற்றும் 'தராவீஹ்' என்னும் கூட்டுத் தொழுகை மூலம் மிக அதிகமாக இறைவணக்கம் புரிந்தும், தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களையெல்லாம் சுட்டெரிப்பதால் இம்மாதம் 'ரமளான்' என்ற பெயரால் அழைக்கப் படுகிறது.

வேதங்களின் மாதம்

நபிகள் நாயகம் (சல்) அவர்களுக்கு 'ஜிப்ரீல்' எனும் வானவர் மூலம் முதல் இறைச் செய்தி இம்மாதத்தின் இருபத்தியேழாம் நாளன்றுதான் இறைவனால் அருளப் பட்டது. அந்த நாள் 'லைலத்துல் கத்ர்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த அரபுச் சொல்லுக்குக் 'கண்ணியமான இரவு' என்பது பொருளாகும்.

இறைமறையாகிய திருக்குர்ஆன் மட்டுமல்லாது வேறு பல வேதங்களும் நபிமார்களாகிய இறைத்தூதர்கள் மூலம் இறைவன் உலகுக்கு வழங்கியதும் இதே ரமளான் மாதத்தில்தான்.

'ஏப்ரஹாம்' என அழைக்கப்படும் இபுராஹீம் நபி அவர்கட்கு சுஹ்பு எனும் வேதம் இதே ரமளான் மாதத்திலேதான் அருளப்பட்டது. அதன்பின் எழுநூறு ஆண்டுகள் கழித்து மோசஸ் எனும் மூஸா நபி அவர்கட்கு தௌராத் எனும் வேதம் இதே ரமளான் ஆறாம் நாளிலே தான் இறைவனால் வழங்கப்பட்டது. அதற்கும் ஐநூறு ஆண்டுகள் கழித்து 'டேவிட்' எனும் தாவூது நபி அவர்கட்கு

'சபூர்' எனும் இறைவேதம் இதே ரமளான் பன்னிரண்டாம் நாளன்று இறக்கியருளப்பட்டது. அதன் பின் 1200 ஆண்டுகள் கழிந்த பின்னர் 'ஜீசஸ்' எனப் போற்றப்படும் ஈசா நபிக்கு 'இன்ஜீல் ' எனப்படும் 'பைபிள்' வேதம் ரமளான் பதினெட்டாம் நாளில் அருளப்பட்டது. அதன் பின்னர் அறுநூறு ஆண்டுகள் கழித்து 'புர்க்கான்' எனும் திருக்குர்ஆன் திருமுறை, நபிகள் நாயகம் முஹம்மது (சல்) அவர்களின் மூலம் உலகுக்கு ரமளான் இருபத்தியேழாம் நாளன்று இறக்கியருளப்பட்டது.

ஐந்தில் நான்கு

ரமளான் மாதத்தின் மற்றொரு சிறப்பு மக்கள் கடைத் தேற்றத்திற்கென அல்லாஹ் விதித்த இறை நம்பிக்கை எனும் கலிமா, தொழுகை, நோன்பு, ஏழைவரி எனும் ஜக்காத், மக்காவிலுள்ள கஃபா எனும் இறையில்ல வணக்கத்திற்கெனச் செல்லும் ஹஜ் புனிதப் பயணம் எனும் ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகளில் 'ஹஜ்' தவிர்த்துள்ள நான்கு கடமைகளும் ஒரு சேர முற்றாக நிறைவேற்றப் படுவதும் இந்த ரமளான் மாதத்திலேதான்.

இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் மூன்றாவதான நோன்பு 'ரமளான்' மாதத்தில்தான் முழுமையாக நிறை வேற்றப்படுகிறது.

இஸ்லாமிய நோன்பும்
பிற மத விரதங்களும்

உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களும் நோன்பாகிய விரதத்தை வலியுத்துகின்றன. இந்தியாவிலுள்ள ஹிந்து மதம் போன்ற பெரும் சமயங்கள் விரதமிருப்பதை சமயத் தின் இன்றியமையாச் சிறப்புகளாக அமைத்து, பின்பற்றி யொழுகப் பணிக்கின்றன. ஹிந்து சமயத்தவர்களும் விரத மிருப்பதைப் புனிதக் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

இஸ்லாமிய நோன்புக்கு பிற சமய விரதங்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு.

பிற சமயங்களில் மாதத்தில் ஒரு நாளோ அல்லது ஒரு சில நாட்களோ அல்லது ஒரு சில மணி நேரங்களோ விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதிலும் வழக்கமாக உண்பவைகளில் சிலவற்றை நீக்கியோ அல்லது முழுமை யாக உணவு மட்டும் உண்ணாமலோ விரதம் மேற் கொள்ளப்படுகிறது. பெரும்பாலான விரதங்களில் நீர் பருகத் தடையிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், இஸ்லாமிய நோன்பு ரமளான் மாத முதல் நாள் தொடங்கி அம்மாதம் முழுவதும் இடையறாது தொடர்ந்து முப்பது நாட்கள் நோன்பு நோற்கப்படுகின்றது.

## இறையச்சயுணர்வூட்டும் நோன்பு

அதிகாலை நான்கு மணிக்கு முன்னதாகவே, உண்பதும் பருகுவதும் நிறுத்தப்படுகிறது. மீண்டும் முன்னிரவு ஆறரை மணிக்குத்தான் உண்ணவும் பருகவும் முடியும். இவ்வாறு தொடர்ந்து முப்பது நாட்கள் நிகழும். இம்மாதம் முழுவதும் பகற் பொழுதுகளில் ஒரு சொட்டு நீரும் பருகாமல் நோன்பு நோற்க வேண்டும். வழக்கமாக மேற்கொள்ளும் ஐவேளைத் தொழுகையுடன் 'தராவீஹ்' எனும் சிறப்புத் தொழுகை ஒவ்வொரு நாள் இரவும் ஒரு மணி நேரம் கூட்டுத் தொழுகையாக நிறைவேற்றப் படுகிறது. இந்நோன்பு நாட்களில் நோன்பாளிகள் முழுக்க முழுக்க இறைச் சிந்தனையாளர்களாக மாறிவிடு கின்றார்கள்.

ரமளான் மாத நோன்பு ஒவ்வொரு முஸ்லிமையும் படம் போட்ட தங்கமாக உருமாற்றும் செயற்பாடாக அமைந்துள்ளது. ஒவ்வொரு முஸ்லிம் உள்ளத்தில் இறையுணர்வு பூரணமாகப் பொங்கிப் பொழிவதோடு,

இறைவனைப் பற்றிய அச்சவுணர்வும் அவனுள் அழுத்தம் பெறுகிறது.

இறைவன் தன் திருமறையில் 'ல அல்லாஹூ‍ம் தத்தஹூன்' (இதனால் நீங்கள் இறையச்சமுடையோர்களா கலாம்) எனக் கூறியுள்ளதிலிருந்து இறையச்சவுணர்வைப் பூரணமாக உள்ளத்தில் உருவாக்கி நிலைபெறச் செய்வதே நோன்பின் முழு முதல் நோக்கமாகும்.

இறைவன் மனிதனுக்கு விலக்கிவைத்தவைகளின்றும் அறவே விலகியிருப்பதோடு, அல்லாஹ் இட்ட கட்டளையே இம்மியும் பிசகாது முழுமையாக, மனக் கட்டுப்பாட்டோடு நிறைவேற்றி, அவனது அன்பையும், அவனளிக்கும் வெகுமதியையும் பெறுவதற்கான பயிற்சிக் களமாக ரமளான் மாதம் அமைகிறது.

மனக் கட்டுப்பாட்டை
உருவாக்கும் பயிற்சிக்காலம்

இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் இந்நோன்பு கடமையாக்கப்பட்டாலும், உளவியல் அடிப்படையிலும் மருத்துவவியல் அடிப்படையிலும் மிகுபயன் விளைவிப் பனவாக அமைந்துள்ளன என்பதை அறிவியல் நோக்கோடு அணுகும்போது தெளிவாகப் புலனாகிறது.

நோன்பு நோற்பவர் பகல் முழுவதும் எதையுமே உண்ணாமலும், பருகாமலும் புகைக்காமலும் அளவுக்கதிக மான மனக் கட்டுப்பாட்டுடன் தன் வழக்கமான வாழ்க்கைப் போக்கினின்றும் மாறுபட்டு வாழகிறார். தன் அன்றாட அலுவல்களிலும் தொய்வின்றி ஈடுபடு கின்றார். இதனால் மன உறுதி மிக்கவராகத் தன்னை ஆக்கிக் கொள்கிறார். “எல்லா வகையிலும் மனத்தைக் கட்டுப் படுத்துவது தான் தூய்மையான போராட்டம் (ஜிஹாதுல் அக்பர்)” என்றார் நபிகள் நாயகம்.

மனத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலமே பசியைக் கட்டுப்படுத்த முடியும். பசியைக் கட்டுப்படுத்தும் ஒரு வனுக்குப் பிற இச்சைகளையும் விருப்பு வெறுப்புகளை யும் கட்டுப்படுத்துவது கடினமான காரியமல்ல.

நோன்பு நோற்கும் காலத்தில் தீய செயல்களைத் செய்யாதிருத்தலோ அல்லது அவற்றை விட்டு நீங்கி யிருத்தலோ மட்டும் முக்கியமன்று. தீய உணர்வுகளே நெஞ் சத்தில் முளைவிடாது தடுக்கும் வகையில் மனத்தின்மை பெற வழி வகுப்பதே நோன்பு நோற்பதன் முக்கிய நோக்கமாகும்.

பகலெல்லாம் அருஞ்சுவை உணவும் சுவைமிகு பானமும் பருகி இன்பமாக வாழும் முஸ்லிம், ரமளான் நோன்பு நாட்களில் இவைகளை அறவே ஒதுக்கி பசியுணர்வும் தாக வேட்கையுமிக்க கடினமான தவ வாழ்வை விரும்பி மேற் கொள்கிறார். இதன் மூலம் தன் உல்லாச வாழ்வுக்கு மாறாகச் சிக்கன உணர்வாளராக மாறுகிறார். மனிதன் உண்பதற்கென இறைவன் அனுமதித் துள்ள உணவு வகைகளையே நோன்பின்போது மனிதனால் விலக்கி வைக்க முடிகிறதென்றால், அவனால் எத்தகைய தீங்கையும் விலக்கி வைக்கவும் பெறுத்தொதுக்கவும், மனம் வலுப் பெற இயலவே செய்யும். எனவே, மனிதன், தன்னைத் தானே அடக்கியாள நோன்பு வழியமைத்து தருகிறதெனலாம்.

## ஈகையுணர்வளிக்கும் நோன்பு

ஒரு மாத கால நோன்பின்போது பசித்துன்பம் எத் தகையது; தாகத்துடிப்பு எப்படிப்பட்டது என்பதையெல் லாம் அனுபவித்து உணரும்போது, பசியாலும் தாகத் தாலும் வருந்தும் ஏழை எளியவர்கள் மீது அன்பும், பரிவும் ஏற்படுவது இயல்பேயாகும். எனவே, இத்தகைய

பாதிப்புக் குள்ளாகும் மக்கள் பசித் துன்பத்தினின்றும் மீள, வாரிவழங்கும் ஈகையுணர்வு பூரித்தெழுகிறது. அவர்களின் துன்பத்தில் பங்கு கொள்ள விழைகிறது.எனவேதான் முஸ்லிம்கள் ரமளான் நோன்பு நாட்களில் ஏழை எளியவர் களுக்கு வாரி வழங்கி மகிழ்கிறார்கள். நோன்புப் பெரு நாளையே 'ஈகைத் திருநாளாக'க் கொண்டாடி மகிழ் கிறார்கள்.

## நோயழிக்கும் நோன்பு

மருத்துவவியல் அடிப்படையிலும் நோன்பு மிகச் சிறப்பான இயற்கை மருத்துவ முறையாக அமைந்துள்ளது. உடலில் கொழுப்பு மிகுந்திருந்தால், நீரிழிவு நோய், இதய நோய்கள், இரத்த அழுத்தம், மூத்திரக்காய் வீங்கியிருத்தல், நாள்பட்ட கீழ்வாத நோய் போன்றவைகளை இஸ்லாமிய நோன்பு முறையால் குணமாக்க இயலும் என அண்மைக் கால மருத்துவ ஆய்வுகள் எண்பித்துள்ளன.

நாள்தோறும் கொழுப்புச் சத்துமிக்க புலால் உணவு களையும் சுவையான இதர உணவு வகைகளையும் மிகுதி யாக உண்பதால் உடலில் கொழுப்புச் சத்து சேர உடல் பரமனாகிறது. இவ்வாறு தடித்த உடலைக் கொண்டோர் எளிதாக இதய நோய், நீரிழிவு நோய் போன்றவைகளுக்கு இலக்காகின்றனர். இதனால் மாரடைப்பு போன்ற கொடிய நோய்கள் எளிதாகத் தலை தூக்க ஏதுவாகின்றன. எனவே, தேவைக்கதிகமாக உடலில் சேர்ந்துள்ள கொழுப்புப் பொருளைக் கரைக்கவும், உடல் பருமனைக் குறைக்கவும் இதன் மூலம் பற்பல நோய்த் தொல்லைகளிலிருந்து விடுபடவும் 'நோன்பு' முறை எளிய இயற்கையான வழி முறையாக அமைந்துள்ளது.

ரமளான் மாதம் முழுமையும் நோன்பு இருப்பதால் உடல் எடை வெகுவாகக் குறைய நேர்கின்றது. இதனால்,

இரத்தக் கொதிப்பு போன்ற நோய்கள் சீரடைகின்றன, அல்லது குறைந்து விடுகின்றன.

ஏனெனில், நோன்பு நாட்களில் உண்ணும் உணவின் அளவு வெகுவாகக் குறைவதால், 'ஹார்மோன் ' சுரப்பதும் குறையவே செய்கிறது. இதனால் இரத்தக் கொதிப்பும் மட்டுப்பட நேர்கின்றது.

## உடல் உறுப்புகளில் ஓய்வும் பெறும் புத்துணர்வும்

தொடர்ந்து முப்பது நாட்கள் நோன்பு நோற்பதால், உடலில் ஜீரண உறுப்புகளெல்லாம் நன்கு ஓய்வு பெற வாய்ப்பேற்படுகின்றது. நோன்பு முடிந்த பின்னர் இவ்வுறுப்புகளெல்லாம் புத்துணர்வோடு இயங்க இயலுகிறது.

மிக இளமைதொட்டே ஆண், பெண் அனைவருக்கம் ரமளான் மாத நோன்பு கட்டாயமானாலும் நோயாளிகள், பிரயாணிகள், கர்ப்பிணிகள், பால் குடிக்கும் குழந்தையுடைய தாய்மார்கள், உடல் நலிவடைந்த வயோதிகர் ஆகியோருக்கு இஸ்லாம் நோன்பினின்றும் விலக்களித்துள்ளது.

சமய அடிப்படையிலும் உளவியல், மருத்துவ அடிப்படையிலும் மிகுபயன் விளைவிக்க வல்ல ரமளான் மாத நோன்பு ஒவ்வொருவருக்கும் ஆன்மீக பலத்தையும் உடல் வலுவையும் பெருக்கும் அருமருந்தாக அமைந்துள்ளது.

நன்றி : தினமணி

# தியாகத்திற்கோர் திருநாள்

"ஈதுல் அள்ஹா" பெருநாள் உலகெங்கும் வாழும் முஸ்லிம் பெருமக்களால் தியாகத் திருநாளாக நினைவு கூறப்படுகிறது.

தனக்கென வாழாது
பிறர்க்கென வாழும்
பெற்றியர்

மனிதப் பண்புகளிலேயே மகத்தானது தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தகைசால் பண்பேயாகும். இதுவே மனிதனைப் புனிதனாக மாற்றும் பேரருட் பண் பாகும். இதற்க அடித்தளமாக அமைய வேண்டியது தியாக உணர்வாகும். தன்னொத்த மனிதர்களுக்காக - அவர்தம் உயர்வுக்காக மற்றொரு மனிதன் தியாகம் செய்ய முனை வது கடமையாகும் என்பது ஆன்றோர் வாக்கு. மனி தனுக்கு மனிதன் இத்தகைய கடப்பாடுடையவன் எனும் போது தன்னைப் படைத்த இறைவனுக்காக மனிதன் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய் வதைத் தன் உயிர்ப் பண்பாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை நினைவுறுத்தும் நாளாக அமைந்திருப்பதே 'ஈதுல் அள்ஹா ' எனும் தியாகத் திருநாள்.

## ஓரிறைத் தத்துவம் கண்ட தியாசீலர் இப்ராஹீம் நபி

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னர் இடையறா இன்னல் களுக்கிடையிலும் 'இறைவன் ஒருவனே' எனும் ஓரிறைத் தத்துவத்தை வலுவாகப் பிரச்சாரம் செய்து முதுமையின் எல்லைக் கோட்டை எட்டினார் நபி இபுறா ஹீம் (அலை) அவர்கள். முதுமையில் தான் பெற்ற மைந்தன் இஸ்மாயீல் (அலை) எனும் குலக் கொழுந்தை இறை வனுக்குப் பலியிடுவதுபோல் தான் கண்ட தொடர் கனவை இறைக் கட்டளையாகவே ஏற்று, தன் மைந்தனை இறைவனுக்குப் பலியிடத் துணிந்த தியாகச் செய்லை நினவுகூறும் நாளாகவே இப்பெருநாள் உலக முஸ்லிம் களால் அனுசரிக்கப்படுகிறது.

இஸ்லாத்தின் வாழ்வியல் நெறிமுறைகள் அனைத்தும் தியாகத் தூண்டுதல்களாகவே அமைந்துள்ளன வெனலாம் . இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான ஈமான் எனும் இறை நம்பிக்கை, தொழுகை, நோன்பு, ஜகாத் எனும் ஏழை வரி, ஹஜ் ஆகிய அனைத்துமே தியாக உணர்வை ஊட்டும் செயற்பாடுகளாகவே அமைந்துள்ளன. தியாக உணர்வின் அடிப்படையிலேயே ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்வும் உருவாக்கப்படுகிறது.

### தொழுகையின் உட்கருத்து

'உருவமில்லாத, இணை-துணை இல்லாத ஒரே இறைவன்' எனும் நம்பிக்கை மனிதச் சிந்தனையை, உணர்வை வெவ்வேறு வழிமுறைகளில் சிதற விடாமல் ஒரு முகப்படுத்தி இறைவன்பால் செலுத்த வழியமைக் கிறது. இறைவனாகிய அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனை, அவன் மனிதனுக்கு வகுத்தளித்த வாழ்வியல் நெறி ஆகியவற்றை இரவு பகல் என்னேரமும் இடையறாது

மனித மனம் அசை போடும் வகையில் அமைந்ததே ஐநேரத் தொழுகைகள்.

அதிகாலை ஐந்து மணிமுதல் இரவு எட்டரை மணிவரை குறிப்பிட்ட இடைவெளிகளில் ஐந்து முறை நிறைவேற்றப்படும் தொழுகை முறைகள் தியாக உணர் வின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. இன்பமான அதிகாலைத் தூக்கத்தைத் தியாகம் செய்து இறைவணக்கத் தில் ஈடுபடுகிறான். ஐந்நேரத் தொழுகையின்போது தனக் குப் பொருட்பயன் தரும் உலக நடவடிக்கைகளிலிருந்து முற்றாக ஒதுங்கி அருட்பயன் பெற இறைச் சிந்தனை ஒன்றை மட்டுமே பற்றுக் கோடாகக் கொண்டு இறை வணக்கம் புரிகிறான். இதன் மூலம் இறைவனுக்காக நேரத்தையும் பொருள் வேட்கையையும் தியாகம் செய்யும் மன உணர்வு அவனுள்ளே அழுத்தம் பெறுகிறது.

மூன்றாவது கடமையான நோன்பை மேற்கொள்ளும் ஒவ்வொரு முஸ்லிமும் முப்பது நாட்கள் தொடர்ந்து பகலில் உண்ணாமலும் பருகாமலும் நோன்பு நோற் கிறார்கள். தான் வழக்கமாகப் பகலில் துய்த்துவந்த இன்ப மூட்டும் பழக்கவழக்கங்கள் அனைத்தையும் முற்றாகத் துறந்து விடுகிறான்.

அவ்வாறே நான்காவதான ஜகாத் கடமையும் அமைந்துள்ளது. பொருள் வேட்கையோடு தான் உழைத் துத் தேடிய பொருளில் நாற்பதில் ஒரு பங்கை அதாவது இரண்டரை சதவீதத்தை இஸ்லாம் விதித்துள்ள நியதிப்படி ஏழை எளியோர்க்கு வழங்குகிறான். தான் தேடிய பொரு ளோடு எவ்வித தொடர்புமில்லா அன்னியர்க்கு தன் கைப் பட உவக்கும் உள்ளத்தோடு இரண்டரை சதவீதச் சொத் தைப் பகிர்ந்தளிக்கும் ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளமும் தியாக வேட்கையின் ஊற்றுக் கண்களாக உருவெடுக் கின்றன.

## ஹஜ் கடமை

இத்தகைய தியாக உணர்வுகளுக்கு மகுடம் சூட்டுவது போல் தியாகத் திருநாளின்போது நிறைவேற்றுவதாக ஐந்தாவது கடமையாக ஹஜ் கடமை அமைந்துள்ளது. சுய வருமானமும் நல்ல உடல் நலமும் உள்ள வசதி படைத்த முஸ்லிம்கள் வாழ்வில் ஒரு முறையேனும் நிறைவேற்ற வேண்டிய கடமையாக ஹஜ் கடமை அமைந்துள்ளது. சுய வருமானமும் நல்ல உடல் நலமும் உள்ள வசதி படைத்த முஸ்லிம்கள் வாழ்வில் ஒரு முறையேனும் நிறைவேற்ற வேண்டிய கடமையாக ஹஜ் கடமை அமைந்துள்ளது. மக்காவிலுள்ள கஃபா இறையில்லம் சென்று மீள்தலே ஹஜ் கடமையாகும்.

ஹஜ் செய்யச் செல்லுபவர் தன் மனைவி, மக்கள் உற்றார் உறவினர் தான் தேடிய சொத்துக்கள் அனைத்தை யும் விட்டு நீங்கிச் செல்கிறார். தான் வாழ்ந்த சுக வாழ் வைத் துறந்து கடின வாழ்வை விரும்பி மேற்கொள்கிறார். இதன்மூலம் தியாக உணர்வின் எல்லை நோக்கிப் பீடு நடை போடத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறார்.

## உண்மைத் துறவை உணர்த்தும் இஹ்ராம் வெள்ளுடை

இஸ்லாம் துறவறத்தைப் போற்றாவிடினும் தனக் கென உள்ள அனைத்தையும் துறந்த உணர்வின் வெளிப் பாடாக ஹஜ்ஜுக்குச் செல்லுபவர் தைக்கப்படாத ஒரு முண்டுத் துணியை இடுப்பில் அணிந்தும் மற்றொரு முண்டுத் துணியை உடல்மீது போர்த்திக் கொள்கிறார். இவ்வுடை 'இஹ்ராம்' என அழைக்கப்படுகிறது. இதற்கு 'அனுமதிக்கப்பட்ட சில காரியங்களை நிறுத்திக் கொள்வது அல்லது விலக்கி (ஹராமாக்கி)க் கொள்வது' என்பது பொருளாகும். இதன் மூலம் தான் மகிழ்ச்சியுடன் அனுப வித்துவந்த ஆடம்பர வாழ்வை, அலங்கார அணிமணி

களை ஆடை களை முற்றாக விலக்கித் தியாகம் செய்கிறார். எந்நேரமும் பொருள் வேட்கையும் இன்ப உணர்வும் மிக்கவராக வாழ்ந்தவர் ஹஜ்ஜின்போது இறைச்சிந்தனை தவிர்த்து வேறு எந்தச் சிந்தனையும் இல்லாத மனத்தி லிருந்து விலக்கிய தியாகச் சீலர் ஆகிறார்.

உலகெங்கிலுமிருந்து வந்து குழுமும் பல்வேறு நாடு, மொழி, இன, நிற, கலாச்சார சார்புடையவர்கள் அனை வருமே தங்கள் நாட்டுப்பற்றை, மொழிப்பற்றை, இனப் பற்றை பெருமையை, கலாச்சார பெருமிதத்தை துறந்தவர் களாக ஒரே இறைச் சிந்தனையுடன், அனைவரும் மனிதர் கள், ஆதாம் (அலை) பெற்ற மக்கள், - சகோதரர்கள் என்ற உணர்வுடையவர்களாகத் திகழ்கிறார்கள். ஆண்டான், அடிமை, உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற எண்ணங்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தொழிகின்றன.

### வாழ்வின் ரகசியத்தை வெளிப்படுத்தும் அரஃபாத்

ஹஜ்ஜின் முத்தாய்ப்பாக அரஃபாத் பெருவெளியில் ஹாஜிகள் அனைவரும் இஹ்ராம் பெருமையுடன் பகல் முழுமையும் தங்குவர். அனைத்தையும் விட்டு விடும் தியாகச் சின்னமான இந்த உடையே இறந்தவரின் மையத்தின் மீதும் போர்த்தப்படுகிறது. தனக்கென உள்ள அனைத்தையும் இறைவன் பொருட்டுத் தியாகம் செய்யும் தன் உள்ளுணர்வின் வெளிப்பாடே இவ்வுடை. தற்காலிக மாக அமைக்கப்பட்ட இக்கூடாரங்கள் அன்று மாலையே கலைக்கப்படுகிறது. இதன் மூலம் தங்கள் உயிரும் தற் காலிகமான இவ்வுடலிலிருந்து எந்நேரமும் பிரிக்கப்பட்டு விடும் என்பதை இஃது நினைவூட்டுவதாக அமைகிறது.

ஹஜ்ஜின் இறுதி நிகழ்வாக 'குர்பான்' கொடுக்கப் படுகிறது. இறைவன் பொருட்டுத் தன் மகனைப் பலியிடத்

துணிந்த நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் தியாகத்தை நினைவு கூறும் செயலாக இது அமைந்துள்ளது. அல்லாஹ் வின் பெயரால் குர்பானி தரப்படும் உயிரின் இறைச்சியோ இரத்தமோ இறைவனைச் சென்றடைவதில்லை. மக்களின் இறைபக்தியும், தியாக உணர்வும் இறைவனுக்குக் கீழ்ப் படிந்து நடக்கும் தன்மையும் மட்டுமே இறைவனைப் போய்ச் சேருகின்றன.

## தியாகப் பிழம்பாகும் ஹாஜிமார்

இஸ்லாம் விதித்த நியமப்படி ஒழுகித் தன்மை தியாகப் பிழம்பாக உருமாற்றிக் கொள்ளும் ஹாஜி, தான் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களையெல்லாம் தியாக வேள்வியில் போட்டு பொசுக்கியவராகப் புதுவாழ்வு பெறுகிறார். இதைப்பற்றிப் பெருமானார்.

"எவர் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து தீய சொல் பேசாமலும் தீய செயல் செய்யாமலும் திரும்புவாரோ அவர் தன் தாயின் வயிற்றிலிருந்து அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவமற்றவராகத் திரும்புகிறார்." என்று கூறியுள்ளார்.

இவ்வாறு 'ஈதுல் அள்ஹா' எனும் தியாகத் திருநாளும் ஹஜ் பெரு நாளும் இறை நெறியில் தியாக வாழ்வு வாழ இறையுணர்வு பொங்கும் இனிய வாழ்வு பெற வழி காட்டும் நாளாக அமைகிறது.

நன்றி : தினமணி

# இஸ்லாமியப் புத்தாண்டின் புனிதமிகு முஹர்ரம்

இஸ்லாமியப் புத்தாண்டின் முதல் மாதமாக அமைந்திருப்பது புனிதமிகு 'முஹர்ரம்' மாதமாகும். இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் முதல்மாதமாக முஹர்ரமும் இறுதி மாதமாக துல்ஹஜ்ஜும் அமைந்துள்ளன.

'ஹிஜ்ரி' ஆண்டு, நபிகள் நாயகம் முஹம்மது நபி (சல்) அவர்களின் வாழ்வில் நடந்த மிக முக்கியமான நிகழ்ச்சியொன்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

இஸ்லாமிய நெறி நிலைபெறுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே, அராபியர்கள் தங்கள் சமுதாயப் பொது வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு, கணக்கிட்டு, அதற்கு வெவ்வேறு பெயரிட்டு அழைத்து வந்தனர். 'அனுமதி ஆண்டு' என்றும் 'நில அசைவு ஆண்டு' என்றும் 'யானை ஆண்டு' என்றும் பல ஆண்டுக் கணக்குகளை அவர்கள் வைத்திருந்தனர். இவ்வாறு பல்வேறு பெயர்களில் ஆண்டுக் கணக்குகள் அராபியர்களிடம் நிலவி வந்தபோதிலும் இஸ்லாம் நிலை பெறத் துவங்கி, மக்களிடையே நன்கு பரவி அழுத்தம் பெறத் தொடங்கிய கால கட்டத்திலேயே, இஸ்லாமி

யருக்கென ஒரு புதிய ஆண்டை உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசர, அவசியத் தேவை ஏற்பட்டது.

இரண்டாவது கலீஃபாவாக இருந்த உமர் (ரலி) அவர்கள் ஒரு சமயம் முக்கியக் குறிப்பு ஒன்றைத் தயாரித்து அதில் 'ஷஃபான்' மாதம் என்று குறித்தார்கள். ஆனால், உமர் (ரலி) அவர்கட்கு உடனே ஒரு ஐயப்பாடும் எழுந்தது. நடைமுறையில் இருந்துவரும் மூன்று வகையான ஆண்டு களில் எந்த ஆண்டின் 'ஷஃபான்' மாதம் என வருங்காலத் தில் இக்குறிப்பைக் காண்பவர்கள் விளங்கிக் கொள்ள முடியும் எனும் ஐயம் அழுத்தமாக அவர் உள்ளத்தில் எழுந்தது. எனவே, முஸ்லிம்கள் கடைப்பிடிக்கத்தக்க புதிய இஸ்லாமிய ஆண்டை உருவாக்க வேண்டியதன் அவசியம் பற்றிச் சிந்திக்கலானார். அதை வலியுறுத்தும் வகையில் மற்றுமொரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. கலீஃபா உமர் (ரலி) அவர்கள் அடிக்கடி பல்வேறு மாநில ஆளுநர் களுக்குக் கடிதம் எழுத வேண்டியிருந்தது. அக்கடிதங் களில் தேதி ஏதும் குறிப்பிடாததால் ஆளுநர்கட்குக் குழப்ப மேற்பட்டது. இக்குறையை கலீஃபா உமர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கென புதிய இஸ்லாமிய ஆண்டை உருவாக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந் தார்.

இதைப்பற்றித் தன் தோழர்களிடம் ஆலோசனை கேட்டார். சிலர் பாரசீக ஆண்டைப் பின்பற்றி அமைக்க லாம் என்றனர். வேறு சிலர் பெருமானார் நபிகள் நாயகம் (சல்) பிறந்த நாளையே இஸ்லாமிய ஆண்டின் தொடக்க மாகக் கொள்ளலாம் என்றனர். அவ்வாலோசனையில் கலந்து கொண்ட பெருமானாரின் மருகர் அலி (ரலி) அவர் கள் அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மக்கா வினின்றும் மதினா சென்ற நாளிலிருந்து புதிய இஸ்லாமிய ஆண்டைத் துவங்கலாம் எனக் கூறினார். இந்த ஆலோ சனை எல்லோருக்கும் ஏற்புடைத்ததாக இருந்ததால்

கலீஃபா உமர் (ரலி) அவர்கள், பெருமானார் மக்காவி லிருந்து மதினா நோக்கி, 'ஹிஜ்ரத்' செய்த நிகழ்ச்சி நடந்த நாளை அடிப்படையாகக் கொண்டு 'ஹிஜ்ரி' ஆண்டு துவங்கப்பட்டது.

## ஆண்டின் முதல் மாதமாக முஹ்ரம் ஆன காரணம்

'ஹிஜ்ரா' என்ற 'சொல்லுக்கு இடம் மாறிச் செல்லுதல்' என்பது பொருளாகும். பெருமானார் மக்கமாநகரிலிருந்து மதினமாநகர் நோக்கி இடம் மாறிச் சென்றது. 'ரபியுல் அவ்வல்' மாதத்திலாகும். அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மக்கமா நகரிலிருந்து ரபியுல் அவ்வல் மாதம் முதல் தேதியன்று புறப்பட்டு சரியாகப் பன்னிரண்டாம் தேதி வெள்ளிக்கிழமை மதினமா நகருள் புகுந்தார்கள். ஆனால் ஹிஜ்ரி ஆண்டின் முதல் மாதம் பெருமானார் புறப்பட்ட ரபியுல் அவ்வல் மாதம் முதல் தேதியிலிருந்தோ அல்லது மதினமா நகர் போய்ச் சேர்ந்த ரபியுல் அவ்வல் பன்னிரண்டாம் தேதியிலிருந்தோ தொடங்காமல், முன் பாகவுள்ள 69 நாட்களைப் பின்னுக்குத் தள்ளி 'முஹர்ரம்' முதல் நாளை, ஹிஜ்ரி ஆண்டின் துவக்க நாளாக, வருடப் பிறப்பு நாளாகக் கொண்டதற்குச் சிறப்பான காரணம் உண்டு.

உழைப்பை உயர்த்திப் போற்றுவது இஸ்லாம். ஒவ்வொரு மனிதனும் கடுமையாக உழைத்தே ஊதியம் தேடி, தம் வாழ்வை நடத்தவேண்டும் எனப் போதித்தவர் பெருமானார் அவர்கள். அஃது உடல் உழைப்பாகவோ மன உழைப்பாகவோ இருக்கலாம். அக்கால அரபு மக்களின் முக்கியத் தொழிலாக அமைந்திருந்தது வாணிபத் தொழி லாகும்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவது இறுதிக் கடமையான ஹஜ் கடமையை இனிது நிறை

வேற்றிய முஸ்லிம் பெருமக்கள், தங்கள் வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பான காலமாக முஹர்ரம் மாதம் அமைந்திருந்ததால் 'ரபியுல் அவ்வல்' மாதத்திற்குப் பதிலாக வாணிபத்திற்கான மாதமாகிய 'முஹர்ரம்' மாதம் 'ஹிஜ்ரி' ஆண்டின் முதல் மாதமாக அமைக்கப்பட்டது. இஸ்லாமிய நெறியும் அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களும் உழைப்புக்குத் தந்த உன்னதத்தை உலக மக்களுக்கு நினைவூட்டும் மாதமாகவும் 'முஹர்ரம்' மாதம் அமைந்திருக்கம் பாங்கு எண்ணி யெண்ணி வியந்து போற்றத்தக்கதாகும்.

## அமைதி போற்றும் புனிதமிகு மாதம் முஹர்ரம்

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பிருந்தே அரபிகள் 'முஹர்ரம்' மாதத்தைப் புனிதமிகு மாதமாகக் கருதிவந்தார் கள். இம்மாதத்தின் கோபம், குரோதம்,வன்மம், பலாத் காரம், வன்முறை போன்ற உணர்ச்சிகளை நெஞ்சத்தி லிருந்து அறவே நீக்கி அன்பு, அருள் அமைதி, சாந்தம், மகிழ்ச்சி ஆகிய உணர்வுகளை நெஞ்சத்தில் நிரப்பி வாழ வேண்டிய மாதமாக இம்மாதத்தைக் கருதி வந்தார்கள்.

இம்மாதத்தில் சண்டை, சச்சரவுகள் இல்லாது வாழ் வதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். போர் செய் வதை அறவே விலக்கி வாழ்ந்து வந்தார்கள். எனவே, வன் செயல் உணர்வற்ற, போர் விலக்கப்பட்ட, அதாவது ஹராமாக்கப்பட்ட புனிதமாதம் எனும் பொருளிலேயே 'முஹர்ரம்' எனும் பெயரமைந்துள்ளது.

மேலும், எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹுத் ஆலா தன் திருமறையாம் திருக்குர்ஆனில் புனித மாதங்களைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளான்.

"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை (ஓர் ஆண்டிற்கு) பன்னிரண்டுதான். இவ்

வாறே வானங்களையும் பூமியையும் படைத்த நாளி லிருந்து அல்லாஹ்வால் கற்பனை செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 4 மாதங்கள் சிறப்புற்றவை. இது தான் நேரான மார்க்கமாகும். ஆகவே, இவற்றில் (நீங்கள் போர் புரிந்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ள வேண்டாம்" (9:36) என இறைவன் தன் திருமறையில் அழுத்தத் திருத்த மாக, இம்மாதத்தில் போர்புரியக் கூடாதென விதித் துள்ளான்.

இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது நபி (சல்) அவர்கள், புனித மாதங்கள் நான்கு எனவும் அம்மாதங் களில் தவிர்க்க முடியாத நிலையில், தற்காப்புக்காக அன்றி மற்ற எக்காரணத்திற்காகவும் சண்டை, சச்சரவு கூடாது எனக் கூறியுள்ளார்கள். அந்த நான்கு மாதங்களில் முஹர்ரம் மாதமும் ஒன்று என்பது இம்மாதத்தின் புனிதமிகு தனித் தன்மையைக் காட்டுவதாக உள்ளது.

மறுமை நினைவூட்டும் முஹர்ரம்

அமைதி போற்றும் மாதமாக மட்டுமல்லாது மறுமை தினமாகிய இறுதித் தீர்ப்பு நாளை நினைவூட்டி மனித குலத்தை அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் மாதமாகவும் முஹர்ரம் மாதம் அமைந்துள்ளது.

மனுக்குலத்தின் இறுதித் தீர்ப்பு முஹர்ரம் 10-ம் நாளில் அமையும் என்பது இறைவாக்காகும்.

"என்றைக்குமாக நிலைத்திருக்கும் தன்மையற்றது இவ்வுலகம். இதில் இடம் பெற்றுள்ள எல்லாவற்றுடனும் ஒரு நாள் இந்நிலவுலகம் அழிந்தே தீரும்" என்பது திருமறை தரும் இறைவாக்கு.

எனவே, மனிதப் பிறப்பில் இறுதிக் குறிக்கோள் மறுமை தான். அந்த மறுமை வாழ்வு எவ்வாறு அமையும் என்பது இவ்வுலக வாழ்வினைப் பொருத்துள்ளது.

இதுவே, இறைவனின் தூதர்களும் நல்லடியார்களும் தொன்று தொட்டு பின்பற்றி வந்த உண்மையாகும். ஆத லால் மனிதன் இவ்வுலக வாழ்க்கையில் தீயனவற்றைக் களைந்து, நல்லனவற்றைப் பின்பற்றக் கடமைப் பட்டுள்ளான். எவை நல்லவை, எவை தீயவை என்பதை இறைவனின் திருமறையிலிருந்தும், திருத்தூதர்களின் வழிமுறைகளிலிருந்தும் அறியப் பெறலாம். மனிதன் இவ்வுலகில் செய்த நல்ல-தீய நடத்தைகளைப் பற்றித் தீர்ப்பு அளிப்பதற்காக, இறைவன் ஒரு நாளினை நிர்ண யித்துள்ளான். அந்த நாளில் இவ்வுலகங்கள் எல்லாம் அழியப் பெற்று, மனிதர்கள் எல்லோரும் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவர். பிறகு ஒவ்வொருவரின் நடத்தையும் நல்லவை - தீயவை அடிப்படையில் கணக்கிட்டும் எடை யிட்டும் இறைவன் தன் தீர்ப்பினை அளிப்பான். அந்தத் தீர்ப்பில் தேறியவர்கள் என்றும் நிலைத்திருக்கக்கூடிய, இன்பகரமான, சொர்க்க வாழ்வினை அடையப் பெறுவர். ஆனால், அந்தத் தீர்ப்பில் தோல்வியுற்றவர்கள் என்றும் வேதனையே தரக்கூடிய நரகத்தில் இடப்படுவர். அந்த மாபெரும் இறுதித் தீர்ப்பு நாள், முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள், வெள்ளிக்கிழமை யன்று ஏற்படும் என இறைத் தூதர் நபி பெருமானார் அவர்கள் மொழிந்திருப்பது முஹர்ரம் மாதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டு கின்றது.

**எண்ணிக்கைக்காக மட்டுமல்ல**
**எண்ணத்தையும் வளர்க்க**

இஸ்லாமிய ஆண்டான ஹிஜ்ரி கணக்கு சந்திரப் பெயர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு கணிக்கப்படுவ தாகும்.

கிருஸ்தவ ஆண்டுக் கணக்குச் சூரியனை அடித்தள மாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

சூரியக் கணக்குப்படி ஓராண்டிற்கு 365 நாட்கள். சந்திரக் கணக்குப்படி ஓராண்டிற்கு 354 நாட்கள். இரண்டிற்குமிடையே குறைந்தது 10 நாட்கள் வித்தியாசம் உள்ளது.

இஸ்லாமியப் புத்தாண்டு மாதமான முஹர்ரம் நாட்களைக் குறிப்பதாக மட்டும் அமையாமல் இறைவனின் கட்டளைகளையும் இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள நேசத்தையும் அதை அடைவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய நல் உணர்வுகளையும் செயற்பாடுகளையும் நினைவூட்டுவதாகவும் அமைந்துள்ளது எண்ணத் தக்கதாகும்.

**மார்க்க அடிப்படை மட்டுமல்ல,**
**வரலாற்று அடிப்படையிலும்**

முஹர்ரம் மாதம் இஸ்லாமிய மார்க்க அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் சிறப்புமிக்க மாதமாக அமைந்துள்ளது.

முஹர்ரம் மாதத்தின் முக்கியத்துவத்தை மார்க்க அடிப்படையில் கூறவந்த பெருமானார் (சல்) அவர்கள் 'முஹர்ரம்' மாதத்தின் முதல் நாளில் நோன்பு நோற்பவர்கள் அடுத்த இரண்டு ஆண்டுப் பாவங்களிலிருந்து காக்கப்படுவர்' எனக் கூறியுள்ளார்.

'இம்மாதத்தில் வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் நோன்பு நோற்பவர் கொடிய நரக நெருப்பிலிருந்து, எழுநூறு ஆண்டுப் பயணத் தொலைவிற்கு அப்பாற்படுத்தப்படுவர்' என அண்ணல் முஹம்மது நபி (சல்) அவர்கள் கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வாறு இறைவணக்கம் புரிவதற்கும் நோன்பு நோற்றுப் பாவச் செயல்களிலிருந்து விடுபடுவதற்கும் ஏற்ற புனித மாதமாக முஹர்ரம் மாதம் அமைந்துள்ளது.

செங்கடல் பிளந்த நாள்

முஹர்ரம் மாதம் வரலாற்றுச் சிறப்புமிக்க மாதமாகவும் அமைந்துள்ளது. முற்காலத்தில் எகிப்து நாட்டை 'பிர்அவ்ன்' (ராம்செஸ் ) எனும் கொடுங்கோலன் ஆண்டு வந்தான். மமதையும் செறுக்குமே உருவாயமைந்தவன். தன்னைத் தவிர்த்து வேறு இறைவன் இல்லை என்றும் மக்கள் தன்னையே கடவுளாகக் கருதி வணங்க வேண்டும் என்றும் கட்டளையிட்டான். இதனை ஏற்கத் தயங்கியவர்களைக் கொடுமையாக நடத்தி வந்தான். வணங்க மறுத்தவர்களைக் கொன்று குவித்தான்.

அச்சமயத்தில் இறைதூதரான மூஸா (அலை) (மோசஸ்) அவர்கள் 'மனிதர்களையும் மற்ற உயிர் வர்க்கங்களையும் உலகையும் படைத்துக் காப்பவன் இறைவனாகிய அல்லாஹ்வே' என்பதை மக்களிடையே பிரச்சாரம் செய்து வந்தார்கள். இதைக் கண்டு வெகுண்ட கொடுங்கோலன் 'பிர்அவ்ன்', தன்னையே கடவுளாக ஏற்று வணங்குமாறு மூஸா நபியைப் பணித்தான். அரசனின் ஆணையை அடியோடு மறுத்த இறைத்தூதர் மூஸா (அலை) அவர்கள், இறைவன் ஒருவனே என்றும், அவனே வணக்கத்திற்குரியவன் என்றும் இறைவனால் படைக்கப்பட்ட எதுவும், அவன் மன்னனாக இருந்தாலும் வணங்குதற்குரியவன் அல்லவே அல்ல என்றும் கூறி, ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை வணங்கி உய்தி பெறுமாறு அறிவுறுத்தினார்.

தன்னை வணங்கிப் பணிய மறுத்ததோடு தனக்கு இறைவனைப் பற்றி அறிவுரை கூறிய மூஸா (அலை) அவர்கள் மீது அளவிலா கோபடைந்தான் பிர்அவ்ன். இறைதூதர் மூஸா அவர்களையும் அவரது சமூகத்தைச் சேர்ந்த பனூ இஸ்ராயீல் கூட்டத்தாரையும் தன் படைகளை ஏவி, அழிக்க ஆணையிட்டான். கொடுங்கோல் மன்னன்

*பிர்அவ்னின் கொடிய பிடியிலிருந்து விடுபட விரும்பிய இறை தூதர் மூஸா (அலை) அவர்களும் அவர் தம் கூட்டத்தினரும் இறைவனின் விருப்பப்படி எகிப்தை விட்டு வெளியேறிச் சென்றனர். எதிரே செங்கடல் குறுக் கிட்டது. இறை ஆணைப்படி செங்கடல் பிளந்து வழி விட்டது. மூஸா நபியையும் அவரது கூட்டத்தினரையும் பிர் அவ்னின் படைகள் துரத்திச் சென்றனர். மூஸா நபியும் அவரைச் சார்ந்த இறையடியார்களும் அக்கரை சேர்ந்த வுடன் பிளந்து நின்ற கடல் மீண்டும் ஒன்றிணைந்தது. பிளந்து நின்ற செங்கடலுள் துரத்திச் சென்ற கொடுங் கோலன் பிர்அவ்னும் அவனது படையினரும் செங்கடலுள் மூழ்கி மாண்டனர். இந்நிகழ்ச்சி நிகழ்ந்த நாள் முஹர்ரம் பத்தாம் நாள் ஆகும்.*

'ஆஸூரா நாள்'

*அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மதினா நகர் வந்த புதிதில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தைச் சேர்ந்த யூதர்கள் முஹர்ரம் 10ஆம் நாள் நோன்பு நோற்றிருப்பதைக் கண்டு, அதற்கான காரணத்தை வினவினார்.*

*கொடுங்கோல் மன்னன் பிர்அவ்னையும் அவனது படையினரையும் செங்கடலில் மூழ்கடித்து, இறை தூதர் மூஸா அவர்களையும் அவரது கூட்டத்தாரையும் காப்பாற் றிய நாள் என்பதால், இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் நாளாக யூத சமூகத்தவர்கள் முஹர்ரம் பத்தாம் நாளை 'ஆஸூரா' தினமாக அனுசரிப்பதாக அண்ணலாரிடம் கூறினார்கள்.*

*இதைக் கேட்ட பெருமானார் அவர்கள் அவ்வித மானால் நானும் மற்ற முஸ்லிம்களும் மற்றவர்களைவிட மூஸா நபி அவர்களோடு மிக மிக அதிகம் நெருக்கமுடைய வர்கள் என்ற வகையில், இந்த 'ஆஸூரா' நோன்பை ஆண்டுதோறும் கடைப்பிடிக்குமாறு முஸ்லிம்களைப்*

பணித்தார்கள். அன்று முதல் முஹர்ரம் 10ஆம் நாள் உலக முஸ்லிம்கள் அனைவராலும் ஆஸுரா நோன்பு கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

## சிறப்பு நோன்பு நாள்

ரமளான் நோன்பிற்கு அடுத்தபடியாக சிறப்புமிகு நோன்பாக ஆஸுரா நோன்பு கருதப்படுகிறது. யூதர்கள் ஆஸுரா தினத்தன்று மட்டுமே நோன்பு இருப்பார்கள். ஆனால், பெருமானார் பணித்தபடி ஆஸுராவிற்கு முதல் நாளான முஹர்ரம் 9-ம் நாளோ ஆஸுராவிற்கு அடுத்த நாளான முஹர்ரம் 11-வது நாளோ ஆஸுரா நோன்போடு இணைத்து நோற்க வேண்டும் எனப் பெருமானார் அவர்கள் பணித்துள்ளார்கள். இவ்வாறு ஒரு நாள் அதிகமாக ஆஸுரா நோன்பு நோற்பது ஓராண்டு முழுவதும் நோன்பு நோற்பதற்குச் சமமாகும். அத்துடன் நோன்பு நோற்பவரது ஓராண்டுப் பாவத்திற்குப் பரிகாரம் ஆகும் என்றும் கூறியுள்ளார்கள். இவ்வாறு பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கூறிய நடைமுறையைப் பின்பற்றி ஒழுகுவது 'சுன்னத்' எனும் தகுதியைப் பெறு கிறது.

'ஆஸுரா' நாளின்போது நோன்பு நோற்பது, அன்று ஏழை எளிய மக்களுக்குத் தருமம் தருவது, அனாதைகளான எத்தீம்களை அன்போடு அரவணைத்து அவர்களை மகிழ்ச்சிப் படுத்துவது, மார்க்க ஞானம் மிக்க அறிஞர் பெருமக்களை நாடிச் சென்று காண்பது, தன் குடும்பத் தினருக்காகவும் தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் தாராள மாகப் பணம் செலவு செய்வது, அதிகப்படியான 'நஃபில்' தொழுகைகளை இந்நாட்களில் தொழுவது இறையருளை மழையெனப் பெறுவதற்கு வழிகோலும் என்பது பெரியோர் வாக்கு.

படைப்பு நாள்

இஸ்லாமியக் கோட்பாட்டின்படி வானம், பூமி, கதிரவன், சந்திரன், கோளங்கள், சொர்க்கம், நரகம் ஆகிய அனைத்தும் முஹர்ரம் பத்தாம் நாளன்றே படைக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நாளில்தான் இறைவனின் பேரருளால் முதன் முதலாக உலகில் மழை பெய்தது. மனித குலத்தின் முதல் தந்தையாகிய ஆதாம் (அலை) அவர்களும் அன்னை ஹவ்வாவும் இறைவனால் படைக்கப்பட்டது இதே முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான். அது மட்டுமல்ல ஆதித் தந்தை ஆதாமும் ஹவ்வாத் தாயாரும் சுவன பதிக்கு இறைவனால் அனுப்பப்பட்டதும் இதே முஹர்ரம் பத்தாம் நாள் அன்று தான்.

நன்றி : தினமணி

# சகிப்புத் தன்மைக்கோர் பெருமானார்

## அனைவரும் ஆதாம் வழியினரே

*உலக மக்கள் அனைவரும் ஆதிப் பிதா ஆதாம் வழி வந்தவர்களே என்ற அடிப்படைக்கிணங்க மனிதர்களிடையே உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற பேதமோ, நிற, மொழி எனும் வேற்றுமைகளோ ஏற்பட ஏதுவில்லை. குலம், கோத்திரம் போன்ற முறைகள் ஒருவரையொருவர் இனங்கண்டு கொள்ளவேயன்றி வேறு எதற்காகவும் இல்லை என்பதைத் திருமறை தெளிவாகக் குறிப்பிடுகிறது.*

*"மனிதர்களே, நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து தான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால்) உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலானவர் என்று பாராட்டிக் கொள்வதற்கில்லை" (திருக்குர்ஆன் 49:13)*

## உலகெங்கும் இறை தூதர்கள்

*காலந்தோறும் மக்களிடையே ஏற்படும் மனமாச்சரியங்களைப் போக்கி அவர்களை இறைநெறியில் வழி*

நடத்த உலகெங்கும் இறை தூதர்கள் அவ்வப்போது இறைவனால் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து இருபத்திநான்காயிரம் என இஸ்லாமிய மரபு மொழிகிறது. இவர்கள் இந்தியா உட்பட எல்லா நாடுகளிலும் இனத்திலும் மொழியிலும் பிறந்து மக்களுக்கு வழிகாட்டியுள்ளனர். இவர்களுள் முதல் இறை தூதர் முதல் மனிதராகிய ஆதாம் (அலை) ஆவார். இறுதி நபி முஹம்மது (சல்) ஆவார். இஸ்லாமிய நெறியானது முதல் மனிதரும் நபியுமான ஆதாம் தொடங்கி வளர்ந்து வந்ததாகும். இஸ்லாமிய மார்க்கமாகிய இறைநெறியை நிறைவு செய்தவர் நபிகள் நாயகம் (சல்) ஆவார்.

**இன்றையத் தேவை**
**சகிப்புணர்வே**

இன்றைய மனிதகுல மாச்சரியங்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது சகிப்புத்தன்மை இன்மையே யாகும். சிறுபான்மை சமய, இன, மொழி பேசும் மக்களி டையே பெரும்பான்மையினரும், அதேபோன்று பெரும் பான்மையினரிடம் சிறுபான்மையினரும் எவ்வாறு ஒத்திணங்கி சகிப்புணர்வோடு வாழ்ந்து வளம் பெறுவது என்தற்கு நாயகத் திருமேனியின் வாழ்வும், வாக்கும் அரிய சான்றாக அமைந்துள்ளதெனலாம். பல்வேறு இன, மொழி, சமயங்களைக் கொண்ட இந்திய மக்களிடையே சகிப்புணர்வு அழுத்தம் பெறவேண்டியது அவசிய, அவசரத் தேவையாகும்.

**இந்திய சமயங்களின்**
**அடித்தளப் பண்பு**

இந்திய சமயங்கள் அனைத்தும் சகிப்புணர்வையே பெரிதும் வலியுறுத்துகின்றன. இன்னும் சொல்லப் போனால் சமயங்களின் அடித்தளப் பண்பாக அமைந்துள்ள

இவ்வுயர் பண்பை மறந்துவிட்டதால் அல்லது பேணி நடக்க விழையாத காரணத்தால் எத்தனையோ இடர்ப்பாடு கள் இன்றைய வாழ்வில் தலைதூக்கி, அமைதியின்மைக் கும் கலவரச் சூழலுக்கும் காரணமாகின்றன.

எந்தவொரு சமய, இன, வகுப்பு, மொழி மக்களா யினும் அவர்கள் இணக்கத்தோடும் ஒற்றுமையோடும் ஒத்திணங்கி வாழ வேண்டும் என்பதே இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

அது மட்டுமல்ல, உலகில் உள்ள அனைத்து மதங் களும் அவற்றின் வேதங்களும் இறைவனால் வழங்கப் பட்டவையே என்பதையும் அவை அனைத்தையும் முஸ்லிம்கள் மதிக்க வேண்டும் என்பதையும் இஸ்லாமிய அடித்தளப் பண்புகளாக வற்புறுத்தப்படுகின்றன. இதற்கு மாறு செய்வோர் பாவம் செய்தவர்களாவர் என இஸ்லாம் தெளிவாகக் கூறி எச்சரிக்கிறது.

## அடிநாள் தொட்டே சகிப்புணர்வு

பெருமானாரின் பெருவாழ்வில் அடிநாள் தொட்டு அரசோச்சி வந்த பண்பு சகிப்புணர்வாகும். சகிப்புத் தன்மைக்கோர் இலக்கணமாக ஆரம்ப காலம் தொட்டே விளங்கியவர் என்பதை அவரது வரலாற்றுச் சுவட்டில் தெளிவாகக் கண்டுணர முடிகிறது.

ஹிரா குகையில் வானவர் மூலம் இறைநெறி பெற்ற பெருமானார், அதைப் பல்வேறு இடர்ப்பாடுகளுக் கிடையே மக்காவில் நண்பர்களிடையே இரகசியமாகப் பரப்பி வந்தார். மதினா நகர் வந்த பிறகே பெருமானார் பகிங்கரமாகப் பிரச்சாரம் செய்யலானார்.

நபிகள் நாயகம்(சல்) மதினா வரு முன்னர் அந்நகர மக்களில் விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரே

இஸ்லாமிய நெறியை ஏற்று ஒழுகினர். மற்றபடி கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் மற்றும் பற்பல சிறு சமயங்களைச் சார்ந்தவர்களையும் பெருமளவில் கொண்ட நகரமாகவே மதினா விளங்கியது.

## அகதிப் பிரச்சினை தீர்த்த அண்ணலார்

நபிகள் நாயகம் (சல்) மதினாநகர் சென்றபின்னர் மக்காக்குறைஷியர்கள் செய்த கொடுமைகளைத் தாள முடியாத முஸ்லிம்கள் தங்கள் சொத்து, சுகம், உற்றார் உறவினர்களையெல்லாம் துறந்து அகதிகளாக மதினா நகர் வந்தனர். இவ்வாறு வந்து சேர்ந்த அகதிகளிடம் வேறு எதுவும் இல்லாத நிலை. இவர்களின் தொகை சில நூறு களாகும்.

இவ்வாறு வந்து சேர்ந்த மக்கா நகர முஸ்லிம் அகதிகளுக்கு மறுவாழ்வு அமைத்துத் தர வேண்டிய அவசிய, அவசரப் பிரச்சினை எழுந்தது.

அகதிப் பிரச்சினை எப்படிப்பட்டது என்பதை இந்திய மக்களாகிய நாம் பலமுறை பார்த்து அனுபவித்தவர்கள்; இன்றும் அனுபவித்துக் கொண்டு இருப்பவர்கள்.

அன்றைய மதினா நகரின் பொருளாதார நிலையும் வளமானதல்ல. வறுமைக் கோட்டை ஒட்டிய நிலை. அந்நிலையில் மதினா வந்த முஸ்லிம் அகதிகளை மக்கா நகருக்கே விரைந்து திருப்பியனுப்புமாறு மக்கா குறை ஷியர் விடுத்த எச்சரிக்கை வேறு; இதனால் மதினா வந்திருந்த மக்கா முஸ்லிம் அகதிகளின் நிலை இக்கட்டான தாக இருந்தது.

இந்நிலையில் மதினா வாழ் முஸ்லிம் குடும்பத் தலைவர்களைப் பெருமானார் அழைத்தார். அகதிகளாக வந்துள்ள மக்கா நகர முஸ்லிம் குடும்பமொன்றை மதினா

முஸ்லிம் குடும்பம் ஒவ்வொன்றும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு இணைந்த இரு குடும்பத்த வர்களும் ஒன்றாக உழைத்துப் பெருளீட்டிச் சமமாகப் பகிர்ந்து ஒத்திணங்கி ஒரே குடும்பமாக வாழ வேண்டும் எனவும் யோசனை கூறினார். ஆக்கப்பூர்வமான இவ்வா லோசனையை ஏற்ற மதினா முஸ்லிம் குடும்பத் தலைவர் கள் முழுமனதுடன் முஸ்லிம் அகதிகளை விரும்பி ஏற்றனர். இதன் மூலம் அகதிக் குடும்பத்தவர்க்கு இருப் பிடமும் வேலை வாய்ப்பும் உடனடியாகக் கிடைத்தது. மனிதநேய அடிப்படையில் சகிப்புணர்வும் புரிந்துணர்வும் கொண்ட சூழ்நிலையில் மலைப்பூட்டும் மாபெரும் அகதிப் பிரச்சினை எளிதாகத் தீர்க்கப்பட்டது.

### பல்வேறு சமயங்களுக்கிடையே உருவான ஒருங்கிணைப்பு

பெருமானார் மதினா நகர் வந்து சேர்ந்தபோது அங்கு பல்வேறு சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுள்ளும் கிறிஸ்துவ, யூத சமய மக்கள் பெருமள வில் வாழ்ந்தனர். அவர்களுக்கிடையே எவ்வித ஒற்றுமை உணர்வும் இல்லை. ஒரே இனத்தைச் சார்ந்த இரு வேறு கூட்டத்தால் அற்பக் காரியங்களுக்காக முடிவில்லாத சண்டையிலும் சச்சரவிலும் ஈடுபடுவது அவர்தம் வழக்க மாகவே இருந்து வந்தது. இதற்கிடையில் வெளியார்களின் தாக்குதலும் அடிக்கடி நிகழ்ந்தது. இதனால் கடுமையான உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருந்து வந்தது. இக்காரணங்களால் எல்லா வகையிலும் மதினா நகர் மக்கள் ஒற்றுமையுணர்வற்றவர் களாகவும் சகிப்புணர்வில்லாதவர்களாகவும் பிளவுண்டு கிடந்தனர். இவர்களை ஒருங்கிணைக்கும் ஒட்டு மொத்தத் தலைமை ஏதும் அந்நாளில் அப்போது மதினாவில் உருவாகியிருக்கவில்லை.

இந்நிலையை மாற்றி பல்வேறு சமயத்தவர்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் செயல்பட முனைந்தார் பெருமானார் (சல்) அவர்கள்.

## முதல் சர்வசமயக் கூட்டம்

முஸ்லிம்களையும் முஸ்லிம் அல்லாதவர்களான கிறிஸ்துவர்கள், யூதர்கள் மற்றும் பல்வேறு சிறு சிறு சமயங்களைச் சார்ந்தவர்களையும் கொண்ட சர்வமதக் கூட்டத்தைப் பெருமானார் முதன் முறையாகக் கூட்டினார்.

மதினா நகர் மக்கள் சகிப்புணர்வின் அடிப்படையில் புரிந்துணர்வோடு ஒருங்கிணைந்து வாழ வேண்யடிதன் அவசியத்தை அப்போது வலியுறுத்தினார்.

வெளியார்களின் தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும் தங்களுக்கிடையே மதமாச்சரியங் களோ, சண்டை சச்சரவுகளோ, இன்றி அமைதியாக வாழ வழி காண வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத் தினார். பல்வேறு சமயங்களை, இனங்களைச் சார்ந்தவர் களாயினும் தங்களின் சக்தி சிதறாமல் ஒருங்கு திரண்டு அமையுமாறு செயல்பட வழிகாண வற்புறுத்தினார்.

## முதல் பொது அரசு

பெருமானரது ஆலோசனை அவர்களைச் சிந்திக்கத் தூண்டியது. விழிப்புற்ற பல்வேறு சமயத் தலைவர்களும் இவ்வகையில் தங்களுக்கு ஆக்கப்பூர்வமாகத் தொடர்ந்து வழிகாட்ட பெருமானாரை வேண்டினர். இதற்காக மதினா நகரின் தலைவராகவும் அண்ணலாரைத் தேர்ந்தெடுத்தனர். நகர அரசு ஒன்றை அமைத்து வழிகாட்டுமாறும் வேண் டினர். மதினாவின் வரலாற்றிலேயே அணைத்துத் தரப்பு மக்களும் ஒன்றிணைந்து அரசமைத்ததும், தங்களுக்கென ஒரு பொதுத் தலைவரைத் தேர்ந்தெடுத்ததும் அதுவே முதன் முறையாகும்.

## உலகின் முதல் பொது
## அரசு அமைப்புச் சட்டம்

பல்வேறு சமய, இன மக்களின் தலைமையில் பொறுப்பேற்ற பெருமானார் கல்வி கற்காதவராக இருந்த போதிலும் மதினா நகர அரசுக்கு என பல்வேறு சமயத் தவர்க்கும் பொதுவான அரசு அமைப்பு சட்டம் (Constitution) ஒன்றை எழுத்துப்பூர்வமானதாக உருவாக்கினார்.

மனித குல வரலாற்றிலேயே முதன்முறையாக எழுத்து வடிவில் உருவாக்கப்பட்ட முதல் அரசமைப்புச் சட்டம் (Constitution) இதுவேயாகும். அதுவரை மதினா மக்கள் எழுத்துருப் பெறாத சில பொது விதிமுறைகளை மட்டுமே அனுசரித்து வந்தனர்.

எழுத்துருவில் உருவாக்கப்பட்ட இச்சட்டம் ஐம்பத் திரண்டு பிரிவுகளைக் கொண்டதாகும். பல்வேறு சமயங் களைப் பின்பற்றும் பல இன மக்கள் சகிப்புணர்வுடன் ஒருங்கிணைந்து வாழ வழிகாட்டும் ஒளி விளக்காக இச்சட்டம் அமைந்துள்ளதெனலாம்.

ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய அடிப் படையில், மனச்சாட்சிக்கிணங்க, ஒருங்கிணைந்து வாழ இச்சட்டம் வழி காட்டுகிறது. முஸ்லிம்கள் தங்கள் மார்க்க அடிப்படையிலும் கிறிஸ்துவ, யூத சமயத்தவர்கள் தங்கள் மத நியதிப்படியும் வாழ முழு உரிமையுண்டு. தங்கள் விருப்பம்போல் சமயங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வோ சடங்கு முறைகளைச் செய்து பேணி நடக்கவோ முழு உரிமை உண்டு. ஒருவர் மற்றவர் சமயத்தைப் பழிக்கவோ இழிவாகப் பேசவோ அறவே கூடாது. மாற்றார் வழி பாட்டுத் தலங்களையும் புனித இடங்களையும் காப்பதில் அனைவருக்கும் சமயப் பொறுப்பு உண்டு.

இதற்கெல்லாம் முடிமணி வைத்தாற்போல் எந்தச் சமயத்தவரிடையேனும் சச்சரவு ஏதாவது ஏற்பட்டால்,

அவர்தம் சமயச்சூழலுக்குள் தாங்கள் தங்கள் வேத நியதிப்படி அவ்வச் சமயத் தலைவர்களே தீர்ப்பு வழங்கிக் கொள்ள பூரண உரிமை பெற்றவர்களாவர் என அச்சட்டம் விளக்கிக் கூறுகிறது.

இம்மதினா நகர அரசமைப்புச் சட்டத்தில் காணும் மற்றொரு சிறப்பம்சம் சமயப் பாதுகாப்பபு மட்டுமின்றி சமூகப் பாதுகாப்புமாகும்.

ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்களிடையே ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகளை அச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் தங்கள் பிரச்சினையாக்க கருதித் தீர்த்துக் கொள்ளக் கடமைப்பட்டவர்களாவர் என விதித் திருப்பதாகும்.

இன்றைய ஐரோப்பிய நாடுகளில் காணும் சமூகப் பாதுகாப்பு உத்திரவாதச் சட்டங்களுக்கு அன்றே முன் னோடிச் சட்டம் உருவாக்கப்பட்டதெனலாம்.

இவ்வாறு முஸ்லிம், கிறிஸ்துவ யூத சமயங்களைச் சார்ந்த மக்கள் சிறுபான்மை அல்லது பெரும்பான்மை என்ற எண்ணிக்கை பேதமின்றி ஆழ்ந்த சகிப்புணர்வுடன் எவ்விதப் பாகுபாடுமின்றி, முழுச் சுதந்திரத்துடன் தங்கள் சமய அடிப்படையில் வாழவும், தங்கள் மத நம்பிக்கை யின்படி தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் வழிவகை ஏற்பட்டது.

இன்றைய மக்களும், அரசுகளும் ஏற்றிப் போற்றிப் பின்பற்றத்தக்க வகையில் அன்றே பல்வேறு சமய மக்களிடையே சகிப்புணர்வையும், ஒற்றுமையையும், ஒருங்குணர்வையும் சட்டப்பூர்வமாக நிலைநாட்டிய பெருமை பெருமானாரையே சாரும்.

நன்றி: தினமணி

# நோன்பு தரும் மாண்பு

ரமளான் 'ஈதுல் ஃபித்ர்' நன்னாளை நோன்புப் பெரு நாளாகவும் ஈகைத் திருநாளாகவும் உலகெங்கும் வாழும் முஸ்லிம் பெருமக்கள் உவகையோடு கொண்டாடி மகிழ் கின்றனர்.

## தீமையைச் சுட்டெரிக்கும் ரமளான்

'ரமள்' என்பதினின்றும் உருவான 'ரமளான்' என்ற அரபுச் சொல்லுக்கும் 'சுட்டெரித்தல்' என்பது பொருளா கும். ரமளான் மாதம் தீமைகளைச் சுட்டெரித்து மக்களை நன்மையின்பால் கொண்டு சேர்க்கும் மாதமாகவும் அமை கிறது. இறைமறை பிறந்த இம்மாதம் முழுமையும் அதிக மான தொழுகைகள், விரதமாகிய நோன்பு, ஏழை எளி யோர் பங்காகிய ஜகாத் போன்ற இஸ்லாமிய அடிப்படைக் கடமைகளை செயல் வடிவில் முஸ்லிம் பெரு மக்கள் முனைப்போடு கடைப்பிடிப்பதால் அகத்தில் முளைவிடும் தீய உணர்வுகளை புறத்தே சூழ்ந்து வரும் தீமைகளை ஒருங்கே எதிர்த்துப் போராடி, அவற்றை முற்றாகச் சுட்டெரித்து வெற்றி கொள்ளும் மாதமாக அமைகிறது. எனவே, இம்மாதம் முடிந்து அடுத்து வரும் முதல் நாளை ஒவ்வொரு முஸ்லிமும் வெற்றிக் களிப்போடு கொண்டாடி மகிழ்கின்றார்.

நடு நாயக நோன்பு

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் நோன்பு நான்காவது கடமையாக அமைந்திருந்த போதிலும் ரமளான் மாதத்தில் இக்கடமை நடுநயாகமாகப் போற்றப் பட்டுக் கடைப்பிடிக்கப்படுகிறது. நோன்புப் பெரு நாளாகவே போற்றப்படுகிறது.

ஏன் ரமளானில் நோன்பு?

இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் கட்டாயக் கடமையாக நோன்பு நோற்கும் மாதமாக ரமளான் மாதம் மட்டும் அமையக் காரணம் என்ன? இதற்கு இஸ்லாமியத் திருமறையாகிய திருக்குர்ஆனே விடையளிக்கிறது.

"ரமளான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய தென்றால், அதில் தான், மனிதர்களுக்கு வழிகாட்டியாக வும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கக் கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் (என்னும் இவ்வேதம்) அருளப்பெற்றது. ஆகவே, உங்களில் எவர் இம்மாதத்தை அடைகிறாரோ அவர் இம்மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும் *(2:185)*.

இதிலிருந்து ரமளான் மாதம் முழுமையும் நோன்பு நோற்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இஸ்லாம் விதித்துள்ள கட்டாயக் கடமை (பர்ளு) ஆகிறது.

சமயந்தோறும் விரதமெனும் நோன்பு

உலகிலுள்ள அனைத்துப் பெரும் சமயங்களும் விரதமாகிய நோன்பைக் கடமையாக்கியுள்ளன. இந்து சமயம் அடிக்கடி விரதமிருக்கப் பணிக்கிறது. எனினும், இஸ்லாமிய நோன்புக்கும் பிற சமய விரதங்களுக்கு மிடையே வேறுபாடு உண்டு. மற்ற சமயங்கள் விதித்துள்ள

விரதங்கள் ஒருசில நாட்கள் மட்டுமே கடைப்பிடிக்கப்படு கின்றது. அவ்விரதங்களின்போது ஒரு நாளில் குறிப்பிட்ட நேரம் வரை உணவு உண்ணாமலோ அல்லது குறிப்பிட்ட உணவு வகைகளை உண்ணாது விலக்கியோ விரதம் கடைப் பிடிக்கப்படுகிறது. நீர் பருகத் தடையேதும் இல்லை.

மாதம் முழுமையும் நோன்பு

ரமளான் மாத நோன்பு அம்மாதம் முழுமையும், முப்பது நாட்கள் பகல் முழுவதும் இடைவிடாது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு நாள் பகற் பொழுதில் குறைந்தபட்சம் பதினான்கு மணி நேரம் நோன்பு நோற்கப்படுகிறது.

அதிகாலை வைகறை முதல் மாலையில் கதிரவன் மறையும்வரை ஒரு சொட்டு நீரும் பருகாமல் நோன்பு நோற்கப்படுகிறது. வழக்கமான பகற்பொழுது உணவுப் பழக்கங்கள் முற்றாக விலக்கப்படுகின்றன. புதைத்தல் முதலான செயல்கள் முழுமையாகக் கைவிடப்படுகின்றன. இவற்றை இரவு நேரத்தில் அனுபவிக்கத் தடையில்லை.

நோன்பு விதிவிலக்கும் சலுகையும்

ரமளான் நோன்பு நோற்பது முஸ்லிம்கள் அனைவருக் கும் இன்றியமையாக் கடமையாயினும் இயலாதவர்கட்கு இதில் விதி விலக்கும் சலுகைகளும் உண்டு.

கடுமையான நோய்வாய்ப்பட்டவர்கள், மூப்பின் எல்லையைத் தொடும் முதியவர்கள், குழந்தைகட்குப் பாலமுதூட்டும் தாய்மார்கள் நோன்பு நோற்பதினின்றும் விலக்குப் பெறுகிறார்கள்.

சாதாரண நிலையில் உடல் நலமில்லாதவர்களும் பயணிகளும் தவிர்க்க முடியாத காரணங்களால் ஓரிரு நாட்கள் நோன்பு நோற்க இயலாதவர்களும் நோன்பு நோற்காதிருக்க அனுமதி உண்டு. இவர்கள் விடுபட்ட

நாட்களைப் பின்னர் கணக்கிட்டு நோன்பு நோற்க வேண்டும். முப்பது நாட்கள் நோன்பு நோற்று முழுமைப் படுத்த வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் இன்றியமை யாக் கடமையாகும். இதைப் பற்றி திருமறை:

*"நோன்புக் காலத்தில் யாராவது நோயாளியாகவோ அல்லது யாத்திரையிலோ இருந்தால் (ரமளான் அல்லாத) மற்ற நாட்களில் (விட்டுப்போன நாட்களின் நோன்பைக்) கணக்கிட்டு (நோற்று) விடவும்" (2:185)* எனக் கூறுகிறது.

இவ்வாறு நோன்பை முழுமையாகக் கடைப்பிடிக்க இஸ்லாம் பணிப்பதையும் முப்பது நாட்கள் தொடர்ச்சி யாகப் பகற்பொழுது முழுவதும் உண்ணாமலும் ஒரு சொட்டு நீரையும் பருகாமலும் முஸ்லிம்கள் நோன்பு நோற் பதை மிகக் கடினமான செயலாகக் கருதி பிற சமயத்தினர் வியக்கின்றனர். அதிலும் மிக இளம் வயதுடைய சின்னஞ் சிறியவர்கட்கு எப்படி இயலுகிறது என ஆச்சரியப் படுகின்றனர். நோன்பு நோற்பது கடுமைமிகு செயலாகப் பிறர்க்குத் தோன்றினும் அதனால் ஆன்மிக அடிப்படை யிலும் உளவியல் போக்கிலும் அறிவியல் நோக்கிலும் நோன்பாளிகள் பெறுகின்ற பயன் அளவிறந்ததாகும்.

### நோன்பின் அடிப்படை அம்சம்

ஆண்டுதோறும் நோன்பு எனும் சோதனைக் களத்தில் புகுந்து புடம் போட்ட தங்கமாக ஒவ்வொரு முஸ்லிமும் திகழ வழி வகுப்பதே இஸ்லாமிய நோன்பின் அடிப்படை அம்சமாகும்.

### யாருக்காக நோன்பு?

நோன்பு வைக்கும் ஒவ்வொரு முஸ்லிம் நோன்பாளி யும் இறைவனுக்காக நோன்பு நோற்பதாக உறுதி கொள் கிறான். நாம் நோற்கும் நோன்பால் இறைவனுக்கு எவ் விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. மனிதர்களின்

உதவியை இறைவன் நாட வேண்டிய அவசியமில்லை. அல்லாஹ் கொடுப்பவனே தவிர பெறுபவன் அல்ல.

அப்படியென்றால், நோன்புக் கடமையை நிறை வேற்றுவதால் நிலையான பயன் பெறுபவர் யார்? நாம் தான். இறைவன் பெயரால் விளையும் நன்மை அனைத்தும் நமக்கே உண்டாகிறது. தீமையினின்றும் முற்றாக விலக வும் நன்மையை நாடவும்; பொறுமை, அன்பு, கருணை ஆகியவற்றின் வடிவாக மாறவும் நமக்கு வாய்ப்பளிக்கின் றது. இத்தகைய நற்பண்புகளால் சூழப்பட்டு மனத்தூய்மை பெற்ற நம்மையே இறைவன் நேசிக்கிறான். அல்லாஹ்வின் அன்பை பெறும் தகுதியை ரமளான் மாத நோன்பு நமக்கு எளிதாகத் தேடித் தருகிறது. இவ்வாறு இறைவன் பெயரால் நோற்கும் நோன்புப் பலன் முழுமையும் நம்மையே சேர்கின்றன. இதையே இறைவன் தன் திருமறையில்,

"நீங்கள் நோன்பு நோற்பது உங்களுக்கே நன்மை (என்பதை) நீங்கள் அறிவுடையோர்களாயிருந்தால் (தெரிந்து கொள்வீர்கள்)" (2:184)

எனக் கூறித் தெளிவுபடுத்துகிறது.

## நோன்பு தரும் இறை நெருக்கம்

இறையருளைத் தேடித் தருவது மட்டுமல்லாது இறைவனோடு நம்மை நெருக்கமடையச் செய்யும் சாதன மாகவும் நோன்பு அமைந்துள்ளது. நமக்கு மட்டு மல்ல, இறை தூதர்களுக்கேகூட நோன்பு இறை நெருக்கத்திற்கான படிக்கட்டுகளாக அமைந்துள்ளன என்பதைத் திருமறை எடுத்துக்காட்டுகிறது.

இறை தூதர்கள் இறைச் செய்தியைப் பெறுமுன் தங்களை உள்ளும் புறமும் தூய்மைப்படுத்தும் ஒப்பற்ற வழிமுறையாக நோன்புக் கடமையை மேற்கொண்டே

தங்களைப் பரிபக்குவப்படுத்திக் கொண்டார்கள் என்பது இறைமறை தரும் வரலாறு. ஏசுநாதராகிய ஈசா நபி நாற்பது நாட்கள் நோன்பு நோற்ற பின்பே இறை ஞானம் பெற முடிந்தது. மோசஸ் எனும் மூஸா நபியும் நோன்புக் கடமையை நிறைவேற்றிய பின்னரே இறைவனைக் காணும் பேறு பெற முடிந்தது. இதேபோன்று, 27 நாட்கள் இரவு பகலாக நோன்பு நோற்ற பின்பே ஹிரா மலைக் குகையில் முதன் முதலாக இறைச் செய்தியை நபிகள் நாயகம் முஹம்மது (சல்) அவர்கள் வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) வாயிலாகப் பெற முடிந்தது. இவ்வாறு இம்மைக்கும் மறுமைக்கும் பெரும்பேற்றை நல்கவல்ல ஆற்றல்மிகு சாதனமாக அமைந்திருப்பது நோன்பாகும். இதைப்பற்றி திருமறை, 'விசுவாசிகளே: உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்து பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. (அதனால்) நீங்கள் பரிசுத்தமுடையவர்களாகலாம் (2:183) எனக் கூறுகிறது.

## உலகமே ஜமாத்தாகும் விந்தை

இத்தகு சிறப்புமிகு நோன்பை உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் ரமளான் மாதம் முழுவதும் ஏக காலத்தில் நோற்கிறார்கள். இதனால் இம்மாதம் புனிதமிகு மாதமாகிறது. இம்மாதம் முழுவதும் முஸ்லிம்கள் அதிக அளவில் ஜகாத் போன்ற கடமைகளை முனைப்பாக நிறைவேற்றுவதன் மூலம் ஒருவருக்கொருவர் உதவு கின்றனர். ஆன்மிக உணர்வுடன் பொருள் பரிமாற்றமும் செய்துகொள்கின்றனர். அவர்கள் அனைவரிடமிருந்து தீய யுணர்வுகள் நீங்குகின்றன. நல்லுணர்வுகள் மேலோங்கு கின்றன. தாங்கள் தேடிய செல்வத்தை ஜகாத் போன்றவை கட்காக இறைவழியில் செலவிட்டு மகிழ்கின்றனர். சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் நிலைநாட்டு கின்றனர். உலகெங்கும் நோன்பு நோற்கும் நோம்பாளிகள்

ஒரே ஜமாத் (குழுமம்)தாக விளங்கி தங்கள் ஒற்றுமையை நிலைநாட்டுகிறார்கள்.

### தனக்குத்தானே தடை

நோன்புக் காலத்தில் நோன்பாளி நோன்பு வைக்கும் போதும் முடிக்கும்போதும் வேண்டுமானால் பலரோடு இருக்கும் வாய்ப்பைப் பெறலாம். பிற சமயங்களில் தனியாக இருக்கும் வாய்ப்பே மிகுதி. அத் தனிமைச் சந்தர்ப் பங்களில் யாருக்கும் தெரியாமல் சிறிதளவு உண்ணவோ சிறிது நீர் பருகவோ முடியும். ஆனால், நோன்பாளி அத்தகைய சிந்தனை அறவே இல்லாதவனாக, கடுமையான மனக்கட்டுப்பாட்டுடன் நோன்பு நோற்கிறான். இதற்குக் காரணம் நோன்பாளி மனிதர் பார்வையிலிருந்து மறைவாக இருந்த போதிலும் இறைவனின் நேரடிப் பார்வை எப்போதும் தன்மீது படிந்திருந்திருப்பதாகக் கருதும் மனநிலையும் நம்பிக்கையும் கடமை உணர்வும் இறையச் சமுமேயாகும். இதனால் ஒவ்வொரு நோன்பாளியும் மிகுந்த மனக்கட்டுப்பாட்டுடன் தனக்குத்தானே தடை விதித்துக் கொண்டு நோன்புக் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி மகிழ்கிறார்.

### மனக்கட்டுப்பாட்டு<br>ஊற்றுக்கண் நோன்பு

நோன்பிலா நாட்களில் ஒவ்வொரு நாளும் வகை வகையான சுவை மிகு உணவு வகைகளை வேளைதோறும் உண்டு மகிழ்ந்திருக்கலாம். காபி, டீ, போன்ற சுவை நீர்களை வகைவகையாகப் பருகி இன்புற்றிருக்கலாம். பீடி, சிகரெட், புகையிலை, பொடி எனப் பலவற்றைப் புகைத் தும் சுவைத்தும் இன்பம் துய்த்திருக்கலாம். ஆனால், நோன்புக் காலத்தில், இவைகளில் எதையுமே மனம் நினைத்துக் கூடப் பார்க்கத் துணிவதில்லை. அந்த அளவுக்கு மனம் கட்டுப்பாடுடையது. இதினின்றும்

நோன்பின் முழு முதற்பயனே மனக் கட்டுப்பாடு என்பது புலனாகிறது.

### பொறுமையின் உறைவிடம் நோன்பு

மனக் கட்டுப்பாட்டுடன் அளவுக்கதிகமான பொறுமையைப் பெறும் பயிற்சிக்களமாகவும் நோன்பு அமைகிறது.

ரமளான் மாதம் முழுமையும் நோன்பு நோற்கும் ஒருவர் பசியை மட்டுமா பொறுக்கிறார். தன் தவறான பழக்க வழக்கங்கள் அத்தனையினின்றும் விடுபட்டவராக, தனக்கேற்படும் வசதிக்குறைவுகளையெல்லாம் பொறுத்து, நல்லுணர்வு, நற்சிந்தனை, நல்லிணக்கம் ஆகிய பண்பு நலன்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் எல்லா வகையிலும் பொறுமையின் உறைவிடமாகிறார்.

நோன்பாளி வழக்கமாக 'உண்ணும்' பருகும் நேரங்கள் முற்றாக மாறுவதால் அவர் எவ்வித மன எரிச்சலுக்கும் ஆளாவதில்லை. தான் இன்பமாக உறங்கி மகிழும் முன்னிரவிலும் பின்னிரவு வைகறையிலும் விழித்திருக்க நேர்வதற்காக அவர் வருந்துவதில்லை. அவற்றையெல்லாம் அவர் அளவுக்கதிகமான பொறுமையோடும் சகிப்புணர்வோடும் மேற்கொள்கிறார். தான் ஒரு பொறுமை மிக்க இறையடியான் என்ற நல்லுணர்வு அவன் நெஞ்சமெல்லாம் பரவி அவரைப் பரவசப்படுத்துகிறது.

### புலனடக்கத்திற்கு அடிப்படை

பொறுமையும் மனக்கட்டுப்பாடும் தன் புலனடக்கத்திற்கு அடிப்படை, மனதைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவருக்கு பசி, தாகம் மட்டுமா, எதையுமே கட்டுப்படுத்தும் வலிமை இயல்பாக ஏற்பட்டு விடுகிறது. இதன் மூலம் மன இச்சைகளை, ஆசைகளை, விருப்பு, வெறுப்புகளைத் தம் விருப்பம்போல் கட்டுப்படுத்தும் உணர்வு வலுப்பட்டு

விடுகிறது. இதற்கான மனப்பயிற்சியை நோன்பு அழுத்த மாக வழங்குகிறது.

புலனடக்கத் தோற்றுவாய் நோன்பு

மனிதனைத் தவறான போக்கில், தீயவழிகளில் இட்டுச் செல்வதில் ஐம்புலன்கட்கு அதிகப் பங்குண்டு. ஐம்புலன்களை அடக்கி ஆள்வது என்பது அவ்வளவு எளிதான செயலன்று, இதனால்தான் அறிவு என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி ஆள்பவன் அறிவுக்கு வித்துப் போன்றவன் என மொழிந்தார் வள்ளுவப்பெருந்தகை.

அத்தகைய புலனடக்கத்தைத் தோற்றுவிக்கும் தோற்றுவாயாக நோன்பு அமைந்துள்ளது.

பகல் முழுதும் எதையுமே உண்ணாமலும் பருகாமலும் புகைக்காமலும், வெற்றிலை, பாக்கு, புகையிலை போன்ற வற்றை மெல்லாதிருப்பதோடு, பொய்யுரைத்தல், புறம் பேசுதல், தீயன மொழிதலாகிய தீச்செயல்கள் அனைத்தும் முற்றாகத் தவிர்க்கப்படுவதால் வாய்ப்புலன் வெற்றி கொள்ளப்படுகிறது.

நோன்பின்போது எத்தகைய அறுசுவை உணவின் நறுமணமாயினும் அதனை நுகரும் வேட்கை நோன் பாளிக்கு இல்லாதுபோகிறது. மூக்குப் பொடி போன்ற வற்றை மூக்கினுள் திணித்து மூக்கு துவாரத்தையே நாசப் படுத்தும் தவறான பழக்கம் நோன்பின்போது முற்றாக விலக்கப்படுவதால் மூக்குப் புலனும் ஆட்கொள்ளப் படுகிறது.

நோன்புக் காலத்தில் தீயன காண்பது கடுமையாகத் தடுக்கப்படுகிறது. தன் பார்வையில் அன்பும் பரிவும் கருணையுமே இருக்குமாறு நோன்பாளி பார்த்துக் கொள் கிறான். ஈத்துவக்கும் மாதமாதலால் அனைவரிடமும்

கனிவான பார்வையைச் செலுத்த வேண்டிய இன்றியமைச் சூழ் நிலை அவனைச் சுற்றி உருவாகி விடுகிறது. இதன் மூலம் கட்புலனும் நோன்பாளியின் ஆளுகைக்குட்பட்டதாகிறது.

ரமளான் மாதத்தில் ஐவேளைத் தொழுகையோடு 'தராவீஹ்' போன்ற சிறப்புத் தொழுகைகளையும் மேற்கொள்வதால் மிக அதிக அளவில் இறை வணக்கங்களைச் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடப்பாடு நோன்பாளிக்கு ஏற்படுகிறது. இதனால் இறைமறையின் ஒலிகளே இடையறாது நோன்பாளியின் செவிகளை நிறைக்கின்றன. மனத்தை கிலேசப்படுத்தும் எந்தவொரு தவறான வார்த்தையும் தன் காதில்பட்டு விடாமல் நோன்பாளி கவனித்துக் கொள்கிறான். இதனால், செவிப்புலனும் அடக்கத்தோடு செயல்பட வேண்டியதாகிறது.

நோன்புச் சமயத்தில் ஆண்-பெண் உடலுறவு அறவே தடுக்கப்படுகிறது. பாலுணர்வு தலைதூக்கும் பார்வையோ படிப்போ அறவே கூடாது என விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண்களைத் தழுவுவது முற்றாக விலக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் தவறான தொடுவுணர்வுக்கு வாய்ப்பே இல்லாமற் போவதால் தொடுவுணர்வுப் புலனும் நம் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகிறது.

இவ்வாறு வாய், மூக்கு, கண், காது, தொடுவுணர்வு ஆகிய ஐந்து ஐம்புலன்களையும் தீமையின் சுவடுகூடப் படியாவண்ணம் நற்செயல்களின்பால் மட்டும் திருப்பி இறையருள் பெறும் பக்குவத்தை நோன்பாளி பெற வழியேற்படுகிறது. இதன் மூலம் ஐம்புலன்களின் இன்ப வேட்கை அறவே தடுக்கப்படுகிறது.

'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும் வேண்டாதவற்றை' என்ற மூதுரைக்கு இலக்கணமாக

ஐம்புலன்களை அடக்கியாலும் பேராண்மையை ஒவ் வொரு நோன்பாளிக்கும் வழங்குகிறது நோன்பு.

**வாழ்நாள் பயிற்சி**

நோன்பின் மூலம் இறையருளைப் பூரணமாகப் பெற வேண்டும் என்ற துடிப்புடன் இறைக் கட்டளைக்கேற்ப தன் மன இச்சைகளை ஒடுக்கி, தன் ஐம்புலன்களை அடக்கி வாழ நோன்பாளி முற்படுகிறார். நோன்பின் மூலம் இதற்கான சக்தியும் மனவலிமையும் அவரே வியக்கு மளவுக்கு நோன்பாளியிடம் மேலாதிக்கம் பெறுகிறது. ரமளான் மாத முப்பது நாட்கள் தொடர்ந்து நோன்பு நோற்றுப் பெறும் இவ்வலிமை ஆண்டு முழுவதும் அவரிடம் அரசோச்சுகிறது. நாளடைவில் அதன் வலிமை குறையத் தொடங்கும். தருணத்தில் அடுத்த ஆண்டு ரமளான் நோன்பை தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் அவ் வலிமையைப் புதுப்பித்துக் கொள்ள முடிகிறது. இவ்வாறு வாழ்நாள் முழுவதும் புலனடக்கத்தையும் மனக் கட்டுப்பாட்டையும் பெற்றவராக வாழ்வில் பொலிவோடு விளங்க முடிகிறது.

**உடல்நோய் போக்கும்**
**உன்னத நோன்பு**

ஆன்மீக, உளவியல் அடிப்படையில் மட்டுமல்லாது, அறிவியல் அடிப்படையிலும் நோன்பு பெரும் நன்மை களை விளைவிப்பதாய் அமைந்துள்ளது.

நோன்பு முறையால் உடலில் வாட்டும் பல நோய் களின் வலிமை குறைகின்றன அல்லது குணமாகின்றன என்பது மருத்துவ உலகக் கணிப்பாகும்.

வைகறைக்கு முன்பு உண்ணும் உணவு சில மணி நேரத்துக்குள் நன்கு செரித்து விடுகிறது. இதன் மூலம் பல மணி நேரங்கள் செரிப்பதற்கு ஏதுமில்லா நிலையில் சீரண

உறுப்புகளாகிய இறைப்பை, வயிறு, சிறுகுடல், பெருங் குடல் போன்றவை பூரண ஓய்வு பெறுகின்றன. சுத்தமடை கின்றன.

நோய் தோன்றவோ வளரவோ போதிய வாய்ப்பில்லா நிலை உருவாக இதன் மூலம் வழியேற்படுகிறது.

நோன்பின்போது நீரிழிவு போன்ற நோய்கள் கட்டுக்குள் அடங்கியிருப்பதாக மருத்துவ வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

சாதாரண நாட்களில் அதிக அளவில் உண்பதால் அளவுக்கதிகமாக உடலில் கொழுப்புப் பொருள் சேர உடல் பருத்துவிடுகிறது. இதனால் உடலின் இயற்கையழகு குன்று வதோடு பல்வேறு நோய்களுக்கும் இஃது வழியாயமை கிறது இதன்மூலம், மாரடைப்பு போன்ற திடீர் மரணங் களும் சம்பவிக்கின்றன. நோன்புக் காலத்தில் குறைவான உணவே உட்கொள்ளப்படுவதால் இக் கொழுப்புப் பொருட் கள் கொஞ்சங் கொஞ்சமாகக் கரைகின்றன. இதன் வாயி லாக உடல் எடையும் பருமனும் குறைய உடல் கலகலப் படைகிறது.

மேலும், நோன்பு நோற்கும்போது குறைந்த அளவே உண்பதால் உடலில் 'ஹார்மோன்' சுரப்பும் ஒரு அளவுக்குள் அமைகிறது, இதனால் இரத்தக் கொதிப்புப் போன்ற நோய்கள் கட்டுக்குள் அடங்குகின்றன.

### பசியின் கொடுமையை உணர்த்தும் நோன்பு

சமூகவியல் அடிப்படையில் நோக்கும்போது பசித் திருப்போர் எத்தகைய கொடுமை அனுபவிக்கின்றனர் என்பதை செயல் பூர்வமாக நோன்பாளியை உணரச் செய்கிறது. இதை உணரும் செல்வ வளமிக்க நோன்பாளி கள் இல்லாதோரின் பசித் துயர் நீக்க அவாவுகின்றனர்.

ஜகாத் கடமைகளை இனிது நிறைவேற்றி ஏழை எளியவர் களை மகிழ்விக்க வேட்கை கொள்கின்றனர். ஏழை எளிய வர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண உண்மையிலே முயல்கின்றனர். இல்லாதோருக்காக தாங்கள் முயன்று தேடி பொருளை தியாகம் செய்ய முனைகின்றனர்.

இவ்வாறு, இறைவனின் கட்டளைகளை நிறைவேற்ற அவன் விதித்த வாழ்வியல் நெறிப்படி வாழ முனையும் முஸ்லிம் இறை வழியில் எவ்விதத் தியாகத்திற்கும் தன்னை ஆட்படுத்திக்கொள்ள முயல்கிறார். தன் மன இச்சைகளை யெல்லாம் தூக்கி எறிகிறார். தன் பழக்க வழக்கங்களை யெல்லாம் முற்றாக மாற்றிக் கொள்கிறார். ஐம்புலன்களை அடக்கி ஆள்கிறார். பசியையும் தாகத்தையும் மகிழ்வோடு தாங்குகிறார். இம் முறையில் தன்னால் இயன்ற தியாகங் களையெல்லாம் இறைவனுக்காக மகிழ்வோடு நிறை வேற்றுகிறார். இதற்கான ராஜபாட்டையாக அமைந் துள்ளது ரமளான் நோன்பு, மனிதனை மாமனிதனாக, மாண்புடையவனாக, மனிதப் புனிதனாக உருமாற்றும் அருஞ் செயலை ரமளான் நோன்பு வெற்றிகரமாக நிறை வேற்றுகிறதெனில் அஃது மிகையன்று.

நன்றி : தினமணி

# தியாகம் - சமத்துவம் - சகோதரத்துவம்

## இஸ்லாத்தின் எழில்மிகு மாளிகை

*இறை நம்பிக்கை, தியாகம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நான்கு தூண்களின் மீது உயர்ந்தோங்கி விளங்குவதுதான் இஸ்லாம் எனும் எழில்மிகு மாளிகை.*

*இச்சிறப்புமிகு நான்கு அம்சங்களையும் ஒரு சேர உணர்ந்து தெளிய நடைமுறை நிகழ்வாக அமைந்திருப்பது தான், பக்ரீத் எனும் 'ஈதுல் அள்கா' பெருநாள்.*

## இறைவனால் படைக்கப்பட்டவைகளும் மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் வணங்குதற்குரியவை அல்ல

*சுமார் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஆச்சார அனுஷ்டானமிக்க வைதீக குருமார் குடும்பத்தில் பிறந்து, 'இறைவன் ஒருவனே. என் வாழ்வும் மரணமும் யாரிடம் உண்டோ அவனே வணங்கத்தக்க இறைவன். இறைவனால் படைக்கப்பட்டவைகளும் மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் வணங்குதற்குரியன அல்ல. அவற்றையெல்லாம் படைத்த மூல முதலாகிய இறைவன் மட்டுமே வணங்குதற்குரியவன்' எனப் பிரச்சாரம் செய்ததற்காக*

குருமார்களும், தங்களையே கடவுள்களாகப் பிரகடனப் படுத்திக் கொண்ட மன்னர்களும் எண்ணற்ற இன்னல்களை விளைவித்தபோதிலும் மனந்தளராது நாடோடியாய் திரிந்து எண்பது வயதுவரை சமய எழுச்சிப் பிரச்சாரம் செய்து வந்தார் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள்.

**தியாகத்தின் எல்லைக்**
**கோடான நிகழ்ச்சி**

தன் 'ஓர் இறை' பிரச்சார இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வாரிசு இல்லையே என ஏங்கி இறைவனிடம் மன்றாட, முதுமையின் எல்லைக் கோட்டில் வாழ்ந்த இபுறாஹீம் (அலை) அவர்கட்குப் புதல்வராகப் பிறந்து பிள்ளைப் பிராயமடைந்தார் இஸ்மாயீல். தன் கையா லேயே தன் புதல்வன் இஸ்மாயீலை அறுத்துப் பலியிடுவது போல் தொடர்கனவு கண்ட தந்தை இபுறாஹீம் (அலை) அதை இறைவனிட்ட கட்டளையாகவே கருதினார். இக் கனவைக் கேட்ட தாயும் மைந்தனும் கூட மனங் கலங்காது அதை இறை கட்டளையாகவே ஏற்றனர். இறை நாட் டத்திற்கொப்ப, தந்தை தன்னைப் பலியிடும்போது, தான் பொறுமையாக இருப்பதாக வாக்குறுதி தந்தார் குமாரர் இஸ்மாயீல். கருணை வடிவான இறைவன், தந்தையே மகனைப் பலியிடும்படி ஆணையிட்டதாகக் கருதி செயல்படலானார்.

இவ்வாறு இறைவனுக்காக இன்னுயிரைத் தியாகம் செய்ய முனைந்த நிகழ்வை நினைவு கூறும் வகையில் - இறை தியாக உணர்வை நெஞ்சிலிருத்தும் வண்ணம் உலகெங்கும் உள்ள 125 கோடி முஸ்லிம்கள் 'ஈதுல் அள்ஹா' எனும் தியாகத் திருநாளை கொண்டாடி மகிழ்கின்றனர்.

**உலகின் முதல் இறை**
**வணக்கத் தலம்**

இபுராஹீம் நபியும் அவர் குமாரர் இஸ்மாயீல் நபியும்

தாங்கள் புதுப்பித்துக் கட்டிய உலகின் முதல் வணக்கத் தலமான கஃபாவை நோக்கி இறையடியார்கள் ஆண்டு தோறும் ஹஜ் செய்ய வருமாறு அழைப்பு விடுத்தார். அவ்வழைப்புக்கிணங்க ஐயாயிரம் ஆண்டுகளாக இறையடியார்கள் மக்காவிலுள்ள கஃபா இறையில்லத்தை நோக்கி 'ஹஜ்' என்ற அரபுச் சொல்லுக்குச் 'சந்திக்க நாடுவது' என்பது பொருளாகும். உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் கஃபா இறையில்லத்தை சந்திக்கச் செல்வதால் இப்பெயர் பெற்றுள்ளது.

ஹஜ் செல்லுபவர் இறையுணர்வு ஒன்றை மட்டும் நெஞ்சத்தில் தேக்கியவராக சொத்து, சுகம், சொந்தம், பந்தம் அனைத்தையும் விட்டு நீங்கிச் செல்கிறார். தான் வாழ்ந்த சுக வாழ்வை விட்டுக் கடினமான வாழ்வுக்குத் தன்னை மாற்றிக் கொள்கிறார். தியாக உணர்வின் எல்லைவரை செல்பவராகிறார்.

எளிமையே உருவாகும் ஹாஜி

கஃபா இறையில்லம் நோக்கிச் செல்லும் ஹாஜி ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதியில் தன் ஆடம்பர ஆடை அணிகளையெல்லாம் களைந்து விடுகிறார். தன் வெற்றுடம்பை தைக்கப்படாத சாதாரண இரு துண்டுத் துணிகளைக் கொண்டு போர்த்திக் கொள்கிறார். இது 'இஹ்ராம்' உடை என அழைக்கப்படுகிறது. இதே வகை உடைதான் இறந்த (மையத்) சடலத்தின் மீதும் போர்த்தப் படுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு ஹாஜியும் இறை நாட்டத்தோடு, அனைத்தையும் தியாகம் செய்தவராக மரணக் கோலத்தை மேற்கொள்கிறார்.

கஃபாவில் ஹஜ்ஜின்போது குழுமம் 25 இலட்சம் ஹாஜிகளும் ஒரே விதமான இஹ்ராம் உடையில் காட்சி தருகின்றனர். அரசனும் ஆண்டியும், வெள்ளையனும் கறுப்பனும் ஒரே வித உடை; நாடு, மொழி, இனம், நிறம்

என்ற வேறுபாடுகளின் சுவடுகூட இல்லாதபடி இறைவன் முன்னிலையில் எல்லோரும் சமம் என்பதை உள்ளத்தாலும் தோற்றத்தாலும் மெய்ப்பிக்கின்றனர். 'எல்லோரும் ஆதாம் பெற்ற மக்களே' என்ற சமத்துவ, சகோதரத்துவ உணர்வு களை ஹாஜிகள் அனைவரும் பெறுகின்றனர். இந்த உணர்வு வழியில் வாழ அனைவரும் உறுதி கொள்கின்றனர்.

**வாழ்வின் உட்பொருளை**
**உணர்த்தும் அரஃபாத்**

ஹஜ்ஜின் அடுத்த முக்கிய நிகழ்வாக ஹாஜிகள் அனைவரும் அரஃபாத் பெருவெளியில் ஒரு பகல் மட்டும் தங்குகின்றனர். ஒரே விதமான இஹ்ராம் உடையுடுத்திய ஹாஜிகள் ஒரே வகையான கூடாரத்தில் தங்கி ஒரே வகை யான உணர்வோடு தங்குகின்றனர். வேற்றுமை யுணர்வுகள் அனைத்தும் அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள் கின்றன. சமத்துவ உணர்வுக்கோர் ஒப்பற்ற எடுத்துக் காட்டாக இச் செயல் அமைகிறது.

மறுநாள் அரஃபாத் பெருவெளியின் தற்காலிகமாக அமைக்கப்பட்ட அக்கூடாரங்கள் அகற்றப்படுவதுபோல் தங்கள் உயிரும் இவ்வுடல் எனும் கூட்டிலிருந்து ஒரு நாள் பிரிக்கப்படும் என்ற வாழ்வியல் சூட்சம உண்மையை நிதர் சனமாக உணர்கின்றனர்.

இவ்வாறு 'ஈதும் அள்ஹா' எனும் தியாகத் திருநாளும் ஹஜ் பெருநாளும் உலக மக்களுக்கு தியாகம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற உயரிய வாழ்வியல் இறை நெறிகளை உணர்த்திக் காட்டும் நிகழ்வுகளாக அமைந்து இறையருள் பெற வழிகாட்டி வருகின்றன.

நன்றி : தமிழ் ஓசை (மலேசியா)

# முஹர்ரம் புத்தாண்டுச் சிந்தனை

## இஸ்லாமிய புத்தாண்டு

உலகிலுள்ள சமயங்கள் பலவும் தத்தமது சமயத்துக் குரிய புத்தாண்டு தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடத் தவறுவதில்லை. அதேபோன்று இஸ்லாமியப் புத்தாண்டு மாதமாக முஹர்ரம் மாதம் உலக முஸ்லிம்களுக்கு அமைந்துள்ளது. திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மாதங்களுள் முஹர்ரமும் ஒன்று.

இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் இறுதி மாதமாக துல்ஹாஜ் மாதம் அமைந்துள்ளது. ஆண்டின் முதல் மாதமாக முஹர்ரம் மாதம் உள்ளது.

## ஹிஜ்ரி ஆண்டு பிறந்த வரலாறு

இஸ்லாமிய ஆண்டு 'ஹிஜ்ரி' என அழைக்கப்படு கிறது. 'ஹிஜ்ரத்' எனும் சொல்வழிப் பிறந்தது 'ஹிஜ்ரி'.

'ஹிஜ்ரத்' என்ற சொல்லுக்கு 'இடம் பெயர்ந்து செல்லுதல்' என்பது பொருளாகும். முஹம்மது நபி (சல்) மக்காக் குறைஷிகளின் கொடுமைகளிலிருந்து தப்பிக்கத் தன் தோழரோடு மதினா நகர் நோக்கிப் பெயர்ந்து சென்ற நிகழ்ச்சியே 'ஹிஜ்ரத்' என்பதாகும்.

நபிகள் நாயகம் இஸ்லாமிய மார்க்கத்தை நிலைபெறச் செய்வதற்கு முன்பு மூன்று வகையான ஆண்டுகளை அரபிகள் கடைப்பிடித்து வந்தனர் என்பதை முன்பே பார்த்தோம். அவை 'அனுமதி ஆண்டு'. 'நில அசைவு ஆண்டு ', 'யானை ஆண்டு' என வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தன. இவை ஒவ்வொன்றும் அரபி களின் சமுதாய வாழ்வில்-வரலாற்றில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி ஒன்றை அடிப்படையாகக் கொண்டே அழைக்கப் பட்டு வந்தன. சான்றாக, அப்ரஹா, என்பவன் மக்காவி லுள்ள புனிதத் தலமான கஃபா வை இடித்துத் தள்ள பெரும் யானைப் படையுடன் வந்தான். படை கஃபாவை நோக்கி விரைந்து வரும்போது இறையருளால் அபாபீல் எனும் பறவைகள் பெரும் எண்ணிக்கையில் சிறு சிறு கற்களைப் பொழிந்து அவனையும் அவன் படைகளையும் தாக்க அனைவரும் மடிந்தனர். கஃபா காப்பாற்றப்பட்டது. இச்சம்பவத்தைக் குறிக்கும் வகையிலேயே 'யானை ஆண்டு' அமைந்தது. இம் மூன்று வகை ஆண்டுகள் புழக்கத்தில் நிலவி வந்த போதிலும் எதுவும் அரபிகளின் வாழ்வில் நிலைபெறாமலே இருந்து வந்தன. இதனால் ஆண்டுக் குழப்பமும் இருந்தே வந்தது.

இஸ்லாம் நிலை பெற்ற .பிறகு தங்களுக்கென புத்தாண்டு ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசர, அவசியத் தேவை ஏற்பட்டது.

எனவே, ஒரு ஆண்டு முறையை உருவாக்கி உறுதிப் படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து தன் சகாக் களுடன் ஆலோசனை செய்தார் இரண்டாவது கலீஃபா உமர் (ரலி) அவர்கள். சிலர் பாரசீக ஆண்டு முறையைப் பின்பற்றலாம் என்றனர். இன்னும் சிலர் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு முறை வகுக்கலாம் என்றனர். அண்ணல் நபியின் மருகர் அலீ (ரலி)

அவர்கள் பெருமானார் மக்காவிலிருந்து மதீனா புறப்பட்டுச் சென்ற நாளை அடித்தளமாகக் கொண்டு ஆண்டு முறை உருவாக்கலாம் என்றார். இந்தக் கருத்து எல்லோருக்கும் ஏற்புடையதாக இருந்தது. அண்ணலார் மக்காவிலிருந்து மதீனா நோக்கி ஹிஜ்ரத் செய்த நாளை அடிப்படையாகக் கொண்டு ஹிஜ்ரி ஆண்டு உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.

முஹர்ரம் முதன்மை பெற்றது

அக்காலத்தில் வழக்கிலிருந்த மாதங்களில் முஹர்ரம் ஒன்று.

ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவதான ஹஜ் கடமையை துல்ஹஜ் மாதத்தில் இனிது நிறைவேற்றிய அரபிகள், அடுத்துவரும் முஹர்ரம் மாதத்தில் வணிகத் தொழிலில் முழு மூச்சுடன் ஈடுபடுவர். புதுக்கணக்கும் தொடங்கும். எனவே, ரபியுல் அவ்வல் மாதத்திற்குப் பதிலாக துல்ஹஜ் மாதத்தை அடுத்துவரும் முஹர்ரம் மாதத்தை ஹிஜ்ரி ஆண்டின் முதல் மாதமாக, முதல் நாளாக அமைத்து உறுதிப்படுத்தப்பட்டது. இதன் மூலம் உழைப்பின் உன்னதமும் உணர்த்தப்பட்டது.

சிறப்புமிகு முஹர்ரம்
பத்தாம் நாள்

அமைதி வாழ்வுக்கு வழிகாட்டும் முஹர்ரம் இறைவன் விதித்துள்ள இறுதித் தீர்ப்பு நாளை நினைவுறுத்தி அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் இறையச்ச மாதமாகவும் அமைந்துள்ளது. மனுக்குலத்தின் இறுதித் தீர்ப்பு நாள் முஹர்ரம் பத்தாம் நாளிலேயே நிகழ்வுறும் என்பது மறைதரும் இறைவாக்காகும். இவ்வகையில் மறுமை வாழ்வை நினைவூட்டி நேர் வழிப்படுத்தும் வழிகாட்டி நாளாகவும் முஹர்ரம் அமைந்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு
மிகு மாதம்

முஹர்ரம் பத்தாம் நாள் இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் மட்டுமல்லாது வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும் சிறப்புமிகு நாளாகக் கருதப்படுகிறது.

முன்பொரு சமயம் எகிப்து நாட்டை ஆண்டுவந்த ஃபிர்அவ்ன் எனும் கொடுங்கோல் மன்னன் தன்னை கடவுள் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டான். எல்லோரும் தன்னையே வணங்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினான். மறுத்தவர்களை கொடுமைப்படுத்தினான். ஈவு இரக்கமின்றி கொன்று குவித்தான்.

'இறைவனால் படைக்கப்பட்ட எதுவுமே வணங்குவதற்குரியதல்ல; மூலப் படைப்பாளனாகிய இறைவன் மட்டுமே வணங்குதற்குரியவன்' என மக்களிடையே போதனை செய்து வந்த 'மோசஸ்' எனும் மூசா நபி கொடுங்கோலனின் கொடுமைகளிலிருந்து விடுபட எகிப்தைவிட்டு வெளியேறியபோது செங்கடல் பிளந்து வழிவிட்டது. அப்பிளவினூடே ஃபிர்அவ்ன் விரட்டிச் சென்றான். மூசா நபியும் அவரைப் பின்பற்றியோரும் கரை சேரவே பிளந்து நின்ற செங்கடல் இணைந்தது. கடலிடையே அகப்பட்ட ஃபிர் அவ்னும் அவன் படையினரும் கடலுள் மூழ்கி அழிந்தனர். இந்நிகழ்ச்சி நடைபெற்றது முஹர்ரம் பத்தாம் நாளாகும்.

இந்நாளை மூசா நபி வழிவந்த யூதர்களும் முஸ்லிம்களும் 'ஆஷுரா' தினமாகக் கடைப்பிடித்து நோன்பு நோற்று வருகிறார்கள். ரமளான் நோன்புக்கு அடுத்தபடியாகச் சிறப்புமிகு நோன்பாக 'ஆஷுரா' நோன்பு கருதப்படுகிறது. பத்தாம் நாள் எனப் பொருள்படும் வகையில் 'யவ்முல் ஆஷுரா' என அழைக்கப்படினும் பத்தாம் நாளன்றே இறைவனின் திருவுளப்படி பத்து நிகழ்வுகள்

நடைபெற்றதால் 'ஆஷுரா' நாள் என்றே அழைக்கப் படலாயிற்று என்பர்.

'நோவா' என அழைக்கப்படும் நூஹ் நபி அவர்கள் ஊழிக்கால மழையிலிருந்து உயிரினங்களைக் காக்க அவற்றைக் கப்பலில் ஏற்றி, பன்னெடுங்காலம் கடலில் சுற்றிச் சுழன்று இறுதியில் கரையிறங்கிய நாள் முஹர்ரம் பத்தாம் நாளாகும்.

டேவிட் எனப்படும் தாவூது நபிக்கு இறை மன்னிப்புக் கிடைத்ததும், 'ஒரே இறைவன்' என்ற ஒப்பற்ற இறைத் தத்துவத்தை உலகுக்குப் போதித்த 'ஏப்ரஹாம்' எனும் இபுராஹீம் நபிக்கு 'கலீல்' (இறைத்தோழர்) எனும் உன்னதப் பட்டத்தை இறைவன் வழங்கியதும் 'ஜீசஸ்' எனும் ஈசா நபி அவர்களை இறைவன் விண்ணகத்திற்கு அழைத்துக் கொண்டதும் இதே முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான்.

இவையனைத்தும் நபிகள் நாயகத்திற்கு முன்னதாக நடைபெற்ற இறையருள் நிகழ்வுகளாகும்.

பெருமானாரின் பெருவாழ்வுக்குப் பின்னர், அவர்தம் பேரர் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் தோழர்களும் கர்பலா எனுமிடத்தில் எதிரிகளால் இதே முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான் கொல்லப்பட்டார்கள். இஸ்லாமிய சமுதாய நலனைக் காக்கவும் இஸ்லாமிய மார்க்கத்தை நிலைநிறுத்தவும் இத் தியாகத்தை இமாம் ஹுஸைன் (ரலி) செய்தார்கள். ஆனால், இத் தியாக நிகழ்ச்சியின் காரணமாக முஹர்ரம் பத்தாம் நாளின் சிறப்பு கூடவோ குறையவோ இல்லை. காரணம், இறுதி இறைத்தூதர் அண்ணல் நபிகள் நாயகத் திற்குப் பின்னர் நிகழ்ந்த எந்த நிகழ்ச்சியும் புனிதமானவை எனப் போற்றப்படவோ முக்கியத்துவமுடையவையாகக்

கருதப்படவோ இஸ்லாத்தில் இடமில்லை. ஆயினும் உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட இறைவழியில் ஒழுகும்போது எத்தகைய போரிடர் வரினும் உயிரையே இழக்க நேரினும் சிறிதும் பின் வாங்காது தியாகம் புரிய வேண்டும் என்பதை நினைவூட்டும் நிகழ்வாக கர்பலா பெருவெளி நிகழ்ச்சி அமைந்து ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உத்வேகமூட்டி வருகிறது.

முஹர்ரம் நாளன்று நோன்பு நோற்று இரவு முழுவதும் கண்விழித்து இறை வணக்கம் புரிவோரின் பாவம் அனைத்தும் இறைவனால் மன்னிக்கப்படுகிறது என அண்ணலார் கூறியுள்ளார்கள்.

'ஆஷூரா அன்று நோன்பு நோற்பதோடு அதற்கு முன்பும் பின்பும் உள்ள இரு நாட்களையும் சேர்த்து நோன் பிருப்பது ஓராண்டு நோன்புக்கு இணையாகும்' எனவும் நபிகள் நாயகம் கூறியுள்ளார்கள்.

முஹர்ரம் மாத முதல் நாள் நோன்பு பத்தாம் நாளின் போது கடைப்பிடிக்கப்படும் ஆஷூரா நோன்புகளை நோற்பதோடு ஏழை எளியவர்க்கு இயன்ற உதவிகள் அனைத்தும் செய்ய வேண்டும். தரும சிந்தனையாளர்களாக மாற வேண்டும். அநாதைகளை அரவணைத்து வாழ்வு தர வழி செய்ய வேண்டும். அவர்களின் துன்பம் நீக்கி இன்புறு வாழ்வுக்குத் துணைபோதல் வேண்டும். அமைதி மாதமாக அமைந்திருப்பதால் வேற்றுமை உணர்வுகளை முற்றாகக் களைந்திடல் வேண்டும். ஒருங்கிணைவான உணர்வுகளை ஊட்டும் செயல்களை மேற்கொள்ள வேண்டும். மார்க்க ஞானம் மிக்க பெரியார்களைத் தேடிச் சென்று காண வேண்டும். தன் குடும்பத்துக்காகவும் தன்னைச் சார்ந்தவர் களின் குடும்பத்துக்காகவும் தாராளமாகச் செலவு செய்து அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். இந்நாட்

களில் 'நஃபில்' எனும் அதிகப்படியான தொழுகைகளை பெருமளவில் மேற்கொள்வது இறையருளை மழையெனப் பொழியச் செய்ய வழி வகுப்பதாயமையும் என்பது ஆன்றோர் வாக்கு.

இவ்வாறு அக வாழ்விலும் புற வாழ்விலும் இறை யுணர்வும் சமுதாய நுண்ணோக்கும் பொங்கிப் பொழிய வழிகாட்டும் மாதமாக முஹர்ரம் அமைந்துள்ளது.

நன்றி : தினமணி

# மனித நேயத்திற்கோர் மாநபி

அவனிக்கோர் அருட்கொடையாக வந்துதித்த அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பிறந்த நாளை உலகெங்குமுள்ள இஸ்லாமியப் பெருங்குடி மக்கள் பேரார்வப் பெருக்கோடு கொண்டாடி மகிழ்கின்றனர்.

நபிகள் நாதரின் வாழ்வும் வாக்கும் மனித குலத்துக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக, அனைவரும் பின்பற்றத்தக்க அழகிய முன் மாதிரியாக விளங்கி வருகிறது.

அவர்தம் சொல்லும் செயலும் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அவர் தம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் அரிய குணப் பண்புகளின் ஒட்டு மொத்த உருவகமாகவே வாழ்ந்தார். அவரது வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் ஒவ்வொரு மனிதரும் நற்குணக்குன்றாக வாழ முனைய வழிகாட்டுவதாகும்.

இறைவன் தன்னிலிருந்து முதல் மனிதர் ஆதாமையும் அவரினின்றும் முதல் பெண்மணியாகிய ஹவ்வா (ஏவாள்)வையும் உருவாக்கினார் என்பது இறைமறை தரும் செய்தியாகும். எனவே, ஆதாமின் சந்ததியினரான ஒவ்வொரு மனிதனும் இறையம்சமுடையவனாகவே கருதப்படுகிறான். எனவே, அவர்களை உயர்வாக எண்ணு

வதும் மதிப்போடும் மரியாதையோடும் நடத்துவதும் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமையாகும் என்பதை பெருமானார் வலியுறுத்தியுள்ளார். இதற்கு ஏற்ற இலக்கணமாக வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

உதவுவதில் பேரின்பம்

மனித நேயம் போற்றும் இனிய பண்பு இளமை தொட்டே பெருமானாரிடம் குடி கொண்டிருந்ததை பல நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டி விளக்குகின்றன.

நற்குணங்களின் பிறப்பிடமாகத் திகழ்ந்த நாயகத் திருமேனி அவர்கள் பிறருக்கு உதவுவதில் பேரின்பம் கொண்டார். சின்னஞ்சிறு வயது முதஅலே இந்நற்பழக்கம் இவரிடம் குடிகொண்டிருந்தது. தான் சிறுவராக இருந்தபோது கடை வீதிக்கு ஏதேனும் பொருள் வாங்கச் செல்லவேண்டியிருந்தால் வழியில் இருக்கும் வீட்டுக் கதவுகளையெல்லாம் தட்டி, 'நான் கடைவீதிக்குப் பொருள் வாங்கச் செல்கிறேன்' என்று கூறிச் செல்வது அவர் பழக்கம். பிறருக்கு உதவியாக இருப்பதில் பேரின்பம் காணும் பேருள்ளமுடையவர் பெருமானார். எனவே, யார் என்ன பொருள் வாங்கி வரப் பணித்தாலும் அப் பொருளை நம்பிக்கையோடு வாங்கி வந்து தருவது வழக்கம். இவ்வினிய பண்பால் இவரைப் பலரும் 'அல்-அமீன்' என்றே அழைத்தார்கள். இதற்கு 'நம்பிக்கையாளர்' என்பது பொருளாகும்.

இளமைதொட்டே ஆடம்பர உணர்வற்றவராக திகழ்ந்தார் பெருமானார். சகிப்புணர்ச்சியையும் எளிமையையும் இரு கண்களாகக் கொண்டொழுகியவர். மனித நேயத்தை வளர்க்கும் ஊற்றுக்கண்ணாக எளிமையை எண்ணி வாழ்ந்தவர். எந்தச் சூழ்நிலையிலும் ஆடம்பர உணர்வு அவரை அணுகியதே இல்லை.

அண்ணல் நபிகள் நாயகம் (சல்) இறை தூதராக மட்டுமல்லாது நாட்டுத் தலைமையேற்று அரசோச்சிய காலத்தும்

கூட மிக எளிமையாகவே வாழ்ந்து வந்தார். ஒரு சமயம் பெருமானார் இல்லம் வந்த உமர் (ரலி) அண்ணலாரைக் கண்டு மனத்துயர் கொண்டார். காரணம், பெருமானார் வாழ்ந்து வந்த வீட்டின் நிலை.

பச்சை மண் செங்கல் கொண்டு கட்டப்பட்ட சாதாரண சிறிய அறை. பேரீச்ச இலைகளால் வேயப்பட்ட மேற் கூறை; வீட்டினுள் ஒரு கயிற்றுக் கட்டில்; பேரீச்ச இலைச் சருகுகள் திணிக்கப்பட்ட தோலுறையாலான தலையணை; விரிப்பாகப் பயன்படக்கூடிய ஒரு தோல் பாய்; தண்ணீர் வைப்பதற்கான தோலாலான நீர் பாத்திரம்; இவையே அந்த அறையில் இருந்த பொருட்கள். கட்டிலில் பெரு மானார் படுத்திருந்தற்கு அடையாளமான கயிற்றுத் தழும்பு கள் முதுகெங்கும் பதிந்திருந்தன. இதைக்கண்டு மனம் வருந் திய உமர் (ரலி) மற்ற நாட்டுத் தலைவர்களெல்லாம் ஆடம் பர உச்சாணியில் உல்லாசமாக வாழும்போது மாபெரும் அரபு நாட்டின் தலைவரான தாங்கள் ஓரளவாவது ஆடம் பரத்துடன் வசதியாக வாழக்கூடாதா? என வினா எழுப் பினார். இதைக் கேட்ட பெருமானார் 'இறைவன் எளிமை யையே விரும்புகிறான். எளிமை வாழ்வு வாழும் எளியவர் களையே அல்லாஹ் மிகவும் நேசிக்கிறான். அவர்களே மறுமைப் பேரின்பம் பெற தகுதி பெறுகிறார்கள். எனவே, நான் மறுமைப் பேரின்பமும் பெரு வாழ்வும் பெறுவதைத் தாங்கள் விரும்பவில்லையா?' என எதிர்க்கேள்வி கேட்டு எளிமை வாழ்வின் சிறப்பை உணர்த்தினார்.

அண்ணலார் எப்போதும் சாதாரண முரட்டு நூலா டையையே உடுத்துவது வழக்கம். மிக மிக எளிய உணவு வகைகளையே உண்பார். பேரீச்சம் பழமும் தண்ணீருமே அவரது அன்றாட ஆகாரப் பொருட்களாக இருந்தன. குளிர்ந்த நீரை விரும்பிக் குடிப்பார். சில சமயம் சுத்தமான பாலை விரும்பி அருந்துவார். வயிறு முட்ட உண்பதை விட அரை வயிறு உண்பதையே அதிகம் விரும்புவார்.

பெரும்பாலும் பட்டினி இருப்பதே அவர்கட்கு மிகவும் பிடிக்கும். பசி தெரியாமலிருக்க வேட்டியை வயிற்றில் இறுகக் கட்டிக் கொள்வது அவர் வழக்கம்.

பெரும் மரியாதை

எளிமையின் உருவாய் வாழ்ந்த பெருமானார் இளையோர் முதல் முதியோர் வரை அனைவரிடத்தும் பெரும் மரியாதை காட்டுவதில் தன்னிகரற்று விளங்கினார். இளையவர்களோ பெரியவர்களோ யாரைச் சந்திக்க நேர்ந்தாலும் அவர்கட்கு சலாம் (முகமன்) கூறுவதில் எப்போதுமே முந்திக் கொள்வார். 'சலாம் சொல்லுவதில் யார் முந்திக் கொள்கிறாரோ அவருக்கு அதிக நன்மையும் இறையருளும் கிட்டுகிறது' என்பது நாயக வாக்காகும்.

முதியவர்கட்குத் துணையாயிருப்பதிலும் ஆறுதலாக நடந்து கொள்வதிலும் பெரு விருப்பமுடையவராகத் திகழ்ந்தார். ஒரு சமயம் நாயகத்திருமேனி தொழுகையை முடித்துக் கொண்டு பள்ளியிலிருந்து வெளிவந்தார்கள். வரும் வழியில் மூதாட்டியொருவர் பெருமானாரை அழைத்துத் தன் குறைகளையெல்லாம் கொட்டினாள். அம் மூதாட்டியின் சொற்களைப் பொறுமையாக செவிமடுத்த நபிகள் திலகமும் அம் மூதாட்டி மனங்கொள்ளுமாறு தீர்வுகளும் சமாதான கூறித் தேற்றினார். அப்போது பெருமானாரைக் காண அங்கு வந்த ஏமன் நாட்டு மன்னர் இதைக் கண்டு பெருமானாரின் அடக்கத்தையும் எளிமையையும் மனித நேயத்தை வியந்ததாக வரலாறு கூறுகிறது.

தான் ஆடம்பரமற்ற எளிய வாழ்வு வாழும் அதே சமயத்தில் மற்றவர்களையும் உரிமையோடும் சிக்கனத்தோடும் வாழத் தூண்டியவர் பெருமானார்.

**சிக்கனம்**

ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் மக்காவை வெற்றி

கொண்ட பின்னர் அந் நகரின் ஆட்சியைக் கவனிக்க ஒரு ஆளுநரை நியமிக்க வேண்டிய அவசிய, அவசரத்தேவை ஏற்பட்டது. அப்போது அந்நகரைச் சேர்ந்த அத்தா இப்னு ஆசீத் என்பவரை அழைத்து, 'உங்களுக்கு' ஒரு நாள் தேவைக்குக் குறைந்தபட்சம் எவ்வளவு தேவைப்படும்' என வினவினார். எதற்காகக் கேட்கிறார் என்பதை அறிந்து கொள்ள வியலாத ஆசீத் 'ஒரு நாள் செலவுக்கு-தேவைக்கு ஒரு திர் ஹம் இருந்தால் போதும்' என்று கூறினார். உடனே பெருமானார் 'உங்களை மக்காவின் ஆளுநராக நியமித்துள்ளேன். உங்கள் ஒரு நாளின் குறைந்தபட்சத் தேவையான ஒரு திர்ஹமே உங்கள் சம்பளம்' எனக் கூறி நியமித்தார். அரசுப் பணத்தை எந்த அளவுக்குச் சிக்கனமாக எடுத்துச் செலவழிக்க வேண்டும் என்பதற்கு வழியமைத்துச் சென்றவர் பெருமானார்.

தன்னிடம் உதவி என்று யார் எந்தச் சூழ்நிலையில் கேட்டாலும் அவ்வுதவியை மறுக்காமல் வழங்குவது அவரது மனிதநேயக் குணச்சிறப்பாகும்.

ஒரு சமயம் கப்பார் இப்னு அரத் எனும் நபித் தோழர், மார்க்க (தீன்) விஷயமாக மதினாவிலிருந்து வேற்று நாடு செல்ல நேர்ந்தது. மிக ஏழ்மை நிலையிலிருந்த அவரது மனைவிக்கும் இளம் மகனுக்கும் உணவாக அவர்களிடமிருந்த ஒரு ஆடு பால் தந்து வந்தது. கப்பார் வேற்று நாடு சென்று விட்டதால் ஆட்டுப் பாலைக் கறந்து தர ஆளில்லை. அந்த அம்மையார் அண்ணலாரை அணுகி தாங்கள் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் ஆட்டுப் பால் கறந்து தர வேண்டும் என வேண்ட, பெருமானாரும் உரிமையாளரான கப்பார் திரும்பி வரும்வரை நாள்தோறும் இரு வேளையும் ஆட்டுப்பால் கறந்து தந்து வந்தார்.

### துஷ்ட விருந்தாளி

ஒரு சமயம் மதினா நகருக்கு வெளியிலிருந்து,

மாற்றுச் சமயத்தைச் சேர்ந்த ஒரு சிறு குழுவினர் பெருமானாரைச் சந்தித்து இஸ்லாம் மார்க்கம் சம்பந்தமான பல ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ள அண்ணலாரை அணுகினர். விவாதம் நீண்ட நேரம் நீடித்தது. இரவு வெகு நேரமாகி விட்ட நிலையில், வந்துள்ளவர்கட்கு ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு விருந்தினரைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்தளிக்குமாறு பெருமானார் ஏற்பாடு செய்தார்.

அக் குழுவில் வந்தவர்களில் கெடுமதி படைத்த துஷ்டன் ஒருவனும் இருந்தான். அவனது தோற்றத்தையும் அவன் செயற்பாடுகளையும் கண்டவர்கள் அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்தளிக்க விரும்பவில்லை. இறுதியாக எஞ்சியிருந்த அத்துஷ்ட விருந்தாளியை பெருமானார் தன் வீட்டிற்கு விருந்தளிப்பதற்காக அழைத்துச் சென்றார். தங்கள் குடும்பத்தவர்களுக்கென்று தயாரிக்கப் பட்டிருந்த உணவு வகைகளை யெல்லாம் அன்போடு உண்ணத் தந்தார். பெருமானாரின் வீட்டாரும் உண்ண வேண்டுமே என்பதை எண்ணிப் பார்க்காத அத் துஷ்ட விருந்தாளி அனைத்தையும் உண்டு முடித்தான். அவ்வாறு உண்பதன் மூலம் விருந்தளிக்க அவ்வீட்டாரை அன்றிரவு பட்டினி போட வேண்டும் என்பது அவனது எண்ணமாக இருந்தது. விருந்துண்ட களைப்புத் தீர, உயர் தர விரிப்புகளை விரித்து உறங்கிக் காலையில் செல்லுமாறு பெருமானார் வேண்டினார். அவனும் அவ்வாறே தங்கினான். ஆனால், அளவுக்கதிகமாக உண்டதனால் செரிமானக் கோளாறு ஏற்பட, வாந்தியும் பேதியுமாக அவ்வறையை அசுத்தப்படுத்திவிட்டான். இதனால் விடியும் முன்னே எழுந்து யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டான்.

காலையில் எழுந்த பெருமானார் அறையின் நிலையை அறிந்து, அசுத்தமாக்கப்பட்ட விரிப்புகளைத் தங்கள் கைப்படவே துவைத்துச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது அவ்வறையில் மறந்து வைத்துவிட்டுப்போன தன் வாளை எடுத்துச் செல்வதற்காக மீண்டும் அத்துஷ்ட

விருந்தாளி அங்கு வந்து சேர்ந்தான். தான் அசுத்தப் படுத்திய விரிப்புகளை நபிகள் நாயகம் துவைத்துக் கொண் டிருப்பதைக் கண்டு நெக்குருகினான். திரும்பி வந்த விருந் தாளியைக் கண்ட அண்ணலார் ஆவலோடு ஓடிச் சென்று, வரவேற்று, அன்பு மொழி கூறி, மறந்து வைத்துவிட்டுச் சென்ற வாளை எடுத்து வந்து கொடுத்தார். அவன் உடல் நலனைப் பரிவோடு கேட்டார். துஷ்டனிடமும் அன்பும் பரிவும் காட்டும் நாயகத் திருமேனியின் மனித நேய நற் செயல் அவனை கண்ணீர்விடச் செய்தது.

குலங்களும்
கோத்திரங்களும்

மனிதனுக்கு மனிதன் வேற்றுமை உணர்வு காட்டுவது அறவே கூடாது. உலகத்து மக்கள் அனைவரும் ஆதாமின் வழிவந்த சகோதரர்களேயாவர். ஒருவரை யொருவர் இனம் காணவே குலங்களும் கோத்திரங்களும் உருவாயின. இதையே திருமறை, 'மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்துதான் படைத் தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாக வும் ஆக்கினோம். ஆதலால், உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலானவர் என்று பாராட்டிக் கொள்வதற்கில்லை' (திருக்குர்ஆன் 49:13) எனக் கூறுகிறது. இறைவாக்குக் கேற்ப வாழ்ந்து வழிகாட்டிய மனிதப் புனிதரான பெரு மானார் நாடு, இன, மொழி, நிறவேற்றுமைகளைக் கடந்து நிலையில் மனித நேயத்தோடும் சமத்துவ உணர்வோடும் செயல்பட்டவராவார். இதை முழுமையாக மெய்ப்பிக்கும் நிகழ்ச்சியொன்று பெருமானார் வாழ்வில் நிகழ்ந்ததைக் காண முடிகிறது.

பிலால்

மதினாவில் முதன் முதலாக இறைவணக்கமாகிய தொழுகைக்கென பள்ளிவாசல் ஒன்று உருவாக்கப்பட்டது.

அப்போது, முதன்முதலாக தொழுகைக்கு அழைக்கும் 'பாங்கு' எனும் தொழுகை அழைப்புமுறை உருவாக்கப் பட்டது. இதை இனிய குரலால் கூவியழைக்க யாரை நிய மிப்பது என்ற நிலை ஏற்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இப் பணியை மேற்கொள்ள நபித் தோழர்களில் பலரும் அவாவிய போதிலும் இனிய குரல் வளம் படைத்த பிலால் (ரலி) அவர்களையே பெருமானார் தேர்ந் தெடுத்தார். அபிசீனிய நாட்டைச் சேர்ந்த இக் கறுப்பர் அடிமையாக இருந்து, இஸ்லாத்தில் இணைந்து விடுதலை பெற்றவர். அனைத்து வேற்றுமைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் இவரைத் தேர்வு செய்ததின் மூலம் மனித நேய உணர்வை வலுப்படுத்தினார்.

மக்கா வெற்றி பெற்றபோது பல ஆண்டுகளாகப் பெரு மானாருக்கு எல்லாவகையிலும் பெருந் துன்பம் நல்கி வந்த மக்கா குறைஷிகள் பலரும் பெருந்தண்டனைகளை எதிர்நோக்கி நிலைகுலைந்து நின்றனர். ஆனால், அண்ண லாரோ அவர்களில் யாரையுமே தண்டிக்க விரும்பாமல் பொது மன்னிப்பளித்து தம் மனித நேயத்தை வெளிப் படுத்தி மகிழ்வு கொண்டார்.

இவ்வாறு, நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனித நேயம் உள்பட உன்னத மனிதக் குணங்கள் அனைத்தும் ஒருருக்கொண்ட மனிதப் புனிதராக, மாநபியாக நம் மிடையே வாழ்ந்து வழிகாட்டிச் சென்றுள்ளார். பெரு மானாரின் குணநலன்கள் ஒவ்வொன்றும் குணவொழுக்க முடையவர்களாக நம்மை உருமாற்றும் உந்து சக்திகளாக அமைந்துள்ளன.

இன்றைய தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்வி லும் காணக்கிடக்கும் குணவொழுக்கக் கேடுகள் மறைய, நற்குணங்கள் அனைத்தும் அரசோச்சும் நிறைவாழ்வு நிலை பெற பெருமானாரின் பெருவாழ்வு ஓர் அழகிய முன் மாதிரியாகும்.

நன்றி : தினமணி

# மறைபிறந்த
# இறை மாதம்

**'ஈதுல் ஃபித்ர்' எனும்**
**ஈகைத் திருநாள்!**

*உலகமக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினரான முஸ்லிம் பெருமக்கள் 'ஈதுல் ஃபித்ர்' பெருநாளை ஈகைத் திருநாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.*

*ஒவ்வொரு முஸ்லிமும் ரமளான் மாதம் முழுமையும் நோன்பிருந்தும் அதிகமான தொழுகைகளை நிறைவேற்றியும் தாங்கள் உழைத்துத் தேடிய பொருளை இரண்டரை சதவிகிதம் பங்கிட்டுப் பிறருக்குத் தான தருமமாக ஜகாத் வழங்கியும் ஃபித்ரா எனும் தானத்தைத் தந்தும் ஒரு மாத காலம் ஒருவித தவ வாழ்வை நடத்திய பின்னர் வெற்றிக் களிப்புடன் இந்நன்னாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.*

*இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் 'ரமளலான்' மாதம் மட்டுமே திருமறையாகிய திருக்குர்ஆனில் அல்லாஹ்வால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இம்மாதம் இறை மாதமாகக் கருதிப் போற்றப்படுகிறது.*

*இம்மாதத்தில் தான் இறை வேதம் முதன் முதலாக வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) மூலம் இறுதி இறை*

தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு அருளப்பட்டது. பெருமானாருக்கு முந்திய இறை தூதர் பலருக்கும் கூட இதே ரமளான் மாதத்தில் தான் இறை வேதங்கள் இறக்கி யருளப்பட்டன என்பது இறைமறை தரும் வரலாற்றுச் செய்தியாகும்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஹஜ் தவிர்த் துள்ள ஈமான், தொழுகை நோன்பு, ஜகாத் ஆகிய நான்கு கடமைகளும் இப்புனித ரமளான் மாதத்தில்தான் ஒருசேர நிறைவேற்றப்படுகின்றன.

ரமளான் மாதம் முழுமையும் நோன்பு (விரதம்) நோற் கப்படுகின்றது. நோன்பாகிய விரதம் இந்து சமயம் உட் பட உலகத்துப் பெரும் சமயங்கள் அனைத்தும் வற்புறுத் தும் வாழ்வியல் அறநெறிக் கடமையாகும். இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் மூன்றாவதான நோன்புக் கடமை பற்றி திருமறை.

"நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முந்தியவர்மீது கடமையாக்கப் பட்டதுபோல் உங்கள் மீதும் நோன்பு கட மையாக்கப்பட்டிருக்கிறது" (2.183) எனக் கூறுகிறது.

ஆனால், இஸ்லாமிய நோன்புக்கும் பிற சமய விரதங் களுக்கும் அதைக் கடைபிடிக்கும் வழிமுறைகளில் பெரும் வேறுவாடு உண்டு. சில மதங்கள் ஒரு சில நாட்கள் தொடர்ந்து விரதமிருக்கப் பணிக்கின்றன. இன்னும் சில ஒரு நாளில் குறிப்பிட்ட நேரம்வரை விரதம் இருக்கக் கூறு கின்றன. வேறு சில சமயங்கள் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட உணவு வகைகளை விலக்கி உண்ணும்படி கட்டளையிடுகின்றன. விரும்பும்போது விரதம் இருக்கப் பணிக்கும் சமயங்களும் உள்ளன.

ஆனால், இஸ்லாமிய மார்க்கம் வகுத்தளித்துள்ள ரமளான் மாத நோன்பில் மாற்ற திருத்தங்களுக்கும் நெளிவு சுளிவுகளுக்கும் அறவே இடமில்லை. ரமளான் மாத பிறை

கண்ட முதல் நாள் தொடங்கி அடுத்த ஷவ்வால் மாத முதல் பிறை காணும்வரை அம்மாதம் முழுமையும் பகலில் உண்ணாலும் ஒரு சொட்டு நீரும் பருகாமலும் இஸ்லாம் விதித்துள்ள விதிமுறைகளில் இம்மியும் பிசகாது நோன்பு நோற்க வேண்டியது ஒரு முஸ்லிமுக்குரிய கட்டாயக் கடமை (ஃபர்ள்) ஆகும்.

நோன்பின் நோக்கம்

அதிகாலை நான்குமணிக்கு முன்னதாகவே உண்பதும் பருகுவதும் நிறுத்தப்படுகிறது. மீண்டும் முன்னிரவு ஆறரை மணிவாக்கில் நோன்பு முடிக்கப்படுகிறது. அதற்குப் பிறகே எதையும் உண்ணவோ பருகவோ முடியும்.

இறைவன் தன் திருமறையில் "ல அல்லகும் தத்தகன்" (இதனால் நீங்கள் இறையச்சமுடையோர் ஆகலாம்) எனக் கூறியுள்ளான். இதிலிருந்து இறையச்ச உணர்வைப் பூரணமாக உள்ளத்தில் உருவாக்கி நிலைபெறச் செய்வதே நோன்பின் முழுமுதல் நோக்கமாகும்.

ரமளான் நோன்பின்போது இறைவன் மனிதனுக்கு விலக்கி வைத்தவைகளின்றும் அறவே விலகியிருக்கிறான். அல்லாஹ் இட்ட கட்டளையை இம்மியும் பிசகாது முழுமையாக மனக்கட்டுப்பாட்டோடு நிறைவேற்றுகிறான். அல்லாஹ்வின் அன்பையும் அவன் அளிக்கும் வெகுமதியையும் பெறுகிறான். அதற்கான பயிற்சிக் களமாக அமைந்திருப்பபே ரமளான் நோன்பு.

மனக்கட்டுப்பாடும் மனஉறுதியும் மிக்கவராக வாழ நோன்பு பெருந்துணை புரிகிறது. "எல்லா வகையிலும் மனத்தைக் கட்டுப்படுத்துவதுதான் தூய்மையான போராட்டம்" (ஜிஹாதுல் அக்பர்) என்றார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள்.

நோன்புக் காலத்தில் தீய செயல்கள் எதையும் செய்

யாததோடு தீய உணர்வே நெஞ்சத்தில் எழ இடமில்லா மலும் போகிறது.

நோன்பில் மற்றொரு சிறப்புத் தன்மையும் உள்ளது. தொழுகை, ஜகாத், ஹஜ் போன்றவை வெளிப்படையாக நிகழ்த்தப்பெறும் கடமைகளாகும். இவற்றைப் பலரும் அறியவும் காணவும் இயலும். ஆனால், நோன்புக் கடமை யானது நோன்பாளிக்கும் இறைவனுக்கும் மட்டுமே தெரிந்த கடமையாக அமைந்துள்ளது. ஸஹர் (வை கறை)யில் உண்பதும் அந்தியில் நோன்பை முடிப்பதும் வேண்டுமானாலும் மற்றவர்கள் அறிய நிகழும் நிகழ்வாக இருக்கலாம். ஆனால், பகல் முழுமையும் தொடர்ந்து நோன்பு நோற்பது இறைவனுக்கும் நோன்பாளிக்கும் மட்டுமே தெரிந்த செயலாக உள்ளது. இறைவனின் பார் வையினின்றும் தான் கடுகளவும் தப்ப இயலாது என்ற உணர் வுடன் நோன்பை முறிக்கும் எச்செயலையும் எக்காரணம் கொண்டும் செய்யாமல் தனக்குத்தானே கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு நோன்பை முழு மையாக நிறைவேற்றுகிறான். இதனால், இடையறா இறைச் சிந்தனையும் இறையச்ச உணர்வும் அவன் உள்ளத்தை முழுமையாக ஆட்கொண்டு விடுகிறது. இதன் மூலம் இறைச் சட்டத்தை இம்மியும் பிசகாமல் பின்பற்றும். பேராளனாக ஆகிறான். இதையே திருமறை: "நம்பிக்கை யாளர்களே நீங்கள் "முத்தகீ" (இறைவனுக்குப் பயந்து அவன் கட்டளையைப் பின்பற்றுவோராகவும்) ஆக வேண் டும் என்பதற்காக உங்களுக்கு முந்தியவர்கள் மீது கடமையாக்கப்பட்டதுபோல் உங்கள் மீதும் நோன்பு கட மையாக்கப்பட்டிருக்கிறது" *(2:183)* எனக் கூறுகிறது.

### மனிதரைப் புனிதராக்கும் நோன்பு

நோன்பு மனிதனைப் புனிதனாக உருமாற்றும் ஒப் பற்ற பணியையும் செய்கிறது. நோன்பு தவிர்த்து மற்றைய

இஸ்லாமியக் கடமைகள் குறிப்பிட்ட குறுகிய கால எல்லைக்குள் முடிந்து விடுகின்றன. சான்றாக, தொழுகை குறிப்பிட்ட நேரங்களில் ஒரு சில நிமிடங்களுக்குள் முடிந்து விடுகின்றது. ஜகாத்தும் ஒரு சில நாட்களுள் முடிந்து விடுகின்றது. ஹஜ் கடமை பெரும்பாலோர்க்கு வாழ்வில் ஒரு முறையோடு முற்றுப் பெற்று விடுகிறது. ஆனால், நோன்போ ரமளான் மாதம் முழுமையும் தொடர்ச் சியாக நோற்கப்படுகிறது. ரமளான் மாதம் முழுமையும் தராவீஹ் எனும் சிறப்பு இரவுத் தொழுகை தொடர்ந்து தொழப்படுகிறது. எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது என இஸ்லாம் விதித்துள்ளதோ அவ்விதி முறைகள் கண்டிப்புடன் முற்றாக நிறைவேற்றப்படு கின்றது. இக்கடுமையான ஒரு மாதப் பயிற்சி அடுத் துள்ள பதினொரு மாதங்களும் தவறாது கடைப்பபிடிக்கும் பழக்கமாக அவனிடம் அழுத்தமாகப் பதிந்து விடுகிறது. பன்னிரண்டாவது மாதத்தில் மீண்டும் அதனைப் புதுப்பிக் கும் வகையில் அதே ரமளான் மாத நோன்பை நோற்கும் பயிற்சியை மேற்கொள்கிறான்.

இவ்வாறு ஒரு முஸ்லிம் வாழ்நாள் முழுமையும் இறை நெறிகளைக் கட்டுப்பாட்டுடனும் கண்டிப்புடனும் கடைப் பிடிக்கும் இறையாண்மையாளனாகச் செயல்பட உறுதுணை புரிகிறது ரமளான் நோன்பு. அத்துடன் பொறுமையைப் பேணி நடக்கவும் பசித்துன்பத்தை எதிர்த்துப் போராடும் மனத்துணிவைப் பெறவும் மன இச்சைகளை அடக்கும் மாமருந்தாகவும் ரமளான் நோன்பு அமைகிறது.

### பிறர் துன்பம்<br>போக்கும் பேராண்மை

பசியின் கொடுமையையும் தாகத்தின் தகிப்பையும் நாள் முழுவதும் உணரும் நோன்பாளி பிறர் பசி போக்கு வதில் நாட்டமுடையவராகிறார். மற்றவரின் வறுமைத்

துன்பத்தைப் போக்குவதில், - தன்னைச் சுற்றியுள்ளவர் களிடையே ஆதிக்கம் செலுத்தும் இல்லாமையை விரட்டு வதில்-விருப்போடு பங்கேற்கிறார். உணவும் உடையும் பணமும் தருவதில் மகிழ்ச்சி கொள்கிறார். இதற்கான கடமையாக அமைந்துள்ள 'ஜகாத்' கடமையை நிறை வேற்றுவதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்.

இஸ்லாத்தின் நான்காவது கடமையான 'ஜகாத்' ரமளான் மாதத்தில்தான் முழுமையாக நிறைவேற்றப்படு கிறது. அதனால் ரமளான் ஈத்துவக்கும் மாதமாகவும் அமைந்துள்ளது.

சமுதாய வாழ்வில் தான் முயன்று பாடுபட்டு உழைத்துத் தேடிய பொருள் முழுமையும் தனக்கு மட்டுமே சொந்தம் என்ற தன்னல உணர்வைப் போக்குவதே ரமளான் மாதத்தில் அதிகமாகச் செயல்படுத்தும் 'ஜகாத்' கடமையின் நோக்கம். தான் தேடிய வருமானத்தில், அவ்வருவாய்க்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத, வறுமைவாய்ப்பட்ட ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் உழைத்து வாழ இயலா ஊனமுற்றோர்க்கும், முதியவர்கட்கும் பயணத்தில் இருக்கும் வறியவர்கட்கும், கடன் துன்பத்தில் மூழ்கிக் கொண்டிருப்பவர்கட்கும் நாற்பதில் ஒரு பங்கு அதாவது இரண்டரை சதவிகிதம் உரிமை உண்டு என்பதை எண்பிப்பது ரமளான் மாதம். அவர்கட்கு வழங்கும் ஜகாத் உதவியும் இடது கை செய்வது வலது கைக்குத் தெரியா வண்ணம் தரப்படவேண்டும் என்பது 'ஜகாத்' விதியாகும். ஜகாத்தை வெளிப்படையாக, பலரறிய, விளம்பரமாக வழங்கினால் உரிய பலன் கிட்டாது என்பது இறையாணை.

தான் உழைத்துத் தேடிய செல்வத்தை இறையாணைப் படி ஜகாத் தருவதன் மூலம் ஒரு முஸ்லிம் எத்தகைய தியாகத்திற்கும் தன்னைப் பொருத்தமுடையவராக ஆக்கிக் கொள்கிறார்.

### வரவும் செலவும் நேரிய வழியில்

ஜகாத் கடமையை செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் தனிப்பட்டவர்களிடம் தேங்கும் பொருட் குவிப்பு ஓரளவு தடுக்கப்படுகிறது. இதன் மூலம் பொருளாதார மேடு பள்ளங்கள் ஓரளவு நிறைவு செய்யப்பட்டு சமனப் படுத்தப்படுகிறது. 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கையும் 'எல்லாவற்றிலும் எல்லோர்க்கும் உரிமை' என்ற நியதியும் நிலை நிறுத்தப்படுகிறது. இதன் மூலம் சமுதாய நலன் முழுமையாகப் பாதுகாக்க வழி கோலப் படுகிறது. மேலும், சம்பாதிக்கத் தெரிந்த முஸ்லிம் அதைப் பயனுள்ள வழியில் எவ்வாறு செலவழிப்பது என்பதற்கான பயிற்சி தரும் வழிமுறையாகவும் ஜகாத் கடமை அமைந் துள்ளது.

மற்ற மாதங்களைவிட ரமளான் மாதத்தில் மிக அதிக மான வணக்க முறைகளில் முஸ்லிம்கள் முழுமையாக ஈடுபடுகின்றனர். தொழும்போது நெற்றி நிலத்தில் பதிய அடிபணிந்து இறைவனை வணங்கம் முஸ்லிம் எண்ணத் திலும் செயலிலும் இறையுணர்வே இழையோடிக் கொண் டிருக்கும் வகையில் இஸ்லாத்தின் வணக்க முறைகள் அமைந்துள்ளன.

### ஐம்பெரும் கடமைகளும் இறைவணக்க முறைகளே

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளும் இறைவணக்க முறைகளாகவே அமைந்துள்ளன. கலிமா எனும் இறை நம்பிக்கை உள்ளத்தால் இறைவனை வணங்குவதாகும். தொழுகை உடலால் வணங்கும் வணக்க முறையாகும். நோன்பு அல்லாஹ்வை உடலாலும் உள்ளத்தாலும் வணங்கு வதாகும். ஜகாத் எனும் தான தருமம் பொருளால்

இறைவனை வணங்குவதாகும். ஹஜ் எனும் புனிதப் பயணம் உள்ளத்தாலும் உடலாலும் பொருளாலும் இறைவனை வணங்கிப் போற்றும் வணக்க முறையாகும்.

ரமளான் மாதம் இறைவனின் திருமறை மனிதகுலத்துக் கிடைத்த புனித மாதமுமாகும். ரமளான் 27 ஆம் நாளன்று 'லைலத்துல் கத்ர்' இரவன்று ஹிரா மலைக்குகையில் இறை தியானத்தில் இருந்த பெருமானாருக்கு வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) மூலம் திருமறையின் முதன் நான்கு இறை வசனங்கள் முதன் முதலாக வழங்கப்பட்டது. எனவே, மறை பிறந்த இறைமாதமாக ரமளான் திங்கள் போற்றப் படுகிறது. அன்று தொடங்கி பெருமானார் மறைவுவரை 23 ஆண்டுகள் திருமறை சிறிது சிறிதாக வழங்கப்பட முழுமையடைந்தது.

### தராவீஹ் எனும் சிறப்புத் தொழுகை

ரமளான் மாதம் முழுமையும் இரவு தோறும் 'தராவீஹ்' எனும் சிறப்புத் தொழுகை சுமார் ஒரு மணிநேரம் கூட்டுத் தொகையாக நிறைவேற்றப்படுகிறது. இத் தொழுகைகளின் போது திருமறை வசனங்கள் முழுமையாக ஓதி முடிக்கப் படுகின்றன. தனித் தொழுகையிலும் கூட்டுத் தொழுகை களே அதிகமாக நடைபெறுகின்றன. ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை நினைந்து, ஒரே மறை யாகிய திருக்குர்ஆன் வழி ஒழுகி, ஒரேவித வணக்க முறையை உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் பின்பற்றி இறையருள் வேண்டி இப்புனித ரமளான் ஈதுல் ஃபித்ர் பெருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

# ஓர் இறைத் தத்துவ 'ஹஜ்' பெருநாள்

'ஒரே இறைவன்'

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஈராக் நாட்டில் தோன்றியவர் 'ஏப்ரஹாம்' என்றழைக்கப்படும் நபி இபுறாஹீம் அவர்கள். இவரை உலக மக்களில் மூன்றில் இரு பங்கினரான யூத, கிருத்துவ, இஸ்லாமிய சமயப் பெருமக்கள் ஓர் இறை தத்துவத்தை உலகுக்குப் போதித்த மாபெரும் தீர்க்க தரிசியாகக் கருதிப் போற்றுகின்றனர்.

இவர் தோன்றிய காலம் அறியாமையிருள் மண்டிக் கிடந்த காலம். இவர் அந் நாட்டின் புகழ்பெற்ற குருமார் குடும்பத்தில் பிறந்தவராயினும் இறைவனின் பெயரால் குருமார்கள் செய்துவந்த கொடுஞ் செயல்களும், தங்களையே கடவுளாக மக்கள் வணங்க வேண்டுமெனக் கட்டளையிட்ட மன்னர்களின் அதிகாரத்துவமும் இப்ராஹீம் நபி அவர்களின் உள்ளத்தை வேதனைப் படுத்தின. இறைவன் பெயரால் நடைபெற்றுவந்த கொடுஞ் செயல்களை வன்மையாகக் கண்டித்ததால் ஆட்சியாளர், குருமார்களின் வெறுப்புக்கும் பகைக்கும் ஆளானார். எதற்கும் அஞ்சாமல் 'என்னுடைய வாழ்வும் மரணமும் யாருடைய கையில் உள்ளனவோ அவனே எனது இறைவன்' எனப் போதித்தார். இதன் விளைவாகத்

தந்தையால் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டார். மன்னனால் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். ஆயினும், ஓரிறைத் தத்துவத்தை அசைக்க முடியாத நம்பிக்கை யாளராக விளங்கிய இபுறாஹீம் (அலை) இறைவனால் படைக்கப்பட்டவைகளும் மனிதனால் உருவாக்கப் பட்டவைகளும் வணங்குதற்குரியவை அல்ல. அனைத்தை யும் படைத்த இறைவன் மட்டுமே வணங்குதற்குரியவன் என்ற கருத்தைத் துணிவாக மக்களிடையே பரப்பி வந்தார். இதற்காக அடுக்கடுக்கான துன்பங்களை அடைந்தார். இறுதியில் நாட்டைவிட்டு வெளியேறித் தன் மனைவி யோடு ஊர் ஊராக அலைந்து திரிந்து ஒரே இறைவன் என்ற தத்துவத்தைத் தொடர்ந்து போதித்தார்.

தியாகச் சிகரம்

இத் தூய இறை பணியில் தம் இளமைக்காலம் முழு வதையும் செலவிட்டு முதுமையின் எல்லைக்கோட்டை அடைந்தார். தனக்குப்பின் உண்மை இறையுணர்வை உலக மக்களுக்கு உணர்த்தும் தன் ஓரிறைத் தத்துவ இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வாரிசு ஏதும் இல்லையே எனக் கவலைமிகக் கொண்டார். இறைவனிடம் முறையிட்டுக் கண்ணீர் வடித்தார்.

இறைவனின் கருணையினால் எண்பது வயதைக் கடந்த முதுமையில் பிள்ளைப் பேறு கிடைத்தது. தன் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தி, வழி தவறிய மக்களை நேர்வழிப்படுத்த பிள்ளைப் பேறு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார். மகனும் தந்தைக்கு உற்ற பிள்ளையாக இஸ்மாயீல் எனும் பெயரோடு வளர்ந்து பிள்ளைப் பிராயத்தை அடைந்தார். அம் மகிழ்ச்சிக்கு ஒரு நாள் பெரும் சோதனை ஏற்பட்டது. தன் மகனைத் தானே இறைவனுக்கு பலியிடுவதுபோல் இபுறாஹீம் நபி கனவு கண்டார். அக்

கனவை இறைவனின் கட்டளையாகவே கருதி மனைவி யிடமும் மகனிடமும் கூறினார். தாயும் பிள்ளையும் இறை கட்டளையாகவே இதனை ஏற்றனர். கனவைக் கேட்ட சிறுவர் இஸ்மாயீல் தந்தையை நோக்கி "இறைவனின் நாட்டப்படியே, என்னை உங்கள் கையால் அறுத்துப் பலியிடுங்கள்; நான் பொறுமையாக இருப்பேன்" எனத் தன் தந்தைக்கு தைரியம் கூறித் தன் பூரண சம்மதத்தைத் தெரிவித்தார்.

## தியாகத் திருநாள்
## 'ஈதுல் அள்ஹா' பெருநாள்

இபுறாஹீம் (அலை) தன் குமாரர் இஸ்மாயீலை பலி யிடப் போகும்போது இறைவனே அப் பலியைத் தடுத்து நிறுத்தி, அதற்குப் பகரமாக ஒரு ஆட்டைப் பலியிடுமாறு பணித்தான். இறைவனுக்காகத் தன் உயிரையே உவப் போடு தரத் துணிந்த இத் தியாகச் சம்பவத்தை நினைவு கூரும் நாளாகத்தான் 'ஈதுல் அள்ஹா' எனும் தியாகத் திருநாள் உலக முஸ்லிம்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

## 'ஹஜ்'

இந் நாள் ஹஜ் பெருநாளாகவும் அமைந்துள்ளது. இபுறாஹீம் நபி அவர்களும் அவர் தம் குமாரர் இஸ்மாயீல் (அலை) அவர்களும், உலக மக்கள் அனைவரும் உருவமற்ற ஒரே இறைவனை வணங்குவதற்கென உலகில் முதன் முதலாகக் கட்டப்பட்ட இறையில்லமாகிய மக்காவிலுள்ள கஃபா எனும் இறையில்லத்தைப் புதுப்பித்துக் கட்டி, உலகெங்கும் வாழும் இறையடியார்கள் இறைவன் பெயரால் கஃபா இறையில்லத்தில்கூடி 'ஒரே இறைவன்' என்ற உன்னதக் கொள்கையை செயல் வடிவில் நிறைவேற்ற ஹஜ் செய்ய வருமாறு அழைப்பு விடுத்தனர்.

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு இபுறாஹீம் (அலை) அவர்களால் விடுக்கப்பட்ட அழைப்பை இறையடியார்கள் ஏற்று இன்றும் அதை நிறைவேற்றி வருகிறார்கள்.

ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகளில் இறுதிக் கடமையாக இஃது அமையலாயிற்று. 'ஹஜ்' என்ற அரபுச் சொல்லுக்கு 'சந்திக்க நாடுவது' என்பது பொருளாகும்.

**உலக முதல் இறையில்லம்**

கஃபா மக்கா நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இறையில்லமாகும். முதல் மனிதரான ஆதாம் இறை வணக்கம் புரிவதற்கென உருவான இவ்விறையில்லம் தியாக சீலர் இப்ராஹீம் (அலை) நபிகள் நாயகம் போன்ற வர்களால் புதுப்பித்துக் கட்டப்பட்டதாகும்.

கஃபா என்ற அரபுச் சொல்லுக்கு வட்ட வடிவானது என்பது பொருளாகும். சதுரமானது என்ற பொருளும் உண்டு. வட்ட வடிவிலான பரந்த வெளியில் சதுர வடிவில் அமைந்துள் கட்டடமே கஃபா இறையில்லமாகும்.

கருங்கற்களால் கட்டப்பட்ட இக் கட்டடம் 40 அடி நீளமும் 25 அடி அகலமும் 50 அடி உயரமும் கொண்டதா கும். 7 அடி உயரத்தில் நுழைவாயில் ஒன்றுள்ளது. அதனுள் எதுவுமே இல்லை. ஒரே வெற்றிடம். ஆண்டிற்கு இரண் டொரு முறையே இந்நுழைவாயில் திறக்கப்படுகிறது. இதனுள் இறைவணக்கம் புரியக்கூடாது என்பது விதி. இக் கட்டடத்தின்மீது வெள்ளி, தங்க ஜரிகைகளால் திருக்குர் ஆன் வாசகங்கள் பொறிக்கப்பட்ட கருப்பு நிறப் பட்டுத் திரை போர்த்தப்பட்டுள்ளது. உலகெங்கும் உள்ள 125 கோடி முஸ்லிம்கள் கஃபா இறையில்லம் இருக்கும் திசையை நோக்கியே ஐவேளை தொழுவர். ஆனால் கஃபா இறை யில்லத்தில் தொழுகை புரிவோருக்கு திசைக் கட்டுப்பாடு ஏதுமில்லை. கஃபாவைச் சுற்றி எல்லாத் திசைகளிலும் நின்று இறைவணக்கம் புரிவர்.

### யாருக்கு 'ஹஜ்' கடமை

இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளுள் ஐந்தாவது கடமையாக அமைந்துள்ள 'ஹஜ்' கடமை அனைத்து முஸ்லிம்களாலும் கடைபிடிக்கப்பட வேண்டிய கடமை யாயினும், வயது வந்த, சித்த சுவாதீனமும் சுய வருமான மும் நல்ல உடல் நலமும் உள்ள முஸ்லிம் ஆண்-பெண் இரு சாரார்களும் தம் வாழ்நாளில் ஒரு முறையேனும் ஹஜ் செய்வது கட்டாயக் கடமையாகும்.

ஹஜ் பயணம் மேற்கொள்பவர் தன் குடும்பம், உற்றார் உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவரையும் துறந்து வெளியேறுகிறார். வீடு வாசல், சொத்து சுகங்கள் அனைத் தையும் விட்டு நீங்குகிறார். தான் வழக்கமாக வாழ்ந்து வந்த வசதியான சுக வாழ்வைத் துறந்து மிக மிக எளிய வாழ்க்கைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்கிறார். பற்று பாசங்களை முற்றாக விட்டு ஒதுங்குகிறார். இறைச் சிந்தனையைத் தவிர்த்து மற்றவற்றையெல்லாம் தியாகம் செய்யும் உள்ளுணர்வை முழுமையாகப் பெறுகிறார். இறைவனை நோக்கிச் செல்லும் இறுதிப் பயணத்திற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வதையே இது சுட்டுவதாக உள்ளது.

ஹஜ்ஜின்போது உடல் தூய்மை உள்ளத் தூய்மையோடு உடலுறவு கொள்ளுதல், தீய சொற்களைப் பேசுதல், புறம் பேசுதல், பொறாமை, பகைமை, சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல் ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக விலகி விடு கின்றனர். நெஞ்சமெல்லாம் இறையுணர்வும் இறையச்ச மும் மிக்கவர்களாக இறைகட்டளைக்கு முழுமையாக அடி பணியும் அடியவர்களாக மாறி விடுகின்றனர்.

### 'எஹ்ராம்' உடை

ஹஜ் பயணம் செய்வோர் கஃபாவிலிருந்து ஒரு

குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் இருந்தே தம் ஆடம்பர ஆடைகளையும் அணிமணிகளையும் முழுமையாக களைந்து விட்டு வெற்றுடம்புமீது தைக்கப்படாத இரு துண்டு துணிகளைப் போர்த்திக் கொள்கிறார்கள். இதுவே 'எஹ்ராம்' உடை என அழைக்கப்படுகிறது. அரசராயினும் ஆண்டியாயினும் அனைவரும் ஒரே மாதிரியான எஹ்ராம் உடை உடுத்துவது கட்டாயமாகும். இதே உடை தான் இறந்த (மையத்) சடலத்தின் மீது போர்த்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமத்துவ உணர்வு

கஃபாவில் எஹ்ராம் உடையணிந்த முஸ்லிம்கள் அனைவரும் ஒரே மாதிரியாகக் காட்சியளிக்கின்றனர். அவர்கள் பல்வேறு நாடுகளை, மொழிகளை, பண்பாட்டை, கலாச்சாரப் போக்குகளை, வாழ்க்கை முறைகளை, நடையுடை பாவனைகளைப் பேணுபவர்கள், பல்வேறு நிறத்தினர். ஆனால் ஹஜ்ஜின்போது அனைவரையும் அன்புச் சகோதரர்களாகக் கருதுகின்றனர்.

ஒரே மொழியில் ஒருசேர "லப்பைக் அல்லாஹு ம்ம லப்பைக்" என முழங்குகிறார்கள் "இறைவா! இதோ உன் ஆணைக்கிணங்க வந்து விட்டேன்!" என்பது இதன் பொருளாகும். இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற நம்பிக்கையைப் பெறுகிறார்கள்.

ஹஜ்ஜின் உச்சகட்ட நிகழ்ச்சியாக ஹாஜிகள் அருகிலுள்ள அராஃபாத் மைதானத்தில் கூடாரமிட்டு ஒரு நாள் தங்குகிறார்கள். ஒரே மாதிரியான கூடாரங்களில் ஒரே மாதிரியான எஹ்ராம் உடையணிந்த ஹாஜிகள் அனைவரும் ஒரே மாதிரியான இறையுணர்வோடவே இறை வணக்கம் புரிகின்றார்கள். இங்கும் ஹாஜிகள் இறைவனை நோக்கி மேற்கண்டவாறு முழங்குகிறார்கள். துஆ செய்கின்றார்கள்.

மறுநாள் இறையுணர்வையும் இறையச்சத்தையும் தங்கள் உள்ளத்தில் தேக்கியவர்களாகத் திரும்புகின்றனர். துல்ஹஜ் மாதம் எட்டாம் நாள் முஸ்லிம்கள் கஃபா இறையில்லம் ஏகி மனித வாழ்வின் சூட்சம நோக்குகளைச் செயல் வடிவாக உணர்ந்து தெளிகின்றனர். தியாக வாழ்வு வாழ, இறைவனின் இன்னருளைப் பெற்று உய்ய வழிகாட்டியாய் அமைகிறது ஹஜ் பயணம்.

நன்றி : தினமணி

# இஸ்லாமியப் புத்தாண்டு 'முஹர்ரம்'

உலக முஸ்லிம்கள் முஹ்ர்ரத்தைப் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். இஸ்லாமிய ஆண்டு 'ஹிஜ்ரி' என அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு மாதங்களில் முதல் மாதம் முஹர்ரம். கடைசி மாதம் துல்ஹஜ்.

ரமலான், பக்ரீத் பெருநாள்களுக்கு அடுத்தபடியாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது முஹர்ரம் திருநாளாகும்.

'ஹிஜ்ரி' ஆண்டு நபிகள் நாயகம் (சல்) வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும்.

நபிகள் நாயகம் (சல்) மக்காவிலிருந்து மதீனா நோக்கி 'ஹிஜ்ரத்' செய்த நாளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. 'ஹிஜ்ரத்' என்ற சொல்லுக்கு இடம் மாறிச் செல்லுதல் என்பது பொருளாகும். மக்கா குறைஷிகளின் கொடுமைகளிலிருந்து தப்பி, இஸ்லாத்தைப் பரப்ப நபிகள் நாயகம் (சல்) மதீனா சென்ற நிகழ்ச்சியே 'ஹிஜ்ரத்' ஆகும்.

இஸ்லாமியப் புத்தாண்டு மாதமான முஹர்ரம் உழைப்பைப் போற்றும் மாதமுமாகும். உழைப்பை மிகவும்

உயர்த்திப் போற்றுவது இஸ்லாம். ஒவ்வொரு முஸ்லிமும் உழைத்தே சாப்பிட வேண்டும். கடுமையாக உழைத்தே ஊதியம் தேட வேண்டும். அந்த உழைப்பு உடல் உழைப் பாகவோ மன உழைப்பாகவோ இருக்கலாம்.

அக்கால அரபு மக்களின் உடல், மன உழைப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிலாக வியாபாரம் அமைந்திருந்தது.

இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான 'ஹஜ்' கடமையை இனிது முடித்த முஸ்லிம்கள் அடுத்து வரும் முஹர்ரம் மாதத்தில் வியாபாரக் கடமையை முனைப்பாக மேற்கொள்வார்கள்.

எனவே, ஆன்மீக உணர்வுக்கு அடுத்த நிலையில் உழைப்பைப் போற்றும் மாதமாக 'முஹர்ரம்' அமைந் துள்ளது.

புனிதமிகு முஹர்ரம் மாதத்தில் கோபம், குரோதம், வன்மம், பலாத்காரம், வன்முறை போன்ற தீய உணர்வுகளை நெஞ்சத்திலிருந்து அறவே அகற்றி அன்பு, அருள், அமைதி, சாந்தம், மகிழ்ச்சி போன்ற நல்ல உணர்வுகளை நெஞ்சத்தில் நிரப்பி வாழ வழிகாட்டுகிறது முஹர்ரம்.

இம்மாதத்தில் முஸ்லிம்கள் சண்டை சச்சரவுகளில் அறவே ஈடுபடக்கூடாது; போர் செய்வதை முழுக்க விலக்க வேண்டும். எனவே, வன்செயல் உணர்வற்ற, போர் விலக்கப்பட்ட அதாவது ஹராமாக்கப்பட்ட புனிதமாதம் எனும் பொருளிலேயே 'முஹர்ரம்' எனப் பெயர் அமைந் துள்ளது.

இஸ்லாமிய மார்க்க அடிப்டையில் முஹர்ரம் மாதம் புனித மாதமாகக் கருதப்படுகிறது. "முஹர்ரம் மாதத்தின் முதல் நாளில் நோன்பு நோற்பவர்கள் அடுத்த இரண்

டாண்டுப் பாவங்களிலிருந்து காக்கப்படுவர்" என்றார் நபிகள் நாயகம் (சல்) அவர்கள்.

"இம்மாதத்தின் முதல் நாள் இரவு முழுமையும் கண் விழித்து இறை வணக்கம் புரிவோரின் கடந்த ஆண்டுப் பாவங்கள் முழுமையாக மன்னிக்கப்படுகின்றன" என்பதும் நபிகள் நாயகம் (சல்) வாக்காகும்.

இவ்வாறு இறை வணக்கம் புரிவதற்கும் நோன்பு நோற்பதன் வாயிலாகப் பாவச் செயல்களிலிருந்து விடுபடு வதற்கும் ஏற்ற புனித மாதமாக முஹர்ரம் அமைந்துள்ளது.

இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் மட்டுமல்லாது வரலாற்று அடிப்படையிலும் சிறப்புமிக்க மாதமாக முஹர்ரம் அமைந்துள்ளது. அதிலும் முஹர்ரம் பத்தாம் நாள் மிக முக்கியத்துவமுடைய, போற்றத்தக்க நாளாக அமைந் துள்ளது.

எகிப்திய கொடுங்கோலன் பிர்அவ்ன் பிற தெய்வங் களை வணங்காது தன்னையே இறைவனாக வணங்குமாறு மக்களைக் கட்டாயப்படுத்தினான். மறுத்தவர்களைக் கொன்று குவித்தான். தன்னை கடவுளாக வணங்க மறுத்த தோடு 'அனைத்தையும் படைத்துக் காக்கும் இறைவனாகிய அல்லாஹ்வே வணங்கத்தகுந்த ஏக இறைவன்' எனக் கூறிய மோசஸ் எனும் மூஸா (அலை) அவர்களையும் அவரது கூட்டத்தாரையும் அழித்தொழிக்க பெரும் படையோடு விரட்டிச் சென்றான். மூஸாவுக்காக செங்கடல் பிளந்து நின்று வழி விட்டது. அவர்கள் கரையேறியதும் பிளந்து நின்ற செங்கடல் ஒன்றிணைந்தது. துரத்தி வந்த எதிரிகள் கடலில் மூழ்கி மாண்டனர். இந்நிகழ்ச்சி நடந்தது முஹர்ரம் பத்தாம் நாள். இதனையே இறைவனுக்கு நன்றி தெரிவிக் கும் வகையில் முஸ்லிம்கள் முஹர்ரம் மாத ஆஸுரா நோன் பாக நோற்கிறார்கள். ரமலானுக்கு அடுத்த முக்கியத்துவம் நிறைந்த புனித நோன்பு ஆஸுரா நோன்பாகும்.

இஸ்லாமியக் கோட்பாட்டின்படி வானம், பூமி, சந்திர சூரிய மற்றும் கோளங்கள் முஹர்ரம் பத்தாம் நாளன்று இறைவனால் படைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

உலகில் முதன்முதல் மழை பெய்ததும் முதல் மனிதராகிய ஆதாமும் ஹவ்வாவும் இறைவனால் படைக் கப்பட்டதும் முஹ்ரம் பத்தாம் நாளன்றுதான்.

'நோவா' என அழைக்கப்படும் நூஹ் (அலை) ஊழிப் பெரு மழையிலிருந்து பிற உயிரினங்களைக் காக்க பன்னெடுங்காலம் கடலில் மிதந்து திரிந்து இறுதியாகக் கரை இறங்கிய நாள் முஹர்ரம் பத்தாம் நாளாகும்.

'டேவிட்' எனும் தாவூது (அலை) அவர்களின் பாவ மன்னிப்பை இறைவன் ஏற்றுக் கொண்டதும், ஒரே இறைவன் எனும் உயரிய இறைத் தத்துவத்தைப் பரப்பி, தன் மகனையே இறைவனுக்காகப் பலியிடத் துணிந்த ஏப்ரஹாம் எனும் இபுறாஹீம் நபியின் அரிய இறை பணிக்காக 'கலீல்' எனும் பட்டத்தை இறைவனிடமிருந்து பெற்றதும் இதே முஹர்ரம் பத்தாம் நாள் அன்றுதான்.

'ஜீசஸ்' எனும் ஈசா (அலை) அவர்களை இறைவன் விண்ணகத்திற்கு உயர்த்திப் பெருமைப்படுத்தியதும் இதே முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான்.

நபிகள் நாயகத்தின் பேரர் ஹுசைன் (ரலி) இஸ்லாமிய சமுதாய நலனுக்காகவும் மார்க்கத்தை நிலை நிறுத்து வதற்காகவும் கர்பலா என்னுமிடத்தில் தன் குடும்பத் தோடும் மக்களோடும் எதிரிகளால் கொல்லப்பட்டதும் முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான். நீதியையும் நேர்மை யையும் காக்க இறைவழியின் எந்தத் தியாகத்தையும் செய்யப் பின்னடையக் கூடாது என்ற உண்மையை உணர்த்தும் நிகழ்ச்சியாக இத்துயரச் சம்பவம் அமைந்தது.

இந் நிகழ்வால் முஹர்ரம் மாதச் சிறப்புக் கூடவோ குறையவோ இல்லை. இறுதித் தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கும் இறுதி வேதம் திருக்குர்ஆனுக்கும் பின்னர் நிகழ்ந்த எந்தச் சம்பவமும் புனிதமானவையோ போற்றத் தக்க முக்கியத்துவமுடையதோ அல்ல.

இவ்வாறு முஹர்ரம் மாதம் இஸ்லாமிய மார்க்க அடிப்படையிலும் இறைநேசர்களின் வாழ்க்கை வரலாற்று அடிப்படையிலும் போற்றத்தக்கப் புனித மாதமாகவும் புத்தாண்டுப் பெருநாளாகவும் அமைந்து மகிழ்வூட்டுகிறது. இந்நாளில் இறையருள் பெற இரு கரமேந்தி துவா (இறை வேட்டல் செய்வோமாக.

நன்றி : தினமணி

# நபிகள் நாயகம் காட்டிய இஸ்லாம்

## உலகெங்கும் உதித்த நபிமார்கள்

*இஸ்லாமியக் கோட்பாட்டின்படி, இறை தந்த திரு மறையின்படி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தி, இறைநெறியில் இட்டுச் செல்ல ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களை - வழிகாட்டும் ஒளி விளக்கு களான தீர்க்கதரிசிகளை இவ்வுலகுக்கு இறைவன் அனுப்பி யுள்ளான். இவர்கள் பிறவாத நாடில்லை; இனமில்லை; மொழியில்லை. எல்லா மொழியிலும் நாட்டிலும் இனத் திலும் இவர்கள் தோன்றி மக்களை இறை நெறி வழி நடத்தி யிருக்கிறார்கள்.*

*ஒருவர் புத்தரை மட்டும் ஏற்றுக் கொண்டால் பௌத்தராகி விடலாம். ஈசா (அலை) அவர்களை மட்டும் ஏற்றுக் கொண்டால்போதும் கிருஸ்தவராகி விடமுடியும். ஆனால், அண்ணல் நபி (சல்) அவர்களை மட்டும் ஏற்றுக் கொண்டால் ஒருவர் முழுமையான முஸ்லிமாகி விட முடியாது. அவனியெங்கும் பல்வேறு கால கட்டங்களில் தோன்றி, மக்களுக்கு இறைவழியில் நேர்வழிகாட்டிச் சென்ற ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்*

களையும் ஏற்றுக் கொண்டால்தான் முழுமையான முஸ்லிமாக முடியும்.

## முந்தைய நபிமார்களுக்கும் பெருமானாருக்கும் உள்ள வேறுபாடு

பெருமானாருக்கும் அவருக்குமுன் தோன்றிய நபிமார்களுக்கும் ஒரு பெரும் வேறுபாடு உண்டு. முந்தைய நபிமார்களான தீர்க்கதரிசிகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த, இனத்தைச் சார்ந்த, மொழி பேசிய, நாட்டு எல்லைக்குட்பட்ட மக்களுக்கு வழிகாட்ட வந்தார்கள். ஆனால், அண்ணல் நபிகள் நாயகம் அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் வழி காட்ட இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். அவனிக்கோர் அருட்கொடையாக இறுதி இறைத் தூதராக வந்துதித்தார்கள்.

பெருமானாருக்கு முன் தோன்றிய நபிமார்கள் அனைவருமே ஓரிறைத் தத்துவத்தையே போதித்துச் சென்றார்கள். ஆனால், அவர்கள் மறைவுக்குப்பின், அவர்களைப் பின் பற்றியவர்களாகக் கூறிக்கொண்டவர்கள், அவர்தம் போதனைகளில் பலப்பல மாற்றங்களை, திருத்தங்களை காலவோட்டத்தில் செய்து, அவ்வக்கால உணர்களுக் கேற்ப, விரும்பிய வண்ணம் விளக்கங்களைத் தந்து, மூலத் தத்துவமாகிய ஓர் இறை தத்துவதத்துக்கு மூக்கு விழி யெல்லாம் வைத்து, மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தார் கள். இதன் விளைவு, எந்தத் தீர்க்கதரிசி ஓரிறைத் தத்து வத்தை முனைப்புடன் போதித்தாரோ, அவரையே, அந்தத் தீர்க்கதரிசியையே நாளடைவில் கடவுளாக ஆக்கி விடலானார்கள்.

எந்தத் தீர்க்கதரிசியும் தாங்கள் வாழ்ந்த காலத்தில், தங்களை இறைவனாக வணங்குமாறு பணித்ததே இல்லை. காலவோட்டத்தில் இந்நபிமார்களில் பலரும் கடவுளாக் கப்பட்டு விட்டார்கள். ஆனால், நபிகள் நாயகம் (சல்)

அவர்கள் தன்னை ஒரு மனிதனாக மட்டுமே உலகத்துக்குக் காட்டி, ஒரே இறைவனாகிய அல்லாஹ்வையே வணங்க வேண்டுமென உலக மக்களுக்கு அறிவுறுத்தி, அந்த உணர்வு உலகம் உள்ளளவுக்கும் மக்களிடையே அழுத்தமாக நிலைபெற வழி வகுத்துச்சென்றுள்ளார்கள். அதனால்தான் இஸ்லாம் அன்று முதல் இன்றுவரை எவ்வித மாற்றங்களுக்கும் இடம்தராமல் உலகெங்கும் அழுத்தமாகக் காலூன்றி வளர்ந்து வருகிறது.

## வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அழகிய முன்மாதிரி

மற்ற நபிமார்களுக்கும் பெருமானாருக்கும் மற்றொரு வேறுபாடு உண்டு. முந்தைய நபிமார்களில் யாருமே வாழ்க்கையின் எல்லாப் படித்தரங்களிலும் முன் மாதிரியாக வாழ்ந்து மக்களுக்கு வழிகாட்டிச் சென்றவர்கள் அல்லர். அவர்கள் மக்களுக்கு உபதேசம் மட்டுமே செய்து வாழ்ந்து மறைந்தவர்கள். நாயகத்துக்கு முன் வாழ்ந்து மறைந்த மூஸா (அலை), ஈஸா (அலை) போன்ற தீர்க்கதரிசிகள் ஒரு நல்ல குடும்பத் தலைவராக, நல்ல கணவராக, தந்தையாக, படை நடத்தும் தளபதியாக, சட்டமியற்றுவோராக, ஆட்சித் தலைவராக, வாழ்ந்து வழிகாட்டியவர்கள் அல்லர். ஆனால், அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனித வாழ்வில் எத்தனை வாழ்வியல் முறைகள், படித்தரங்கள், அம்சங்கள் உண்டோ அத்தனையிலும் வாழ்ந்த அனுபவ முத்திரை பதித்து வருங்காலத் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக அவற்றை ஆக்கித் தந்து மறைந்தவர்.

எனவே, வல்ல அல்லாஹ் தன் திருமறையில் “உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரில் அழகான முன்மாதிரி அமைந்திருக்கிறது” *(33:21)* என நாயகத் திருமேனியைப் பற்றிக் கூறியுள்ளார். இதற்கொப்ப அண்ணலார் இறைச்

செய்தியை உபதேசிப்பவராக மட்டுமல்லாது திருமறைக் கேற்ப வாழ்ந்தும் காட்டிய அழகிய முன் மாதிரியாகத் திகழ்ந்த மனிதப் புனிதரும் ஆவார்.

ஆகவேதான், நபிகள் நாயகம் (சல்) திருமறைக்கு விளக்கமாக எடுத்துக் கூறிய உபதேசங்கள், அவற்றை மெய்ப்பிக்கும் வகையில் பெருமானார் வாழ்ந்துகாட்டிய வாழ்க்கை நெறிமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பான 'ஹதீஸ்' திருமறைக்கு அடுத்த நிலையில் முஸ்லிம்களால் போற்றப்பட்டும் பின்பற்றப்பட்டும் வருகிறது.

## ஆதாம் (அலை) முதல் தொடங்கிய இஸ்லாம்

இஸ்லாமிய நெறி நபிகள் நாயகத்தால் உருவாக்கி வளர்க்கப்பட்டது அன்று. இறை நெறியாகிய இஸ்லாம் முதல் மனிதரும் முதல் நபியும் ஆகிய ஆதாம் (அலை) முதுல் இறுதி நபி பெருமானார் (சல்) வரை தோன்றிய ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களாலும் வளர்க் கப்பட்டு வந்த மார்க்கமாகும். இறுதி நபி பெருமானார் (சல்) இஸ்லாமிய மார்க்கத்தை நிறைவு செய்த பெருமைக்குரியவராவார்.

'இஸ்லாம்' என்ற அரபிச் சொல்லுக்கு 'இறைவனிடம் தன்னை ஒப்படைத்தல்' என்பது பொருளாகும். இறை வனின் கட்டளைகளையும் வழிகாட்டுதலையும் முழுமை யாக ஏற்றுச் செயல்படுவதே இஸ்லாமியக் கோட்பாடா கும். இறைவனின் பேராற்றலை அறிந்து அவன் காட்டிய நெறியில் தன் வாழ்வை அமைத்துக் கொள்பவனே முஸ்லிம் ஆவான்.

## இளமை வாழ்வு

அரேபியாவில் அக்காலத்தில் மிகப் பெரும் வணிக மையமாக விளங்கிய மக்கா நகரில் அப்துல்லா - ஆமினா

தம்பதியரின் புதல்வராகப் பிறந்தார் முஹம்மது. கருவி லிருக்கும்போதே தந்தையையும், பிறந்த ஆறாவது ஆண்டில் தாயையும் இழந்து அநாதையானார். இரண்டு ஆண்டுகள் பாட்டனாரின் அரவணைப்பில் வளர்ந்த முஹம்மத் பின்னர் பெரிய தந்தை அபுதாலிப்பால் வளர்க்கப்பட்டு வாலிப நிலையடைந்தார்.

ஆடு, ஒட்டகம், மேய்ப்பது முதல் வணிகம்வரை பல தரப்பட்ட பணிகளையும் செய்தார். இளமை முதலே இனிய பழக்க வழக்கங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தார். பெரியவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றார். எப்போதும் உண்மையே பேசினார். நேர்மையைப் பூரணமாய்க் கடைப்பிடித்தார். இதனால், மற்றவர்களின் நம்பிக்கைக்குரியவராக விளங்கினார். எல்லோரும் அவரை ‘அல் அமீன்’ என்றே அழைத்தார்கள். இதற்கு ‘நம்பிக்கைக் குரியவர்’ என்று பொருள். ஏட்டுப் படிப்பு அறவே பெறா விட்டாலும் அறிவுக் கூர்மை மிக்கவராக விளங்கினார்.

தன்னிடம் வணிகப் பிரதிநிதியாகப் பணியாற்றும் இளைஞர் முஹம்மதின் நேர்மையும் ஒழுக்கமும் அறிவாற்றலும் ‘கதீஜா’ எனும் செல்வ வளமிக்கப் பெண்மணியைப் பெரிதும் கவரவே, விரைவில் அவர் முஹம்மதுவை மணந்து கொண்டார்.

### இல்லற வாழ்வும் தனிமைத் தவமும்

இல்லற வாழ்வில் இனிதே ஈடுபட்டிருந்த முஹம்மது முப்பத்தெட்டு வயதை நெருங்கிக் கொண்டிருக்கும்போது, தன்னைச் சுற்றி நாள்தோறும் நடைபெற்று வரும், மது, சூது, விபச்சாரம் போன்ற சமூக ஒழுக்கக் கேடான செயல்கள் அவரை அதிகம் வருத்தின. அறியாமையினா லும் மூடநம்பிக்கையினாலும் இறைவன் பெயரால்

அவர்கள் இழைத்து வரும் அநீதியான, அனாச்சாரச் செயல்கள் அவரைப் பெரிதும் சிந்திக்கத் தூண்டின.

இத் தீய போக்கிலிருந்து மக்களை மீட்க வழி தேடினார். தியான முறைகள் மூலம் தன் உள்ளொளியைப் பெருக்க முனைந்தார். இதற்காக மக்கா நகருக்கருகில் உள்ள ஹிரா குகையில் நாட்கணக்கில் தனிமைத் தவமிருந் தார். அங்கு இறைவனைக் குறித்தும், படைப்பின் அற்புதங் களைக் குறித்தும் ஆழ்ந்த சிந்தனையிலும் தியானத்திலும் ஈடுபடலானார். இதற்காகப் பல நாட்கள் பசித்திருந்தார், தனித்திருந்தார், மனத்தை அடக்கி அறிவு வழி சிந்திக்க மோனத் தவமிருந்தார். இவ்வாறு நாட்கள் வாரங்களாகவும் மாதங்களாகவும் ஆண்டுகளாகவும் உருண்டோடின.

### இறைமறை பெற்ற இரவு

கி.பி. 609, ரமளான் மாதம் ஒரு நாள் இரவு. ஹிரா குகையில் தியானத்திலிருந்த அண்ணல் முஹம்மத் அவர்கள் 'ஓதுவீராக' எனும் குரல் கேட்டுத் திடுக்கிட்டார். அவர் முன் காட்சியளித்த ஓர் உருவம் 'நான்தான் ஜிப்ராயீல். இறை வனுடைய செய்திகளையும் அவனது வேத வெளிப்பாடு களையும் மனித இனத்திற்கு அறிவிப்பதற்காக, இறை வனால் நியமிக்கப்பட்டிருப்பதோடு, நீர் இறைவனால் இறைதூதராக நியமிக்கப்பட்டிருக்கிறீர் என்பதை உமக்குத் தெரிவிக்க இறைவனால் அனுப்பப்பட்ட வானவன் நான்' என்று அவ்வுருவம் தன்னை அடையாளம் காட்டியதோடு, முஹம்மது இறைவனின் நபியாக-தூதராக நியமிக்கப் பட்டுள்ளதையும் அறிவித்து, அவரை ஓதப் பணித்தது.

"உதிரக் கட்டியிலிருந்து மனிதனைப் படைத்த படைப்பாளரான உமது இறைவனின் திருநாமத்தால் ஓதுவீராக! எழுதுகோலினால் கற்பித்தவனான உமது இறைவன் ஈகை உள்ளவனாவான். மனிதன் அறியாத

வற்றை அவனுக்கு (இறைவன்) கற்பித்தான்". எனக் கூறி ஓதப் பணித்தார்.

இதுவே ஜிப்ராயீல் மூலம் அண்ணல் நபி அவர்கட்கு இறைவனால் அளிக்கப்பட்ட முதல் மறைச் செய்தி இதைப் பற்றி திருக்குர்ஆன்,

"நபியே (குர்ஆன் ஆகிய) இஃது இறைவனால்தான் அருளப்பட்டது. இறைவன் கட்டளைப்படி ஜிபுராயீல் இதனை உமது இருதயத்தில் இறக்கி வைத்தார்".

(திருக்குர்ஆன் 26: 192: 95)

"நிச்சயமாக அல்லாஹ்வின் கட்டளைப்படியே ஜிபுராயீல் இதனை உமது இருதயத்தில் இறக்கி வைத்தார்" (2.97)

வஹீ மூலம் இறைச் செய்தி

இவ்வாறு ரமளான் இரவு தொடங்கி பெருமனாரின் இறுதிநாள்வரை 23 ஆண்டுகள் சிறிது சிறிதாக குர்ஆன் திருமறை 'வஹீ'யாக அண்ணல் நபி (சல்) அவர்களுக்கு அருளப்பட்டது. இறைவன் மொழியை வானவர் உணர்த்துவது வஹீ எனப்படும். இதைப் பற்றி திருமறை குறிப்பிடும் போது "அல்லாஹ்வுடன் நேருக்கு நேர் பேசுவதற்குரிய தகுதி மானிடரில் ஒருவருக்கும் இல்லை. எனினும் வஹீயின் மூலமாகவோ அல்லது திரைக்கப்பால் இருந்தோ அல்லது ஒரு வானவரை அனுப்பி வைத்தோ மனிதரிடம் இறைவன் பேசுகிறான் (42-51). வஹீ மூலம் இறைச்செய்தி பெற்றது எவ்வாறு என்பதைப் பெருமானாரே கூறியுள்ளார்,

"சில சமயம் மணி ஒலிப்பதுபோல் என் காதில் சொற்கள் ஒலிக்கும். அவ்வொலி மூலம் சொல்லப்பட்ட சொற்களை நான் நினைவில் இருத்திக் கொள்வேன். சில

வேளைகளில் வானவர் தலைவர் ஜிப்ராயில் (அலை) மனித வடிவில் தோன்றி என்னுடன் பேசுவார். அப்போது அவர் கூறுவதை நான் மனத்தில் இருத்திக் கொள்வேன்". (புகாரீ 1-1) எனப் பெருமானார் கூறியுள்ளதிலிருந்து வானவர் வடிவிலும் ஒலி வடிவிலுமே பெருமானாருக்கு இறைச் செய்தி முழுமையும் அருளப்பட்டது என்பது தெளிவா கிறது.

ஹிரா குகையில் முதல் இறைச் செய்தியை வானவர் ஜீப்ராயீல் மூலம் பெற்ற அண்ணல் நபி (சல்) அவர்கள் உடல் நடுக்கமுற்றவராக விரைந்து இல்லம் சேர்ந்து தம் துணைவியார் கதீஜா பிராட்டியாரிடம் நடந்தவைகளைக் கூறினார். பெருமானார் கூறயதனைத்தையும் கேட்டறிந்த அம்மையார் முழுமையாக நம்பியதோடு அண்ணலாரை இறை தூதர் - நபியாகவும் முழு மனதோடு ஏற்று உறுதி கொண்டார். இவ்வாறு இறை மார்க்கமான இஸ்லாமிய நெறியில் அன்னை கதீஜா தன்னை முதன்மையாளராக இணைத்து முஸ்லிமானார். பின்னர், அபூபக்கர், சித்தீக், மாவீரர் அலி போன்றோர் இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்டு இணைந்தனர்.

இன்றைய உலக மக்களில் நான்கில் ஒருவர் வீதம் நம்பிக்கை வைத்துள்ள இஸ்லாம் மார்க்கம் இவ்வாறு தான் வளரலாயிற்று.

பல தெய்வ உருவ வழிபாட்டில் மூழ்கிக் கிடந்த மக்கா வாசிகளான குறைஷிகள் உருவமற்ற, இணை, துணை இல்லாத 'அல்லாஹ் ஒருவதே இறைவன்' என்று பெருமானார் கூறுவதை ஏற்க மறுத்தனர். தீயவழிகளில் ஒழுக்கக் கேடர்களாக வாழ்ந்த மக்கா வாசிகளில் சிலர் பெருமானார் கூறும் நன்னெறிகளைக் கேட்டு வெகுண்டனர்.

நல்லவர்கள் சிலர் நபிகள் நாயகம் போதித்த இஸ்லாமிய நெறியில் நம்பிக்கை கொண்டு நடந்தனர். இதைக் கண்டு, குறைஷிகள் கோபமும் கொதிப்பும் கொண்டனர். மிரட்டி அடக்கி ஒடுக்க முயன்றனர். பல வகையான தீங்குகளை இஸ்லாத்தில் இணைந்தவர்களுக்கு ஏற்படுத்தினர். எண்ணற்ற இடர்கள் ஏற்பட்ட போதிலும் நபி பெருமானார் உறுதி குறையாதவர்களாக இஸ்லாத்தை எடுத்து சொல்லி வந்தார். இதனால் கலக்கமடைந்த குறைஷிகள் நபிகள் நாயகத்தைப் பெருஞ் செல்வத்துக்கு அதிபதியாகவும் மன்னராகவும் ஆக்குவதாகவும் "ஒரே இறைவன்" என்ற கொள்கையை கைவிடும்படியும் வேண்டினர். இதற்குச் சற்றும் இணங்காமல் தொடர்ந்து இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து வந்த நபிகள் நாயகத்தை குறைஷிகள் இறுதியில் கொல்லவும் திட்டமிட்டனர்.

**சிலந்தி வளையும்**
**புறாக்கூடும்**

அப்போது இறை கட்டளைப்படி நபிகள் நாயகமும் அவரது தோழர் அபூபக்கரும் மக்காவைவிட்டு யாருமறியாமல் வெளியேறினர். மதீனா செல்லும் வழியில் இருந்த தௌர் எனும் குகையில் இளைப்பாறிக் கொண்டிருந்த போது எதிரிகள் அவர்களைத் தேடி அங்கே வந்தனர். குகை வாயிலை அடைந்தபோது, அங்கே சிலந்தி வலையும் புறாக்கூடும் இருப்பதைக் கண்டனர். குகையினுள் யாரும் இருக்க முடியாது என எண்ணித் திரும்பி விட்டனர். மீண்டும் நபிகள் நாயகமும் தோழர் அபூபக்கரும் மதீனா நோக்கித் தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இவ்வாறு பெருமானார் (சல்) மக்காவிலிருந்து மதீனா சென்ற நிகழ்ச்சியே 'ஹிஜ்ரத்' என்று அழைக்கப்படுகிறது. இதிலிருந்து தான் இஸ்லாமிய ஆண்டான 'ஹிஜ்ரி' தொடங்குகிறது.

முன்னரே இஸ்லாமிய நெறியில் தங்களை இணைத்துக் கொண்டிருந்த மதீனாவாசிகள் பெருமானாரை வரவேற்று தங்களோடு தங்கவைத்துக் கொண்டனர். நாளடைவில் இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்ட மக்கா வாசிகள் மதீனா வந்து சேர்ந்தனர். மதீனாவில் முதன் முதலாக தொழுகைக் கான 'பள்ளிவாசல்' ஒன்றை நபிகள் நாயகம் கட்டினார். அடிமையாக இருந்து இஸ்லாத்தை ஏற்று விடுதலை பெற்ற கறுப்பரான பிலால் அவர்கட்கு தொழுகைக்கு அழைக்கும் 'அதான்' எனும் பாங்கொலி எழுப்பும் மிக முக்கிய பணியைப் பெருமானார் அளித்தார்.

மதீனாவில் வேகமாக இஸ்லாம் பரவி வளர்வதைக் கண்டு வெகுண்ட மக்காவாசிகள் பெரும் படையுடன் மதீனா மீது படையெடுத்துச் சென்றனர். பத்ரு எனுமிடத் தில் நடந்த முதல் போரில் எதிரிகளுடன் பெருமானார் மிகச் சிறு படையுடன் சென்று போரிட்டார். அதில் பெரு மானாருக்கே வெற்றி கிடைத்தது.

தோல்வியடைந்த மக்காக் குறைஷியர் அடுத்த ஆண்டே மீண்டும் படையெடுத்துச் சென்று 'உஹத்' எனுமிடத்தில் போரிட்டனர். இதில் முஸ்லிம்களே வெற்றி பெற்றனர். இஸ்லாம் வேகமாக வளர்ந்து எங்கும் பரவியது.

### இரத்தம் சிந்தா வெற்றி

நபிகள் நாயகத்தை வெற்றி கொள்ள இயலாது என்பதை நாளடைவில் குறைஷியர் உணர்ந்தனர். பெருந் தொகையினராக ஹஜ் பயணம் மேற்கொண்ட மக்கா வந்த நபிகள் நாயகத்திடம் ஆயுதங்களை ஒப்படைத்துத் தங்கள் தோல்வியை ஒப்பு கொண்டனர். இவ்வாறு பெரும்போர் ஏதுமின்றி, சொட்டு இரத்தமும் சிந்தாதபடி மக்கா நகரை பெருமானாரும் முஸ்லிம்களும் வெற்றி கொண்டனர். எதிரிகளில் பலரும் இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்டு முஸ்லிம்களாயினர்.

இதனால், பெருமானாரின் பெருமையும் புகழும் திசை யெங்கும் பரவின. இஸ்லாமிய மார்க்கத்தின் நன்னெறி களை அறிந்துணர்ந்த மக்கள் முஸ்லிம்களாயினர். இதனால், அரேபியாவெங்கும், அடுத்துள்ள பல்வேறு நாடுகளிலும் இஸ்லாம் வலுவாக வளர்ந்து உலகப் பெரும் மார்க்கமாக நிலை பெற்றது.

தன் இறைத் தூதை முழுமைப்படுத்திய நபிகள் நாயகம், இறை வாக்குப்படி வாழ்ந்து காட்டிய மனிதப் புனிதராவார்.

உலகுக்கோர் அழகிய முன் மாதிரியாக வாழ்ந்து காட்டிய அண்ணலார் தம் அறுபத்து மூன்றாம் வயதில் மதீனாவில் மறைவெய்தினார்கள். பெருமானார் மதீனாப் பள்ளியிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

பெருமானர் போதித்து, அதன்படி வாழ்ந்து காட்டிய இஸ்லாமியக் கொள்கைகள் கோட்பாடுகளில் சிலவற்றைக் காண்போம்.

இஸ்லாத்தின் உயிர்மூச்சாக அமைந்திருப்பது ஐம் பெரும் கடமைகளாகும். அவை - கலிமா எனும் இறை நம்பிக்கை, (2) தொழுகை, (3) நோன்பு, (4) ஜகாத் எனும் ஏழை வரி, (5) ஹஜ் ஆகியவைகளாகும்.

கலிமா (இறை நம்பிக்கை)

இறைவன் ஒருவனே, அல்லாஹ்வைத் தவிர வணக்கத் திற்குரியவர் வேறு ஒருவருமில்லை; அல்லாஹ் இணை, துணை இல்லாதவன்; முஹம்மத் (சல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார். இது அரபி மொழியில் லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறப்படும்.

## தொழுகை

இறை நம்பிக்கையை செயல் வடிவில் வெளிக்காட்ட ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு நாளைக்கு ஐந்து வேளை கட்டாயம் தொழ வேண்டும். அவை: வைகறை, நண்பகல், மாலை, அந்தி, இரவு நேரங்களாகும். தஹஜ்ஜத் எனும் நள்ளிரவுத் தொழுகையும் தொழுவர்.

நமக்கு எல்லாவகை நலத்தையும் அளிக்கும் இறை வனுக்கு நன்றி தெரிவித்து, இறையருள் வேண்டுதல் தொழுகையாகும். ஐவேளைத் தொழுகையில் இறை நம்பிக்கை வலுப்படுகிறது. உயர்ந்த ஒழுக்கமுள்ள வர்களாய் மாற்றுகிறது. மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது. தீயசெயல் செய்ய விடாமல் தடுக்கிறது.

## நோன்பு

இஸ்லாமிய ஆண்டிலுள்ள பன்னிரண்டு மாதங்களில் ஒன்பதாவது மாதம் ரமளான் ஆகும். இம்மாதத்தில் வைகறை முதல் கதிரவன் மறையும் வரை எதையும் உண்ணாமலும் பருகாமலும் இருத்தல் வேண்டும். எல்லா விதத் தீய எண்ணங்களையும் ஆசைகளையும் அகற்றுதல் வேண்டும். அன்பையும் கட்டுப்பாட்டையும் கடமையுணர் வையும் இறை பக்தியையும் நோன்பு கற்பிக்கின்றது. நோன்பின் மூலம் பிறர் பசித்துயர் அறிய ஈகை உணர்வு பெருகுகிறது. நோன்பு நோற்பவர்களுக்கு பொறுமையும் தன்னலமின்மையும் மன வலிமையும் உண்டாகிறது.

## ஜகாத்

செல்வ வளம் உள்ளவர்கள் தமது சேமிப்பிலிருந்து இரண்டரை சதவீதத்தை ஆண்டுதோறும் கணக்கிட்டு ஏழை எளியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது 'ஜகாத்' எனப்படும். இக் கடமையைத் தவறாமல் செய்வதன் மூலம்

செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறார்கள்.

## ஹஜ்

பண வசதியும் பயணத்திற்கான உடல் வலிமையும் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தன் வாழ்நாளில் ஒரு முறை யேனும் மக்காவுக்குச் சென்று, 'ஹஜ்' கடமைகளை நிறை வேற்றுவது இஸ்லாம் விதித்துள்ள ஐந்தாவது கடமை யாகும்.

## இஸ்லாத்தில் இறைவழிபாடு

இஸ்லாம் தூய எண்ணங்களுக்கு நற்செயல்களுக்கு முதன்மை தருகிறது. இறைவனை அறிந்து அவனை நேசிக்க வேண்டும். இறைவனின் கட்டளைகளை வாழ் வில் எல்லாத் துறைகளிலும் செயல்படுத்த வேண்டும். நற் செயல்களைச் செய்யத் தூண்ட வேண்டும். தீய செயல் களையும் கொடுமைகளையும் அநீதியையும் தடுக்க வேண்டும். வேண்டிய அளவு தான தருமங்கள் செய்ய வேண்டும். நீதி செலுத்த வேண்டும். மனித குலத்திற்கு இயன்ற வரை சேவை செய்வதும் இறை வணக்கமே. இதையே திருக்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

> "உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல புண்ணியம்; ஆனால், அல்லாஹ்வின் மீதும் இறுதித் தீர்ப்பு நாளின் மீதும் வானவர்கள் மீதும் நம்பிக்கை கொண்டு) அல்லாஹ் வின் மீதுள்ள) நேசத்தின் காரணமாகத் தன் (நெஞ் சுவக்கும்) பொருள்களைச் சுற்றத்தாருக்கும் அநாதை களுக்கும், வறியவருக்கும், வழிப்போக்கருக்கும், யாசிப்போருக்கும் ஈதலும் தொழுகையை நிலை நாட்டுதலும், ஜகாத் கொடுத்து வருதலுமே புண்ணிய மாகும். இன்னும் வாக்குறுதி அளித்தால் அவ்வாக் குறுதியை நிறைவேற்றுகின்றவர்கள், துன்பமும்

இன்னலும் சூழ்ந்த நேரத்திலும் (மெய்மைக்கும் பொய்மைக்கும் இடையே ஏற்படும்) போரிலும் பொறுமையைக் கைக்கொள்கின்றவர்கள் ஆகிய இவர்களே சத்தியசீலர்கள்! இவர்களே முத்தகீன்கள் (பக்தியும் பரிசுத்தமும் உடையவர்கள்)" (2:177).

**உலகம் - ஒரு குடும்பம்**

உலகம் ஒரு குடும்பம் என்பது பெருமானாரின் போதனைகளின் திரட்சியாகும். மனித குலம் முழுவதும் இறைவனின் ஆட்சிக்குட்பட்ட ஒரே குடும்பம் ஆகும். இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் செய்த நன்மை தீமைகளுக்கு இறைவனிடம் மறுமையில் கணக்குக் காட்ட வேண்டும். உலக வாழ்வில் உண்மையையும் நீதியையும் பின்பற்றியவர்கள் மறுமையில் தக்க வெகுமதிகள் அளிக்கப் படுவார்கள். அதே நேரத்தில் அநியாயமும் அநீதியும் செய்தவர்கள் அதற்கேற்ற கடும் தண்டனையைப் பெறுவார்கள்.

**சகோதரத்துவம்**

பெருமானார் அன்பையும் சகோதரத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். உலக மக்கள் அனைவரும் இறைவனின் படைப்பாவார்கள். மனிதர்கள் அனைவரும் ஆதாமின் வழி வந்தவர்களேயாவர். ஒருவருக்கொருவர் அன்பு காட்டி உதவி செய்து சகோதரர்களாக வழி காட்டியவர் அண்ணல் நபி (சல்) அவர்கள்.

**சமத்துவம்**

இன, மொழி, நிற, இட வேறுபாடின்றி மனிதர்கள் அனைவரும் சமமாக வாழ வேண்டுமெனப் போதித்தவர் பெருமானார். வசதி படைத்தவராக இருந்தாலும் சரி; ஏழையாக இருந்தாலும் சரி, ஆளுவோராக இருந்தாலும் சரி; ஆளப்படுவோராக இருந்தாலும் சரி, அனைவருமே

இறைவனின் முன் சமம் என்பதே பெருமானாரின் சமத்துவக் கொள்கை.

வாழும் முறை

மனிதர்கள் சமூகம், பொருளாதாரம், அரசியல், ஒழுக்கம், ஆன்மீகம் என எல்லாத் துறைகளிலும் எவ்வாறு வாழ வேண்டும் என இஸ்லாம் வரையறை செய்துள்ளது. திருமறை வழியிலும் இறைதூதர் பெருமானாரின் வழிகாட்டுதல்படியும் வாழ்வோர் இறைவனின் அன்பிற் குரியராக ஏற்றம் பெறுவர்.

நன்றி : தினமணி

# தியாக உணர்வு தரும் ரமளான்

ஐந்தில் நான்கு

பிறை கண்டு மலரும் ரமளான் மாதம், இறைமறை மனித குலத்துக்குக் கிடைத்த மாண்புமிக்க மாதமுமாகும்.

இஸ்லாம் மனித குல சீர்மைக்கென வகுத்துத் தந்த ஐம்பெரும் கடமைகளுள் நான்கை முற்றாக நிறைவேற்ற வாய்ப்பளிக்கும் மாதம் ரமளான்.

இறை நம்பிக்கை எனும் கலிமா, தொழுகை, நோன்பு, ஏழை வரி எனும் ஜக்காத், ஹஜ் ஆகிய ஐம்பெரும் கடமைகளுள் ஹஜ் கடமை தவிர்த்துள்ள நான்கு கடமைகளும் இப்புனித மாதத்தில் ஒரு சேர முஸ்லிம்களால் நிறைவேற்றப்படுகிறது.

இஸ்லாமியக் கடமைகள் ஐந்துமே இறை வணக்க அடிப்படைகளைக் கொண்டுள்ளன. 'இறைவன் ஒருவனே, முஹம்மது இறை தூதர்' எனும் நம்பிக்கையை மனதுள் அழுந்தப் பதிக்கும் கலிமாவின் மூலம் மனத்தால் இறை வணக்கம் செய்யப்படுகிறது.

ஐவேளைத் தொழுகையும் ரமளான் மாத நோன்பும் மனத்தாலும் உடலாலும் இறை வணக்கம் புரிய வழியமைக்

கிறது. ஏழை வரி எனும் ஜக்காத் கடமை பொருளால் இறை வணக்கம் புரிவதாகும். புனித மக்காவிலுள்ள இறை யில்லமாகிய காஃபா செல்லும் ஹஜ் கடமை மூலம் இறைவனை மனத்தாலும் உடலாலும், பொருளாலும் இறை வணக்கம் செய்ய இயலுகிறது.

## ஐங்கடமைகள் தரும் அற்புதத் தியாக உணர்வு

ஐந்து இஸ்லாமியக் கடமைகளிலும் நீக்கமற நிறைந் திருக்கும் மற்றொரு சிறப்பு தியாக உணர்வாகும்.

வைகறை முதல் இரவு வரை ஐந்து முறை தொழும் ஒருவர் தன் அரிய நேரங்களை இறைவனுக்காகத் தியாகம் செய்து இறை வணக்கம் புரிகிறார். அதிகாலையில் தன் இன்பமான தூக்கத்தைத் துறக்கிறார். ஐவேளை தொழுகை நேரங்களில் தான் விரும்பும் கேளிக்கைகளையெல்லாம் உதறித் தள்ளி, பொருள் தேடும் வேட்கையை நிறுத்தி வைத்து இறைச் சிந்தனையாளராக மாறிவிடுகிறார்.

இறை வணக்கத்திற்காக தொழும் பொழுதெல்லாம் தன் உடலைக் குனிந்தும் மண்டியிட்டும், தரையில் நெற்றி படிய தலை சாய்த்தும், உடல் வருந்த தொழும்பொழுது தன் உடல் சுகத்தையெல்லம் தியாகம் செய்து விடுகிறார்.

ரமளான் மாதம் முழுவதும் நோன்பு நோற்கும் ஒரு முஸ்லிம் புலர்காலைக்கும் முன்னதாகவே உணவு உண் பதை நிறுத்திவிடுகிறார். மாலை மயங்கிய பிறகு உணவு கொள்கிறார். இடைப்பட்ட பகற்பொழுது முழுவதும் ஒரு சொட்டு நீரும் பருகாமல் நோன்பு நோற்கிறார். பகல் முழுவதும் பசி, தாகம், அடக்கி இறைச் சிந்தனையாளராக மாறுகிறார். பகற்பொழுது முழுவதும் தான் விரும்பி உண்ணும் உணவுகளையெல்லாம் ஏறிட்டும் பாராது தியாகம் செய்கிறார். தான் அடிக்கடி குடிக்கும் தேநீர், காபி,

சுவை நீர் போன்றவற்றையெல்லாம் உதறித் தள்ளி தியாகம் செய்கிறார். தான் விரும்பி உண்ணும் உணவு வகைகளை யும் பருகி மகிழும் சுவை நீர்களையும் துறப்பதோடு பசியின் கொடுமையை பகல் முழுவதும் அனுபவிக்கிறார். இதன் மூலம் ஏழை எளியவர்களின் பசித்துன்பம் எத்தகையதென அறிந்துணர்ந்து, அவர்தம் பசிப்பிணி போக்க விழைகிறார். இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமும் ஈகையாளராக மாறி வாரி வழங்க முற்படுகின்றனர். நோன்பின்போது வணங்குவதும் வழங்குவதுமான உணர்வுகொள்ளும் ஒவ்வொருவரும் தங்கள் வழக்கமான பல்வேறு பழக்கங்களையெல்லாம் தியாகம் செய்தவர்களாகிறார்கள்.

### வாரி வழங்க வழி வகுக்கும் ஜகாத்

ஏழை எளியவர்களுக்கு வசதி படைத்தோர் வாரி வழங்க வேண்டுவது ஆண்டு முழுவதும் கடமையாக அமைந்திருந்தபோதிலும், இப்புனித ரமலானிலே தான் அதிகமாக வழங்கப்படுகிறது. இதை வற்புறுத்துவதே இஸ்லாமிய கடமையான ஏழைவரி எனும் ஜகாத் கடமை. இதுவும் தியாக உணர்வை வளர்க்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

ஒவ்வொரு முஸ்லிமும் அரிய முயற்சிகளின் மூலமும் கடும் உழைப்பின் வாயிலாகவும் பொருளைத் தேடி, சேமிக்கிறார். அவ்வாறு தேடிச் சேர்க்கும் பொருளை மேலும் மேலும் சேர்க்கவே விரும்புவார்கள். தான் பாடுபட்டுத் தேடிய பொருளை பாதுகாத்து அனுபவிக்க அவாவுவது மனித இயற்கை. ஆனால், இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான 'ஜகாத்' கடமை, தான் தேடிய பொருளின் மீது கொள்ளும் பண ஆசையை, பொருள் வேட்கையைத் தியாகம் செய்யப் பணிக்கிறது.

சமுதாயத்தின் ஒரு அங்கமான மனிதன், தன் முயற்சியால், உழைப்பால் பொருளைத் தேடினாலும் அப்பொருள் மீது தனக்கு மட்டுமல்லாது, பிற மனிதர்கட்கும் உரிமை உண்டு எனப் பணிக்கிறது. தான் உழைத்துத் தேடிய பொருளில் நாற்பதில் ஒரு பங்கை அதாவது இரண்டரை சதவீதத்தை ஏழை எளியவர்களுக்கு, வயோதிகர்களுக்கு, பொருள் தேடி வாழ வழியில்லாத நோயாளிகள் போன்றவர்கட்கு வழங்கியே ஆக வேண்டுமெனக் கட்டளையிடுகிறது. இதையும் பொருள் தேடியவனே தன் சொத்தின் மதிப்பு, அந்த ஆண்டில் தான் தேடிய பொருளின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கும் போது பொருள் மீதுள்ள பேராசையைத் துறக்கிறான். தனக்கு மட்டும் எனும் தன்னல உணர்வை இழக்கிறான். தன் பொருளாயினும் தனக்கு மட்டுமல்லாது அதில் மற்றவர்கட்கும் உரிமையுண்டு என எண்ணும் பொது நல உணர்வுக்கு முழுமையாக ஆட்பட்டு விடுகிறான்.

இவ்வாறு மனிதனை எல்லா வகையிலும் தியாக உணர்வு மிக்கவனாக, பொது நலம் பேணும் புனிதனாகப் புதுப்பிக்கும் புனித மாதமாக அமைந்திருப்பதே ரமளான் மாதம்.

நன்றி : மாலை முரசு

# 'ஹஜ் பெருநாள்'

## இறையில்லங்களின் தாய்

ஈதுல் அள்ஹா எனும் தியாகத் திருநாள் 'ஹஜ்' பெருநாளாகவும் அமைந்துள்ளது. 'ஹஜ்' என்ற சொல்லுக்குச் 'சந்திக்க நாடுதல்' என்பது பொருளாகும். ஹஜ்ஜின் போது உலகெங்குமுள்ள மக்கள் 'கஃபா' இறை இல்லத்தைச் சந்திக்க நாடி வருவதால் 'ஹஜ்' என அழைக்கப் பட்டது.

ஐம்பெரும் இஸ்லாமியக் கடமைகளில் ஐந்தாவது இறுதிக் கடமையாக அமைந்திருப்பது ஹஜ் கடமை. எல்லோருக்குமுரிய கடமையாயினும் உடல் நலமும் பொருள் வசதியுமுள்ளோருக்குக் கட்டாய கடமையாகும்.

துல்ஹஜ் மாதத்தில் உலகெங்குமுள்ள முஸ்லிம் மக்கள் ஒரே இறைவனாகிய அல்லாஹ்வை வணங்குவதற்கென மக்காவில் அமைந்துள்ள 'கஃபா' இறையில்லம் சென்று இறைவணக்கம் புரிவதே ஹஜ் ஆகும்.

உலகிலுள்ள அத்தனை பள்ளிவாசல்களுக்கும் தாய் போன்றது கஃபா இறையில்லம். ஆனால், உலகிலுள்ள பள்ளிவாசல்கள் அனைத்தின் அமைப்புக்கும் தன்மைக்கும் முற்றிலும் மாறுபட்டதாக கஃபா விளங்குகிறது. உலகெங்குமுள்ள பள்ளிவாசல்களில் இறை வணக்கம்

புரிவோர் கஃபா இருக்கும் திசையை நோக்கியே தொழுவர். ஆனால், கஃபா இறையில்லத்தில் வணக்கம் புரிவோருக்கு திசை கட்டுப்பாடு ஏதுமின்றி எல்லாத் திசைகளிலும் கஃபாவைச் சுற்றி வட்டவடிவமாக நின்று தொழுகின்றனர்.

## வாழ்வின் உட்பொருளை வெளிப்படுத்தும் ஹஜ்

ஹஜ் என்பது மனித வாழ்வின் சூட்சம நோக்குகளை செயல்பூர்வமாக வெளிப்படுத்தும் ஒன்றாகும். ஹஜ் பயணம் மேற்கொள்வோர் தாங்களே பாடுபட்டு நேர்மை யான முறையில் தேடிய பொருளைச் செலவிட்டே ஹஜ் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஹஜ் கடமையை நிறைவேற்ற பயணம் மேற்கொள் வோர் எல்லாவித உலகியல் பற்றுகளையும் விட்டொழித்த வராக இறைவனையும் இறையில்லச் சிந்தனையையும் தவிர, மற்ற எதையும் நினைக்காதவராகத் தன் ஹஜ் கடமையை நிறைவேற்றுகிறார். இது அவரது மறுமையின் பயணத்தை அவருக்கு நினைவூட்டுவதாக அமைகிறது.

தனது குடும்பம், உற்றார் உறவினர், சொத்து சுகம் அனைத்தையும் துறந்தவராக கஃபா இறை இல்லம் நோக்கி ஹஜ் பயணம் செல்பவர் தனது மரணப் பயணத்தையே நினைவு கூர்பவராகிறார்.

ஹஜ் பயணம் செய்வோர் கஃபாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் இருந்தே தனது ஆடம்பர ஆடை அணிகலன் அனைத்தையும் களைந்துவிட்டு தைக்கப்படாத சாதாரண துணியிலான இரு வெள்ளைத் துண்டுகளை மட்டுமே அணிகிறார்கள். இவ்வாறு அரசரா யினும், ஆண்டியாயினும் எல்லாரும் ஒரே மாதிரியான எஹ்ராம் எனும் தைக்கப்படாத வெள்ளுடை உடுத்தியே இறையில்லம் செல்ல வேண்டும். இதே உடைதான் இறந்த

சடலத்துக்கும் (மையத்) போர்த்தப்படுகிறது. எனவே இந்த எஹ்ராம் எனும் வெள்ளுடை அணியும் ஹஜ் பயணி தனது மரணத்தையே நினைவு கூர்பவராகிறார்.

வடலூர் இராமலிங்க வள்ளலார் 'எஹ்ராம்' போன்ற வெள்ளுடையையே இறுதிவரை அணிந்து வந்தார் என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

**ஒருமை உணர்வு தரும்
கஃபா இறையில்லம்**

ஹஜ்ஜின்போது இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் கஃபா இறையில்லத்தில் கூடுகின்றனர். எல்லோருமே ஒரே மாதிரி சீருடையில் தைக்கப்படாத இரு துண்டுத் துணிகளை அணிந்தவர்களாக காட்சி தருகின்றனர். பல்வகைப்பட்ட மொழிகளைப் பேசுபவர்களாக இருந்த போதிலும் அங்கு ஒரே மொழியில் அரபியில் இறைவணக்கம் புரிகின்றனர். வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட மகத்தான ஒற்றுமையை - சமத்துவத்தை சொல்லிலும், செயலிலும் இறைவன்முன் நிலைநாட்டுகின்றனர்.

**ஹஜ் கடமை
நிறைவேற்றம்**

கஃபா இறையில்லத்தை ஹஜ் செய்வோர் ஏழு முறை 'தவாப்' சுற்ற வேண்டும். 'தவாப்' என்ற அரபுச் சொல்லுக்கு 'சுற்றி வருதல்' என்பது பொருளாகும். அதன்பின் அருகிலுள்ள ஜம்ஜம் கிணற்று நீரைக் குடித்து விட்டு சஃபா மருவா என்னும் இரு குன்றுகளிடையே ஏழு முறை தொங்கலோட்டம் ஓட வேண்டும்.

இக்கடமைகளை இனிது நிறைவேற்றிய ஹாஜிகள் அடுத்து மக்காவிலிருந்து சற்று தொலைவில் அமைந்துள்ள மினா என்னுமிடத்தை அடைந்து, தங்கி இறைவணக்கம் புரிவார்கள்.

அடுத்த நாள் வைகறையில் தொழுகையை முடித்துக் கொண்டு, அங்கிருந்து அருகில் உள்ள அரஃபாத் பெரு வெளியில் ஹாஜிகள் குழுமுகிறார்கள்.

ஹஜ் கடமையை இங்குதான் முழுமையாக நிறை வேற்றப்படுகிறது. ஒரே மாதிரியான வெள்ளைச் சீருடை அணிந்த இலட்சக்கணக்கான ஒரே மாதிரியான கூடாரங் களில், ஒரே மாதிரியான வெள்ளை எஹ்ராம் உடையில் தங்கிப் பிரார்த்தனை செய்கின்றனர்.

### உலக ஒருமைப்பாட்டு மாநாடு

ஹஜ்ஜின்போது குழுமும் ஹாஜிகள் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாயிருந்தும், பல்வேறு விதமான மொழிகளையே பேசுபவர்களாயிருந்தும் வெவ்வேறு விதமான கலாச்சார அடிப்படையில் ஆடை அணிகளை அணியும் வழக்கமுடையவர்களாயிருந்தும், பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாயிருந்தும் ஏழை-பணக்காரன், அரசன் - ஆண்டி என்ற பொருளாதார வேற்றுமைக்கு உட்பட்டவர்களாயிருந்தும் கருப்பன் வெள்ளையன் நிற பேதமுடையவர்களாயிருந்தும் இறையில்லத்தின் முன் இந்த வேறுபாடுகள் எதுவும் இல்லாதவர்களாகக் குழுமி ஒரே மாதிரியான எஹ்ராம் வெள்ளுடையில் ஒரே இறைச் சிந்தனையுடன் ஒரே மொழியில் இறையருளை வேண்டி நிற்கும்போது உலக மக்கள் அனைவருமே ஆதி பிதாவான ஆதாமின் மக்கள் என்பதை உலகறிய பறைசாற்றும் ஒப்பற்ற காட்சியாக அமைகிறது. இறைவன் முன் எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம், ஓர் நிறை என்ற உன்னத நிலையை செயல் வடிவில் உலகுக்கு உணர்த்துவதாக உள்ளது. 40 இலட்சத்து ஹாஜிகளும் வியக்கத்தக்க ஒற்றுமையுடனும், ஒழுங்குட னும் கட்டுப்பாட்டுடனும் ஹஜ்ஜை நிறைவேற்றுவதன் மூலம் உலக சகோதரத்துவத்தை, சமத்துவத்தை, ஆண்டு தோறும் ஹஜ் திருநாளின்போது நிலைநாட்டுகிறார்கள்.

தியாக சீலர் ஹஜ்ரத் இபுராஹீம் (அலை) அவர்களால் நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பு உலக மக்களுக்கு விடு விக்கப்பட்ட ஹஜ் அழைப்பு, பதினைந்து நூற்றாண்டுகளாக பெருமானார் அவர்களால் முறைப்படுத்தப்பட்ட ஹஜ் கடமை, உலகமே வியக்கும் வகையில் அனைத்து வேறு பாடுகட்கும் அப்பாற்பட்ட நிலையில் உலக முஸ்லிம்களின் மாபெரும் மாநாடாகவே நடந்து வருகிறது.

நன்றி : தினமணி

# இஸ்லாமியப் புத்தாண்டு முஹர்ரம் தரும் செய்தி

### இறைமறை தரும் சிறப்புமிகு மாதங்கள்

எதிலுமே மனித மனம் சிறப்பான தொடக்கத்தை எதிர்பார்த்து அவாவுவது இயற்கை. அதிலும் ஒவ்வோராண்டும் தொடங்கும்போது அவ்வாண்டு எல்லா வகையிலும் சிறப்பு மிகு ஆண்டாக அமைய வேண்டும் என ஒவ்வொருவர் உள்ளமும் எதிர்பார்ப்பது இயல்பான ஒன்றே. எனவே, தொடங்கவிருக்கும் இஸ்லாமியப் புத்தாண்டான முஹர்ரம் மாதம் பற்றியும் அம்மாதத்தின் புனிதமிகு தன்மைகளைக் குறித்தும் நினைவு கூர்வது எல்லாவகையிலும் சாலப் பொருத்தமுடையதாக இருக்கும்.

இயற்கை மார்க்கமாக இஸ்லாம் இறைவனால் மனித குலத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இயற்கையாகவே ஓராண்டுக் காலத்தை பன்னிரண்டு மாதக் கணிப்புகளாக்கி, அவற்றில் நான்கு மாதங்கள் சிறப்புடைய மாதங்களாக அமைத்துள்ளதைப் பற்றி இஸ்லாமியத் திருமறை திருக்குர் ஆன்.

"நிச்சயமாக, அல்லாஹ்வினிடத்தில் மாதங்களின்

எண்ணிக்கை (ஓராண்டில்) பன்னிரண்டு தான். இவ்வாறே வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்து அல்லாஹ்வால் கற்பனை செய்யப்பட்டுள்ளது. அவைகளில் நான்கு மாதங்கள் சிறப்புமிக்கவை" (9:36)

திருமறை குறிப்பிடும் நான்கு புனித மாதங்களில் ஆண்டின் முதல் மாதமாகிய முஹர்ரம் மாதமும் ஒன்றாகும்.

முஹர்ரம் மாதம் அல்லாஹ்விடம் தனிச்சிறப்புப் பெற்ற மாதம் என்றும், அம்மாதத்தில் இறைவனை நோக்கிப் பிழை பொறுக்க ஒவ்வொருவரும் கேட்கும் "இறைவேட்டல்கள் (துஆ) அல்லாஹ்வால் ஏற்கப்பட்டு மன்னிப்பு வழங்கப் படுகிறது" என்றும் பெருமானார் (சல்) அவர்கள் கூறியுள்ள திலிருந்து இந்நாளின் சிறப்புப் புலனாகும்.

"ஆண்டின் இறுதி மாதமாகிய துல்ஹஜ் திங்களின் இறுதி நாளிலும் ஆண்டின் முதல் மாதமாகிய முஹர்ரம் முதல் நாளன்றும் தொடர்ந்து நோன்பு நோற்போரின் ஐம்பதாண்டு காலப் பாவம் இறைவனால் பொறுக்கப் படுகிறது" என அண்ணலார் கூறியுள்ளதால் இவ்விரு நாட்களும் இறைவனின் கருணை பொழியும் நாட்களாகவே அமைந்துள்ளதெனலாம்.

**நல்லுணர்வின் ஊற்றுக்கண்**
**முஹர்ரம்**

நாயகத் திருமேனியின் பிறப்புக்கும் முன்பிருந்தே முஹர்ரம் மாதம் அராபியர்களால் புனிதமிகு மாதமாக, அமைதி போற்றும் அரிய மாதமாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. இம் முஹர்ரம் மாதத்தில் எக்காரணம் கொண்டும் வன்முறைச் செயல்களில் அரபிகள் ஈடுபடுவ தில்லை. யாரிடத்தும் விரோதமோ, குரோதமோ காட்டுவ தில்லை. வன்மம், பலாத்காரம் என்ற உணர்வுகட்கு மனதில்

அறவே இடமளிப்பதில்லை. அன்பு, அருள், அமைதி, சாந்தம், மகிழ்ச்சி ஆகிய நல்லுணர்வுகள் பொங்கிப் பொழியும் ஊற்றாக நெஞ்சத்தை ஆக்கிக் கொண்டு மனிதப் புனிதர்களாக வாழ முற்படுவர். எனவே, தீய உணர்வுகள் நீங்கிய சதியினின்றும் அறவே, விலக்கப்பட்ட-அதாவது ஹராமாக்கப்பட்ட 'அல்ஹராம்' எனும் பொருளிலேயே 'முஹர்ரம் என அழைக்கப்படுகிறது. துவக்க மாதமாகிய 'முஹர்ரம்' முதல் மாத உணர்வே ஆண்டு முழுவதும் வாழ்வில் அரசோச்ச வேண்டும் என்பது ஒவ்வொரு முஸ்லிமின் வேணவாவாகும்.

இந்தியா உட்பட உலகெங்கும் பலவித ஆண்டுக் கணக்குகள் நிலவி வந்த போதிலும் உலகெங்கும் பேணப் பட்டு வரும் ஆண்டுக்கணக்குகள், கிருஸ்துவ ஆண்டுக் கணக்கும் இஸ்லாத்தின் ஹிஜ்ரி ஆண்டுக் கணக்குமேயாகும். உலகப் பெரும் சமயங்களாக இவ்விரண்டும் அமைந் திருப்பதும் இதற்கு முக்கியக் காரணமாகும்.

இஸ்லாமிய ஆண்டுக் கணக்கிற்கும் கிருஸ்தவ ஆண்டுக் கணக்கிற்கும் சிறிதளவு வேறுபாடு உண்டு. கிருஸ்தவ ஆண்டுக்கணக்கு சூரிய சுழற்சியை அடிப்படை யாகக் கொண்டு அமைந்துள்ளது. இஸ்லாமிய ஆண்டான ஹிஜ்ரி கணக்கு சந்திரப் பெயர்ச்சியை அடித்தளமாகக் கொண்டு அமைந்துள்ளது. சூரியக் கணக்குப்படி ஆண்டுக்கு 365 நாட்கள் சந்திரக் கணக்குபடி ஓராண்டுக்கு 354 நாட்கள். மட்டுமே. இரண்டிற்குமிடையே குறைந்தது 10 நாட்கள் வித்தியாசமுண்டு.

### இறை கட்டளைகளை நினைவூட்டும் முஹர்ரம்

எனினும், இஸ்லாமியப் புத்தாண்டான முஹர்ரம் வெறும் நாட்களை மட்டும் குறிப்பதாக அமையாமல்

மனிதன்மாட்டு இறைவன் விதித்த கட்டளைகளையும் அவற்றை நிறைவேற்ற மனிதனுக்குள்ள கடப்பாடுகளையும் நினைவூட்டுவதாகவும் அமைந்துள்ளது. இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள நேசத்தையும் அதை முழுமையாக அடைய ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ள வேண்டிய நல்லுணர்வுகளையும் செயல்பாடுகளையும் சுட்டிக்காட்டும் புனிதமிகு புத்தாண்டுத் தினமாகவும் உள்ளது. சுருங்கக் கூறின் இஸ்லாமியப் புத்தாண்டு எண்ணிக்கைக்காக மட்டு மின்றி எண்ணத்தை வளர்த்து வளப்படுத்தும் இனிய துவக்க நாளாகவும் அமைந்துள்ளதெனலாம்.

முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள் புனிதமிகு 'ஆஷூரா' (யவ்முல்) தினமாகவும் பேணப்படுகிறது. யவ்முல் ஆஷூரா என்பதற்குப் 'பத்தாம்' என்பது பொரு ளாகும். இந்நாள் இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் மட்டுமல்லாது வரலாற்று அடிப்படையிலும் அதிஉன்னத நாளாகக் கருதப்படுகிறது. புனித ரமலான் நோன்பு நாட் களுக்கு அடுத்தபடியான சிறப்பு மிக்க நாட்களாக ஆஷூரா நோன்பு நாட்கள் போற்றப்படுகின்றன. ஆஷூரா நோன்பு நாட்கள் ஓராண்டும் தொழுகைக்குச் சமமாகும் எனப் பெருமானார் கூறியுள்ளார்.

### பத்து நாள் நிகழ்வுகள்

முஹர்ரம் பத்தாம் நாளாகிய ஆஷூரா தினத்தன்று பத்து முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

மனித குலத்தின் முதல் தந்தையாகிய ஆதாமும் தாயாகிய ஹவ்வாவும் இந்நாளில் தான் அல்லாஹ்வால் நிலவுலகினில் கால் பதித்தனர். இறைக்கட்டளைக்கு மாறு செய்த அவர்களின் பிழை இறைவனால் பொறுக்கப் பட்டதும் இந்நாளிலே தான்.

ஊழி மழையின்போது கப்பலோடு ஆறுமாத காலம் கடலில் மிதந்த "நோவா" எனும் நூஹ் (அலை) பிற உயிரினங்களோடு ஜூதி எனும் மலையில் இறங்கியதும் இதே ஆஷூரா நாளன்று தான்.

"ஓர் இறைக் கொள்கையை உரமாக மக்களிடையே பரப்பி, அதனால் சினமுற்ற நிம்ரூது எனும் கொடுங்கோல் மன்னன் தந்த எண்ணற்ற துன்பங்களை ஏற்ற 'ஆப்ரஹராம்' எனும் இபுராஹீம் (அலை) பிறந்ததும், 'இறைத்தூதர்' எனும் 'கலீல்' பட்டத்தை அல்லாஹ்விடமிருந்து பெற்றதும் இதே முஹர்ரம் பத்தாம் நாளாகிய ஆஷூரா நாளன்றுதான்.

'இறைவனைத் தவிர வணங்குதற்குரியவர் வேறு யாருமில்லை' எனப் பிரச்சாரம் செய்த மோசஸ் எனும் மூஸா (அலை) பிர் அவ்னின் கொடுங்கோன்மையினின்றும் தப்பிச் செல்லும்போது செங்கடல் பிளந்து நின்று வழிவிட்டுக் காத்ததும் இதே ஆஷூரா நாளில் தான்.

ஜீஸசாகிய ஈஸா (அலை) அவர்களைக் கொலையாளி களிடமிருந்து இறைவன் விண்ணுக்கு உயர்த்திக் கொண்ட தும் இப்புனிதமிகு ஆஷூரா நாளின்போதுதான் என்பது வரலாறு.

இஸ்லாமியக் கோட்பாட்டின்படி வானம், பூமி, சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் அனைத்தும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டதும் முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான். முதன்முதலாக மண்ணுலகின் இறைவனரு ளால் மழை பெய்வித்ததும் புனிதமிகு முஹர்ரம் அன்று தான்.

மனுக்குலத்தின் இறுதித் தீர்ப்பு நாள் ஆஷூரா தினத்தன்றே அமையும் என்பது இறைமறை தரும் செய்தியாகும்.

இதுவரை கூறப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள் பெருமானார் பிறப்பதற்கு முன்னதாக நடைபெற்றவை களாகும்.

**கர்பலா துன்ப நிகழ்வு**

பெருமானார் பெருவாழ்வு முடிவுற்ற பின்னர் அவர் தன் பேரர் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களும் அவரது குடும்பத்தினரும் தோழர்களும் கர்பலா எனுமிடத்தில் இதே முஹர்ரம் பத்தாம் நாளன்றுதான் படுகொலை செய்யப் பட்டனர். நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டவும் இஸ்லாமிய ஜனநாயகப் பண்பைக் கட்டிக் காக்கவும் இறைநெறியை நிலைநிறுத்தவுமே இன்னுயிர் ஈந்தனர். இமாம் ஹுஸைனின் இத்துன்ப முடிவு இஸ்லாமியரின் இதயத்தின் துன்பச் சுமையேற்றிய நிகழ்வு என்பதில் ஐயமில்லை. எனினும், இதன்மூலம் முஹர்ரம் மாதத்தின் சிறப்போ ஆஷுரா நாளின் புனிதத் தன்மையோ கூடவும் இல்லை. குறையவும் இல்லை. ஏனெனில் பெருமானார் மூலம் இஸ்லாமிய நெறியை நிறைவு செய்துவிட்டதாக இறைவன் தன் திருமறையில் தெளிவாகக் கூறியுள்ளான். எனவே, முஹர்ரம் மாதத்தின் மேன்மையை ஆஷுராவின் புனிதமிகு சிறப்பை கருத்திற்கொள்ளாது துக்கதினமாக மட்டும் கொண்டு செயல்படுவது இறைநெறிக் கோட் பாட்டிற்குப் பொருத்தமுடையதன்று.

முஹர்ரம் தரும் எழுச்சிமிகு சிந்தனைகள்

புனிதமிகு முஹர்ரம் புத்தாண்டு அன்று எழுச்சிமிகு எண்ணங்களை நெஞ்சத்தில் தேக்கி எதிர்வரும் நாட்களை மகிழ்ச்சிப் பெருக்கோடு எதிர்கொள்ளவேண்டும். இறை யாணைக்கொப்ப அமைதி மாதமெனும் முஹர்ரம் முதல்

நாள் முதல் ஒவ்வொரு முஸ்லிமும் தன் அக வாழ்விலும் புற வாழ்விலும் அமைதிச் சூழ்நிலை உருவாவதற்காக முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அமைதி உணர்வுக்கு ஊறு ஏற்படுத்தும் வேற்றுமை உணர்வுகளை அறவே விலக்கி அன்பும் அமைதியும் நிலைபெற அரும்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் இனிய பண்பு வாழ்வில் அரசோச்ச வேண்டும். உலக மக்கள் அனைவரையும் ஆதாமின் வழிவந்த சகோதரர்களாகப் பாவிக்கும் இயல்புடைய இஸ்லாமியச் சகோதரர்கள் எக்காரணம் கொண்டும் வேற்றுமை உணர்வு கள் தங்களிடம் படியாவண்ணம் காத்துக் கொள்ள வேண்டும். ஒருங்கிணைவான உணர்வூட்டும் செயல்களை மட்டுமே மேற்கொள்ளவேண்டும். தன்னலம் மறுத்துப் பிறர் நலம் பேணும் பேரறிவாளர்களாக வாழ இப்புத்தாண் டில் உறுதி கொள்ள வேண்டும். ஆஷுரா நோன்பு நோற்ப தோடு ஏழை எளியோர்க்கு வாரி வழங்கியும் மார்க்கப் பெரியோர்களைத் தேடிச் சென்று கண்டும், தன் குடும்பத் தாரையும் தன்னைச் சார்ந்து நிற்போரையும் மகிழ்ச்சிப் படுத்தும் செயல்களை மேற்கொள்ள வேண்டும். இயன்ற வரை நஃபில் எனும் கூடுதல் தொழுகைகளை நிறைவேற்றி இறைவனின் இன்னருளைப் பெற்று உய்தி பெற முயல வேண்டும்.

நன்றி: தினமணி

# பெருமானாரும் அறிவியலும்

## மனிதப் பிறப்பின் மாபெரும் சிறப்பு

படைப்புகளிலே மிக உயர்ந்த படைப்பாக அமைந் திருப்பவன் மனிதன். இறைவனின் பிரதிநிதியாக, இறையம் சம் உடையவனாக இறைவனால் படைக்கப் பட்டிருப்பவன் மனிதன்.

மனிதனைத் தவிர்த்துள்ள மற்றைய உயிரினங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் இறைவன் வேண்டுமளவுக்கு வெளிப்படையாக கண் முன்னாலேயே கொடுத்துள்ளான். பிற உயிரினங்கள் அதிக முயற்சியின்றியே உண்ண உணவு, குடிக்க நீர், இருக்க இடம் ஆகிய அனைத்தும் அவை பெற்றுவிட முடியும். ஆனால், மனிதன்?

மனிதன் தனக்கு வேண்டிய எதனையும் தானாகவே முயன்று தேடிக் கண்டறிந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குத் துணையாக மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ள அரிய வெகுமதிகளே பகுத்தறிவும் சிந்தனையாற்றலும்.

பகுத்தறிவின் துணைகொண்டு எதனையும் ஆய்ந் தறிந்து உண்மையுணர்ந்து பின்பற்றப் பணிப்பது இஸ்லாம்.

மக்களை வழிநடத்த இறைவனால் அனுப்பப்பட்ட அத்தனை நபிமார்களும் ஏதேனும் அற்புதங்கள் வியக்கத் தக்க வகையில் நிகழ்த்தி, அதன்மூலம் மக்களுக்கு அச்சம் கலந்த இறை நம்பிக்கையை ஊட்டி இறைவழி செலுத்தினர்.

ஆனால், இறுதித் தூதராக அவனிபுரக்க வந்த அண்ணல் நபிகள் நாயகம் (சல்) மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய, அற்புதங்களை நிகழ்த்தவில்லை. மந்திர தந்திரங் களால் மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட அமானுசிய காரியங்களை - இயற்கை கடந்த செயல்களைச் செய்து, அதன் மூலம் இறை நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. பகுத்தறிவைப் பயன்படுத்தி, சிந்திக்கத் தூண்டி, அதன் மூலம் உண்மையைத் தாங்களே உணர்ந்து தெளிந்து அதன் வழி ஒழுக, வழிகாட்டியவர் பெருமானார் அவர்கள்.

**மனிதன் துய்த்து**
**மகிழவே அனைத்தும்**

மனிதனுக்கு ஏவல் செய்ய, அவனுக்கு முழுமையாகப் பயன்படுவதற்கென்றே இறைவன் நிலத்தையும் வானத்தை யும் நீரையும் காற்றையும் மலைகளையும் படைத்துள்ளான். அவற்றில் அவனுக்கு வேண்டிய அனைத்தையும் பொதிந்து வைத்துள்ளான். ஆனால், அவற்றில் பலவற்றை நேரடியாகக் கண்டு அனுபவிக்கும் வகையில் வைக்கவில்லை. மறை பொருளாக உள்ள அவற்றை, மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு, தன் சிந்தனை ஆற்றலின் துணையால் ஆய்ந்து கண்டறிய வேண்டும். அதன் பின்னரே அவற்றை அனு பவிக்கும் உரிமை மனிதனுக்கு உண்டு என்பது திருமறை கூறும் இறை கட்டளையாகும்.

**மறை பொருளறிய**
**ஆய்வறிவு**

"ஒரு நாழிகை நேரம் இறைவனின் படைப்புகளைப்

பற்றிச் சிந்தனை செய்து நல்லறிவைப் பெற முயல்வது எழுபதாண்டுத் தொழுகையைவிட மேலானது.

இது மறைவழியே பெருமானார் உணர்த்தும் பேருண்மையாகும்.

ஒவ்வொரு மனிதனும் ஆய்வறிவோடு விளங்க வேண்டும் என்பதே இறைவனின் பெருவிருப்பமாகும்.

பெருமானார் அவர்கள் இறைவனிடம் மிகுதியாகக் கேட்டது "இறைவா! என் அறிவைப் பெருகச் செய்!" என்பதுதான்.

அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையான கல்விக்கு, பெருமானார் அளவுக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள்ள வேறு யாரும் இல்லை.

புதிய அறிவு புதிய செய்தி எங்கிருந்தாலும் எம் முயற்சியை மேற்கொண்டேனும் அதனைப் பெறத் தவறக் கூடாது எனப் பணித்தவர் அண்ணலார். ஆகவேதான், அக்காலத்தில் எண்ணிப் பார்க்க முடியாத தொலைதூரத்தில் கனவுலகம் போல் இருந்த சீனாவுக்குச் சென்றேனும் சீர் கல்வி பெற்றுத் திரும்பப் பணித்தார் பெருமானார் அவர்கள்.

"கல்வியைத் தேடுங்கள்; ஏனென்றால் இறைவனின் நல்லருளோடு அதைத் தேடுபவன் தூய செயல் செய்தவனாவான்; கல்வியைப் பற்றிப் பேசியவன் இறைவனைத் துதி செய்தவனாவான்; அதைக் கற்றுக் கொடுப்பவன் தர்மம் செய்தவனாவான்; தகுதியுடையவர்களிடையே அதைச் செம்மையாகப் பரப்புவன் இறைவனுக்கு வணக்கம் செய்தவனாவான்" என்பது நபி மொழியாகும்.

**ஆன்ம வளர்ச்சிக்குப் பள்ளிவாசல்**
**அறிவு வளர்ச்சிக்கு மதரஸா**

இறை வணக்கத்திற்கென பள்ளிவாசலை உருவாக்கிய

பெருமானார் அவர்கள் அதன் ஒரு பகுதியிலே நாளும் அறிவை வளர்க்க, பெருகச் செய்ய 'மதரஸா' வையும் உருவாக்கிய அறிவுப் புரட்சிக்கு வித்திட்டார்கள். பள்ளிவாசல்களின் ஒரு பகுதியே பள்ளிக்கூடங்களாயின. அறிவுக்குத் துணை செய்யும்-வளர்க்க வழிகாணும் அனைத்துக் கல்விகளும் அங்கே வளர்க்கப்பட்டன.

இவ்வாறு இன்றைய விஞ்ஞானத்தின் அனைத்து கூறுகளும் வளமாக வளரும் வளர்ப்புப் பண்ணைகளாக அமைந்தவைகளே அன்றைய மதரஸாக்கள் என்பது மறக்கவோ மறுக்கவோ முடியாத வரலாற்று உண்மைகளாகும்.

'அறிவு எங்கே இருந்தாலும் அதனைக் கற்றுக்கொள்' எனப் பணித்த பெருமானாரின் அன்புக் கட்டளைக்கிணங்க, கிரேக்க நாட்டு அறிஞர்களால் வளர்த்து வளமாக்கப் பட்டிருந்த அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் கிரேக்க, லத்தீன் மொழிகளிலிருந்து அரபி மொழியிலே முனைப்பாக மொழிபெயர்க்கப்பட்டன.

## அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்த முஸ்லிம்கள்

இதன் விளைவாக ஏழாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டுவரை அரபு நாட்டில் விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ந்து வளமடைந்தன. இக்கால கட்டத்திலேதான் பூகோளம், பௌதிகம், இரசாயனம், மருத்துவம் என இன்றுள்ள அறிவியல் துறைகளுக் கெல்லாம் அழுத்தமான அடிப்படைகள் போடப்பட்டன.

இதன் பயனாக, பத்தாம் நூற்றாண்டின் உலகில் இருபெரும் மேதைகளாக அல்-புரூனியும் இப்னு சினாவும் விளங்கி, இன்றைய இயற்பியல், வேதியியல், மருத்துவம், முதலாகவுள்ள அறிவியல் துறைகளின் துரித வளர்ச்சிக்குப் பெருங்காரணமாய் அமைய முடிந்தது.

அரபி மொழியில் செழுமையாக வளர்ந்து அறிவொளி பாய்ச்சி நின்ற அறிவியல் உண்மைகளையெல்லாம் கிரேக்க, லத்தீன் மொழி அறிஞர்கள், அறிவியல் விற்பன்னர்கள் தங்கள் கிரேக்க, லத்தீன் மொழிகளில் முனைப்போடு அரபி மொழியிலிருந்து மொழி பெயர்த்துக் கொண்டார்கள். இந்த விஞ்ஞான அறிவுச் செல்வங்கள் மீண்டும் பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டன. இதுவே, ஐரோப்பிய விஞ்ஞான மறுமலர்ச்சிக்கு வித்திட்ட நிகழ்ச்சி.

## தொழிற்புரட்சிக்குத் தூண்டுகோள்

இதுவே, இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சிக்கான மறைமுகக் காரணம். பின்னர், மின்னல், வேகத்தில் இன்றைய விஞ்ஞானம் வளர்ந்து உலகை வளமடையச் செய்து வருகிறது. அறிவியல் வரலாற்றாசிரியர்களால் சிலுவைப் போரின் பின்னணியில் இந்த வரலாற்று உண்மைகள் நீண்ட காலமாக மறைக்கப்பட்டு வந்தாலும், இன்றைய விஞ்ஞான ஆசிரியர்களால் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள் ஆதார பூர்வமாக மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

உலகத்திற்கு விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்தூன்றிய இஸ்லாமிய நெறியே அறிவியல் அடிப்படையில் அமைந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளத் தெளிவான உண்மையாகும்.

## திருமறை தரும்<br>அறிவியல் உண்மை

இன்னும் சுருக்கமாகச் சொல்வோமானால், இஸ்லாமிய நெறிகளின் வனப்பையும் வலுவையும் இன்றைய விஞ்ஞான உண்மைகளே மெய்ப்பித்து உறுதிப்படுத்தி வருகின்றன.

சான்றாக, ஒவ்வொரு முஸ்லிமும் தன் மறுமை நாளின் மீது அழுத்தமான நம்பிக்கை கொள்கிறான். இறுதித் தீர்ப்பின்போது அவரவர் செயல்களுக்கேற்ப இறைவனின் தண்டனையும் வெகுமதியும் அமையும்.

அந்த இறுதித் தீர்ப்பு நாளின்போது விசாரிக்கப்படும் ஒவ்வொரு மனிதனும் அவனது ஒவ்வொரு உறுப்பும் சாட்சியளிக்கும் என்பதைப் பற்றி, திருமறை.

"மறுமையில் மனிதனின் ஒவ்வோர் உறுப்பும் அவனுடைய உடல்தோறும் பேச ஆரம்பிக்கும். அவை இவ்வுலகில் மனிதன் செய்த ஒவ்வொரு செயலைப் பற்றியும் ஓர் அணுவும் விடாமல் அப்படியே ஒப்புவிக்கும். மனிதனுக்கு அவனுடைய உடல் உறுப்புகளே சாட்சி பகரும்." (திருக்குர் ஆன்) எனத் தெளிவாகக் கூறுகிறது.

இதனை முழுமையாக எண்பிக்கும் அறிவியல் கண்டுபிடிப்பொன்றைக் கண்டறிந்துள்ளார் அமெரிக்க விஞ்ஞானி டாக்டர் ஆர்லன் கார்னே என்பவர். அவரது கண்டுபிடிப்புச் செய்தி 30-5-1984 அன்று வெளியான 'டைம்ஸ் ஆஃப இண்டியா' இதழில் வெளிவந்துள்ளது.

"செவிப்பறை கிழிந்து விட்டாலோ, கடுமையான நோய்வாய்ப்பட்டாலோ பிறகு காதுகளால் ஒலிகளைக் கிரகிக்க முடியாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விஷேச மாகத் தயாரிக்கப்பட்ட சில எலெக்ட்ரானிக் இயந்திரங் களின் துணைகொண்டு உடல் தோலையே காதுகளாகப் பயன்படுத்தலாம்" என்பது அவர் கூற்று. இந்தப் புதிய முறைக்கு அவர் 'ஸ்கின் ஸ்பீச்' (Skin Speech) எனப் பெயரிட்டுள்ளார்.

ஒவ்வொரு மனிதனும் பேசும் பேச்சொலியை உடலின் தோல்களே ஒலிப்பதிவு செய்து கொள்கின்றன. மின்னணுப் பொறியின் துணை கொண்டு பதிவான ஒலிகளை மீண்டும்

கேட்க முடியும் என்பது இன்றைய அறிவியல் கண்டு பிடிப்பு. இதே உண்மையைத்தான் திருமறையும் தெளிவாக 'மறுமையில் மனிதனின் ஒவ்வோர் உறுப்பும் அவனுடைய உடல்தோறும் பேச ஆரம்பிக்கும்' எனக் கூறுகிறது.

இவ்வாறு, விஞ்ஞான நுட்பத்தின் அடிப்படையில் இறைமார்க்கமான இஸ்லாம் அமைந்துள்ளது என்பதை, பெருமானாரால் வளர்ச்சிக்கு வழி கோலப்பட்ட விஞ்ஞான உண்மைகளே எண்பித்து வருகின்றன என்பது அறிவுக்கு விருந்தூட்டும், நெஞ்சினிக்கும் செய்தியாகும்.

*நன்றி: தமிழ் முஸ்லிம் ஜமாத் தகவல் மடல் (சிங்கப்பூர்)*

# பெருமானார் போற்றிய எளிமையும் சிக்கனமும்

*அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பிறந்த நாள் விழா நானிலம் எங்கும் உள்ள மக்களால் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகெங்கும் வாழும் 125 கோடி முஸ்லிம்களும் பிறரும் பெருமானாரின் வாழ்வையும் வாக்கையும் நினைவு கூர்ந்து போற்றுகின்றனர்.*

**போதித்தவர் மட்டுமல்ல
வாழ்ந்து காட்டியவர்**

*அண்ணலார் பெருமானார் (சல்) அவர்கள் இறை நெறியை மட்டும் போதிக்க வந்தவர் மாநபி அன்று. மறை கூறும் இறை நெறியை மனித குலத்துக்குச் செயல் வடிவில் வாழ்ந்து காட்டவும் வந்தவராவார். ஆகவே தான், இறைவன் தன் திருமறையில் "அவனிக்கோர் அருட்கொடையான அண்ணலாரை அழகிய முன்மாதிரியாக இவ்வுலகுக்கு அனுப்பியுள்ள"தாகத் தன் திருவேதமாகிய திருக்குர் ஆனிலே கூறியுள்ளான்.*

**எளிமைச் சிறப்பும்
சிக்கனப் பண்பும்**

*அண்ணலாரின் வாழ்க்கையின் எந்தப் பகுதியைப்*

புரட்டிப் பார்த்தாலும் அங்கே நீக்கமற நிறைந்திருக்கும் பண்பு எளிமைத் தன்மையாகும். வாழ்க்கையில் எத்தனைப் படித்தரங்கள் உண்டோ அத்தனைப் படித்தரங்களிலும் வாழ்ந்து காட்டிய இம்மனிதப் புனிதர், தொடக்கம் முதல் இறுதிவரை எளிமையின் உருவமாகவே வாழ்ந்து மறைந்த வராவார். ஏழைச்சிறுவராக வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, பெருஞ்சொத்துக்கு அதிபதியாக - அன்னை கதீஜா பிராட்டி யாரின் கணவராக-மாபெரும் இஸ்லாமியப் பேரரசின் தலைமைப் பொறுப்பைப் பெற்றவராக வாழ்ந்த காலத் திலும் இவரை ஆடம்பரப் போக்குகள் அணுகியதே இல்லை. எளிமையின் உருவமாகவே வாழ்ந்து வழிகாட்டிச் சென்ற வர் அண்ணல் நபி (சல்) அவர்கள்.

ஆடம்பரமற்ற எளிமையான சிக்கன வாழ்க்கை என்றால் அது கருமித்தனமாக வாழ்வது அல்ல. சிக்கனம் வேறு, கருமித்தனம் வேறு, நல்ல காரியங்களுக்கும் உன்னத மான நோக்கங்களுக்கும் நாம் வாரி வழங்க வேண்டும். அதே சமயத்தில், வீண்செலவுகளைப் பொருத்தவரை, அவற்றைச் சுருக்கி, சிக்கனப்படுத்த வேண்டும் என்பதுதான் பெருமானார் போதனை.

எளிமையின் எல்லைக்கோட்டில் வாழ்ந்த மனிதப் புனிதர் மாநபி அவர்கள் மண்ணால் கட்டப்பட்ட சிறிய அறைகளிலேயே வாழ்ந்து வந்தார்கள். அந்த வீட்டின் கூரை பேரீச்ச மர ஓலைகளாலேயே வேயப்பட்டிருந்தன. அண்ணலாரின் ஆடைகள் முரட்டுத்துணியாலானதாகவே இருக்கும். அவர்களின் படுக்கை மிகவும் எளிமையாக இருக்கும். பெருமானாரின் உடலில் படுக்கைப் பாயின் அழுத்தல் அடையாளங்கள் காணப்படுவதுண்டு அவரது படுக்கையில் சாதாரண தலையணையே இருக்கும்.

எளிமையின் இலக்கணமாக வாழ்ந்த பெருமானார் விரும்பியிருந்தால் ராஜபோகமாக வாழ்ந்திருக்க முடியும்

அரபு நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்த பெருமானார் எத்தகைய ஆடம்பர வாழ்வையும் அனுபவித்திருக்க முடியும். ஆனால், எளிய வாழ்வே இன்பம் எனக் கொண்ட பெருமானாரின் இறுதிக் காலத்தில் அவரிடம் எஞ்சியிருந்தவை பழைய கட்டில், பழுதடைந்த ஈச்சம் பாய், பழைய கம்பளிப்போர்வை, சில சில்லரைப் பாத்திரங்கள் மட்டுமே.

இவ்வாறு எளிமையான, சிக்கனமான வாழ்க்கையைத் தான் மேற்கொண்டிருந்ததோடு அவற்றை மற்றவர்களையும் வாழத்தூண்டி வழிகாட்டியவர் அண்ணல் நபி (சல்) அவர்கள்.

### அண்ணலார் அடிச்சுவட்டில் ஔரங்கசீப் ஆலம்கீர்

இதே அடிப்படையில் தன் சிக்கனம் மிகுந்த எளிய வாழ்வைப் பெருமானார் பெருவழியில் வாழ்ந்து காட்டி மறைந்தவர் பாரத நாட்டின் பெரும் பகுதியை ஆண்டு வந்த ஔரங்கசீப் ஆலம்கீர் என்பதை வரலாறு நமக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. தான் நாட்டின் சக்கரவர்த்தியாக இருந்த போதிலும் அரசுப் பணத்தை அறவே தொடாது. தானே உழைத்து, தொப்பி தைத்தும் திருக்குர்ஆனுக்குப் படியெடுத்தும் அதனால் வரும் வருவாயைக் கொண்டு மட்டுமே தன் சொந்த வாழ்க்கைச் செலவுக்குப் பயன்படுத்தினார் ஔரங்கசீப் சக்கரவர்த்தி அவர்கள்.

### உழைப்பைப் போற்றிய உத்தமத் திருநபி

எளிமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெருமானார் உழைப்பின் உன்னதத்தைத் தம் வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் உணர்த்தத் தவறவில்லை.

இறைவணக்கத்துக்கு அடுத்தபடியாகப் .பெருமானா

ரால் பெரிதும் போற்றப்பட்ட பண்பு உழைத்து உண்ணும் பண்பாகும். ‘கடுமையாக உழைத்து அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு, தானும் உண்டு, தன் குடும்பத்தையும் வாழச் செய்பவன் மீது இறைவன் தன் கருணையைப் பொழிகிறான்’ எனக் கூறியுள்ளார். இத்தகைய உழைப்பாளிகளே சமுதாய முன்னேற்றத்தின் உந்து சக்திகள் என்பது நாயகத் திருமேனியின் உட்கிடக்கையாகும். இதனை இனிது விளக்கும் அரிய நிகழ்ச்சியொன்று பெருமானார் வாழ்வில் நடைபெற்றது.

ஒரு சமயம் பெருமானார் அவர்கள் பள்ளிவாசலில் தம் தோழர்களுடன் அமர்ந்திருந்தார். வழக்கமாகப் பள்ளிக்கு வருபவர்கள் பெருமானாரின் கரம் பற்றி முத்தமிட்டுச் செல்வது வழக்கம். அன்று வழக்கத்துக்கு மாறாக, தன் கரம் பற்றிய காட்டரபி ஒருவரின் கரத்தைப் பெருமானார் இறுகப்பற்றி, அக் கையை மகிழ்ச்சி பொங்க முத்தமிட்டார்கள். அந்த முரட்டுக் காட்டரபி அங்கிருந்து சென்ற பின்னர், “தங்கள் கையை பிறர் முத்தமிடுவது தான் வழக்கம். ஆனால், அந்த முரட்டுக் காட்டரபியின் கரத்தை இன்று தாங்கள் முத்தமிட்டதற்கு சிறப்பான காரணம் என்ன?” என்று வினவினார்கள்.

அதற்குப் பெருமானார் அவர்கள் “நீங்கள் என் கைகளைத் தொடும்போது, உங்கள் கைகள் மிருதுவாக இருக்கும். அதிகம் உழைக்காததால் அவ்வாறு இருப்பது இயற்கையே. ஆனால், இன்று அந்தக் காட்டரபி என் கரத்தைப் பற்றியபோது மிகவும் முரடாக இருந்தது. அவரது உள்ளங்கையைத் தடவிப் பார்த்தேன். மிகவும் சொர சொரப்பாக இருந்தது. கைகளால் மிகக் கடுமையாக உழைத்திருந்தாலொழிய உள்ளங்கை காய்ப்புக் காய்க்க வழியில்லை. அப்படிப்பட்ட உழைக்கும் கரத்தை முத்தமிடுவது, அதனைப் பாராட்டிப் போற்றுவது இறைவனுக்கு அடுத்த நிலையில் போற்றத்தக்கது உழைப்பு மட்டுமே”

எனக் கூறி உழைப்பின் மேன்மைமை உணர்த்தினார் பெருமானார் அவர்கள்.

## உழைப்பும் ஒருவகை இறைவணக்கமே

மற்றொரு சமயம் பெருமானார் முன்பாக ஒரு விவாதம் நடைபெற்றது. "இஸ்லாமியத் தோழர் ஒருவர் எப்போதும் இறைச் சிந்தனையிலேயே லயித்தபடி உள்ளார். ஐவேளைத் தொழுகையோடு அமையாது பகல் இரவு எந்நேரமும் இறை வணக்கத்திலேயே நாட்டமுடையவராக இருக்கிறார். யாரோடும் அதிகம் பேசுவதுமில்லை. வணக்கத் தலத்தை விட்டு வெளியே சுற்றித் திரிந்து எவ்வித வெளி இன்பத்தை நுகர்வதுமில்லை. இறைச் சிந்தனைக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்த இறையடியாராக உள்ளார்" என நபித் தோழர்கள் புகழ்ந்து பேசி, "இவர் எல்லோரிலும் மேம் பட்டவர் அல்லவா?" என வினவினர்.

இதைக்கேட்ட பெருமானார் அவர்கள் "இத்தொழுகை யாளி உணவுக்கு என்ன செய்கிறார்?" என்று தம் தோழர் களை நோக்கிக் கேட்டார். அதற்கு நபித் தோழர்கள், "இவருக்கு ஒரு தம்பி உண்டு. இவருக்கும் இவரது குடும்பத் தினருக்கும் வேண்டிய உணவை அத் தம்பிதான் உழைத்துச் சம்பாதித்து அளித்து வருகிறார். அவர் ஐவேளைத் தொழுகைக்கு மேல் தொழுவதில்லை" என்று கூறினர்.

இதைக் கேட்ட பெருமானார் "அண்ணனினும் மேலானவர் அவர் தம்பி தான். மேலும், தம்பிக்கே சுவனப் பேரின்பமும் இறைவனால் வழங்கப்படும். ஏனெனில், கடுமையாக உழைத்து உண்பதை, பிறருக்கு உண்ணக் கொடுப்பதையே இறைவன் மிகவும் விரும்புகிறான். அவர்களே இறையருளைப் பெறத் தகுதி படைத்தவர்கள், இறைவன் பார்வையில் மேன்மைமிக்கவர்கள்" எனக் கூறி உழைப்பின் மேன்மையை, உழைத்துண்ணும்

*இன்பத்தையே உயரிய இன்பம், அதுவும் ஒரு வகையான வணக்க முறையே என்பதை உணர்த்தினார் பெருமானார் அவர்கள்.*

**உழைப்பின் பயனை அனுபவிக்கும்**
**உரிமை உழைப்பாளிகட்கே யுண்டு**

*அது மட்டுமல்ல, சிலர் உழைப்பதும் அவ்வுழைப்பின் பலனைப் பலர் அபகரித்து அனுபவிப்பதையும் இஸ்லாம் எதிர்க்கிறது. உலகில் எழும் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஊற்றுக் கண்ணாக விளங்கும் இச்சுரண்டல் வாழ்க்கையைப் பெருமானார் கடுமையாக எதிர்க்கிறார். உழைப்பின் பலனை முழுமையாக அனுபவிக்கும் உரிமை உழைப்பாளிகட்கே உண்டு என முழங்குகிறது இஸ்லாம்.*

*"உழைத்துத் தொழில் செய்யும் இறையடியார் மீது இறைவன் அளவற்ற அன்பு காட்டுகிறான். உழைத்துத் தொழில் செய்யாது, பிறர் உழைப்பைச் சுரண்டி வாழ்வோர் மீது இறைவன் கடுங்கோபம் கொள்கிறான்." என அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.*

*இவ்வாறு என்றென்றும் போற்றிப் பின்பற்றத்தக்க உயரிய வாழ்க்கைப் பண்புகளைச் செயல் வடிவாக உலகத்துக்கு உணர்த்தி வழிகாட்டிச் சென்றவர் பெருமானார்.*

*நன்றி: அனைத்திந்திய வானொலி நிலையம், சென்னை.*

# ஈத்துவக்கும் இன்பத் திருநாள்

**வணங்குங்கள்**
**வழங்குகள்**

ரமளான் பெருநாள். உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினரான முஸ்லிம் பெருமக்கள் உலகளாவிய முறையில் மகிழ்வோடும் பூரிப்போடும் கொண்டாடி மகிழும் பெருநாள்.

ரமளான் மாதம் முழுமையும் மிக அதிகமான இறை வணக்கங்களில் ஈடுபட்டும் பகல் முழுமையும் ஒரு சொட்டு நீலம் பருகாமல் நோன்பு நோற்றல். இல்லாதோருக்கு ஏழையின் பங்கான ஜகாத் எனும் தானத்தை வாரி வழங்கி யும், இறையருளைப் பெற்ற பெருமிதத்தோடும் பெரு நாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இம்மாதம் இறைமறையாகிய திருக்குர்ஆன் பிறந்த புனித மாதமாகவும் போற்றப்படுகிறது. இம்மாதத்தில் வழக்கமான ஐவேளைத் தொழுகையோடு, ஒவ்வொரு நாள் இரவிலும் 'தராவீஹ்' எனும் சிறப்புத் தொழுகையும் முஸ்லிம்களால் நடத்தப்படுகிறது. இறைமறை பிறந்த இரவாக கருதப்படும் 'லைலத்துல் கத்ர்' இரவு முழுமையும்

இறை வணக்கமும் இறை தியானமும் செய்யப்படுகிறது. இம்மாதம் முழுமையும் அதிக அளவில் இறை வணக்கங்கள் நிறைவேற்றப்படுவதால் ஒவ்வொரு முஸ்லிம் உள்ளமும் இறையுணர்வால் பொங்கிப் பொழிகிறது. மறை வகுத்த இறைநெறி இம்மியும் பிசகாது வாழ்ந்து இறையருளைப் பெற ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளமும் அவாவுகிறது. உறுதி கொள்கிறது. இதற்கேற்ப உள்ளத்தையும் உடலையும் பக்குவப்படுத்தும் பயிற்சிக்களமாக ரமளான் மாதம் அமைகிறது.

'ரமளான்' என்ற சொல்லுக்கு 'சுட்டெரித்தல்', 'பொசுக்குதல்,' 'கரித்தல்' எனப் பல பொருள்கள் உண்டு.

ஒவ்வொரு முஸ்லிமும் இம்மாதத்தில் மேற்கொள்ளும் சிறப்புத் தொழுகைகள், நோன்பு, ஜகாத் எனும் ஏழைவரி வழங்கல் ஆகிய செயற்பாடுகளால் தங்கள் மேல் படியும் தீய உணர்வுகளை, தீமைகளைச் சுட்டெரித்து மனிதப் புனிதனாகிறார்கள.

இறைமறையாகிய திருக்குர் ஆன் இறை வணக்கமாகிய தொழுகையைப் பற்றிக் கூறும்போதெல்லாம், கூடவே ஜகாத்தையும் குறிப்பிடுகிறது. இதிலிருந்து தொழுகைக்கு அடுத்த முக்கியத்துவத்தை ஜகாத் எனும் ஏழைவரி பெறு வது இனிது புலனாகிறது. 'வணங்குங்கள் 'வழங்குகள்' என்பது இஸ்லாத்தின் அடிப்படை அம்சமாகும்.

**வசதி படைத்தோர் வழங்கும்**
**வருமான வரி 'ஜகாத்'**

ஏழை வரியாக, ஏழைக்குரிய பங்காகக் கருதப்படும் ஜகாத் ஒருவகையில் வசதிப் படைத்தோர் செலுத்தும் வருமான வரி போன்றதாகும். எனினும் ஜகாத் என்பது நாம் அரசுக்குச் செலுத்தும் வரி வகைகளில் ஒன்றைப் போன்ற தன்று. இறைவன் அளித்த பொருளை, இறைக் கட்டளைப்

படி, இறைவழியில் செலவு செய்யும் புனிதச் செயலாகும். இறைவன் பெயரால் வழங்கும் இச்செலவின் அளவுக் கேற்ப பன்மடங்குப் பயனை இறைவன் ஜகாத் வழங்கிய வருக்கு வழங்குகிறான்.

உலகில் உள்ள சமயங்கள் அனைத்துமே ஏழை எளியோர்க்குத் தான, தருமம் செய்யப் பணிக்கின்றன. இறையருள் பெற அதுவும் ஒரு வழி எனப் போதிக்கின்றன. ஆனால், இஸ்லாம் இத்தகைய தான, தருமங்களை முறைப் படுத்தி கட்டாயக் கடமையாக்கி, அவற்றை யார் யாருக்கு எவ்வகையில் வழங்குவது என்பதற்கான வழிவகைகளை யும் செம்மையாக அமைத்துள்ளது.

புனிதமிகு ரமளான் பெருநாள் ஏழை எளியோர்க்கு ஈத்துவக்கும் திருநாளாகவும் அமைந்துள்ளது. ஜகாத் முறையானது உண்மையிலேயே 'ஏழையின் சிரிப்பில் இறை வனைக் காணும்' அரிய வாய்ப்பை ஒவ்வொருவருக்கும் உருவாக்கித் தருகிறது.

### 'ஜகாத்' மூலம் பொருள் தூய்மை

'ஜகாத்' என்பது ஆன்மீகத் தொடர்பு கொண்ட பொருளியல் கடமை மட்டுமன்று. இஸ்லாத்தின் அதியற்புத பொருளாதாரக் கொள்கையுமாகும்.

தொழுகையாகிய இறை வணக்கத்தின் மூலம் மனித உள்ளம் இறையுணர்வால் பூத்துக் குலுங்குகிறது. மனமாசு அகல்கிறது. நல்லுணர்வுகளின் அடிப்படையில் நற்குணங் கள் பொங்கிப் பொழிகின்றன. இதனால் மனித மனம் மட்டுமல்லாது ஆன்மாவும் தூய்மை பெறுகிறது. அதே போன்றுதான் உழைத்துத் தேடிய பொருள் தூய்மையடைய குறிப்பிட்ட சதவீதத்தைக் கட்டாயமாக இல்லாதோருக்கு வாரி வழங்கப் பணிக்கிறது இஸ்லாம். இதன் மூலம் வழங்க விழையும் உள்ளமும் வழங்கப்படும் பொருளும்

*புனிதத் தன்மையடைகிறது. இதைப்பற்றி இறைவன் தன் திரு மறையில் "நபியே! அவர்களுடைய பொருள்களி லிருந்து ஜகாத்தை வசூல் செய்து நீர் அவர்களைத் தூய்மைப் படுத்தி பரிசுத்தமாக்கும்" (9:103) எனக் கூறுகிறான். இதற் கேற்ப 'தூய்மை' எனும் பொருளிலேயே 'ஜகாத்' எனும் அரபிச் சொல் அமைந் துள்ளது.*

ஜகாத்தும் சதக்காவும்

*இஸ்லாம் பிறருக்கு வழங்கும் பொருள் தருமத்தை இரு பிரிவுகளாகப் பகுத்து விதியாக்கியுள்ளது. ஜகாத், சதக்கா என்பவைகளே அவை. ஜகாத் என்பது செல்வந்தர்களின் சொத்தில் ஏழைகளுக்குரிய பங்காகும். சதக்கா என்பது ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய வேண்டி சாதாரண தருமமாகும்.*

*ஏழை வரியாகிய ஜகாத் பெருமானார் முஹம்மது நபி (சல்) அவர்கட்கும் முன்னதாக உலக மக்களுக்கு வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்ட இறை தூதர்கள் பலருக்கும் இறையாணையாக விதிக்கப்பட்டிருந்தது என்பதை இறை மறையாகிய திருக்குர்ஆன் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. அதே ஜகாத் முறை பெருமானார் (சல்) அவர்கட்கு திருத்த மான முறையில் இறையாணையாகத் தரப்பட்டது.*

*உழைப்பை உன்னதமாகப் போற்றும் இஸ்லாம், அவ்வுழைப்பின் மூலம் சம்பாதிக்கும் வருமானமும் நேரிய வழியில் நியாயமான சம்பாத்தியமாக இருக்க வேண்டும் எனப் பணிக்கிறது. இவ்வாறு ஆகுமான ஹலாலான வருமானமே ஜகாத் கடமைக்குரியதாகும். இத்தகைய வருமானத்திலும் கவனக் குறைவால் தெரிந்தோ தெரியா மலோ ஏதேனும் தவறான வருமானம் வந்து சேர்ந்திருப்பின் 'ஜகாத்' வழங்குவதன் மூலம் அத் தவறும் முற்றாகத் துடைக்கப்பட்டுவிடுகிறது. சொத்தும் தூய்மை பெறுகிறது.*

மனித குலம் முழுவதையும் ஒரே இனமாகப் பாவிக்கப் பணிப்பது இஸ்லாமிய மார்க்கம் அறிவாற்ற லாலும் உழைப்புத் திறனாலும் பொருளீட்டி பொருளாதார வசதி யோடு வாழும் செல்வந்தர்கள், பொருளாதாரத்தில் தாழ் நிலையடைந்த ஏழை, எளிய மக்களின் இடர்களை கலை வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். அவ் வேழை மக்களையும் உடன்பிறந்த சகோதரர்களாகக் கருதி, பொருளுதவி செய்து, அவர்தம் பொருள் வள உயர்வுக்குத் துணை நிற்க வேண்டும். அப்போதுதான் ஒரே குலமாகக் கருதிப் போற்றப்படும் மனித இனம் ஏற்றத் தாழ்வுகளை அகற்றிப் பொருளியல் சமநிலை பெறமுடியும்.

இதன்மூலம் ஒவ்வொரு முஸ்லிமும் தனக்காக மட்டும் வாழும் தன்னல உணர்வுக்கு மாறாகப் பிறர்க்கென வாழும் பேராண்மையாளனாகவும் மாறி வாழும் தாராள மனதைப் பெற முடிகிறது.

### தனிவுடைமையில் பொதுவுடைமை

ஒவ்வொரு முஸ்லிமும் முயன்று உழைத்துப் பொரு ளைத் தானாகத் தேடிச் சேமிக்கிறான். ஆனால், அச்செல் வம் முழுமையும் அவனுக்கே சொந்தம் என இஸ்லாம் கருதவில்லை. அச்செல்வத்தோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத எங்கோ இருக்கும் ஏழை, எளியோர்க்கு அச்சொத் தில் பங்குண்டு என விதிக்கிறது இஸ்லாம். அந்தப் பங்குத் தொகையாகிய ஜகாத் தொகையை இடது கை தருவது வலது கைக்குக் கூடத் தெரியாவண்ணம் கொடுக்கப் பணிக் கிறது இஸ்லாம். இதன் மூலம் உணர்வு அளவில் மட்டு மல்லாது செயலளவிலும் மனித குலம் முழுமையும் ஒரே இனம் என்பதையும் அவர்களிடையே ஏற்படும் பொருளா தார ஏற்றத்தாழ்வுகளை அவர்களே நிறைவு செய்து சமப் படுத்தி, சமத்துவ நிலையடைய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமின்

தனியுடைமையானது சமுதாயத்தின் பொது வுடைமை எனும் உயர்நிலை அடைகிறது.

ஜகாத் கடமையை செவ்வனே நிறைவேற்றும் முஸ்லிம் தான் வாழும் சமுதாயத்துக்காகத் தங்கள் சொந்த நலனை, பொருளைத் தியாகம் செய்யும் மன உணர்வை அழுத்தமாகப் பெறுகிறான். இத் தியாக உணர்வு சமுதாயச் சமத்து வத்தையும் சகோதரத்துவத்தையும் உறுதிப்படுத்து கிறது. செல்வர்களிடம் குவியும் சொத்து ஜகாத் மூலம் குறைக்கப்படுவதால் பொருட் குவிப்பும் தடுக்கப்படுகிறது.

ஜகாத் முறையின் மூலம் செல்வந்தருக்கும் ஏழைக்கு மிடையேயுள்ள இடைவெளி நீக்கப்படுகிறது. இரு சாராரும் இணைந்து நின்று நலம் பெறும் நந்நிலை உருவா கிறது. இதன் மூலம் மனிதத் தன்மை மாண்புறுகிறது.

இனி, ஏழை வரி அல்லது ஏழையின் பங்காகிய ஜகாத் எத்தகைய அடிப்படையில் கணக்கிடப்பட்டு, வழங்கப்படு கிறது என்பதை பார்ப்போம்.

### ஜகாத்துக்கு உரியவைகளும் பங்கீட்டு முறைகளும்

முதலாவது ஜகாத்துக்குரிய சொத்து அல்லது வருமானத்தின் கால அளவு ஓராண்டு ஆகியிருக்க வேண் டும். ஓராண்டுக்குக் குறைந்த சொத்திலிருந்து ஜகாத் தொகை பிரித்தெடுக்கப்படுவதில்லை.

ஒரு முஸ்லிம் தனது ஆண்டு வருமானத்தில் தன் செலவு போக மீந்துள்ள தொகையின் அளவைக் கணக் கிட்டு ஜகாத் வழங்க வேண்டும். அவ்வாறு, மீந்துள்ள தொகையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கும் குறைவாக இருப் பின் அவர்கட்கு ஜகாத் கடமையாவதில்லை. அதாவது 90 கிராம் தங்கம் அல்லது 620 கிராம் வெள்ளி அல்லது இவை

இரண்டின் மதிப்புக்குச் சமமான அல்லது அதற்கு மேலுள்ள தொகைக்கு நாற்பதில் ஒரு பங்கு என்ற விகிதத்தில் பங்கிட்டு ஜகாத் வழங்கப்படவேண்டும் என இஸ்லாம் விதிக்கிறது. குடியிருக்கும் வீட்டிற்கும் அன்றாடம் பயன்படுத்தும் பண்ட பாத்திரங்கள் போன்ற பொருட்களுக்கும் இச் சொத்து மதிப்பிலிருந்து விலக்கு உண்டு. இரண்டரை சதவீத ஜகாத் என்பது விளை பொருட்களைப் பொருத்த வரையில் சிறிது வேறுபாடு உண்டு. புன்செய் பயிர் வருமானத்துக்கு இரண்டரை சதவிகித ஜகாத் என்றால் நன் செய் பயிர்கட்கு ஐந்து சதவீத ஜகாத் உண்டு.

இத்தகைய ஜகாத்தைப் பெற தகுதியுடையோர் யாரெல்லாம் என்பதையும் இஸ்லாம் தெளிவாக வரை யறுத்துக் கூறியுள்ளது.

## ஜகாத் பெறத் தகுதியுடையோர்

ஒரு முஸ்லிமின் செல்வத்திலிருந்து நாற்பதில் ஒரு பங்கை ஜகாத்தாகப் பெறும் உரிமையுடையவர் எட்டு வகையினர் என அவர்களை இஸ்லாம் இனம் பிரித்துக் கூறுகிறது. முதல் பகுதியினர் தங்களது வாழ்க்கைப் பிறர் துணையின்றி நகர்த்த இயலாத 'ஃபக்ர்' எனும் வறியவர்கள். இவர்கள் வறுமை வாய்ப்பட்டபோதிலும் பிறரிடம் கையேந்தி நிற்க அஞ்சும் பகுதியினர்; அநாதைகளைப் போலுள்ள பரம ஏழைகள்; மூன்றாம் பகுதியினர், செல்வர்களிடமிருந்து ஏழை எளியவர்கட்காக ஜகாத்தை வசூலிக்கும் பணியில் ஈடுபடுபவர்கள்; இவர் தாங்கள் வசூலிக்கும் ஜகாத் தொகையில் எட்டில் ஒரு பங்கைப் பெற தகுதியுடையோராவர். நான்காம் பகுதியினர், இஸ்லாத்தில் புதிதாகத் தங்களை இணைத்துக் கொண்டதுடன் இஸ்லா மிய நெறிமுறைகளை மேலும் மேலும் தெரிந்து கொள்ள அவாவும் புதிய முஸ்லிம்கள். இவர்கள் தங்கள்

தேவைகளை நிறைவு செய்துகொள்ள ஜகாத் தொகையைப் பெற உரிமையுடையோராகின்றனர். ஐந்தாம் பகுதியினர், கொத்தடிமை போன்றோர், தங்கள் அடிமைத் தளையி லிருந்து விடுதலை பெற ஜகாத் பொருளுதவி பெற தகுதி யுடையோராவர். ஆறாவது பகுதியினர் சமுதாய நலன் பொருட்டுக் கடன்பட்ட கடனாளிகளும் ஜகாத் தொகைக்கு உரிமையுடையோராவர். ஏழாவது பகுதியினர், இறை நெறி யின்பால் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டோ ரும் இறைவழிக்கு மக்களை அழைத்து செல்ல விழையும் இறை மார்க்க அழைப்பாளர்களும் ஜகாத் தொகைக் குரியோர் ஆவர். நல்ல நோக்கத்தில் பயணம் மேற்கொண் டுள்ள பயணிகள் இடை வழியில் பொருள் தட்டுப் பாட்டுக்கு ஆளாகி வருந்தி நிற்கும் வழிப் போக்கர்கள் ஜகாத் தொகை பெற தகுதியுடையோராவர்.

ஜகாத்' தொகை
வசூலு ம் விநியோகமும்

ஜகாத் தொகை எவ்வாறு வசூலிக்கப்பட வேண்டும், எவ்வகையில் உரியோர்க்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்பதற்கும் தெளிவான வழிமுறைகளை இஸ்லாம் வகுத்துக் கூறுகிறது.

தொடக்கக் காலத்திலிருந்து இஸ்லாமிய அரசுகளே செல்வந்தர்களிடமிருந்து ஜகாத் தொகையை வசூலித்து, அத்தொகைக்குரியோர்க்குப் பங்கிட்டு அளித்து வந்தது. இதன் மூலம் ஜகாத் கொடுப்போரும் வாங்குவோரும் மறைபொருளாயினர். இடைக்காலத்தில் ஜகாத்தை நேரி டையாகவே வழங்கிக் கொள்ளும் பழக்கம் எப்படியோ தலைதூக்கி நிற்கலாயிற்று. தற்போது இந்நேரடி முறை இஸ்லாமிய நெறிக்கு முரணானது என்பதை உணர்ந்த இஸ்லாமிய நாடுகள் இஸ்லாமிய நெறி முறைக்கேற்ப

வசதி படைத்தோரிடமிருந்து ஜகாத் வசூல் செய்து உரியோர்க்கு வழங்கி வருகிறது. இஸ்லாமிய அரசு இல்லா நாடுகளில், ஊர்தோறும் குழு அமைத்து ஜகாத் வசூல் செய்து, உரியோர்க்கு குழுவே கொடுத்து வருகிறது. இவ்வாறு செய்வதற்கு அரசமைப்புச் சட்டமோ அல்லது ஊர் அமைப்புகளோ எவ்விதத் தடையும் விதிக்கவில்லை. ஜமாத்தாகத் தொழும் கூட்டுத் தொழுகை போன்று ஜகாத் கடமையும் கூட்டாக நிறைவேற்றப்படுகிறது. இதன் மூலம் இறைநெறி வகுத்த ஜகாத் முறை உரிய முறையில் நிறை வேறி, கீழ்த்தட்டு மக்களின் வாழ்வில் மலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் உருவாக்கத் துணைபுரிகிறது.

ஃபித்ரா தருமம்

ஃபித்ரா எனும் தானத்தின்படி இப்புனித ரமளான் பெரு நாளன்று தொழுகை நடத்த பள்ளிவாசல் செல்லு முன் 2 கிலோ கோதுமையை அல்லது அதற்குரிய தொகையை யாரேனும் ஏழை எளியோர்க்குத் தருமமாகத் தந்த பின்னரே பள்ளிவாசலில் தொழுகை நடத்த வேண்டும். இதன் மூலம் பெருநாள் அன்று எல்லோரும் உண்டு களித்துக் கொண்டாட முடிகிறது. அத்தொழுகையே இறைவனால் மகிழ்ச்சியோடு ஏற்கப்படுகின்றது. இதனால்தான் ரமளான் பெருநாள் 'ஈதுல் ஃபித்ர்' என அழைக்கப்படுகிறது.

நன்றி: அனைத்திந்திய வானொலி
நிலையம், சென்னை.

# இஸ்லாமிய இறைமறை பிறந்தது எவ்வாறு?

### இறை தந்த திருவேதம்

இஸ்லாமிய நெறியானது இறைமறையாகிய திருக்குர் ஆனை அடியொற்றி அமைந்த மார்க்கமாகும். இவ்வேதம் இறைவனால் அவனது திருத்தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு வல்ல அல்லாஹ்வால் அருளப்பட்டதாகும்.

எழுதப் படிக்க அறவே தெரியாத பெருமானாருக்கு இத்திருமறை இறைவனால் எவ்வாறு அருளப்பட்டது?

நபிகள் நாயகம் (சல்) முப்பத்தெட்டு வயதை எட்டிய போது தம்மைச் சுற்றி வாழ்ந்துவரும் மக்களின் வாழ்வில் மிகுந்திருந்த சமூக ஒழுக்கக் கேடான செயல்களைக் கண்டு மிகவும் மனம் வருந்தினார். தம்மைச் சுற்றிப் பரவிக்கிடந்த அறியாமை, ஒழுங்கீனம், சீர்குலைவு, இறைவனுக்குக இணைவைத்தல் போன்ற சமூகக் கேடுகள் ஒழிய வழி தேடி, ஹிரா குகையில் அமர்ந்து, பசியடக்கி, தன் ஆன்மாவையும் இதயத்தையும் சிந்தனையையும் பரிசுத்தமாக்க முனைந் தார். திருந்திய உலகு காண விரும்பினார். தனிமைத் தவ வாழ்வை மேற்கொண்டார்.

## இறைச் செய்தி வெளிப்பட்ட பாங்கு

தனிமைத் தியானத்திலிருக்கும் பெருமானார் முன் சில சமயம் விண்ணில் ஒளித்திரள்கள் ஒருங்கு திரண்டு தோன்றும். அவற்றை அவர் வியப்போடு உற்றுநோக்கும் போது மறைந்துபோகும். மெல்லிய குரலில் யாரோ பேசுவது போன்று தெளிவில்லாமல் கேட்கும். செவிமடுத்து உற்றுக் கேட்கும்போது அவ்வொளி நின்றுபோகும். அடிக்கடி தனக்கு ஏற்படும் இவ்விநோதமான அனுபவத்தை பெருமானார் யாரிடத்தும் கூறியதில்லை.

நபிகள் நாயகம் (சல்) நாற்பது வயதடைந்த நிலையில் ஹிரா குகையில் தனிமையில் தியானத்திலிருந்தபோது, 'காப்ரியேல்' எனப்படும் வானவர் தலைவராகிய ஜீப்ரீல் (அலை) அவர்கள் மானிட வடிவில் மின்வெட்டுப்போல் நாயகம் முன்பாகத் தோற்றமளித்து 'தீன் நெறி பெற தவமிருக்கிறீர்களோ? எனக் கூறி மறைந்தார். நபிகள் நாயகம் வியப்பும் திகைப்பும் அடைந்தார்.

ஹிரா குகையில் மறுநாள் இரவும் பெருமானார் முன்தோன்றிய ஜிப்ரீல் (அலை) அவர்கள் 'என் உயிரிணையவரே, இன்னும் இங்குதான் இருக்கிறீரா? எனக் கூறி மறைந்தார். நபிகள் நாயகம் வியப்பிலாழ்ந்தார்.

மூன்றாவது முறையாக பெருமானார் முன் முழுமை யாகத் தோற்றமளித்த வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் "இறைவனின் திருத்தூதராக நியமிக்கப்பட்டுள்ள முஹம்மதே திருமறையை ஓதுவீராக" எனப் பணித்தார். எழுத்தறியாத பெருமானாரோ "படிக்காத நான் வேதம் ஓதுவது எங்ஙனம்?" என வினவினார். ஜிப்ரீல் (அலை) அண்ணலாரை அணைத்து, பின் திருமறையை ஓதுவீராக! எனக் கூறினார். பெருமானார் வாயைத் திறந்து ஓதத் தொடங்கினார். முதல் இறைவசனத் தெளிவும் உண்மைப்

பொருளும் பெருமானாரின் உள்ளத்தே புகுந்து நிறைந்தன; நிலைத்தன.

## முதல் இறைவசனம்

இவ்வாறு 'இக்ரஉ' எனத் தொடங்கும் நான்கு இறை மறை வசனங்கள் பெ்ருமானார் வாய் மூலம் முதன் முதலாக வெளிப்பட்டன.

முதல் இறைவசனம் வெளிப்பட்டது புனித ரமலான் 27 ஆம் நாள் (கி.பி 610, ஆகஸ்ட் 24ஆம் நாள்) 'லைலத்துல் கத்ர்' இரவாகும்.

இதன்பின் 40 வயதிலிருந்து பெருமானார் மறைவு வயதான 63ஆம் வயது வரை 23 ஆண்டுகள் சிறிது சிறிதாக வெளிப்பட்டு முழுமையடைந்தது. இதைப்பற்றி இறைவன் தன் திருமறையில், "மனிதர்களுக்கு நீர் சிறிது சிறிதாக ஓதிக் காண்பிக்கும் பொருட்டு இந்தக் குர்ஆனைப் பல பாகங் களாக நாம் பிரித்தோம். "அதற்காகவே இதனைச் சிறிது சிறிதாக இறக்கி வைத்தோம்." என அல்லாஹ் கூறியுள் ளான்.

## வஹீயாக வந்த இறைச்செய்தி

சில சமயம் பெருமானார்க்கு ஒலி வடிவில் இறைச் செய்தி வானவர் தலைவரால், இறைக் கட்டளைப்படி அறிவிக்கப்படும். வேறு சில சமயங்களில் ஒளி வடிவிலும், உருவ வடிவிலும் ஜிப்ரீல் (அலை) அவர்களால் இறைச் செய்தி அறிவிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு அறிவிக்கப் படுவது 'வஹீ'' என அழைக்கப்படுகிறது.

இவ்வாறு, சிறுகச் சிறுகப் பெறப்பட்ட இறை மொழிகளின் தொகுப்பே 'திருக்குர்ஆன்' என்னும் திருமறை.

பெருமானார் 63 வயதையடையும்போது இறப்பதற்குச் சின்னாட்கள் முன்பே இறைவனால் திருமறை முழுமையாக்கப்பட்டது. 23 ஆண்டுகள் இறைவனால் வானவர் தலைவரான ஜிப்ரீல் (அலை) மூலம் பெருமானார் பெற்ற இறைமொழிகளே 'திருக்குர்ஆன்'. இது யாராலும் இயற்றப் பட்டதல்ல. இறைவனால் அளிக்கப்பட்டது.

## திருத்தப்படா திருமறை

திருக்குர் ஆன் 114 அத்தியாயங்களைக் கொண்டது. 6666 வசனங்கள் உள்ளன. 86,430 சொற்களில் 3,22,671 எழுத்துகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. மொத்தம் 1,05,684 புள்ளிகள் உள்ளன. 1400 ஆண்டுகட்கு மேலாகியும் இத்திருக்குர்ஆனில் ஒரு புள்ளிகூட மாற்றப்படவோ திருத்தப்படவோ நீக்கப்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று முதல் இன்று வரை திருத்தப்படா திருமறையாக திருக்குர்ஆன் விளங்கி வருகிறது.

நன்றி: ஓம் சக்தி

# ஏன் வேண்டும் இறைச் சிந்தனை?

பாரிஸ் யுனெஸ்கோ தலைமையகம். யுனெஸ்கோ கூரியர் சர்வதேச ஆசிரியர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த சமயம். மாநாட்டில் பங்கு கொண்ட பிரதிநிதி களில் எட்டுநாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் முஸ்லிம்கள். பத்துநாட்கள் நடைபெறும் கூட்டம் வெள்ளிக்கிழமை மட்டும் சற்று முன்னதாக முடிந்து பிற்பகல் சற்று நேரந் தாழ்த்திக் கூடும். காரணம் இஸ்லாமியப் பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகைக்குச் சென்று வருவதற்காக இவ்வேற்பாடு.

அன்று வெள்ளிக்கிழமை. ஜும்மா தொழுகையை முடித்து ஹாலில் வந்து அமர்ந்தேன். எனக்கு முன்னதாக அங்கு வந்திருந்த பிரேசில் நாட்டுப் பிரதிநிதி பெனடிக்டோ சில்வா ஆர்வத்துடன் என்னிடம் இஸ்லாம் பற்றி உரையாடினார். எங்கள் பேச்சு பாரிஸில் உள்ள அழகான மசூதி பற்றியும் அங்கு நடைபெறும் ஜும்மா தொழுகை, ஐவேளைத் தொழுகையெல்லாம் பற்றியதாக இருந்தது. திடீரென நான் எதிர்பாராத கேள்வியொன்றை கேட்டார்.

"கிருஸ்தவர்களாகிய நாங்கள் வாரத்திற்கு ஒருமுறை ஞாயிறன்று சர்ச்சுக்குப் போகிறோம். ஆனால், முஸ்லிம்

களாகிய நீங்களோ ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகை நடத்துகிறீர்கள். இன்றைய விரைவுத்தன்மை மிகுந்த வாழ்க்கைச் சூழலில் இது இடராக இல்லையோ? இதனால் உங்கள் பணிகள் பாதிக்காதோ? சக்தியும் நேரமும் கூட விரையமில்லையோ? குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு முறை தொழுதால் போதாதோ?" என்ற வினாக்களைப் பாமரத்தனமாக அடுக்கிக் கொண்டே போனார்.

இத்தகைய வினாக்களை மார்க்க அறிவு குறைந்த இஸ்லாமிய இளைஞர்களில் ஒரு சிலர் கூட தொடுப்பதை இலைமறையாக அறிந்தவன் என்பதால் நண்பர் சில்வாவின் கேள்விக்கணைகள் எனக்கு வியப்பாகத் தோன்றவில்லை. அவரைப் பொறுத்தவரை நியாயமான கேள்வியுங்கூட! அதற்குரிய விடையளிப்பது என் கடமையாயிற்று.

சடங்கு அல்ல தடுப்புக் கேடயம்

இஸ்லாத்தைப் பொறுத்தவரை இறைவணக்கமாகி தொழுகை என்பது ஏதோ போகிற போக்கில் செய்து விட்டுப்போகிற வெறும் சடங்கு அல்ல. எக்காரணம் கொண்டும் மனிதன் தவறான வழில் செல்லாதவாறு தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்ளும் பாதுகாப்பு ஏற்பாடே ஐவேளைத் தொழுகை.

மனிதன் தவறின்றி வாழவேண்டுமானால் இறைவ னைப் பற்றிய உணர்வும் தவறு செய்தால் அவனது தண்டனைக்கு ஆளாவோம் என்ற அச்சமும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஆழமாகவும் அழுத்தமாகவும் படிந்திருத்தல் வேண்டும்.

ஒரு முஸ்லிம் அதிகாலை ஐந்து மணிக்கு கண்விழித்து உடல் சுத்தம் உள்ளத் தூய்மையோடு இறைவணக்கத்தில் ஈடுபடுகிறான். தொழும்போது இறைவன் முன்னிலையில் தான் வணங்கிக்கொண்டிருப்பது போன்ற மன உணர்வில் தன் தொழுகையை நிறைவேற்றுகிறான். அப்போது அவன் உள்ளம் இறையுணர்வாலும் இறைநெறிக்கு மாறுபட்டு

நடந்தால் அல்லாஹ்வின் கடுந்தண்டனைக்கு ஆளாவது நிச்சயம் என்ற உணர்வின் அடிப்படையில் உருவான இறையச்ச உணர்வாலும் நிறைகிறது.

பின் பொழுது புலரவே தன் அன்றாடக் கடமைகளில் கவனம் செலுத்துகிறான். பல்வேறு காரியங்களில் அவன் மனம் மூழ்குகிறது. இதனால் நேரம் செல்லச் செல்ல மனத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த இறையுணர்வும் இறையச்ச எண்ணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத் தொடங்கு கிறது. இவ்வுணர்வுகள் முற்றிலுமாக அவன் உள்ளத் தினின்றும் மறையும் முன்பாக அவன் மீண்டும் நண்பகல் தொழுகையை மேற்கொள்கிறான். மீண்டும் அவன் உள்ளம் இறையுணர்வாலும் இறையச்ச உணர்வாலும் நிறைகிறது. தொடர்ந்து பல்வேறு அலுவல்களில் ஈடுபடுவதன் மூலம் மீண்டும் மாலைத் தொழுகையில் இறையுணர்வும் இறையச்ச உணர்வும் புதுப்பிக்கப்படுகிறது. அதே தொடர் நிகழ்வுக்குப் பிறகு இரவு தூங்கச் செல்லுமுன் ஐந்தாவது தொழுகை நிறைவேற்றப்படுகிறது. நெஞ்சம் நிறைந்த இறையுணர் வோடும் இறையச்ச உணர்வோடும் தூங்கச் செல்கிறான். இவ்வாறு ஒவ்வொரு முஸ்லிமும் அதிகாலை கண்விழித்தது முதல் இரவு தூங்கச் செல்லும்வரை தன் நெஞ்சத்தில் இறையுணர்வையும் இறையச்சத்தையும் இடையறாமல் நிரப்பிக்கொண்டே இருப்பதால் இரவு பகல் எந்நேரமும் இறைவழியில் மட்டும் வாழக்கூடிய மனிதப் புனிதராகத் தன்னை உருமாற்றிக்கொள்ள ஐவேளைத் தொழுகையே ஆதார கருதியாக அமைந்து விடுகிறது. இதற்காக ஒவ்வொரு தொழுகைக்கும் அவன் செலவிடும் நேரம் ஐந்து முதல் பத்து நிமிடங்கள் மட்டுமே. ஆனால் கிடைக்கும் பலனோ அளவிலா இறையருள், மறுமைப் பெருவாழ்வு.

**இஸ்லாத்தின் இறைவணக்க முறைகள்**

மேலும் இஸ்லாத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இடையாட்கள் யாரும் இல்லாததால் தொழு கைக்கென மசூதி சென்றேயாக வேண்டும் என்ற

கட்டாயமில்லை. இடம் தூய்மையாக இருந்தால் போதும், எங்கிருந்தும் தொழலாம்.''

இவ்வாறு நான் கூறி முடித்தவுடன் அவர் அகமும் முகமும் மலர இஸ்லாத்தின் ஐவேளைத் தொழுகைக்கு இப்படியொரு உட்கருத்து இருப்பதை அறியாமல் வினா தொடுத்துவிட்டேன். சமயவியல் அடிப்படையில் மட்டு மல்லாது உளவியல் அடிப்படையில் பார்த்தால்கூட மனிதனை தெய்வீகச் சிந்தனையுடன் நல்வழிப்படுத்த இதைவிட வலுவான வேறு வழியேதும் இருப்பதாகத் தெரியவில்லை'' எனப் பாராட்டுரை வழங்கினார்.

இஸ்லாமிய மார்க்கத்தின் ஐம்பெரும் கடமைகளான இறை நம்பிக்கை, தொழுகை, நோன்பு, ஏழைப் பங்கான ஜகாத், இறுதிக் கடமையான ஹஜ் ஆகிய அனைத்துமே இறைவணக்க முறைகளாகவே அமைந்துள்ளன.

'ஒரே இறைவன்; உருவமற்றவன்; இணை துணை இல்லாதவன்' என்ற இறை நம்பிக்கையான கலிமா மூலம் ஒரு முஸ்லிம் உள்ளத்தால் இறைவணக்கம் புரிகிறான்.

ஐவேளைத் தொழுகையின் மூலம் உடலால் இறை வணக்கம் நடைபெறுகிறது. ரமளான் மாதத்தில் முப்பது நாட்கள் பகலில் உண்ணாமலும் சொட்டு நீரும் பருகாமலும் நோன்பு நோற்பதன் மூலம் உடலாலும் உள்ளத்தாலும் இறைவணக்கம் நிகழ்த்தப்படுகின்றது. தான் வருந்தியு ழைத்துத் தேடிய பொருளிலிருந்து நாற்பதில் ஒரு பங்கை தன் கைப்படவே ஏழை எளியவர்க்கு ஜகாத்தாக ஈவதன் மூலம் பொருளால் இறைவணக்கம் செய்யப்படுகிறது. பொருள் வசதியுள்ளவர்கள் வாழ்வில் ஒரு முறையேனும் மக்காவி லுள்ள கஃபா இறையில்லம் சென்று தேச, இன, மொழி, நிற பேதங் கடந்த நிலையில் அனைவரும் சமம் என்பதை எண்பிக்கவும், அனைவரும் ஆதாம் பெற்ற மக்களே, சகோதரர்களே என்பதைச் செயல் வடிவில் நிறுவுவதற்கான ஹஜ் கடமை உள்ளத்தாலும், உடலாலும், பொருளாலும்

இறைவணக்க முறைகளாகவே அமைந்துள்ளன. அதுமட்டு மல்ல, இஸ்லாமியக் கடமைகள் ஒவ்வொன்றும் மனி தனைத் தியாக சீலனாக உருமாற்றும் உந்து சக்தி களாகவே அமைந்து இறைவழி நெறிப்படுத்தி வருகின்றன.

**தியாக உணர்வே இறை வணக்க அடிப்படை**

ஐவேளைத் தொழுகையில் முதல் தொழுகை ஐந்தரை மணிக்குத் தொடங்குகிறது. ஐந்து மணிக்கும் முன்னதாகவே எழுந்து உடல் சுத்தம் உள்ளச் சுத்தத்தோடு தொழுகைக்குத் தயாராக வேண்டும். இதற்காக தொழுகையாளி இன்பமான காலைத் தூக்கத்தைத் துறந்து, இறைவனுக்காகத் தியாகம் செய்து, அவனருள் வேண்டி அடிபணிகிறார். ரமளான் மாத நோன்பின்போது பகலில் தான் விரும்பி உண்ணும் சுவைான உணவு வகைகள், இனிய பானங்கள் புகைப்புகள் அனைத் தையும் முற்றாகத் துறந்து, தியாகப் பிழம்பாகிறார். தான் முயன்று உழைத்துத் தேடியபொருளை நாற்பில் ஒரு பங்கு என்ற கணக்கில் வறுமைவாய்ப்பட்ட வயோதிகர்கள், உழைக்கவியலா உடல் ஊனமுற்றவர்கள், ஆதரிப்பாரற்ற அநாதைகட்கு ஜகாத்தாக வழங்கித் தன் பொருளைத் தியாகம் செய்கிறார். ஹஜ்ஜின்போது தான் தேடி பொருளும், குடும்பத்தார், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரை யும்விட்டு நீங்குகிறார். இவைகளையெல்லாம் தியாகம் செய்து விட்டதன் அடையாளமாக இறந்தவருக்குப் போர்த் தும் உடையான தைகக்கப்படாத இரு துண்டுத் துணிகளை மட்டும் இஹ்ராம் உடையாக அணிந்த கஃபா இறையில்லம் ஏகுகிறார்.

இவ்வாறு இஸ்லாமியக் கடமைகள் ஐந்துமே இறை வணக்கத்தையும் தியாக உணர்வையும் ஊட்டிய வண்ணம் அவர்களை இறைவழிபேணும் மனிதப் புனிதர்களாக மாற்றுகின்றன.

# சமய நல்லிணக்கத்துக்கு எது தடை?

## அழகுமிகு ஹவாய் தீவு

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் பசிபிக் மாகடலில் அமைந்துள்ள தீவான ஹவாய்த் தீவுக்கு மூன்றாவது முறையாக என் துணவியாரோடு சென்றிருந்தேன். தீவின் அழகும் அமைதியும் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்வதாக இருந்தது. சென்ற மறுநாள் சுற்றுலாக் குழுவொன்றோடு தீவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்.

## உலகிலேயே அழகான நீண்ட கடற்கரை!

ஹவாய்த் தீவைச் சேர்ந்த வழிகாட்டியாக வந்த பெண்மணி மணல் நிறைந்த கடற்கரையை அணுகியபோது "உலகிலேயே மிக அழகான நீண்ட கடற்கரை இது" எனக் கூறி ஹோனலுலு நகருக்கு வெளியே அரை கிலோ மீட்டர் நீளம் கூட இல்லாத கடற்கரைப் பெருமையைப் பற்றிக் கூறி முடிக்குமுன், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் "இதைவிட அழகான நீண்ட கடற்கரை இந்தியாவில் மெட்ராஸ் நகரையொட்டி அமைந்துள்ளது" என விரைந்து

கூறினார். "உலகிலேயே மிக அழகான நீண்ட கடற்கரை பிரேசில் நாட்டுத் தலைநகரான ரியோடிஜெனீரோவில் உள்ளது. இரண்டாவது அழகிய நீண்ட கடற்கரை நாங்கள் வாழும் சென்னை நகரையொட்டி அமைந்துள்ள மெரினா கடற்கரையாகும்." என நான் அப்பெண்மணி கூறியதை யொட்டித் துணைத் தகவலாகக் கூறினேன். நானும் என் துணைவியாரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று அறிந்தவுடன் எங்களோடு நெருக்கமாக ஒட்டிக் கொண்டார். மிகுந்த அன்போது பழகினார். இந்தியாவைக் குறிப்பிடும் போதெல்லாம் 'ஹோலி லேண்ட்' (புனித பூமி) எனும் சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார். அதில் அன்பு கலந்த மரியாதை வெளிப்பட்டது. தான் புனிதமிகு இந்திய நாட்டை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரைச் சுற்றிப் பார்த்திருப் பதாகவும் உலகில் வேறு எங்கும் காண முடியாத ஆன்மீக உணர்வு பொங்கும் நாடாக இந்தியாவைக் கண்டதாகவும் கூறிப் பாராட்டினார்.

## இன ஒருமைக்கு எடுத்துக்காட்டான நாடு

எங்கள் உரையாடலின் இடையே அழகு கொஞ்சும் ஹவாய்த் தீவில் ஹவாய் பூர்வகுடி மக்களோடு அமெரிக் கர்களும் ஜப்பானிய, பிலிப்பைன் மக்களும் அமைதியாக வும் இணக்கமாகவும் வாழ்ந்து வரும் பாங்கைப் பாராட்டினேன். இஃது இன ஒருமைக்கோர் எடுத்துக்காட்டு எனக் கூறினேன். உடனே ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த அப்பெண்மணி இங்கு மூன்று நாட்டு இன மக்கள் ஒருங்கிணைந்து வாழ்வதைப் பாராட்டுகிறீர்கள். இது உங்கள் இந்தியப் பண்பாட்டைக் காட்டுகிறது. ஆனால், நான் இந்தியச் சுற்றுலாவின்போது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பயணம் செய்தபோது எங்குமே காணமுடியாத மனித நேயத்தையும் ஒருமைப்பாட்டையும் கண்டு அதிசயித்தேன். எத்தனை வகையான இன மக்கள்; எத்தனை வகையான மொழிகள்; நடையுடை, பாவனைகள்; தங்களது சமயச்

சார்புடைய கலை, பண்பாடுகளை விளக்கும் வகையில் அமைந்த கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள், குருத்து வாரங்கள், புத்த விஹாரர்கள், ஜைனக்கோயில்; இத்தனை இனங்களும் மதங்களும் மொழிகளும் கலைகளும் பண்பாடு களும் ஒன்றாக இணைந்து இயங்குவதைக் கண்டு அதிசயித் தேன். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந் திருப்பது ஆன்மீக உணர்வு எனும் ஆழமான வேரை இந்தியா கொண்டிருப்பதுதான் என்பதை என்னால் நன்கு உணர முடிந்தது. இந்த வகையில் சின்னஞ்சிறு நாடான ஹவாய்த் தீவு அல்ல, இந்தியாவே உலகத்துக்கு வழிகாட்டி நாடாக விளங்கி வருகிறது. பல் சமய, இன, மொழி, பண்பாட்டு ஒருங்கிணைவு எப்படியமைய வேண்டும் என்பதற்கு இந்தியாவே உலகத்துக்கு உத்வேக மூட்டி வருகிறது," என உணர்ச்சி பூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்தி விட்டார். இந்தியாவைப் பற்றி அப்பெண்மணி கொண்டிருந்த கருத்தும் உணர்வும் என் நெஞ்சத்தைத் தொட்டது. இந்தியாவைப் பற்றி அந்நிய நாட்டுப் பெண்மணி மனந்திறந்து கூறிய பாராட்டுரையால் நெகிழ்ந்து போன என் துணைவியாரின் கண்கள் பனித்து விட்டன. இந்தியாபற்றி ஸ்வீடன் நாட்டுப் பெண்மணி கொண்டிருந்த எண்ணம் இந்தியாவைப் பற்றி உலகம் கொண்டுள்ள உணர்வையே முழுமையாகப் பிரதிபலித்தது என்பதில் ஐயமில்லை.

### உலக அரங்கில் இந்திய பெருமைக் குலைவு

பல்வேறு மதங்களும் இனங்களும் மொழிகளும் பண்பாடுகளும் சகிப்புணர்வோடு ஒத்து வாழும் ஒருங்கி ணைவுக்கு உலகத்துக்கே வழிகாட்டும் ஒளி விளக்காக அமைந்துள்ள இந்தியப் பெருமையைக் குலைக்கும் வகையில் சிலரது நடவடிக்கைகள் அமைந்து வருவது ஸ்வீடன் நாட்டுப் பெண்மணி போன்ற உலக மக்கள்

கொண்டுள்ள இந்தியாவைப் பற்றிய பெருமை உணர்வு எங்கே தகர்ந்து போகுமோ என்ற அச்ச உணர்வு நல்ல உள்ளங்களையெல்லாம் இன்று வாட்டி வதைக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் தலையாய பண்பாகத் தொன்று தொட்டு இருந்து வருவது எந்தவொரு விஷயத்திலும் யார்? என்பதை விட என்ன? என்பதில் மட்டும் கருத்தைச் செலுத்தும் தகைமையே யாகும். இந்தியாவிலேயே இந்து, ஜைன, புத்த, சீக்கிய மதங்கள் உருவாகியிருந்த போதிலும், இந்தியாவுக்கு வெளியேயிருந்து வந்த கிருத்துவ, இஸ்லாமிய பார்ஸி சமயங்களையும் அவற்றின் மூலம் வந்த சமயத் தத்துவங்களையும் கலை, பண்பாடுகளையும் இருகரமேந்தி வரவேற்கத் தவறவில்லை. காலப் போக்கில் இவையெல் லாம் இந்தியச் சமயங்கள் என்ற உணர்வையும் மக்களி டையே உண்டாக்கின. இதுதான் இந்தியாவின் தனித்துவ மாக உலக அறிஞர் பெருமக்களால் கணித்துப் போற்றப் படுகிறது. நல்ல சிந்தனைகள், சன்மார்க்க உணர்வுகள் எங்கிருந்து வந்தாலும் யாரால் கூறப்பட்டாலும், அவற்றை யெல்லாம் தனதாக்கிக் கொண்டு வலிமை பெறுவதுதான் இந்தியாவின் தனித்தன்மை எனத் தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் கூறியுள்ளனர். இதே உணர்வை இந்தியா ஆன்மீக மறு மலர்ச்சிக்கு அயராது உழைத்த விவேகானந்தரும் பலமுறை எடுத்தியம்பியுள்ளார்.

பெருமைமிகு பாரத நாடு பன்னெடுங்காலமாகக் கட்டிக்காத்து வளர்த்து வந்த இந்த உயரிய பண்பு, உலகத் துக்கே வழிகாட்டி வந்த மாண்பமைபோக்கு, இன்று குறுகிய உள்ளமுடைய, சுயநலவேட்கை மிக்க சிலரால், தடுமாற்றத்திற்காளாகக்கப்பட்டிருப்பதுதான் வேதனை தருகிறது.

## மனித நேயமும்
## சமய ஒருங்கிணைவும்

இந்து சமயமாகட்டும், கிருஸ்தவமதமாகட்டும், இஸ்லாமிய மார்க்கமாகட்டும் எதுவுமே பிற மதங்களை வெறுக்கவோ பகைக்கவோ கூறவே இல்லை. மனித நேயத்தையும் சமய ஒருங்கிணைவையுமே அவை வலியுறுத்துகின்றன.

இஸ்லாத்தைப் பொருத்தவரை, உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் மரியாதைகக்குரியன எனப் போதிக்கிறது. பிற சமயத்தவர் வேதங்கள், வணக்கத் தலங்கள், அவர்கள் போற்றிப் பின்பற்றும் வேதங்கள்; அவர்கள் மேற்கொண்டொழுகும் சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகிய அனைத்தையும் ஒரு முஸ்லிம் மதிக்க வேண்டும் எனப் பணிக்கிறது. அவற்றைப் பற்றித் தவறாகப் பேசுவதை அறவே தடுக்கிறது.

"அல்லாஹ்வை விடுத்து அவர்கள் எவற்றை வணங்குகிறார்களோ அவற்றைப் பற்றி நீங்கள் தீங்கு பேசாதீர்கள்" (6:-08) என்பது திருமறையாகிய திருக்குர்ஆன் வாசகமாகும்.

அவரவர் சார்ந்துள்ள மார்க்கத்தை-மதத்தை-அவரவர் வழியில் பேணி, பின்பற்ற இஸ்லாம் எடுத்துக் கூறுகிறது, இதைப்பற்றி திருக்குர்ஆன்.

"உங்கள் மார்க்கம் உங்களுக்கு, எங்கள் மார்க்கம் எங்களுக்கு" என எடுத்தோதுகிறது.

"இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும் எதிரானது அல்ல," என்பது நபிகள் நாயகத்தின் வாக்காகும்.

அதுமட்டுமல்ல, உலகிலுள்ள அனைத்துச் சமயங்களையும் அவற்றின் வேதங்களையும் அவற்றிற்குக் காரணமான தீர்க்கதரிசிகளையும் பெரிதும் மதிக்கப் பணிக்கிறது. அவை அனைத்தும் இறைவனால் வழங்கப் பட்டவை

களே என இஸ்லாம் எடுத்துக் கூறுகிறது. இஸ்லாமிய மரபுப்படி முதல் மனிதரும் முதல் இறை தூதருமான ஆதாம் நபி தொடங்கி, இறுதி நபி அண்ணல் நபிகள் நாயகம் வரை ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் - தீர்க்க தரிசிகள் - இறைதூதர்களாக மக்களுக்கு நேர் வழிகாட்ட இறைவனால் அனுப்பப்பட்டு உள்ளனர்.

"அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் (நம்முடைய) தூதர் வராத எந்த வகுப்பாரும் (பூமியில்) இருக்கவில்லை." *(35:24).*

"ஒவ்வொரு வகுப்பினருக்கும் (நம்மால்) அனுப்பப் பட்ட ஒரு தூதர் உண்டு" (10:47) எனக் கூறும் திருக்குர்ஆனின் இவ்விரு வசனங்களிலிருந்து உலகெங்கும் உள்ள எல்லா நாடுகளிலும் எல்லா இனத்திலும் இறை தூதர்கள் தோன்றி, மக்களை நல் வழிப் படுத்தியிருக்கிறார்கள் என்ற பேருண்மை வெளிப்படுகிறது.

இவர்கள் மூலமே இறைவேதங்களும் அவ்வக் காலகட்டத்திற்கேற்ப இறக்கியருளப்பட்டுள்ளது என்பதும் திருக்குர்ஆன் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. இவ்வேதங் கள் அவரவர் தாய்மொழியிலேயே இறைவனால் வழங்கப் பட்டுள்ளன என்பதை,

"நபியே! ஒவ்வொரு தூதரும் தம் மக்களுக்குத் தெளி வாக விவரித்துக் கூறும் பொருட்டு , அவரவருடைய மக்களின் மொழியைக் கொண்டே (போதனை புரியுமாறு) நாம் அவர்களை அனுப்பி வைத்தோம்,'! (14:4) எனத் திருக்குர்ஆன் மொழிகின்றது. இதிலிருந்து மண்ணுலகின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் அவரவர் தாய்மொழியி லேயே இறை வேதங்கள் இறை தூதர்கள் மூலம் வழங்கப் பட்டுள்ளன.

அவ்வகையில் இந்தியாவிலும் பலப்பல இறை தூதர்களும் இறை வேதங்களும் வந்திருக்கலாம் என்பதில்

ஐயமில்லை. அத்துடன் இந்தியா உட்பட உலகெங்கும் தோன்றி மக்களுக்கு நல்வழிகாட்டிய அனைத்து இறை தூதர்களும் அவர்கட்கு இறைவனால் வழங்கப்பட்ட இறை வேதங்களும் ஒவ்வொரு முஸ்லிமாலும் மதிக்கப்பட வேண்டியவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத் தெளிவாகும்.

## சமயத்திற்கும் சமயத்தவர்களுக்கும் இடையேயுள்ள இடைவெளி

தாங்கள் எந்த சமயத்தைச் சார்ந்துள்ளார்களோ அந்த சமயம் வகுத்து கூறியுள்ள வாழ்வியல் நெறிகளை தத்துவக் கருத்துகளை உண்மையான உணர்வுகளை தெளிவாகத் தெரிந்து கொள்ளாதவர்களாலேயே மதக் குழப்பங்களும் மோதல்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஒரு இந்து வுக்கு மகனாகப் பிறந்துவிட்ட காரணத்தி..னாலேயே இந்து வாக இருப்பவர்கட்கு, ஒரு முஸ்லிமுக்கு மகனாகப் பிறந்த காரணத்தாலேயே ஒரு முஸ்லிமாக நடமாடி வருபவர் கட்கு, ஒரு கிறிஸ்தவனுக்குப் மகனாகப் பிறந்ததனால் மட்டும் தன்னை ஒரு கிறிஸ்தவனாகக் கருதி வாழ்பவர் கட்கு, தங்கள் சமயங்கள் கூறும் வாழ்க்கை வழிமுறைகளை தத்துவக் கருத்துகளை முழுமையாகத் தெரிந்து தெளி வடையும் வாய்ப்புகள் இன்றைய கல்வி முறையால் அறுகி வருகின் றன. எனவே, மதங்களுக்கும் மதப் பெயர்களால் மட்டும் வாழ்பவர்களுக்கும் இடையே மாபெரும் இடைவெளி இன்று ஏற்பட்டு வருகிறது. இதனால் சாமர்த்தியமாக வெறும் மதவெறியூட்டப்படும் இவர்கள், தாங்கள் மேற் கொள்ளும் தவறான நடவடிக்கைகள் 'ஏன்'? எதற்காக? என்பதைத் தெளிவாக அறிந்துணரும் திறனற்றவர்களாக இருக்கிறார்கள் என்றே கூறவேண்டும். உண்மையான சமய உணர்வு உடையவர் களாக இருந்திருந்தால் கடந்த நாற்ப தாண்டுகளுக்கு மேலாக இராமர் சிலையை வைத்துக் கோயி

லாகக் கருதி வழிபட்டு வந்த இறையில்லத்தை உடைப்பார் களா? கோயில் கட்ட கோயிலை இடிக்கும் விந்தை மனிதர் களாக மாறியிருப்பார்களா?

இத்தகையவர்களுக்கு உண்மையான சமய உணர்வு மட்டுமல்ல, சமுதாய உணர்வும் இல்லை என்றே கூற வேண்டும்.

**தனிமனிதனின் கடமைகளும்**
**சமுதாய மனிதனின் கடமைகளும்**

ஒவ்வொரு மனிதனும் இரு வகைகளில் இயங்கு கிறான். ஒன்று, தனி மனிதன். மற்றொன்று சமுதாய மனிதன். வீட்டளவில் அவன் வாழும்வரை தனி மனிதன். வீட்டை விட்டு வீதியில் காலெடுத்து வைக்கும்போது அவன் சமுதாய மனிதனாகி விடுகிறான். வீட்டிற்குள் இருக்கும் தனிமனிதன், தன் விருப்பம் போல் அனைத்து உரிமை களையும் சுதந்திரமாக நான்கு சுவற்றுக்குள் அனுபவிக்க முடியும். ஆனால், அதே மனிதன் பல்வேறு உணர்வுகளும் சிந்தனைகளும் கருத்துகளும் உலவும் வீதிக்கு வரும்போது அவன் உரிமைகளும் சுதந்திரமும் கட்டுப்படுத்தப்படுகிறது. வீதியில் கழியைச் சுழற்றிச் செல்ல உரிமை உண்டெனினும் அது பிறர் மீது படாதபடி சுழற்றிச் செல்லவே உரிமை உண்டு.

சமயம் என்பது தனி மனிதன் சம்பந்தப்பட்டதாகும். சமயத் தத்துவங்களும் உணர்வுகளும் மனம் சம்பந்தப் பட்டதாகும். இறையுணர்வால் தங்கள் உள்ளத்தைப் பொங்கிப் பொழியும்படி செய்வதன் மூலம் இறையருளைப் பெற முடியும் என்பது தான் ஒவ்வொரு சமயமும் உணர்த்தும் உண்மை.

இதற்காக அவரவர் எந்த அளவுக்கு மனப்பக்குவமும் ஆன்மீக உணர்வும் இறைப்பற்றும் பெறுகிறாரோ அந்த

அளவுக்கு அவர் பரகதி பெற முடியும். இதற்குரிய இடமாகத் தாங்கள் வாழும் இல்லமும், இதற்கெனவே உருவாக் கப்பட்ட இறையில்லங்களும் அமைந்துள்ளன. எனவே, தனி மனிதத் தொடர்புடைய சமய நடவடிக்கைகள் முழுமை யாகச் செயல்பட வேண்டிய இடங்களும் இவை இரண்டும் மட்டுமே. சமுதாய வீதி இதற்குரிய களமல்ல என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்து செயலாக்க வேண்டும். பல்வேறு சமய உணர்வு கொண்ட சமுதாய மக்களிடையே சமய உணர்வுகளை, சமயச் சடங்குகளைத் தூக்கிச் செல் வதன் மூலமே அனைத்துப் பிரச்சினைகளும் குழப்பங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன. கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள், விஹாரர்கள், குருத்துவாராக்களுக்குள் சடங்குகள் நடப்பதாயின் எந்தப் பிரச்சினையும் ஏற்பட வழியில்லாமல் போய்விடும்.

சமயப் பிரச்சினைக்குத்
தீர்வு காண்பது யார்?

சமயம் சம்பந்தப்பட்ட எந்தவொரு பிரச்சினையும் சமயத் தலைவர்களாலேயே கையாளப்பட வேண்டுமே யொழிய வெறும் ஓட்டுச் சேகரிப்பையும் அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றத் துடிக்கும் சுய நல அரசியல்வாதிகளால் அல்ல. சமயத்தின்பால் உண்மையான பற்றோ சமய அறிவோ இல்லாத அரசியல் வாதிகளால் உண்மையான சமயத் தத்துவக் கருத்துகளும் சமயச் சிந்தனைகளும் பாழ்படுகின்றன. கேலிக்குறியவையாக் கப்படுகின்றன. இவை உண்மைச் சமயத்துக்கு நேர் மாறானவையாக அமைய நேர்கிறது என்பதை மறுப்பதற் கில்லை. எனவே அரசியல், அரசியலாக இருக்க வேண்டும். சமயம், சமயமாகவே இருக்க வேண்டும். இரண்டின் தன்மைகளும் வெவ்வேறானவை. இரண்டும் இணைவது விபரீத விளைவுகளுக்கே வழியாயமையும். அதுவும் இந்தியா போன்ற சமயச் சார்பற்ற அரசு இயங்கும் நாட்டில்

மதத்தில் அரசியல் கலப்பது மிக மோசமான விளைவு களுக்கு வழி வகுக்கும் என்பது கடந்தகால கசப்பான உண்மையாகும்.

எனவே, வீட்டிலும், வழிபாட்டுத் தலங்களிலும், அதற்கென உருவாக்கப்பட்டுள்ள வளாகங்களோடு சமய நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு, சமுதாய வீதிக்கு வரும்போது சமயங்கடந்த இந்தியனாக எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்திய மக்கள், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மக்கள் எனப் பாரதி கூறிய வாழ்வியல் நெறிக் கேற்ப வாழ முனைய வேண்டும். இதன் மூலம் உண்மையான இந்தியப் பண்பாட்டை நிலை நிறுத்த முடியும். சமயங் களைக் கண்ணியப்படுத்தவும் மனித நேயத்தை வளர்க்கவும் ஒற்றுமை உணர்வை வலுப்படுத்தவும் இயலும். இதுவே வலுவான பொருளாதார வளர்ச்சிக்குரிய ராஜபாட்டையாக அமைய முடியும்.

'மந்தையை விட்டுச் செல்லும் ஆட்டைத்தான் ஓநாய் இரையாக்கிக் கொள்கிறது' என்ற பால பாடத்தை நாம் எப்போதும் நினைவில் கொண்டு, நாட்டுப் பாதுகாப்புக்கு வலுமிக்க கேடயமாக வேண்டும். சமய நல்லிணக்கமே சமுதாய வலுவுக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை என்பதை இனியேனும் மறக்காமல் கடைப்பிடித்து வெற்றி காண் போமாக.

# மனிதனைப் புனிதனாக்கும் பெருநாள்

'பக்ரீத்' எனும் 'ஈதுல் அள்கா' தியாகத் திருநாளாகவும் 'ஹஜ்' பெருநாளாகவும் அமைந்துள்ளது. உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினரான முஸ்லிம் பெரு மக்கள், இந்நாளை தியாகம், சமத்துவம், சகோதரத்துவ உணர்வூட்டும் பெருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த 'ஏப்ரஹாம்' எனப்படும் இப்ராஹீம் (அலை) அவர்கள் 'ஓர் இறைத் தத்துவத்தை உலகில் நிலைநாட்டிய மனிதப் புனிதர். "இறைவன் ஒருவனே; இறைவனால் படைக்கப் பட்டவைகளும் மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் வணங்குதற்குரியன அல்ல. அவற்றையெல்லாம் படைத்த மூல முதலாகிய இறைவன் மட்டுமே வணங்குதற் குரியவன்" என்ற கொள்கையை உலகில் நிலை நாட்ட ஓயாது உழைத்த உத்தமர்.

முதுமையின் எல்லைக் கோட்டை எட்டியபோது இறையருளால் பெற்ற தம் புதல்வனை இறைவனுக்குப் பலியிடுவதுபோல் கண்ட தொடர் கனவை இறை விருப்பம் எனக் கொண்டு அதைத் தம் மகனிடம் கூறி, அவர் சம்மதத்தோடு, மைந்தரின் இன்னுயிரை இறைவனுக்குக்

காணிக்கையாக்க முனைந்த தியாகச் செயலை நினைவு கூறும் தியாகத் திருநாளாகவும் இந்நாள் போற்றப்படுகிறது.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதிக் கடமையான 'ஹஜ்' கடமை இந்நாளில்தான் ஹாஜிகளால் நிறைவேற்றப்படுகிறது. 'ஹஜ்' என்ற அரபிச் சொல்லுக்கு 'சந்திக்க நாடுவது' என்பது பொருளாகும். வசதி படைத்தவர்கட்கு மட்டுமே ஹஜ் கட்டாயக் கடமையாகும். ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் ஹாஜி, மக்கா விலுள்ளள 'கஃபா' இறையில்லத்தை நாடிச் செல்கிறார். கஃபா இறையில்லமே தவிர இறைவனல்ல. சதுரவடிவான இக் கட்டடத்தை வலம் வரலாமே தவிர, வணங்கக்கூடாது. இறையடியார்கள் ஆண்டுக்கொருமுறை ஹஜ் செய்ய வேண்டும் என இப்ராஹீம் (அலை) ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு விடுத்த அழைப்பை ஏற்று இன்றும் முஸ்லிம்கள் ஹஜ்ஜை நிறைவேற்றி வருகின்றனர். 'கஃபா' என்ற சொல்லுக்கு வட்ட வடிவானது என்று பொருள். சதுரமானது என்ற பொருளும் உண்டு. வட்ட வடிவான நிலப்பரப்பில் சதுர வடிவாக அமைந்த கட்டடமே 'கஃபா'; 40 அடி நீளமும், 50 அடி உயரமும் 25 அடி அகலமும் கொண்ட வெற்றுக் கட்டடமாகும். இதனுள் சென்று இறைவணக்கம் புரியக்கூடாது என்பது விதியாகும். உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் தங்கள் தொழுகைகளை 'கஃபா' இருக்கும் திக்கு நோக்கியே தொழுகின்றனர். கஃபாவில் தொழுகின்றபோது திசைக்கட்டுப்பாடு ஏதுமின்றி, எத் திக்கில் இருந்தும் தொழலாம்.

'ஹஜ்' கடமையை நிறைவேற்றச் செல்லும் ஹாஜிகள் கஃபாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவிற்கப்பால், தங்கள் வெற்றுடம்பில் தைக்கப்படாத ஒரு துண்டை இடுப்பில் உடுத்திக் கொண்டு மற்றொரு துண்டை போர்த்திக் கொண்டு ஹஜ் கடமையை நிறைவேற்ற முற்படுகிறார்கள்.

இது 'எஹ்ராம்' உடை என அழைக்கப்படுகிறது. இறந்தவரின் சடலத்தின் மீது இத்தகு துணியே போர்த்தப்படுகிறது. இறைவனை அடைய அனைத்தையும் துறக்கத் துணியும் செயலையே இது நினைவூட்டுவதாயுள்ளது. ஹஜ்ஜின் போது கஃபா, இறையில்லத்தில் இறைவணக்கத்திற்காகக் குழுமியுள்ள இலட்சக்கணக்கான ஹாஜிகள் தங்கள் நாடு, மொழி, இன, நிற, கலாச்சார வேறுபாடுகளையெல்லாம் மறந்தவர்களாக, நாம் அனைவரும் ஆதாம் (அலை) வழிவந்த சகோதரர்களே; அனைவரும் சமமானவர்களே என்ற உணர்வோடு சமத்துவத்தை - சகோதரத்துவத்தைச் செயல் வடிவில் நிலை நாட்டுகின்றனர்.

மீண்டும் அதே எஹ்ராம் உடையில் துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள் நண்பகலுக்குப் பின் மக்காவுக்கு அருகிலுள்ள 'அரஃபா' பெரு வெளியில் குழுமுகின்றனர். இங்குதான் ஹஜ் கடமை நிறைவேற்றப்படுகிறது. இறுதித் தீர்ப்பு நாளின்போது 'மஹ்ஷர்' மைதானத்தில் மனித குலம் மீண்டும் உயிர்த்து எழுப்பப்படுவதை நினைவு கூர்வதாக இந்நிகழ்வு அமைகிறது.

அது மட்டுமல்ல, ஹாஜிகள் ஒரு பகல் மட்டும் தங்குவதற்காக அமைக்கப்படும் கூடாரங்கள் அன்று மாலையே அகற்றப்படுகின்றன. இஃது இறைவனால் அளிக்கப்பட்ட மனித வாழ்வு எனும் கூடாரம் எந்நேரமும் இறைவனால் பிரிக்கப்படலாம். தங்கள் உடலிலிருந்து உயிர் பிரிக்கப்படலாம் என்ற வாழ்வியல் தத்துவத்தை உணர்த்துவதாயுள்ளது. மறுநாள் மினா எனுமிடத்தில் சைத்தானைக் கல்லால் எறியும் நிகழ்வு நிறைவேற்றப்படுகிறது. ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் இறைவிருப்பத்தை நிறைவேற்ற முனைந்த இப்ராஹிம் (அலை) அவர்களைத் தடுக்க முயன்ற சைத்தானை அவர் கல்லால் அடித்து விரட்டிய செயலை நினைவுகூரும் வகையில் இச் செயல் ஹாஜிகளால் ஏழு

கற்கள் எறிந்து நிறைவேற்றப்படுகிறது. இஃது ஒரு குறியீட்டுச் செயலாகும். சைத்தானிய செயல், புறத்தில் மட்டுமல்லாது அகத்திலும் உண்டாகும் ஏழுவித தீயுணர்வு களை மனத்திலிருந்து அகற்ற முயலும் முயற்சியின் குறி யீடாகவே இச் செயல் அமைந்து உள்ளது.

மினாவில் இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் 'குர்பானி' கொடுப்பதுடன் ஹஜ் கடமை நிறைவேற்றப்படுகிறது. ஹஜ்ஜின் போது, ஒவ்வொரு ஹாஜியும் தான் தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவச் செயல்களை மன்னிக்க இறைவனிடம் மன்றாடுகிறார். இனி, தவறே செய்யாத தவ வாழ்வு மேற்கொள்ள உறுதியேற்கிறார். இதன் மூலம் ஒரு புதுவாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறார். இதைப் பற்றி பெருமானார் (சல்) அவர்கள்,

"எவர் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்து தீய சொல் பேசாமலும், தீய செயல் செய்யாமலும் திரும்புவாரோ அவர் தன் தாயின் வயிற்றிலிருந்து அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவமற்றவராகத் திரும்புகிறார்" எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு ஹஜ் பெருநாளும் தியாகத் திருநாளுமான 'ஈதுல் அள்கா'' மனிதனைப் புனிதனாக்கிப் புதுவாழ்வு தருவதோடு உலகில் சமத்துவமும், சகோதரத்துவமும் தழைத்தோங்க வழிகாட்டும் வாழ்வியல் நிகழ்வாக அமைந்துள்ளது.

நன்றி : தினமணி

# ஆசிரியரின் நூல்களில் சில:

1. அண்ணலாரும் அறிவியலும்
2. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்
3. காலம் தேடும் தமிழ்
4. இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்
5. சிறுவர் கலைக்களஞ்சியம்
6. அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் பகுதி I
7. ” பகுதி II
8. இளைஞர் அறிவியல் களஞ்சியம்
9. அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி
10. மருத்துவக் கலைச்சொல் களஞ்சிய அகராதி
11. கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி
12. தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம்
13. இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்
14. விழா தந்த விழிப்பு
15. திருப்பு முனை
16. தெளிவு பிறந்தது
17. சிறுவர்க்குச் சுதந்திரம்
18. இன்றைய தென்னக இலக்கியப்போக்கு



நூலாசிரியர்
*வளர்தமிழ்ச் செல்வர்*
*கலைமாமணி*

மணவை முஸ்தபா

சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களி பட்டம் பெற்ற வளர்தமிழ்ச் செல்வர், கலைமாமண மணவை முஸ்தபா, சர்வதேசத் தமிழ்த் திங்களிதழா 'யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியராவார்.

'காலம் தேடும் தமிழ்' 'இன்றையத் தென்னக இல கியப் போக்கு,' 'இளைஞர் இஸ்லாமியக்கலைக்களஞ்சிய உட்பட இருபத்தியாறு தமிழ் நூல்களை எழுதியுள்ளா ஆங்கிலத்திலிருந்து எட்டு நூல்களையும் மலையாளத் லிருந்து ஏழு நூல்களையும் பெயர்த்துள்ளார். எட் தொகுப்பு நூல்களும் வெளிவந்துள்ளன. ஐந்து சிறுவ இலக்கியங்களையும் படைத்துள்ளார். முப்பதுக்கு மே பட்ட வானொலி நாடகங்களையும், ஐந்து தொலை காட்சி நாடகங்களையும் எழுதியுள்ளார். எட்டு ஆண் கள் திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினராகவு இருந்துள்ளார். சர்வதேச தமிழ் ஆராய்ச்சிப் பேரவையி இந்தியக் கிளையின் இணைச் செயலாளர்.

இவரது கலை, இலக்கியப் பணியைப் பாராட்டி தமி நாடு அரசின் இயல் இசை, நாடக மன்றம் 19 -இல் கலைமாமணி விருதளித்துப் பாராட்டியது. இவர அறிவியல் தமிழ்ப் பணியைப் போற்றி தமிழ்நாடு அ 'திரு.வி.க.' விருதை 1989இல் வழங்கியது. இவரது உல ளாவிய தமிழ்ப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு மாநி கூட்டுறவு வங்கி அதிகாரிகள் மன்றம் 'தமிழ்த் தூதுவ பட்டம் தந்து பாராட்டியது. இவரது அயரா தமிழ் பணியைப் பாராட்டி இளையான்குடி டாக்டர் ஜா ஹுசைன் கல்லூரி அறிவியல் மன்றம் ''வளர் தமிழ்ச்செ வர்'' விருதளித்துப் பாராட்டியது. சிந்தனையாளர் பேரவை அறிவியல் தமிழ்ச்சிற்பி பட்டம் வழங்கியது. இவர் மும்முறை உலகை வலம் வந்துள்ளார்.